# MAHAJANAN

KNOW THYSELF




2008

Volume XXXIII

# மகாஜனன்

KNOW THYSELF

## யா/மகாஜனக் கல்லூரி
## தெல்லிப்பழை

## J/MAHAJANA COLLEGE,
## TELLIPPALAI

XXXIII

2008

# மகாஜனன் மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌரவ ஆலோசகர் | :- | திருமதி.சிவமலர் அனந்தசயனன் |
| மலர் ஆசிரியர் | :- | திருமதி.ரேணுகாதேவி கேசவன் |
| மலர்க்குழு | :- | திரு.சு.சயந்தன்<br>திரு.ம.மணிசேகரன்<br>திருமதி.உ.புஷ்பராசா<br>செல்வி.இ.சம்பந்தர்<br>செல்வி.செ.இராஜேஸ்வரி<br>திருமதி.சி.சயந்தன்<br>திரு.வ.உமாசுதன்<br>திரு.செ.சத்தியநாராயணன் |
| கல்லூரிச் சஞ்சிகை | :- | "மகாஜனன் 2008" |
| பிரதிகளின் எண்ணிக்கை | :- | 500 |
| கணனி பக்க வடிவமைப்பு | :- | செல்வி.பிரவீனா சிவசுப்பிரமணியம் |
| கணனி வடிவமைப்பு | :- | மகாஜன கணனி அலகு |
| புகைப்பட வடிவமைப்பு | :- | Creative ADS<br>4-1/1, Vandercert Place,<br>Dehiwela |
| அச்சுப்பதிப்பு | :- | "மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ்"<br>கே.கே.எஸ் றோட்<br>சுன்னாகம் |
| வெளியீடு | :- | மலர்க்குழு,<br>யா/மகாஜனக் கல்லூரி,<br>தெல்லிப்பழை. |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| i. பிரார்த்தனை | I |
| ii. கல்லூரிக்கீதம் | II |
| iii. கொடிக்கீதம் | III |
| iv. ஆசியுரை | IV |
| v. மலராசிரியரின் சிந்தனையில் | XX |
| 1. நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் அறிக்கை -2008 | 1 |
| 2. நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 2008 பிரதம விருந்தினர் ஆற்றிய உரை | 33 |
| 3. நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் - 2008 நினைவுப் பேருரை | 42 |
| 4. மகாஜனன் மலர் 2007 வெளியீடு XXXII இற்கான ஆய்வுரை | 49 |
| 5. ஜயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவுப் பரிசளிப்பு விழாவும் - 2007 நினைவுப் பேருரை | 57 |
| 6. இதய அஞ்சலி | 64 |
| 7. STAFF LIST | 65 |
| 8. பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டறிக்கை - 2007 | 69 |
| 9. பழைய மாணவர் தாய்ச் சங்க ஆண்டறிக்கை - 2007 | 70 |
| 10. மன்றங்கள் – கழகங்கள் | 72 |
| கல்லூரியின் சாதனையாளர்கள் | |
| 11. சாதனையாளர்களுடன் ஒரு பகிர்வு | 75 |
| 12. மழலைகள் விருந்து தரம் 1 - 5 | 83 |
| 13. மாணவர் சிந்தனையில் தரம் 6 - 13 | 88 |
| 14. அறிவு ஆரம் | 132 |
| 15. சுவடுகள் செய்திமடல் வெளியீடு | 146 |
| 16. மகாஜனனுக்கு நிதி நல்கியோர் | 147 |



கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராஜன்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

அமரர் தெ. அ. துரையப்பாபிள்ளை



எங்களது ஸ்தாபக அதிபர்

மகாஜன சிற்பி



அமரர் தெ.து. ஐயரத்தினம் அவர்கள்

## கல்லூரிக்கீதம்

(ஜன கண மண...... என்ற மெட்டு)

ஜய ஜய மாஜன ஜய சுப மாதா
ஜய ஜய மாஜன ஜெயகே

கல்லூரித்தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம் பணி நினைவோம்.

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனை நீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்.

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.

புலவர். நா. சிவபாதசுந்தரனார்

## நமது கொடி

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோல முற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

சரணம்

தீர முற்றுத் திருவடைந்த
தெய்வ துரை யப்பரது
தீர்க்கமான தியான மதில்
தேறிவந்த மகாஜனாவின்

(கொடி)

மலர் மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர் விரித்து
தவம் பொலிந்த மகாஜனாவைத்
தாங்கு கொடியின் தாள் பணிவோம்

(கொடி)

தன மளித்துத் தவம் மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மன மகிழ்ந்து மலர்கள் தூவி
வாழி என்று வணங்குவோம்

(கொடி)

ஆக்கம் :- தொல்புரம் புலவர் நா.சிவபாதசுந்தரனார்




எங்கள் அதிபர்

## திருமதி. சிவமலர் அனந்தசயனன்

# நடேஸ்வரர் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



இயற்கை அழகும் பெருமையும் மிக்க மகாஜனக் கல்லூரி பட்டப்படிப்புகளிலும், விளையாட்டுத் துறைகளிலும், இசைத்துறையிலும் மேம்பட்டு வளர்ந்து வருகிறது.

கல்வியெனும் தண்சுனைநீர்க்கடலில் நீத்த கவின் கொண்ட பூமியிதுஎன்றோ பாட, தெல்லிநகர் தன்னில் ஒளி கூட்டியாடும் தேசமதை நல் மகாஜனாவும், வல்ல கடல் காங்கேசன்துறையில் ஓங்கும் வாணியருள் சிந்துமுயர் நடேஸ்வரராகவும், கல்விக் கண்திறந்து பெரும் ஊற்றாய் நின்ற காலமதை நினைத்திடக்கண் ஊற்றாய் பாயும் சிந்தனையில் மறைந்து பல்லாண்டு பல்லாண்டு காலமாக மிளிரும் மகாஜனாவின் "மகாஜனன் 2008" ஆண்டு மலர் வெளியீட்டுக்கு எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவகாமி சமேத சுந்தர நடேஸ்வரப்பெருமானின் திருவருளும் குருவருளும் கிடைக்க வேண்டும் என்றும் மலர் வெளியீட்டு விழா சிறக்கவும் எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*"சர்வேஜனா சுகினோ பவந்து"*

இ.மகாலிங்கக்குருக்கள்
நடேஸ்வரர் ஆலய பிரதம குரு
யா/மகாஜனக்கல்லூரி



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P.No - 0602-2 3151

திகதி..



தலைவர் :
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன். B.A.

உப - தலைவர் :
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்

பொதுச் செயலாளர் :
வைத்தியகலாநிதி
தி. திவாகரன்

இணைச் செயலாளர் :
திரு. நா. தவநாதன்
திரு. மு. அருளையா

தனாதிகாரி :
திரு. அ. சண்முகநாதன்

உப-தனாதிகாரி :
திரு. சு. ஏழூர்நாயகம்

எம் மண்ணில் அறிவொளி காட்டிய அறிவாலயங்களின் வரிசையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மகத்துவமானது. பல்லாயிரக் கணக்கான மாணவர்களை அரவணைத்து, ஆற்றல்மிகு சமூக அந்தஸ்தை வழங்கிய இக்கல்லூரியின் பெருமையை யாவரும் நன்கு அறிவர். இக் கல்லூரிக்கும் எமது தேவஸ்தானத்துக்கும் நீண்ட தொடர்புண்டு. மகாஜனாவின் மதிப்பார்ந்த அதிபராக விளங்கிய அமரர் திரு.தெ.து. ஜயரத்தினம் அவர்கள் எமது தேவஸ்தானத்தின் தலைவராக விளங்கிய சிறப்பு பெருமைக்குரியது. எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்றும் பெருமையோடு நேசித்த கல்லூரி. உலகளாவிய ரீதியில் மகாஜனாவின் மைந்தர்கள் பெருங் கல்விமான்களாக விளங்குவது மகாஜனாச் சமூகத்திற்கும் எம் மண்ணுக்கும் பெருமை தரும் விடயமாகும். இக் கல்லூரியின் ஸ்தாபகர், தலைமை ஏற்று நிர்வகித்த அதிபர்கள், ஆசிரியர்கள் என்றும் நன்றியோடு போற்றப்பட வேண்டியவர்கள் சமயவாழ்வு, சமூகவாழ்வு, கலை வாழ்வு அறிவுலகத்துடன் இணைந்த வாழ்வு அனைத்திலும் மகாஜனா வளாகத்தில் மாசற விளங்கிய சுடர்களின் பிரகாசம் தொடர்ந்து வியாபித்துள்ளமையை யாவரும் ஒப்புக் கொள்வர். எல்லாத் துறைகளிலும் மகாஜனாவின் துளிர்கள் நிலைபெற்று மிளிர்வது அவர்களின் அர்ப்பணிப்பின் எச்சமே. வியத்தகு வளர்ச்சி கண்ட கல்லூரி நூற்றாண்டைச் சந்திக்க ஆயத்தமாகிவிட்டது. சீரும், திருவும், சிந்தித்துச் செயற்படும் ஆற்றலும் நிறைந்த அதிபர் திருமதி. சி.அனந்தசயனன் அவர்களின் ஆளுமையில் இன்றும் எழுச்சி கண்டு வரும் மகாஜனாக் கல்லூரியை வாழ்த்துகிறேன். கல்லூரிச் சமூகத்தைப் போற்றுகிறேன். வளங்கள் நிறைந்த பலருக்கு வாழ்வாதாரமாக விளங்கும் மகாஜனா அன்னையே என்றும் நீ பிரகாசிக்கத் துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

ஆறு. திருமுருகன்

ஆறு. திருமுருகன்
தலைவர்

## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



"மகாஜனன் - 2008" இதழுக்கான வாழ்த்தினைத் தரும் இவ்வேளை மனதிலே பெரு மகிழ்ச்சி.

செழுமையான எங்கள் கல்விப் பாரம்பரியத்தின் நிலைக்களனாய் மகாஜன மரபு தொடர்கின்றது. இடரினும் தளராத நிமிர்வுடன் மகாஜனச் செல்வங்களின் கலை ஞானப் பேறு கைவசமாகின்றது.

சுய பண்பாட்டின் மேன்மையும், மேம்பாடும் எங்கள் ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் பெருங்கனவு.

அவர் கனவே வாழ்வாக அர்ப்பணிப்புடன் உழைக்கும் மகாஜனக் கல்லூரிச்சமூகத்திற்கு என் அன்பு வாழ்த்துக்கள்.

மகாஜன மாதா எமக்களிக்கும் ஆற்றல்களுடன் அழகிய நாளைக்கான வல்லமைகளைப் படைப்போம்.

"வெல்லுக மகாஜன மாதா"

பேராசிரியர் என். சண்முகலிங்கன்
துணைவேந்தர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

සාපති / දිස්ත්‍රික් ලේකම්
ரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
overnment Agent / District Secretary
රකථනය / ாலைபேசி / lephone 021-222 2235

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone 021-222 223 / 021-222 223

ැක්ස් / க்ஸ் / ax 021-222 2355

mail: gajaffna@sltnet.lk

**දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.**

**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

**District Secretariat, Jaffna.**

ගේ අංකය / னது எண் / y No. GA/JF/02

ඔබේ අංකය / உமது எண் / Your No.

දිනය / திகதி / Date 30.07.2008

## அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

"உன்னை நீ அறி" என்ற உயரிய சிந்தனையில் ஒன்றுபட்டியங்கும் யா/ மகாஜனாக் கல்லூரி யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியில் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. ஏனெனில் முதலீடுகளாகக் கருதப்படும், மனித வளமே மிகப் பிரதானமானது. தன்னையறிந்த மனிதவளம் ஏனைய வளங்களைச் செவ்வனே உபயோகித்துச் செயற்றிறனுடன் பணியாற்றி வியத்தகு விளைவை எட்ட வகைசெய்யும்.

இவ்வகையில் யா/ மகாஜனாக் கல்லூரியின் வெளியீடு என்பது கல்வி, கலை, விளையாட்டுத் துறைகளில் பிரகாசிப்பதோடு உலகெங்கும் வாழும் பழைய மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் தமக்கென்ற தனித்துவத்துடன் செயற்றிறன் மிக்கவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இருபாலாரும் பயிலும் இத்தகு பாடசாலைகளில் மாணவர் ஒவ்வொருவரும் தன்னைத் தானறிந்து ஒழுகுவதனால் பாடசாலையின் கீர்த்தி பன்மடங்கு அதிகரிக்கின்றது.

"**உனை** நீ அறி" என்ற மகுட வாசகம் தாங்கி கல்வி உலகிற்கே உதாரணமாகத் திகழும் மகாஜனக் கல்லூரியும், அதன் பாடசாலைச் சமூகமும் உளமார்ந்த அர்ப்பணிப்புடன் ஒன்றிணைந்துழைக்க இறையருளை இறைஞ்சுவதோடு இம்மலர் சிறப்புடன் வெளிவரவும் உலகெங்கும் உள்ளக் கதவைத் தட்டித் திறக்கவும் என் இனிய நல்லாசிகள் உரித்தாகட்டும். வாழ்க வளமுடன்.

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க. கணேஷ்
அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்

# வலி வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



"உனை நீ அறி" எனும் விருது வாக்குடன் உயர் விழுமியங்களைப் பேணும் பூரண மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கப் பயணத்தை, தொடரும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வெளியீடான *"மகாஜனன்"* சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த கால அனர்த்தங்களால் கல்லூரிச் சூழல் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் தமது கல்விப்பணியினைச் சிறப்பாக முன்னெடுத்துப் பல சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையையும் மாணவர்களின் விடாமுயற்சியையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இக்கல்லூரியில் கல்வி பயின்று பொறியியலாளர்களாகவும், மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும் பல்வேறு துறைகளில் நிபுணர்களாகவும் வளர்ச்சி கண்டுள்ள பழைய மாணவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சியில் காட்டி வரும் அக்கறையுடனான செயற்பாடுகள் கண்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று வெளிவரும் சஞ்சிகை தொடர்ந்தும் பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவரவும், பாடசாலை நிர்வாகமும், பாடசாலைச் சமூகமும் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுப் பல சாதனைகளைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

(சு. முரளீதரன்)
பிரதேச செயலர்,
வலி வடக்கு,
தெல்லிப்பளை.

S.Muralitharan,
ASSISTANT DIVISIONAL SECRETARY
FOR DIVISIONAL SECRETARY,
VALIKAMAM NORTH,TELLIPALAI



## 'மகாஜனன்' சிறக்க.....................

புகழ் பெற்ற கல்லூரிகளில் ஒன்றான தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பல துறை விற்பன்னர்களை உருவாக்கி வரும் ஒரு கல்விக்கூடமாக மிளிர்கின்றது. இக்கல்லூரியின் மைந்தர்கள் இன்று உலகம் முழுவதிலும் வியாபித்துள்ளனர், என நினைக்கும் போது, அன்னை பூரிப்படைந்து கொண்டிருப்பாள் என நம்புகின்றேன். அன்னை தனது ஜயரத்தினம் நினைவு தின விழாவில் "மகாஜனன்" (Volume XXXIII) மலரை வெளியிடவுள்ளதாக அறிகின்றேன். இம்மலர் கல்லூரியின் வளர்ச்சிப்படிகளை, சாதனைகளை, கல்வி அடைவினை வெளிக்கொணரும் ஒரு ஆவணம் என எதிர்பார்க்கின்றோம்.

இன்று எத்தனையோ இடர்கள் மத்தியில் இக்கல்லூரியின் மாணவர்கள் திகழ்கின்றார்கள். எனினும் கல்வி, கலை, பண்பாடு, விளையாட்டு எனப் பலதுறைகளிலும் தங்கள் திறன்களை உலகிற்குக் காட்டி முத்திரை பதித்து வருவது உண்மையில் பாராட்டுக்குரியதாகும்.

முன்னைய மகாஜன மாதாவை எட்டிப்பார்க்கும் அளவிற்கு கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மகத்தான சாதனைகளைப் படைத்து வருவதனை நான் அறிவேன். விளையாட்டுத்துறையில் அன்னை மகிழுறும் வகையில் பெரு வெற்றி கண்டுள்ளமை கண்கூடு. "உதைபந்தாட்டம்" என்றால் மகாஜனா என்று கூறும் அளவிற்கு 21 வருடத்திற்குப் பின் **மாவட்டச்சம்பியன்** பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும். இது இக்கல்லூரியின் ஒரு மைல் கல்.

விளையாட்டுத்துறையுடன் நின்று விடாமல், சாரணியம், கணித விஞ்ஞானத்துறை, ஆங்கில தினம், தமிழ்த்தினம் என்பவற்றிலும் சாதனைகளை நாட்டியுள்ளது. 2007ம் ஆண்டு தமிழ்த்தினப்போட்டியில் நான்கு நிகழ்ச்சிகளில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று வடமாகாணத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. இது மட்டுமன்றி, தேசிய மட்டத்திற்குச் சென்ற மூன்று நிகழ்ச்சிகளும், முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட ஒரு கல்லூரி, என்ற பெருமைக்குரியது. இது இன்னொரு மைல் கல்.

மாணவர்களின் விடாமுயற்சி, அதிபரது தன்னலமற்ற உழைப்பு, ஆசிரியர்களது அர்ப்பணிப்பு, மற்றும் கல்லூரியின் வளர்ச்சிக்கு முன்னின்று அரும்பாடுபட்டு உழைக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முதலான அனைத்துச் சக்திகளும் இக்கல்லூரியின் மேம்பாட்டிற்கு உந்து சக்திகளாக அமைந்துள்ளன என அறிகின்றேன். இவ்வாறு பலரது முயற்சியினாலும் முகாமைத்துவச் சிறப்பினாலும் சிறப்புற்று விளங்கும் இக்கல்லூரி 2010ம் ஆண்டு நூற்றாண்டு விழாவைச் சிறப்புறக் கொண்டாட எல்லாம் வல்ல இறைவனின் அருளை இக்கணம் வேண்டி நிற்கின்றேன். "சுவடுகள்" மாதாந்த செய்தி மடல் (Suvaduhal News Letter) வெளியீடு 2007 ஜனவரி முதல் வெளிவருவதை அறிந்து பெருமகிழ்வடைகின்றேன். இச்செய்தி மடல் கல்லூரியின் பெருமையை உலகறிய வழிவகுக்கின்றது. இத்தகைய முயற்சி உண்மையில் வரவேற்கக் கூடியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

இவ்வேளையில், கல்லூரியின் சாதனைகளைத் தன்னகத்தே கொண்டு வெளிவரும் "மகாஜனன்" மலர் ஆளுமையும், ஆற்றலும்,அறிவும் கொண்ட கல்விச்சமூகத்தின் வெளிப்பாடாய் விளங்க வாழ்த்துவதோடு, இம்மலரின் மலர்விற்கு உறுதுணை புரிந்த அனைத்துள்ளங்களையும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்.

**வி. இராசையா**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**மாகாணக்கல்வித்திணைக்களம்,**
**வடமாகாணம்.**

# வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வலிகாமம் கல்வி வலயத்தினுள் "தனக்கு நிகர் தானே" என்று தலை நிமிர்ந்து நிற்கும் யா/மகாஜனக் கல்லூரி, வருடந்தோறும் வெளியிடும் "மகாஜனன்" என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இடப்பெயர்வினால் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலும் மாணவர்களும், ஆசிரியர்களும், அதிபரும் தமது அன்னையின் பெருமையை என்றும் நினைவு கூர்ந்து தமது பாடசாலையின் பெருமையை வளர்ப்பதற்கு வீறு நடைபோடுவதில் என்றும் பின்வாங்கியதில்லை என்பதை "மகாஜனன்" என்ற மலரே சான்று பகர்கின்றது என்றால் மிகையாகாது..

மகாஜனாவின் மாணவர்களின் செயற்பாட்டை முன்னெடுக்கும் முகமாக, அன்று தொட்டு இன்று வரை கலைத்திட்ட செயற்பாடுகளிற்கும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளிற்கும் சம அந்தஸ்து வழங்கி, உடல் உள ஆரோக்கியம்,அன்பு, பண்பு, நிறைந்த மாணவர்களை சமூகத்திற்கு வழங்கி வரும் மகத்தான சேவைகளைப் பாராட்டுகின்றேன்.

அறிவொளி பரப்ப வெளிவரச் செய்த மகாஜன மலரை, சிறப்பு மிக்க ஆக்கங்களாலும், சிந்தனையைத் தூண்டும் வழிவகையாலும் வெளிப்படுத்தி நிற்கும் ஆசான்களின் வழிகாட்டலையும் தொடர்ந்து செயற்பட வைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

ப.விக்னேஸ்வரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.



# கோட்டக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கடந்த இரு தசாப்த வரலாற்றிலே பல சோதனைகளுக்கு முகம் கொடுத்து அவற்றிற்கூடாக சாதனைகள் பல புரிந்து தன் புகழை உயர் நிலையில் வழுவாமல் நிலை நிறுத்தி, பிரகாசித்துக் கொண்டிருக்கும் "மகாஜன மாதா" இன்று 2008 இற்கான "மகாஜனன்" மலரை மலர்கிறாள். புதுமையிலும் புதுமை காண்பதில் மகாஜனக் குடும்பத்தினருக்குத்தான் பெருமை. பூரிப்புடன் வாழ்த்துகிறேன்.

அண்மைக்காலங்களில் ஈழத்தின் தேசிய மட்டத்திலே தன் கொடியை தன் செல்வங்களால் உயர்த்தியவள் - இதனால் உலகளாவிய ரீதியில் பரந்து கிடக்கும் தன் பிள்ளைகள் இறுமாப்பும் பெருமையும் அடையும் பேறைப்பெற்று அவர்கள் எல்லோரும் வெல்லுக! வெல்லுக! மகாஜன மாதா! என வாழ்த்த வழி வகுத்த அன்னை இன்று தவப்புதல்வனாம் மகாஜன சிற்பியின் நினைவு தினத்தில் இம்மலரை வெளியிடுவது சாலப்பொருத்தமும் காணிக்கையுமான நிகழ்வாகும்.

மகாஜன மாதா அகவை நூறைக் காணும் வேளை நெருங்கி விட்டது"உனை நீ அறி" என்னும் மகுட வாசகம், இதயத்தில் சுமக்கும் பல்லாயிரம் மகாஜனாவின் உறவுகள், அதிபர், ஆசிரியர் மாணவர்களுடன் இணைவார்கள். இரண்டாயிரத்து பத்து, நூற்றாண்டில் பல மலர்களால் அன்னை அழகுறுவாள். மகாஜன சமூகத்தின் உழைப்புக்கள் சளைக்காது மேலும் விரிவாக்கப்படும். இந்த நம்பிக்கை எனக்குண்டு. இதனை மனக்கண்கொண்டு மீண்டும் அவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

"தீர்க்கமான தியானமதில்
தேறிவந்த மகாஜனாவின்"
கொடி என்றும் பிரகாசிக்கும் மீண்டும் வாழ்த்துகிறேன்.

சற்குணானந்தன் கைலாசநாதன்
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
தெல்லிப்பழை.

# பாடசாலைஅபிவிருத்திச்சங்கச்

# செயலாளரின் வாழ்த்துச் செய்தி



"மகாஜனன்" மலர் - 2008 இவ்வாண்டும் ஜயரத்தினம் நினைவு தின விழாவில் வெளிவர இருப்பதையிட்டு பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பெரு மகிழ்ச்சி அடைகின்றது.

2010இல் நூற்றாண்டை நோக்கி வீறுநடை போடும் இக்கால கட்டத்தில் பல்வேறு இடப்பெயர்வுகள், இன்னல்கள். மத்தியிலும் மீண்டும் மகாஜனா சொந்த இடத்தில் இயங்கி மலரை வெளியிடுவது எல்லோருக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

"மகாஜனன்" மலர் தொடர்ந்தும் ஆண்டு தோறும் வெளியிடுவதற்கு எமது பங்களிப்பை பூரணமாக வழங்குவதோடு, எமது உளங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"வெல்லுக மகாஜன மாதா"**

வை.சிவராசா
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை

# மகாஜனன் மலர்ந்து மணம் வீசிட.........



தமிழர்களின் கல்விப்பாரம்பரியம் சிறப்புடன் மிளிர்வதற்குப் பாவலரின் சிந்தனையில் உதித்த மகாஜன அன்னை தன் "மகாஜனன்" மலர் என்றும் சிறப்புப் பொலிவுடன் மலர்வதற்கும் சாதனை படைக்க வேண்டுமெனவும் பழைய மாணவர்களாகிய நாம் வாழ்த்தி நிற்கின்றோம்.

கல்லூரியினதும் மாணவர்களினதும் பெருமைகளையும் சாதனைகளையும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுவதோடு, அவற்றை ஆவணப்படுத்தும் சான்றாதாரமாகவும் இம் மலர் விளங்குவதனையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

தொடர்ந்தும் இம் மலர் மாணவர்களின் கல்வி, விளையாட்டு, மொழித்திறன், கலை, கலாசாரம் ஆகிய சாதனைகளைத் தாங்கி வர வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு, இச் சாதனைகளுக்காக மகாஜனச் சமூகம் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென்றும் வேண்டி நிற்கின்றோம்.

இம் மலர் கல்லூரியின் பெருமைகளையும் சாதனைகளையும் பறைசாற்றி நிற்பதோடு, மாணவர்களின் எழுத்தாக்கத்திறனை வளர்க்க உதவும் ஒரு களமாகவும் அமையுமென நம்புகின்றோம்.

எமது அன்னை நூற்றாண்டை நோக்கி வெற்றிநடை போடும் பயணத்தில் "மகாஜனன்" தொடர்ந்தும் மலர்ந்து மணம் வீசி அன்னையின் பெருமைகளைப் பரப்பிட சிவகாமிசமேத ஆனந்த நடராஜப் பெபெருமானின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

க.அஜந்தன், த.தயானந்தன்
இணைச்செயலாளர்கள்
பழையமாணவர் சங்கம்.
யா/மகாஜனக் கல்னரி, தெல்லிப்பழை.

# MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION
## NSW and ACT (AUSTRALIA)
## மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
## சிட்னி – கன்பரா (அவுஸ்திரேலியா)

**Patrons**

Dr. A. Punniamoorthy
Dr. V. Manomohan



**President**

Mr. Tani Bakeerathan

**Vice President**

Dr. Bala. Vigneswaran
Mr. A. Ganeshamoorthy

**Secretary**

Mr .L .Indradeepan

**Assistant Secretary**

Mr. A .Nirmalendran

**Treasurer**

Mr. A. Poopalasingam

**Assistant Treasurer**

Mr .A .Sivasothy

**Members**

Mrs. Nalini Rajkumar
Dr. Sivarathy Ketheswaran
Mr. Thiru Manoharan
Mr. M. Kantharuban
Mr. M. Piraveenan
Mr. S Thirunavukarasu(ACT)

ஆகஸ்ட் 22 2008

திருமதி. சி. அனந்தசயனன்,
அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை

## வாழ்த்துச் செய்தி

'மகாஜனன்' என்ற மகாஜனாக் கல்லூரியின் ஆண்டுமலர் கடந்த ஆண்டிலிருந்து மீண்டும் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மலர் வெளியீடு எமது கல்லூரியின் சிறப்புக்களையும், விபரங்களையும் இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோருக்கும், பழைய மாணவர்களுக்கும், குறிப்பாக எம்மைப் போன்ற புலம் பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற பழைய மாணவர்களுக்கும் வழங்குவதில் ஒரு பெரும் பணியாற்றுகின்றது.

அண்மைக்காலங்களில் மகாஜனக் கல்லூரியில் நடந்து வரும் அபிவிருத்திகளைக் கண்டு பெருமைப்படுகின்றேன். மகாஜனாவிற்கு இனிதொரு பொற்காலம் மீண்டும் பிறக்கும் என்ற நம்பிக்கை எமக்கெல்லாம் ஏற்படுகின்றது. இத்தருணத்தில் மகாஜனக் கல்லூரியின் அபிவிருத்தியில் எமது பழைய மாணவர் சங்கக் கிளை தொடர்ந்தும் பங்களிக்கும் என்று உறுதி கூறி, வாழ்த்துக்களுடன் விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு

திரு. த. பகீரதன்
தலைவர், சிட்னிக் கிளை

**Address:** 18 A Federal Road, West Ryde, NSW 2114 Australia; **E-mail:** t.bakeerathan@hotmail.com
**Contact Numbers:** President – 612-9874 7013; Secretary – 61-413 248 864; Treasurer – 612- 9649 1003

# MAHAJANANS OF VICTORIA (AUSTRALIA)
# விக்ரோறிய மகாஜன மாணவர் (அவுஸ்திரேலியா)



Patrons
Mr.V.Thiagarajah
Mrs.R.Ponnampalam
Mr.S.Kanesalingam
Mrs.R.Vinayagalingam

President
Mrs.Usha Sivanathan

Vice President
Mr.S.T.Sampanthar
Mr.T.Alagaratnam

Secretary
Mrs.C.Naguleswaran

Assistant Secretary
Mr.V.Ranjan

Treasurer
Mr.T.Sriskantharajah

Assistant Treasurer
Mr.K.Rameswaralingam

Committee Members
Mr.S.Khathirkanthan
Mr.S.Karunakaran
Mr.R.Rabinthiranathan

Sports Secretary
Mr.S.Mahalingam

International Coordinator
Mr.S.Vijeyakumar

Coordinator
Mr.P.Rajendran

Auditor
Mrs.G.Loganathan




4.8.2008

அன்புடையீர்,

விக்ரோறிய மகாஜன மாணவர் சார்பில் "மகாஜனன்" 2008 மலருக்கு எங்கள் வாழ்த்துக்களை அன்புடன் பெருமைப்படுகிறேன்.

கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளாக, பல்லாயிரம் மாணவ மாணவிகளுக்குப் பயிற்சியை கொடுத்து பல நாடுகளில் வாழ வைத்திருக்கும் மகாஜனா மாதா இன்னும் பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து இந்தச் சேவையைச் செய்ய எங்கள் வாழ்த்துக்கள்.

மகாஜனக் கல்லூரி பழைய பெருமையுடனும், எப்பொழுதும் புதுப் பொலிவோடு பல பழைய மாணவர்களின் உதவியுடன் கிட்டத்தட்ட ஆசிரியர்களும் தொடர்ந்து மாணவர்களுக்குத் தரமான கல்வியறிவு வழங்குவது பெருமைக்குரிய விடயமே.

தாயகத்துடைய பெற்றோர்களின் பெருமையுடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

"வாழ்த்துக்கள்"

அன்புடன்,
உஷா சிவநாதன்.


**Address:** 34 Myrtle street, Glen Waverley, Victoria, 3150 Australia;
**Contact Numbers:** President - (03) 9808 8374; Secretary - (03) 9511 5425; Treasurer - (03) 9802 8281



# "மகாஜனன்" மலருக்கான

# வாழ்த்துச் செய்தி

நீண்ட கால இடைவெளிக்குப்பின்னர் எவ்வளவோ சங்கடங்களுக்கு மத்தியிலும் இரண்டாவது முறையாக "மகாஜனனை" வெளியிட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 2010 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாக் காண இருக்கும் எமது கல்லூரி திரும்பவும் வீறு நடை போட ஆரம்பித்திருக்கிறது. மீண்டும் ஒரு பொற்காலத்தைக் கல்லூரி காண்பதற்குப் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து தற்போது கல்வி கற்கும் 1300 மாணவர்களுக்கும், வருங்கால மாணவ சமுதாயத்திற்கும் தேவையான வளங்களைக் கொடுப்பது எமது கடமையாகும்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்றுக்கிணங்க உலகெல்லாம் செறிந்து வாழும் மகாஜனாவின் மைந்தர்களாகிய நாம் மகாஜனா தந்த கல்வியையும், சிறப்பையும், செல்வத்தையும், சிந்தனையையும், ஆளுமையையும், பண்பையும் மகாஜனாவின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவோம்.

**"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது"**

த.லங்காநேசன்

தலைவர்,

யா/மகாஜனக்கல்லூரி, கல்வி அபிவிருத்தி நிறுவனம்.

## கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி



உலகெங்கும் ஓடும் இனமாய் எங்கள் தமிழினம் ஆன பின்பும் மகாஜனக் கல்லூரி தன் சொந்த மண்ணில் இருந்து கல்விச் சேவை புரிவது மன நிறைவு தரும் விடயம். வருடந் தோறும் மகாஜனன் வெளி வருவது என்பது பொற் காலத்தோடு நின்றுவிட... மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் வானம் எங்கள் கைக்குள் அகப்படும் என்ற புத்துலகக் கனவோடு சென்ற வருடம் முதல் மகாஜனன் வெளிவந்தமை இன்னும் மகிழ்வு தரும் விடயம்.

எங்கள் கல்லூரி தந்த மும்மணிகளில் ஒருவரான மகாகவி வலிவடக்கின் சிறுவர்கள் பற்றி ஒரு இலக்கு வைத்திருந்தார். அதை அவர்,

"கிட்டி அடிக்க கிளித்தட்டுத் தான் மறிக்க,
எட்டு மூலைக் கொடியும் ஏற்ற, அது ஏற்ற இடம்
வாரடிப்பார், வீழ்துடைந்து வைத்துக் கொள்வார் காயம்.
நார்பிடித்துப் பாய்பவர்கள் நாளைக்கு நாட்டினிலே
ஏரினையும் எந்திரத்தால் ஓட்டிடுவர், ஊரையெல்லாம்
சீர் படுத்தி வைப்பவர் சிறுவர்கள் அல்லவா?"

என்று கூறுவார்.

இன்று அந்தச் சூழலில் வாழும் சிறார்கள் பெரிய நெருக்கடிக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். அவர்களின் உடல், உள, சமூக, ஆன்மீக நலம் பேணப்படுவதே கடினமானது. என்றாலும் நாங்கள் அனைவரும் முழுமையாய், உளத்தூய்மையோடு முயன்று, "ஊரையெல்லாம் சீர்படுத்தி வைக்கும்" ஆளுமை கொண்ட மாணவர்களைக் கல்லூரியில் இருந்து சமூகத்திற்குத் தரவேண்டும். அந்தப் பெரிய இலக்கின் ஒரு பகுதியை இவ்வருட மகாஜனன் பூர்த்தி செய்யும் என்ற எதிர்பார்ப்பு எனக்கு உண்டு. மகாஜனனில் வெளிவரும் செய்திகளில் உண்மை உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் அதுதான் நாளைய வரலாறாகும்.

மகாஜனா அன்னை தனது நூறாவது அகவையை நோக்கி வேகமாக நகரும் இவ்வேளையில், அவளது பௌதீக வளப்பெருக்கத்திற்கு மேலாக, அவளின் புத்திரர்கள், புத்திரிகள் எத்தனை பேர் அவளின் நற்பெயரை உலகெங்கும் கொண்டு சென்று பரப்புவர் என்ற எண்ணிக்கை மீது நாம்அதிக கவனம் செலுத்துவோம். அதுவே மகாஜனாவின் உண்மையான பெரு வெற்றியாகும்.

**இறை ஆசி எப்போதும் எங்களுடன் இருக்கும்.**

70, பசல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு - 06.
06.10.2008

திருமதி.கோகிலா மகேந்திரன்
தலைவர்
பழையமாணவர் சங்கம்
கொழும்பு.

## மகாஜன சிற்பியின் பாரியார்
## திருமதி இராணிரத்தினம் ஜயரத்தினம் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

14-08-08

மகாஜனக் கல்லூரி அதிபருக்கும் ஆசிரியர், மாணவர்க்கும்
எனது மனமார்ந்த வணக்கம்.

என் நாயகராகிய எனது தாய்மாமனால் தொடங்கிய
மகாஜனக் கல்லூரியை சிற்பி ஆகிய எனது கணவன் கட்டி
நல்ல நிலைக்கு பெரும் புகழுடனும் விளங்க கொண்டுவந்
தார். அதை இன்றும் எமது மருமகனின் நிர்வாகத் திறமையினால்
போதிலும் தொடர்ந்தும் சிறப்பாக செயல்பட்டு வருவதற்
கு உதவுகின்ற அனைவருக்கும் நானும் எனது பிள்ளைகளும்
என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இன்னும் பல்லாண்டு காலம் இக்கல்லூரி மேன்மேலும்
சிறப்புடனும் விளங்க வாழ்த்துகிறேன், எல்லாம் வல்ல
நடராஜப் பெருமானை வணங்குகிறேன்.

இப்படிக்கு
என்றும் உங்கள்
இராணிரத்தினம், ஜெயரத்தினம்.

## பாரிஸ் பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச்செய்தி

தாய்நில அனர்த்தங்களினால் நீண்டகாலம் தடைப்பட்டிருந்த மகாஜனன் மலர் பல சவால்களுக்கு முகங்கொடுத்து, முயற்சிப்பதனால் எதனையும் சாதிக்கமுடியும் என்ற இறுமாப்புடன் 21ஆம் நூற்றாண்டின் முதல் மலராக 2007இல் வெளிவந்த மகாஜனன் எமதுகைகளுக்குக் கிடைத்தபோது மிகுந்த சந்தோசம் அடைந்தோம்.

அம்மலரில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் இலக்கியப் படைப்புக்கள் யாவும் எமக்கு புத்துணர்ச்சியூட்டி மேலும் உற்சாகத்தையும் உந்துதலையும் தந்துள்ளது. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் மகாஜனன் மலர் வெளிவர ஊக்கத்தினையும் ஆலோசனையையும் வழங்கிய அதிபர் திருமதி சி. அனந்தசயனன் அவர்களுக்கும் ஏனைய மலர்க்குழுவினருக்கும் எமது சங்கம் சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் சமயத்தோடு அறிவுசார் தரத்தினை மேம்படுத்த எடுத்த பெருமுயற்சி அவரது நற்சிந்தனையுடன் கூடிய செயலுக்கு அமைய இன்று பெருவிருட்சமாக வளர்ந்து மகாஜனஅன்னையின் அறிவு புகட்டலில் வளர்த்தெடுக்கப்பட்ட மாணவர்கள் உலகம் முழுவதும் புகழ்வீசி கல்லூரியின் பெருமையினை நிலைநாட்டி நிற்கின்றனர். இன்றைய இன்னல்களுக்கு மத்தியிலும் நிலைதளராது பல சாதனைகளை நிலைநாட்டி வெற்றிகண்டு முன்னேறிச் செல்லும் எங்கள் கல்லூரியின் ஆளுமை கண்டு நாங்கள் பெருமையடைகின்றோம்.

ஏடும் எழுத்தாணியும் அறிமுகப்படுத்திய பெற்றோரும் அறிவுபுகட்டி, வளப்படுத்தி பெருமையோடு வாழவைத்த கல்லூரியும் எமது வாழ்வின் இரு பெரும் உந்துசக்திகள். இதனை மதித்துப் போற்றி காலத்திற்கேற்ப அறிவுசார் தளங்களை மேலும் வளப்படுத்த வேண்டிய கடமை அனைவரையும் சார்ந்து நிற்கின்றது. இதனை ஒன்றுபட்டுச் செய்யுங்கள். இனவரலாறு எழுச்சியோடு உயர்வடையும்.

2010இல் மகாஜன அன்னைக்கு நூற்றாண்டு விழா. அனைத்து மகாஜனன்களும் மகாஜனக்கல்லூரி முன்றலில் ஒன்றுகூடிக் கொண்டாடி, மகிழ்ந்துகளிப்புற தாயகவிடிவோடு கூடிய நல்ல சுமுகமான நிலமை மிக விரைவாக வரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

தொடர்ந்து, சிறப்போடு மகாஜனன் மலர் வெளிவர மனநிறைவுடன் பாரிஸ் மகாஜனன்களின் சார்பாக வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி பத்மயோகினி கருனைவேல்
செயலாளர்
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிப் பாரிஸ் பழையமாணவர் சங்கம்.

## அதிபரின் உள்ளத்திலிருந்து................



ஒரு பெரியவர் மரணப்படுக்கையில் இருக்கும் போது தனது இருபுதல்வர்களுக்கும் ஒரு கட்டளையிட்டார். ஒரு மூடிய அறையைக் காட்டி யார் இவ்வறையை முற்றாக ஏதாவது ஒன்றினால் நிரப்புகிறீர்களோ அவருக்குத்தான் சொத்து என்றார். மூத்தமகன் அவ்வறையை வைக்கோலினால் நிரப்பி முடிக்க இரண்டாவது மகன் ஒரு ஒளி வீசும் அகல் விளக்கை அவ்வறையினுள் வைத்து அறையை ஒளி வெள்ளத்தால் நிறைத்தான். சொத்து யாருக்குச் சென்றிருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தனது இலட்சினையில் ஒளிவீசும் அகல் விளக்கைக் கொண்டுள்ள மகாஜன அன்னை தெல்லிப்பழை, அம்பனைக் கிராமத்தில் நிலை கொண்டு கல்வி என்னும் ஒளியைப் பரப்பிப் பாரெங்கும் தன் வாரிசுகளை நிலைபெறச் செய்து பூரித்திருக்கிறாள். இதோ இன்னும் முழுதாக ஒரு வருடம் தான் இருக்கின்றது எமது மகாஜன அன்னை தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாட என்று நினைக்கும்போது நெஞ்சம் நிறைகிறது.

வானளாவப் புகழ் பரப்பி அகில இலங்கையிலும் தன் பெயர் சொல்லி நிலைத்திருக்கும் மகாஜன அன்னையின் வளர்ச்சி 98ஆவது ஆண்டு நிறைவை ஒக்டோபர் 15ம் திகதி பூர்த்தி செய்கின்றது எனக் கூறுவது எத்தனை சுலபமாக உள்ளது. ஆனால் இதற்குப்பின்னால் எத்தனை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகளின் உழைப்பு நிறைந்திருக்கின்றது. எத்தனை உள்ளங்களின் தியாகம் மறைந்திருக்கின்றது. ஒரு தந்தை தன் விருப்பை நிலை நாட்ட, மகன் அதை வளர்த்தெடுக்க, அந்த வளர்ச்சியைக் கீழே சரிய விடாமல் மேலோங்கச் செய்து கொண்டிருந்த, செய்து கொண்டிருக்கின்ற அத்தனை நல்லுள்ளங்களுக்கும் தலை வணங்கி இதழ் XXXIII மகாஜனன் சஞ்சிகையினூடு நன்றி தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

நூற்றாண்டு நோக்கிய எமது சாதனைப்பட்டியல்கள் இவ்வருடம் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுத் துறை மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் நீண்டுகொண்டு போவதை எமது மாதாந்தச் செய்தி மடல் "சுவடுகள்" ஊடாகப் பார்த்துப் பூரித்து நிற்கும் மகாஜன அன்னை ஒவ்வொரு வருடமும் இனி வெளிவந்தே தீருவேன் என்று அடம் பிடித்து இன்று உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் மகாஜனன் XXXIII இதழையும் பார்த்து எம்மை வாழ்த்துகின்றாள்.

பாடசாலை எமக்குச் செய்ததற்கு நாம் பாடசாலைக்கு நன்றி செலுத்துகின்றோம் என்று தொழிற்படும் மகாஜனன்களையும் ,பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களையும் மகாஜனன் சஞ்சிகை வெளிவர உழைத்த மலர்க்குழுவினரையும் பாடசாலையில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானின் ஆசிகளோடு நன்றி! என்ற வார்த்தையின் மூலம் வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி. சிவமலர் அனந்தசயனன்
அதிபர்,
யா/ மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை.

# மலராசிரியரின் சிந்தனையில் 'மகாஜனன்'..........



"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"
என்பது வள்ளுவர் கூற்று பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும்.

"புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே"

எனக் கூறுகின்றது புறநானூறு. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகத் திகழ்ந்தவர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள். மக்களை மதமாற்றத்திலிருந்து காப்பாற்ற வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக 1910ம் ஆண்டு பாவலர் அவர்களால் தாபிக்கப்பட்ட "மகாஜனா" என்ற பெரு விருட்சம் இன்று தன் விழுதுகளைப் பரப்பி நிற்கின்றது. "தந்தை சொற் பேண்: என்ற இலட்சியத்தைக் கடைப்பிடித்த இலட்சிய புருஷனாக விளங்கிய மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் நினைவு தினத்தில் மகாஜனன் மலர் வெளியீடு நிகழ்வது சாலப்பொருத்தமானதாகும்.

நீண்ட இடைவெளிக்குப்பின் 2007 மகாஜனன் வெளியீடு XXXII சென்ற ஆண்டு வெளிவந்தது. மகாஜனன் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ற மகாஜனன்களின் எதிர்பார்ப்பும் அத்தனைக்கும் மேலாக ஆனந்த நடராஜனின் ஆசியும் கிட்டியுள்ளதால் இன்று 2008 மகாஜனன் நம் கரங்களில் மலர்ந்து நிற்கின்றான். மகாஜன மாதா தனது XXXIII வது வெளியீடான மகாஜனனைப் பெற்ற பூரிப்பில் அகமகிழ்கின்றாள்.

2007 , 2008 ஆம் ஆண்டுகளுக்கான கல்லூரிச் சாதனைகள், செயற்பாடுகள் ஊடாகப் பெருமை தேடித்தந்த அடைவுகள், மாணவர் ஆக்கங்களுடன் ஆசிரியர்களின் ஆக்கங்களையும் தாங்கி வருகின்றான் மகாஜனன். மாணவர்களின் திறமைகளை எடுத்துக்காட்டுவதுடன் மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் சாதனமாக மகாஜனன் அமைவான் என்பது திண்ணம்.

மகாஜனன் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்ற வேட்கையுடன் 2007 மகாஜனனுக்கு நிதியுதவி நல்கிய அத்தனை உள்ளங்களுக்கும் கல்லூரி சார்பாக நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். வழமை போல் மகாஜனன் புதுப்பொலிவுடன் மலர

வேண்டும் "இயலாது என்று இருந்து விடாதே" என்ற அடிநாதத்துடன் மலர்க்குழுவின் செயற்பாடுகளுக்கு ஆலோசனைகள் வழங்கி, நெறிப்படுத்திய எங்கள் அதிபர் அவர்களுக்கு மலர்க்குழு சார்பாக நன்றி கூறுகின்றேன்.

மகாஜனனுக்கு ஆசிகள், வாழ்த்துக்கள் வழங்கிய ஆசான்கள், பெரியோர்களுக்கு கல்லூரி நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளது. ஆக்கங்களை வழங்கிச் சிறப்பித்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் சாதனைகள் மூலம் தம் முத்திரைகளைப் பதித்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி நிற்கின்றேன்.

மகாஜனன் புதுப்பொலிவுடன் மிளிர, புகைப்படங்களை அன்பளிப்பாக வழங்கிய "மதுரா ஸ்ரூடியோ", தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை உரிமையாளர் பா.பாலேந்திரா அவர்களுக்கும், "போட்டோ செலக்ற்" உரிமையாளர் சி. சிவமோகன் அவர்களுக்கும் கல்லூரி சார்பாக நன்றி கூறுகின்றேன்.

மகாஜனன் மலர ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களுக்கும் சிறப்பாக மலர்க்குழுவினருக்கும் மனப்பூர்வமான நன்றிகள். மேலும் மகாஜனன் அழகிய தோற்றத்தோடு வெளிவரவேண்டும் என்ற உயர் நோக்குடன் புகைப்படத்தாள்களை கொழும்பிலிருந்து சுமந்து வந்த தன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் நன்றியோடு நோக்குகின்றாள் மகாஜன அன்னை. அன்னையின் அருளாசி அவர்களுக்கு என்றும் உண்டு.

புகைப்படங்களை அழகுற அமைத்துத் தந்த Creative ADS, Vandervert Place. நிறுவனத்தினருக்கும் மலர்க்குழு சார்பாக நன்றி கூறுகின்றேன். நிறைவாக மகாஜனனை விரைவாகவும் தெளிவாகவும் கணணி பக்க வடிவமைப்புக்குட்படுத்தி அழகுறச் செய்த செல்வி பிரவீனா சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், நூல் வடிவில் அழகுறச் செய்த மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் மலர்க்குழு சார்பாக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

மகாஜனன் மலர உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகளைக்கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி

திருமதி. ரேணுகாதேவி. கேசவன்
மலராசிரியர்.

## நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

### அதிபர் அறிக்கை – 2008

வேழமுகத்து விநாயகனை மனதிலிருத்தி, பாடசாலையில் குடிகொண்டுள்ள சிவகாமி சமேத ஆனந்த நடராஜப்பெருமானை வணங்கி, இங்கு கூடியுள்ள ஒவ்வொருவர் உணர்விலும் சாந்தியும் சமாதானமும் வேண்டி நிறைந்த வணக்கங்களுடன் அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

நூற்றாண்டை நோக்கி வீறுநடை போடும் எமது பாடசாலையின் வளர்ச்சியை, மாணவச் செல்வங்களின் சாதனைகளைக் கோடிட்டுக் காட்டும் இச்சிறப்பான தினத்தில் எமது அன்பான அழைப்பை ஏற்று, பிரதம விருந்தினராக இங்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய கலாநிதி சிவபாலன், (பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ்பல்கலைக்கழகம்) அவர்களே, அவர் தம் பாரியார் திருமதி. அருணேஸ்வரி சிவபாலன் அவர்களே, நினைவுப்பேருரை ஆற்ற வந்திருக்கும் வைத்தியகலாநிதி கந்தஞானியார் இளங்கோஞானியார் அவர்களே, வலிகாமம் கல்வி வலயக்கல்விப்பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு. ப. விக்னேஸ்வரன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு.சற்குணானந்தன் கைலாசநாதன் அவர்களே, கல்வித்திணைக்கள அதிகாரிகளே, அயற்பாடசாலை அதிபர்களே, எமது பாடசாலை முன்னாள் ஆசிரியர்களே, பழையமாணவர் சங்கச் செயலாளர், மற்றும் உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே, அன்பான பெற்றோர்களே, பழையமாணவர்களே, நலன்விரும்பிகளே, இவ்விழா நாயகர்களாகிய அன்பான மாணவர்களே உங்கள் அனைவரையும் எல்லா வகையிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உயிர்நாடியாகத் தம்மை அர்ப்பணித்துள்ள அன்புநிறைந்த பிரதி அதிபர்கள், உபஅதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் யாபேருடனும் இணைந்து வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

எமது பாடசாலையில் எந்தவொரு விழாவாக இருந்தாலும் அன்னை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுரை இல்லாமல் நடந்ததில்லை, மேலும் எமது விழாவிற்குக் கௌரவ விருந்தினராக எப்போதும் திகழுவார். அத்தகைய ஒரு ஈடுஇணையற்ற சமூக சேவகியும் ஆன்மீக வாதியுமான அன்னையின் மறைவு எமது சமூகத்திற்கும் எமது பாடசாலைக்கும் பாரிய இழப்பாகும்.அன்னாருக்கு இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்துவோம். இருந்தாலும் அன்னையின் ஆசி இறையாசியாக எமது பாடசாலைக்கு என்றென்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அத்துடன் துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் இவ்வருடமே அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஞாபகார்த்தப் பரிசிலை முதலாவதாகப் பெற்ற பாடசாலை என்ற பெருமையை எமக்கு அளித்த துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு எம் நன்றிகள்.

தேசிய தமிழ்த்தினப் போட்டிகளில் பரிசு பெற்ற எமது மாணவர்கள் இந்த ஞாபகார்த்தப் பரிசில்களைப் பெறுவதற்குப் பெரும் பேறு பெற்றவர்கள்.

பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட 98வது வருடத்தில் இத்துணை வளர்ச்சியைக் கண்டுள்ள இந்த நிறுவனம் தன் ஸ்தாபகரை நினைவுகூரும் நாளே ஆனித்திங்கள் 24ம் நாள். எவராலும் அழிக்கமுடியாத தானாகவும் அழியாத செல்வம் கல்விச்செல்வம். இக்கல்விச்செல்வத்தை ஏழை விவசாயிகளின் பிள்ளைகளும் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கோடு இக்கல்லூரியை அம்பனைக்கிராமத்தில் 1910ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதி பாவலர் துரையப்பாபிள்ளை ஸ்தாபித்தார். அவரே 25.06.1929 வரை அதிபராகவும் இருந்தார். அந்தப் பெருமகனாரின் 79வது நினைவு தினத்தை நினைவுகூர்ந்து, நன்றி கூறவும் தரம் 9 தொடக்கம் 13 வரையான மாணவர்களின் பரிசளிப்பு விழாவுக்கும் இங்கே கூடியுள்ளோம்.

மகாஜன அன்னை பெற்றெடுத்த கல்வி மான்கள் அகில இலங்கையிலும் உலகெங்கும் பரந்துள்ளனர். எந்த உயர் நிறுவனங்களுக்குச் சென்றாலும் தடுக்கி விழுந்தால் ஒரு மகாஜனனின் முன்னால் தான் விழ வேண்டும் என்ற நிலை எமக்கு மிகப் பெருமையான ஒரு விடயம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமுதாயத்திற்கு மிக அவசியமான, சேவை மனப்பாங்குடைய வைத்தியர்களை வெளியீடு செய்யும் மருத்துவபீடத்தின் பீடாதிபதி கலாநிதி கனகசபை சிவபாலன் அவர்கள் இவ்விழாவிற்குப் பிரதவிருந்தினராக வருகைதந்திருப்பதில் மகாஜன அன்னை பூரித்துப் போயிருப்பாள்.

எமது பிரதம விருந்தினர் கலாநிதி கனகசபை சிவபாலன் M.B.B.S, Ph.D (Leeds,U.K) அவர்கள் எமது பழைய மாணவன், அயற்கிராமமான விழிசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர். 1967ல் பாடசாலையில் இணைந்தவர். மகாஜன சிற்பி ஜயரத்தினம் காலத்தில் மாணவனாக இருந்தவர். 1970ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் கல்வி கற்று 1975ம் ஆண்டு வைத்தியகலாநிதியாக வெளியேறினார். தொடர்ந்து குருநாகல், அக்கராயன் குளம் வைத்தியசாலைகளில் கடமையாற்றி பின் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார். 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இன்று வரை யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடாதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பதில் மகாஜன அன்னை பெருமிதம் அடைகின்றாள் என்றால் மிகையாகாது.

கலாநிதி கனகசபை சிவபாலன் அவர்கள் எழுத்தாற்றலும் உள்ளவர். 1995ல் மதுவின் செயற்பாடுகளும் விளைவுகளும் என்று ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அன்றைய போர்ச்சூழலில், நூல் சரியான முறையில் தேவைப்படுபவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் பல மருத்துவ ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். இன்னும் எழுத வேண்டும். ஆனால் வேலைப்பழுவால் முடியவில்லை என்று அவர் கூறியதை நான் கேட்டிருந்தேன். Jaffna

Science Association (Section C Medical Science) ல் இவ்வருடம் Elect President ஆகவும் 2009ல் President ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இச்சங்கம் வருங்காலத்தில் School Science Programmes ,Exhibition, Science Quiz போன்றவற்றில் ஈடுபட இருப்பது எமக்குக் கிடைத்த ஒரு முக்கிய தகவல்.

பொதுவாக இவ்வாறான விழாக்களில் உயர்ந்த நிலையிலிருக்கும் எமது பழையமாணவர்களை நாம் அழைக்கும் போது எமது சிறார்களுக்குத் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிய உத்வேகம் மனதில் எழும் என்பது நிஜம். அவருடைய ஆசி பாடசாலைக்கு என்றென்றும்தேவை எனக்கூறி அவரை அன்போடும் பெருமிதத்தோடும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்

பீடாதிபதி அவர்களுக்கு அனுசரணையாக இருந்து உதவும் அவர்தம் பாரியார் திருமதி.அருணேஸ்வரி சிவபாலன் அவர்கள் எமது மாணவச் செல்வங்களுக்குப் பரிசில்கள் வழங்க வந்துள்ளார். அவரையும் வரவேற்பதில் பெருமையடைகின்றேன்.

வைத்தியகலாநிதி கந்தஞானியார் இளங்கோஞானியார் M.B.B.S அவர்கள் மாதகல் கிராமத்தைச் சேர்ந்தவர். 1975ம் ஆண்டு இப்பாடசாலையில் மாணவனாக இணைந்து திரு.பொ. கனகசபாபதியையும் அதிபராகக் கண்டவர். 1983ம் ஆண்டு மருத்துவ பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமருத்துவ பீடத்திற்குத் தேர்வு செய்யப்பட்டவர். தற்போது யாழ். போதனாவைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவுப்பகுதியில் வைத்தியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

பொதுவாகவே விஞ்ஞானத் துறையில் ஈடுபடுபவர்கள் தமிழ்மொழி ஆற்றலில் புலமை, தேர்ச்சி குறைவாக இருப்பது அவதானிக்கப்படுகின்றது. ஆனால் எம்முடைய பழையமாணவன் தமிழில் மிகப்புலமை வாய்ந்தவர்: இலக்கண அறிவில் தேர்ச்சி பெற்றவர்: பல்வேறு நிகழ்வுகளில் ஒரு சிறந்த பேச்சாளராக அறியப்பட்டிருக்கிறார். விவாத மன்றுகளில் சிறந்த ஒரு விவாதப் பேச்சாளராக அறியப்பட்டிருக்கிறார்.

இன்று "வள்ளுவர் கல்விச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் நினைவுப்பேருரையாற்ற வந்திருக்கிறார்.

எமது பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட எமது கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.சற்குணானந்தன் கைலாசநாதன் அவர்களைப் பற்றி நான் கூறி நீங்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை எந்தவொரு நிகழ்விலும் மகாஜனக் கல்லூரியை முதன்மைப்படுத்துவதில் அவர்தவறுவதில்லை.அவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

எமது பாடசாலை விருது வாக்கு "உனை நீ அறி" உன்னை நீ அறிந்தால் சுய ஒழுக்கமும் ஒழுங்கும் எமக்குள் தானாகவே வந்து விடும். ஒழுக்கமும் ஒழுங்கும் எவ்வழியோ அவ்வழியே கல்வி. எனவே தான் எங்கள் பாடசாலையின் கல்விப் பயணத்தைப் பின்வருமாறு வரையறுத்துள்ளோம்.

**பயணத்தின் எல்லை:-**

" உயர் விழுமியங்களைப் பேணும் பூரண மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கம்"

பயணத்தின் பாதை:–

முறை சார், முறை சார்பற்ற முறையில் கல்வி நெறிகளில் எமக்குக் கிடைத்துள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தி அறிவு, திறன், மனப்பாங்கு, தனியாள் இடைத்தொடர்பு, சமூகப் போக்குகளை மேம்படுத்தி அதன் மூலம் மனித நேயம், இயற்கையில் தோழமை, ஆத்ம எழுச்சி, அறிவு முதிர்ச்சி, உடல் உள வலிமையுடன் எமது மொழி, கலை, கலாசாரங்களைப் பேணும்உயர் மனித விழுமியங்களைப் பேணும் மனிதராகப் பயணிப்போம் என்பதாகும்.

இன்றைய கல்வி நிலையில் பாடசாலையில் கல்வி கற்பவர்களில் ஒரு குறிப்பிட்ட குறைந்த விகிதமானோரே பல்கலைக்கழகம் செல்கின்றனர். ஏனையோர் க.பொ.த. உயர்தரத்தின் பின் சமுதாயத்திற்குள் காலடி எடுத்து வைக்கின்றனர். 18-19 வயதில் அவன் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவனாக மாற்றப்படும் களம் பாடசாலையே.எனவே ஒரு கல்வி நிறுவனத்தின் பொறுப்பும் வகை கூறலும் அளவிட முடியாதது. சமுதாயத்தில் உன்னதமான இலட்சியங்களுடன் வாழவேண்டியவனாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர், பெற்றோர், சமூகம் ஆகிய அனைவரிடமும் உண்டு இந்த வகையில் உலகளாவிய ரீதியில் இன்று சகலதுறை சிந்தனையாளர்களும் அபிவிருத்திக்கு **paradigms changes** - **மனச்சுவர் மாற்றங்களை** எதிர்பார்க்கிறார்கள். நாங்கள் எந்தளவிற்கு மனச்சுவர் மாற்றங்களுக்குத் தயாராக இருக்கின்றோம் என்ற வினாவை உங்கள் சிந்தனைக்கு விடுகின்றேன்

**காலை ஆராதனை:-** பாடசாலை நாள், சிவகாமி சமேத ஆனந்த நடேச பெருமான் கோயிலில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்று கூடி அந்தணப்பெருமானின் பூசை ஆராதனையுடன் தொடங்குகின்றது. அதைத் தொடர்ந்து திங்கட்கிழமைகளில் இடைநிலை, சிரேஷ்ட மாணவர்களின் ஒன்று கூடலும் புதன் கிழமைகளில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஒன்று கூடலும் நடைபெறுகின்றது. வெள்ளி தோறும் அவரவர் மத வழிபாட்டில் ஈடுபடும் வசதியுண்டு. பாடசாலை ஒழுக்கத்திற்கும் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்தாலும் ஒழுக்கமா, கல்வியா என்ற சீர்தூக்கலில் ஒழுக்கம் பக்கமே கூடியளவு சாரும் என்பதனை எமது மாணவர்களும் உணர்ந்திருக்கிறார்கள்.பெற்றோர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஒன்று கூடலில் நாம் அடிக்கடி வலியுறுத்துவது சுயஒழுக்கம் பற்றியதாகும். (Self discipline)

**மாணவர் தொகை ஆசிரியர் அவை:–**

| | | | |
|---|---|---|---|
| 01- 05 | - 301 | கலைப்பட்டதாரிகள் - | 27 |
| 06- 11 | - 560 | விஞ்ஞானகணித பட்டதாரிகள் - | 08 |
| 12- 13 | - 390 | வர்த்தகப்பட்டதாரிகள் - | 05 |
| | 1251 | பயிற்றப்பட்ட ஆசிரியர் - | 10 |
| | | தேசிய கல்வியியற் கல்லூரி - | 09 |

**விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பின்வரும் பாடங்களில் உள்ளனர்**

| | |
|---|---|
| 1) விஞ்ஞானம் | 6) விவசாயம் |
| 2) கணிதம் | 7) ஆங்கிலம் |
| 3) ஆரம்பக்கல்வி | 8) உடற்பயிற்சி |
| 4) மனையியல் | 9) சமயம் |
| 5) வணிகக்கல்வி | 10) விசேட கல்வி |

எமக்குரிய ஆசிரிய தொகை திணைக்களத்தால் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையளவு இருந்தாலும் குறிப்பிட்ட பாடங்களுக்குப் பற்றாக்குறை உண்டு. குறிப்பாக உயிரியல், ஆங்கிலம் மற்றும் இவ்வருடம் எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான விவசாய விஞ்ஞானம், வரலாறு போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. அத்துடன் இவ்வருடம் தொடக்கம் ஆங்கில மொழி மூலம் வகுப்பு தரம் 6ல் தொடங்கப்பட்டு 19 மாணவர்கள் உள்ளனர். அவர்களுக்கு, சமூகக் கல்வி, உடற்கல்வியும் ஆகிய இரு பாடங்களுக்கும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர்கள் இல்லை.

**கல்வி சாரா ஊழியர்கள்**

| | |
|---|---|
| அலுவலகம் | :- 02 |
| பூந்தோட்டப்பராமரிப்பு | :- 01 |
| சுத்திகரிப்புத் தொழிலாளி | :- 01 |
| காவலாளி | :- 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | :- இல்லை |
| நிதித்திட்டமிடல் | :- இல்லை |
| எழுது வினைஞர் | :- இல்லை |

**பழையமாணவர் சங்க அனுசரணையில்:-**

| | |
|---|---|
| ஆங்கில ஆசிரியர்கள் | :- 02 |
| உடற்கல்வி ஆசிரியர் | :- 01 |
| தகவல் தொழிநுட்பம் | :- 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | :- 02 |
| சுத்திகரிப்புத் தொழிலாளி | :- 01 |

**எம்முடன் புதிதாக இணைந்தவர்கள்:-**

**திருமதி.உ.பக்தவத்சலம்** (பகுதிநேர ஆசிரியை விவசாய டிப்ளோமா பயிற்றப்பட்ட ஆசிரியை)
**திரு.க.வசந்தரூபன்** (கலைப்பட்டதாரி)
**திரு.சி.சிவாகரன்** (தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா- விசேட கல்வி)
**திரு.இ.நந்தகுமாரன்** (தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா- விசேட கல்வி)
**திரு.சி.சிவகரன்** (தேசிய கல்வியியற்கல்லூரி டிப்ளோமா-விஞ்ஞானம், கலைப்பட்டதாரி )
திரு.கு.கந்தரூபன் (தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா- கணிதம்)

இவர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் செயற்பாடுகளும் பாடசாலையை

வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்கின்றது என்பதைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஓய்வு பெற்றோர்**

திருமதி.நி.இராசதுரை

| **பதவியுயர்வு பெற்றுச்சென்றோர்** | **இடமாற்றம் பெற்றுச் சென்றோர்** |
|---|---|
| திரு.க. காராளசிங்கம் | திருமதி.சீ. தேவதாசன் |
| திரு.க.சிவகரன் | திருமதி.யாழினி ஞானபரன் |
| | திரு.இ.தெய்வேந்திரராசா |

திருமதி.நி.இராசதுரை:- பழையமாணவி தரம் 10 - 11 பகுதித்தலைவருமாவார்.. பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியர் எங்கள் கல்லூரியில் 17 வருடங்கள் கடமையாற்றி 14.09.2007ல் ஓய்வுபெற்றார். வர்த்தகப் பாடத்தில் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றி 100% பெறுபேறு பெற்றுக்கொடுத்தவர். விளையாட்டுத் துறையின் பெறுப்பாளராகப் பல வருடங்கள் கடமையாற்றியிருந்தார் அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

திரு.க.காராளசிங்கம்:- 18 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி 01.10.2007 ல் தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். வர்த்தகம் பயிற்றப்பட்ட ஆசிரியர். பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொடுத்தவர். எமது பாடசாலையில் தரம் 6-7 பகுதித்தலைவராகவும் மற்றும் சாரணியத்தில் மிகப்பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் வகித்து பாடசாலையின் சாரணியத்தைக் கட்டியெழுப்பியவர்.பாடசாலை அபிவிருத்திசங்கப் பொருளாளராகவும் பழையமாணவர் சங்கத்திலும் பொறுப்புக்களை வகித்தவர். இவருடைய எதிர்காலம் சிறப்புற வாழ்த்துக்கள்.

திரு.சி.சிவகரன்:- 01.01.2008ல் வலிகாம கல்வி வலய சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகராக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். பட்டதாரி ஆசிரியர். மாணவர்களுக்கு புவியியல் பாடத்தில் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றினார். மேலும் சாரணியப் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார்.அவருக்கு எமது வாழ்த்துக்கள்.

திருமதி.சீ.தேவதாசன்:- கலைப்பட்டதாரி இந்து நாகரீக பாட ஆசிரியராகச் சிறப்பாகத் தொழிற்பட்டார். 18 வருடங்கள் கடமையாற்றி 10.02.2008ல் கொழும்புக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். அவருக்கு எமது வாழ்த்துக்கள்.

திருமதி.யா.ஞானபரன்:- 10 வருடங்களாக எமது பாடசாலையில் உயிரியல் ஆசிரியராகக் கடமையாற்றி கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். சிறந்த ஆசிரியர். பழையமாணவியான இவர் எமது பாடசாலைக்கு மீண்டும் வர விருப்பம் கொண்டுள்ளார்.அவருக்கு எமது வாழ்த்துக்கள்.

திரு.இ.தெய்வேந்திரராசா :- பாடசாலைப் பணியாளராகக் கடமையாற்றித் தன் சொந்த விருப்பில் வட்டு மத்திய கல்லூரிக்கு 01.04.2008ல் இடமாற்றலாகிச் சென்றுள்ளார். அவருற்கு எமது வாழ்த்துக்கள்.

**பாடசாலை நிர்வாக அமைப்பு:-**

பாடசாலையின் முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| திருமதி.சி.அனந்தசயனன் | :- | அதிபர் |
| திருமதி.சௌ.பத்மநாதன் | :- | பிரதி அதிபர் |
| திரு.சு. சயந்தன் | :- | இணைப் பிரதி அதிபர், |
| திரு.இ.துரைசிங்கம் | :- | உபஅதிபர், ஒழுங்காற்றுக்குழு-பொறுப்பாசிரியர் |
| திரு. ம.மணிசேகரன் | :- | உதவி அதிபர் - சிரேஷ்ட பிரிவு |
| திருமதி.சௌ.விஸ்வலிங்கம் | :- | உதவி அதிபர் - இடைநிலைப்பரிவு |
| திரு.சி.தேவகுமாரன் | :- | உதவி அதிபர் - ஆரம்பப்பிரிவு |
| திரு.நா.புனிததயாபரன் | :- | விளையாட்டுத்துறைத்தலைவர் |
| திருமதி.உ.புஷ்பராஜா | :- | பகுதித்தலைவர் உயர்தரம் |
| திருமதி.ப.லோகநாதன் | :- | பகுதித்தலைவர் தரம் 10 -11 |
| திரு.த.தவராஜா | :- | பகுதித்தலைவர் தரம் 08 - 09 |
| திருமதி.தெ.சௌந்தரராஜன் | :- | பகுதித்தலைவர் தரம் 06 - 07 |
| செல்வி.இ.சம்பந்தர் | :- | ஒழுங்காற்றுக் குழு - பொறுப்பாசிரியர் |
| திருமதி.பா.கணேசதுரை | :- | உளவள ஆலோசகர் |
| திரு.சிறீஸ்கந்தராஜா | :- | அலுவலகநிர்வாக உதவி |

முகாமைத்துவக் குழு பாடசாலையின் நிர்வாகக் கடமைகள், கற்றல் கற்பித்தல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், பாடசாலையின் விசேட நிகழ்வுகள் யாவற்றிலும்சிறந்த ஒத்துழைப்பை நல்கிறார்கள். மாதத்தில் இருதடவை முகாமத்துவக்குழு அதிபரைச் சந்தித்து முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள்.

**<u>பாட இணைப்பாளர்கள்:</u>**

| | |
|---|---|
| தமிழ் | :- திருமதி.ரே.கேசவன் |
| கணிதம் | :- திருமதி.சௌ.விஸ்வலிங்கம் |
| விஞ்ஞானம் | :- செல்வி.லோ.பத்மலோஜனி |
| ஆங்கிலம் | :- திரு.சு.முருகமூர்த்தி |
| சமூகக்கல்வி | :- திருமதி.பு. அகிலலோகநாயகம் |
| தொழில் முன்னிலைப்பாடம் | :- திருமதி.லோ.சுபேந்திரன் |
| அழகியல் | :- திருமதி.அன்பரசி குகதாசன் |
| சமயம் | :- திருமதி.ப.சிவசிவா |
| சுகாதாரம் | :- திருமதி.உதயா குணனேசன் |
| ஆங்கில மொழி மூல வகுப்பு இணைப்பாளர் | :- திரு.க.வாணிமுகுந்தன் |

**<u>தர இணைப்பாளர்:-</u>**

தரம் 6 - திருமதி.இ. வீரசக்திரூபன்

தரம் 7 - செல்வி.சு.அம்பாலிகை

தரம் 8 - திருமதி.வ.அமரகுலசிங்கம்

தரம் 9 - செல்வி.சு.கீதாஞ்சலி

தரம் 10 - திரு.வை.விஜயபாஸ்கர்

தரம் 11 - செல்வி.இ.சம்பந்தர்

**<u>ஆரம்ப்பிரிவு ஆசிரியர்கள்:-</u>**

தரம் 1 திருமதி சிவசக்தி சயந்தன்,
திருமதி.சுஜிகலா சுதாகரன்

தரம் 2- திருமதி.வனஜா சிவானந்தன்,
திருமதி.காஞ்சனா சிவரூபன்,
திருமதி.சிவனேஸ்வரி பரமசிவம்

தரம் 3- திருமதி.சித்திரா கிரிதரன்,
திரு.க.வசந்தரூபன்

தரம் 4 -செல்வி.டெய்சி தேவநாயகி போல், திருமதி.சாமினி பிரதீபன்

தரம் 5- திருமதி.ஜெயரஞ்சினி மயில்வாகனம்,
திரு.தர்மபுத்திரன் தயானந்தன்

**ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகள்:-**

எமது பாடசாலை, ஆசிரியர்களுக்கு வாண்மை விருத்திப்பயிற்சிகளை ஒழுங்குபடுத்தவதோடு அவர்களது உயர்கல்விக்கும் சகல ஊக்குவிப்பையும் வழங்கி வருகிறது.

2007ம் - 2008ம் கல்வியாண்டில்:-

முதுமாணிப்பட்டப்படிப்பில் :- திரு.சின்னத்துரை தேவகுமாரன்
திருமதி.சிவசக்தி சயந்தன்
திரு.வைத்திலிங்கம் விஜயபாஸ்கர்
பட்டம் பெற்று வெளியேறியுள்ளார்கள்.

**2008 – 2009 ம் கல்வியாண்டில்:-**

முதுமாணிப்பட்டப்படிப்பில் 02 ஆசிரியர்கள்

கல்வி டிப்ளோமா பட்டப்படிப்பில 03 ஆசிரியர்கள் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற கல்விக் கருத்தரங்குகள், சேவைக்காலப் பயிற்சி நெறிகளில், வலய முன்னேற்ற ஆளுகை சபையில் வளவாளர்களாகப் பங்கேற்கிறார்கள்

**<u>பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள்</u>**

**<u>தரம் 5 புலமைப்பரிசில்</u>**

தரம் 5 புலமைப்பரீட்சையில் 15 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் 35 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள். இந்நிலையை அடைய உழைத்த அனைத்து ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்.

**க.பொ.த. சாதாரண தரம் 2007**

| | | | |
|---|---|---|---|
| 10A | :- 1 | 7A | :- 2 |
| 9A | :- 4 | 6A | :- 4 |
| 8A | :- 3 | 5A | :- 5 |

5Aக்கு மேல் விசேட சித்தி பெற்ற முதல் 15 மாணவர்கள் (எமது பாடசாலையில் தொடர்ந்தும் கல்வி கற்கும்) கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் உலகளாவிய ரீதியில் எமது பழையமாணவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்திற்கு இம்மாணவர்கள் உட்படுத்தப்படுகிறார்கள். இவ்வருடம் செல்வி.கார்த்திகா யோகேந்திரா மாதம் தோறும் 2000 /= வும் க.கோகுலன், சி.றோபிதா, ப.மோகனராஜ், பி.புவிதரன், வெ.வைஷ்ணவி, ஆ.துளசி ம.நிலானி, சி.நிஷாந்தினி, த.கஜானி, இ.ஸ்ரீவாணி, த.சுகுணராஜ் மாதம் தோறும் 1500/= யும் 2008 வைகாசி தொடக்கம் இரண்டு வருடங்களுக்குப் பெற இருக்கிறார்கள். இவர்கள் இத்திட்டத்திற்குட்படுத்தப்பட்ட நான்காவது அணி என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட 2007 செப்டெம்பர் தொடக்கம் 2008 ஆகஸ்ட் வரையும் க.பொ.த உயர்தரம் 2008 அணியில் 4 மாணவர்களும் 2009 அணியில் 4 மாணவர்களும் கல்வித்தேவைக்காக மானியம் மாதாந்தம் 1000/= மானியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வருடமும் 4 மாணவர்கள் கல்வித் தேவைக்கான மானியம் பெற இருக்கிறார்கள். மேலும் பாடசாலையின் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்பாடசாலையிலிருந்து அனுமதிபெற்ற 8A ற்கு மேற்பட்ட சித்தி பெற்ற ஒரு மாணவன் மாதாந்தம் 1500/= பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பதையும் இத்திட்டம் இனிவரும் காலங்களிலும் அமுலில் உள்ளது என்பதையும் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக எம்முடன் தொடர்பு கொண்டு மாணவர்களுக்கு இவ்வுதவி கிடைக்க ஆவன செய்யும் திரு.த.பூ.முருகையா அவர்களுக்கும் மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத்திற்கும் எமது நன்றிகள்

இதைவிட சில பழையமாணவர்கள் எம்முடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட சிலகாலத்திற்கு மாதாந்தம் கல்வித் தேவை உதவியாக 1000/= வழங்குகின்றனர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சகல வழிகாட்டல்களையும் எமது ஆசிரியர்கள் முன்னின்று செய்கிறார்கள். கல்விப்புலத்தில் மெல்லக்கற்கும் மாணவர்களைத் தனியாகக் கவனித்து ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர்களது **கல்வியை ஒரு வருடம் தள்ளிப்போடுவதிலோ இடை நிறுத்தவதிலோ நாம் ஈடுபடாமல்** கூடியளவு அவர்களைச் சித்தியடைய வைப்பதிலே முழு மூச்சுடன் எமது ஆசிரியர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

## க.பொ.த.(சா/த) பரீட்சை – 2007

### புள்ளிப்பகுப்பாய்வு

| பாடம் | இல | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | A | B | C | S | W | தோற்றாதோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | (12) | 89 | 89 | 48 | 14 | 18 | 09 | - | - | 89 | 100% |
| றோ.க | (14) | 04 | 04 | 02 | 02 | - | - | - | - | - | 04 100% |
| கிறிஸ்தவம் | (15) | 01 | 01 | 01 | - | - | - | - | - | 01 | 100% |
| தமிழ் | (22) | 94 | 94 | 43 | 20 | 23 | 07 | 01 | - | 93 | 98.9% |
| ஆங்கிலம் | (31) | 94 | 94 | 05 | 05 | 10 | 17 | 57 | - | 37 | 39.4% |
| சமூகக்கல்வி | (43) | 94 | 94 | 17 | 11 | 21 | 32 | 13 | - | 81 | 86.2% |
| விஞ்ஞானம | (34) | 94 | 94 | 09 | 05 | 16 | 34 | 30 | - | 64 | 68.1% |
| கணிதம் | (32) | 94 | 94 | 22 | 06 | 17 | 29 | 20 | - | 74 | 78.7% |
| நடனம் | (53) | 09 | 09 | 07 | - | 01 | 01 | - | - | 09 | 100% |
| சங்கீதம் | (55) | 14 | 14 | 07 | 03 | 01 | 02 | 01 | - | 13 | 92.9% |
| தமிழ் இலக்கியம் | (48) | 68 | 68 | 14 | 13 | 13 | 11 | 17 | - | 51 | 75% |
| நாடகமும் அரங்கியலும் | (57) | 71 | 71 | 20 | 22 | 21 | 08 | - | - | 71 | 100% |
| விவசாயம் | (78) | 43 | 43 | 03 | 05 | 21 | 11 | 03 | - | 40 | 93% |
| வர்த்தகம் | (81) | 24 | 24 | - | 09 | 06 | 06 | 03 | - | 21 | 87.5% |
| மனையியல் | (98) | 13 | 13 | - | - | 03 | 07 | 03 | - | 10 | 76.9% |
| தகவல்.தொழி | (99) | | 14 | 14 | 04 | 01 | 02 | 07 | - | - | 14 100% |
| புவியியல் | (71) | 05 | 05 | - | 01 | 01 | 02 | 01 | - | 04 | 86.4% |
| அபிவிருத்திக்கல்வி | (72) | 59 | 59 | 12 | 17 | 23 | 07 | - | - | 59 | 100% |
| சுகாதாரம் | (73) | 56 | | 56 | 06 | 10 | 19 | 17 | 04 | - | 52 92.9% |

## க.பொ.த.(உ/த) பரீட்சை – 2007

### புள்ளிப்பகுப்பாய்வு

| பிரிவு | பாடம் | | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | A | B | C | S | W | தோற்றாதோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞானம் | பௌதீகவியல் | (1) | 10 | 10 | - | - | 1 | 04 | 05 | - | 05 | 50% |
| | இரசாயனவியல் | (2) | 10 | 10 | - | 01 | - | 04 | 05 | - | 05 | 50% |
| | உயிரியல் | (9) | 10 | 10 | - | 01 | 04 | 03 | 02 | - | 08 | 80% |
| கணிதம் | பௌதீகவியல் | (1) | 19 | 18 | 01 | - | 05 | 07 | 05 | 01 | 13 | 72% |
| | இரசாயனவியல் | (2) | 19 | 18 | - | 01 | 02 | 06 | 09 | 01 | 09 | 50% |
| | இணைந்தகணிதம் | (10) | 19 | 18 | 01 | - | 04 | 07 | 06 | 01 | 12 | 67% |
| வர்த்தகம் | பொருளியல் | (21) | 09 | 09 | - | 03 | 01 | 01 | 04 | - | 05 | 56% |
| | வணிகக்கல்வி | (29) | 09 | 09 | - | 01 | 03 | 01 | 04 | - | 05 | 56% |
| | கணக்கீடு | (30) | 09 | 09 | - | 02 | 03 | 01 | 03 | - | 06 | 67% |
| கலை | பொருளியல் | (21) | 04 | 04 | - | - | 02 | 01 | 01 | - | 03 | 75% |
| | புவியியல் | (22) | 13 | 13 | 01 | 04 | 02 | 04 | 02 | - | 11 | 85% |
| | அளவையியல் | (24) | 28 | 28 | 10 | 07 | 06 | 04 | 01 | - | 27 | 96% |
| | இந்துநாகரீகம் | (46) | 20 | 20 | 04 | 03 | 08 | 03 | 02 | - | 18 | 90% |
| | நாட்டியம் | (53) | 02 | 02 | 01 | - | 01 | - | - | - | 02 | 100% |
| | நாடகம் | (58) | 32 | 32 | 03 | 12 | 09 | 08 | - | - | 32 | 100% |
| | தமிழ் | (72) | 24 | 24 | 02 | 09 | 08 | 03 | 02 | - | 22 | 92% |

### க.பொ.த உயர்தரம் –2007

| பாடப்பிரிவு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | 18 | 9 | 50% |
| கணிதம் | 26 | 13 | 50% |
| வர்த்தகம் | 18 | 10 | 56% |
| கலை | 63 | 54 | 86% |

### இவர்களில் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

கலைத்தறை :- 21 தேசியக்கல்வியியற் கல்லூரி அனுமதி :- 04
பொறியியல் :- 04
பௌதீகவிஞ்ஞானம் :- 01
விவசாய விஞ்ஞானம் :- 02
சித்த மருத்துவம் :- 03
தகவல் தொழிநுட்பம் :- 03
கணக்கீடு :- 01

க.பொ.த உயர்தரத்தில் இவ்வருடம் முதல் வரலாறு, விவசாய விஞ்ஞானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் எமது 2008 க.பொ.த உயர்தர மாணவர்களில் ஜனாதிபதி புலமைப்பரிசில் பெறுவோர் மு.ஜனனி, செ.குகப்பிரியா, பா.அபிஷாரிகா, ந.நிதர்சன், த.மதுரா, ம.கோகிலதாஸ், ரா.கவிதா, வ.சுரேகா, இ.கஜிதரன், ம.கனிவதனி

**இணைப்பாட விதான செயற்பாடுகளுக்காக எமது பாசாலையில் இயங்கும் கழகங்கள், மன்றங்கள், படைப்பிரிவு, சேவைப்பிரிவு:-**

1) மாணவ முதல்வர் ஒன்றியம் 2) உயர்தர மாணவர் மன்றம் 3) தமிழ் மன்றம்
4) ஆங்கில மன்றம் 5) இந்து மன்றம் 6) கிறிஸ்தவ மன்றம்
7) விஞ்ஞான மன்றம் 8) வணிகமன்றம் 9) சைவ வளர்ச்சிக்கழகம்
10) நுண்கலை மன்றம் 11) சுகாதார மன்றம் 12) சமூகக்கல்வி மன்றம்
13) சாரணியம் 14) சுற்றாடல் பாதுகாப்பு மன்றம் 15) ஒழுங்காற்றுச் சபை
16) இன்றரக்கழகம் 17) சதுரங்கக்கழகம் 18) இளம்புத்தாக்குனர் கழகம்

**மேலும் இவ்வருடம் புதிதாக:-**

19) நூலக மன்றம் 20) பொது அறிவு மன்றம் 21) விவாதமன்றம்
22) மனைப்பொருளியல் மன்றம் 23) தகவல் தொழில்நுட்பமன்றம்
அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றங்கள் யாவும் புதன்கிழமைகளில் 8 வது பாடம் மாணவர்திறனாய்வுப் பட்டறைகளாக இயங்குகின்றன.

இன்னும் இயங்க வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்ட கழகங்கள்

1) இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 2) புகைப்பட கலை மன்றம்
3) சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு 4) மாணவர் நலன்பிரிவு படைப்பிரிவு

எமது பாடசாலை கழகமன்றங்களின் செயற்பாடுகளுக்கு கிடைக்கப் பெற்ற சாதனைகள்:-

1) **தமிழ் மன்றம்**

2007 தமிழ்த்தினப் போட்டிகளில் மிகப்பெரிய சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் முதலில் குறிப்பிடுகின்றேன். 2007 தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் மூன்று முதலாம் இடங்களைப் பெற்றிருக்கின்றோம். **ஒரே பாடசாலை தேசிய மட்டத்தில் 3 முதலாம் இடங்களைப் பெறுவது உண்மையில் சாதனைதான்.** இதற்காகத் தமிழ்த்தினப்போட்டிகளுக்குப் பொறுப்பாசிரியராகத் தொழிற்பட்டு வழிநடத்தி வெற்றிக்கு வழிகோலிய ஆசிரியை திருமதி.மனோகரி முருகமூர்த்திக்கு என் பாராட்டுக்கள் பெறப்பட்ட முதலிடங்கள் (தேசிய ரீதியில்)

| மாணவர் பெயர் | நிகழ்வு | பொறுப்பாசிரியர் |
| --- | --- | --- |
| செல்வி.அபிராமி நம்பியாரூரர் | தனிநடனம் பிரிவு 1 | திரு.ந.குமரவேள்<br>திருமதி.கு.அன்பரசி<br>திருமதி.இ.வீரசக்திரூபன் |
| செல்வன்.புனிததயாபரன் திருமாறன் | பேச்சு பிரிவு 4 | திருமதி.ம.முருகமூர்த்தி |

**தமிழறிவு (திறந்த போட்டி)**

செல்வி.த.மதுரா, செல்வி.க.ஜானி செல்வி.க.விதுஷா செல்வி.செ.குகப்பிரியா செல்வி.க.சுகன்யா - பொறுப்பாசிரியர் :- செல்வி.செ. இராஜேஸ்வரி

இசை நாடகம் இறுதிப்போட்டி மாகாணமட்டத்தில் நடைபெற்றபோது 1ம் இடம் பெற்றார்கள்

( சத்தியவான் சாவித்திரி) பொறுப்பாசிரியர், நெறியாள்கை :- திரு.செ.செந்தில்வேல்

மாணவர் பெயர்கள்:-

ர.சஜீவன், த.சிவரூபி, ந.விஜயரூபன், ந.தர்சினி, ப.பிரியதர்சினி, சி.ரோபிதா, வெ.வைஷ்ணவி, பா.தர்ஜா, ம.கவியரசி, த.சுகுணராஜா, கு.சசிதரன், செ.லலிதாதாஸ்

இவ்வருடமும் 2ம் தவணை, இல்ல ரீதியாகத் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. 2008 தமிழ்த்தினப் போட்டிகளுக்கு இப்போட்டி முடிவுகள் வலுவளிக்கும் என்பது நம்பிக்கை.

2007 தமிழ்த்தின போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 14 முதலாம் இடங்களும் 2 இரண்டாம் இடங்களும் வலய மட்டத்தில் 9 முதலாம் இடங்களும் 3 இரண்டாம் இடங்களும் மாகாண மட்டத்தில் 4 முதலாம் இடங்களும் தேசிய மட்டத்தில் 3 முதலாம் இடங்களும் கிடைக்கப்பெற்றன.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் 2008 தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 11 முதலாம் இடங்களும் 5 இரண்டாம் இடங்களும் 4 மூன்றாம் இடங்களும் கிடைத்துள்ளன. வலய மட்டத்தில் 6 முதலாம் இடங்களும் 5 இரண்டாம் இடங்களும் கிடைத்துள்ளன. மாவட்டமட்டத்தில் பரிசுகள் பெற வாழ்த்துக்கள்.

**தமிழ்மொழித்தின விழா**

2007ம் ஆண்டு தமிழ்மொழித்தின விழா இவ்வருடம் 27.02.2007 திகதி நடாத்தப்பட்டது. பிரதம விருந்தினராக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, (தலைவர் தமிழ்த்துறை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) வருகை தந்திருந்தார். விழா செல்வன்.இ.கஜிதரன் தலைமையில் நடைபெற்றது.

**ஆங்கில மன்றம்**

2007 ஆங்கில தினப்போட்டிகளில் கோட்டமட்டத்தில் 18 முதலாம் இடங்களும் 15 இரண்டாம் இடங்களும் 5 மூன்றாம் இடங்களும் வலய மட்டத்தில் 2 முதலாம் இடங்களும் 3 இரண்டாம் இடங்களும் 4 மூன்றாம் இடங்களும் மாவட்ட மட்டத்தில் 2 முதலாம் இடங்களும் 1 மூன்றாம் இடங்களும் மாகாணமட்டத்தில 1 முதலாம் இடமும் கிடைத்துள்ளது. Recitation Gr 5ல் செல்வி.தரண்யா மணிசேகரன் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று எமது பாடசாலைக்கு மட்டுமல்ல தெல்லிப்பழை கோட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இவருக்குப் பொறுப்பாக இருந்த செல்வி.கீதாஞ்சலி சுந்தரமூர்த்தி ஐயரை பாராட்டுவதோடு ஆங்கில மன்றப் பொறுப்பாசிரியர் திரு. வைத்திலிங்கம் விஜயபாஸ்கர் அவர்களுக்கும் பாராட்டுக்கள். இவ்வருடமும் பாடசாலை மட்டத்தில் ஆங்கில தினப் போட்டிகள் நடைபெற்றன. இதுவரை நடந்த கோட்ட மட்டப்

போட்டிகளில் 17 முதலாம் இடங்களும் 11 இரண்டாம் இடங்களும் 10 மூன்றாம் இடங்களும் பெறப்பட்டுள்ளன. நடைபெறும் வலய, மாவட்ட, மாகாண தேசிய போட்டிகளுக்கு எம் பாராட்டுக்கள். சகல போட்டிகளிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் ஆங்கில மொழி ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு ஆங்கில மன்றப்பொறுப்பாசிரியர் திரு.வயித்திலிங்கம் உமாசுதன் அவர்களுக்கு நன்றி.

**ஆங்கில தின விழா**

2007ம் ஆண்டு ஆங்கில தின விழா இவ்வருடம் 14.03.2008 நடாத்தப்பட்டது. பிரதமவிருந்தினராக திரு. ரி. இந்திரசிங்கம் (முன்னாள் ஆங்கில ஆசிரியர்) வருகை தந்திருந்தார். விழா செல்வி. இ. பிரியதர்சினி தலைமையில் நடைபெற்றது. ஆங்கில தினவிழாவுக்கான செலவுகளை எமது பழைய மாணவி திருமதி.இந்திரமதி இராமச்சந்திரா (விரிவுரையாளர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை) பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு எமது நன்றிகள்.

**சைவவளர்ச்சிக்கழகம்**

சைவ வளர்ச்சிக்கழகம் பாடசாலைகளில் சகல இந்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றது. அக்கழகத்தின் அனுசரணையில் ஆலயத்தின் தினப்பூஜையும், ஆலய அர்ச்சகருக்குரிய சம்பளம், மற்றும் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, நடேசர் அபிடேகங்கள் சிறப்பாக ஆனி உத்தரம் அபிஷேகம் பாடசாலையின் சமய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் நாயன்மார் குருபூசைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. நடேசர் அபிடேகங்கள் ஆசிரியர்கள் குழுக்களாக இணைந்து ஒழுங்கமைப்புச் செய்வது சிறப்பு.

இதைவிட வருடம் தோறும் திருக்கேதீச்சரம் 5ம் திருவிழாவும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் 17ம் திருவிழாவும் சிறப்பாக நடாத்துகின்றோம். கீரிமலை நகுலேஸ்வரம் கோயிலுக்கும் வருடாந்த உற்சவத்தில் எமது பாடசாலைக்கென ஒதுக்கப்படும் நாளில் மாணவர்களை அழைத்துச்செல்கின்றோம்.

2007ல் பொறுப்பாசிரியராக திருமதி. சீ. தேவதாசன் தொழிற்பட்டார் 2008ல் திருமதி. உ. புஷ்பராசா தொழிற்படுகின்றார்.

**இந்து மன்றம்**

பாடசாலையில் வாணிவிழா இம்மன்றத்தால் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இது தொடர்பாக சகலகலாவல்லிமாலை பாடுதல், கோலம் போடுதல், மாலை கட்டல் போன்ற போட்டிகள் கட்டுரைப் போட்டி, பண்ணிசை என்பன நவராத்திரி நாட்களில் நடத்தப்பட்டு விஜயதசமியன்று விழா எடுத்து மானம்பூ விழா நடத்திப் பரிசு வழங்குகின்றனர்.

கடந்த வருடம் 21.10.2007 திரு.சரவணமுத்து விநாயகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரும் முன்னாள் ஆசிரியரும்) பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார். செல்வன்.சாரங்கன். தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய இந்து மன்ற ஆசிரியர்களுக்கும் பொறுப்பாசிரியர் திருமதி.உ.புஷ்பராசாவுக்கும் எனது பாராட்டுக்கள்.

**விஞ்ஞான மன்றம்**

விஞ்ஞான வாரம் அனுஷ்டிக்கப்பட்டு விஞ்ஞான கணித புதிர்ப்போட்டி, சுவரொட்டிப் போட்டி, கவிதைப் போட்டி, கற்றல் உபகரணக் கண்காட்சிகள் நடத்தினர். விஞ்ஞான கணித கண்காட்சி 18.02.2008 திகதியில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு. சுகுமார் (உதவிக்கல்விப்பணிப்பாளர் கணிதம்) சிறப்பு விருந்தினராக திரு. நாகரட்ணம், (ஆசிரிய ஆலோசகர் விஞ்ஞானம், வலிகாமம் கல்வி வலயம்) வருகை தந்திருந்தனர்..19.02.2008ல் செல்வன். ஜெ. கௌசிகன் தலைமையில் விஞ்ஞானதினம் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக கலாநிதி ஜி.மிகிந்தன் (தலைவர் விவசாய உயிரியல் பீடம்) பங்கேற்றனர். **"பசுமைப்புரட்சியும் அதன் பின்னரான விவசாய வளர்ச்சியும்"** தலைப்பில் ஆய்வுரை பல் ஊடக எறியியில் சமர்ப்பிக்கப்பட்டது. அன்றைய தினம் Discovery சஞ்சிகை முதலாவது இதழ் வெளியிடப்பட்டது. பத்திராதிபராக செல்வன்.ந.நிதர்சன் தொழிற்பட்டார். வெளியீட்டுரை திரு.இரட்ணசிங்கம், (ஆசிரிய ஆலோசகர் விஞ்ஞானம் யாழ் வலயம்) நடாத்தினார். மாணவர்களின் சில ஆக்கங்கள் வெகுவாக சிலாகிக்கப்பட்டது பெருமைப்படக்கூடியது. விஞ்ஞான மன்ற சகல ஆசிரியர்களுக்கும் பொறுப்பாசிரியராகச் செயற்பட்ட திரு.க.வாணிமுகுந்தனுக்கும் இணைப்பாளராகத் தொழிற்பட்ட திருமதி.ப.லோகநாதனுக்கும் எனது பாராட்டுக்கள்.

திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கணித விஞ்ஞானப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் விஞ்ஞானத்தில் 3 முதலாம் இடங்களும் 2 இரண்டாம் இடங்களும் கணிதத்தில் 3 முதலாம் இடங்களும் 1 இரண்டாம் இடமும் 1 மூன்றாம் இடமும் வலயமட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் 2 முதலாம் இடங்களும் மாகாணமட்டத்தில் செல்வி கி.விஷ்ணுகா 2ம் இடத்தையும் செல்வன். த பிரதீப் ஆறுதல் பரிசையும் பெற்றார். அவர்களுக்கு என் பாராட்டுக்கள். இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்ட போட்டியில் பங்கு பற்றிய செல்வன்.கபில்ராஜிற்குப் பாராட்டுக்கள்

**வணிக மன்றம்**

குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் இந்த வருடம் இல்லையாயினும் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் கோட்ட மட்டத்தில் நான்கு முதலாம் இடங்களும் 2 இரண்டாம் இடங்களும் 2 மூன்றாம் இடங்களும் கிடைக்கப்பெற்றன. வலயமட்டத்தில் 1 இரண்டாம் இடமும் 1 மூன்றாம் இடமும் கிடைக்கப்பெற்றன. யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்ககங்களின் சமாச வெள்ளி விழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் 2 முதலாம் இடங்களும் 2 இரண்டாம் இடங்களும் 1 மூன்றாம் இடமும் கிடைக்கப்பெற்றன. பொறுப்பாசிரியராகத் தொழிற்பட்ட திரு.இ.தயாகரனுக்குப் பாராட்டுக்கள்.

**சுகாதார மன்றம்**

சுகாதார விழிப்புணர்வு ஊட்டுவதுடன் முதலுதவி அறை தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். ஆனாலும் சிறிய காயங்கள், நோய்கள் போன்றவற்றைச் சமாளித்தாலும் எங்கள் பாடசாலையின் இருப்பு உயர் பாதுகாப்பு வலய எல்லை என்பதால் வைத்தியர்களை அணுக வேண்டிய நேரங்களில் போக்குவரத்து வசதியின்மை எம்மை மிகுந்த கஷ்டத்திற்குள்ளாக்குகின்றது. என்பதை மனக்கிலேசத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது பாடசாலைக்கு அடிக்கடி சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள், வைத்தியர்கள் வருகை தருவதற்கு நன்றி கூறுகின்றேன். மேலும் சுகாதார மன்ற ஆசிரியர்களுக்கும் பொறுப்பாசிரியர்கள் திருமதி.லோ.சுபேந்திரன் திருமதி.சா.கிருபாகரனுக்கும் எனது பாராட்டுக்கள்.

**உயர்தர மாணவர் மன்றம்**

சகல மன்றங்களின் செயற்பாடுகளையும் உள்ளடக்கியது. கல்வி ஆண்டின் முடிவில் அயற்பாடசாலை மாணவர்களை அழைத்து மதிய போசனத்துடன் ஒன்று கூடல் நிகழ்வை 26.05.2008 அன்று நடத்தினார்கள் . இதற்குப் பிரதம விருந்தினராக திரு.நா.அரியபுத்திரன் ( சட்டத்தரணியும் பழைய மாணவனும்) திருமதி.அரியபுத்திரன் (பழைய மாணவி) வருகை தந்திருந்தனர்.மாணவர் நலன் நிதிக்காக ரூபா.3000.00 அன்பளிப்பு செய்தார் செல்வன்.சுகந்தன் தலைமையில் பாடசாலைக்கும் தம்மை உருவாக்கிய ஆசிரியர்களுக்கும் மாணவர்கள் நன்றி கூறினார்கள். இந்நிகழ்வு திறம்பட அனுசரணை வழங்கிய ஆசிரியர்களுக்கும் பொறுப்பாசிரியர் திரு.இ.தயாகரனுக்கும் பாராட்டுக்கள்.

**சுற்றாடல் பாதுகாப்பு கழகம்**

பாடசாலைச் சூழலை அழகுபடுத்தும் யாபேருக்கும் நன்றிகள். சுற்றாடல் பாதுகாப்பு திட்டமாக மைதானத்தில் சுற்றிவர மரங்கள் நடுவதற்காக பாரிஸ் ப.மா.ச. தலைவர் திரு.இராதாகிருஷ்ணன் ஊடாக 15 அங்கத்தவர்களின் அன்பளிப்பாக 38,718/= அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து மரங்கள் நடப்பட்டதுடன் பதாகைகள், பூந்தோட்டங்கள் பராமரிப்பு என்பனவும் செய்யப்படுகின்றது. சுற்றாடல் பாதுகாப்பு தரவட்ட ஆசிரியர்கள் உதவுவதுடன் பொறுப்பாசிரியராக திரு.இ.துரைசிங்கமும் திரு.வே.ஜீவரூபனும் தொழிற்படுகின்றனர். பாடசாலைச் சூழல் அழகுற மாறிக் கொண்டுவருவது கண்கூடு.

**சதுரங்கக் கழகம்**

13 வருடங்களாக இயங்கி வரும் இக்கழகத்தில் இவ்வருடம் 52 அங்கத்தவர்கள் உள்ளனர். பாடசாலை மட்டத்தில், கோட்ட வலய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் எமது மாணவர்கள் முன்னணி வகிக்கின்றனர்.வலய மட்டத்தில் 19 வயது ஆண்கள், பெண்கள், 15 வயது ஆண்கள், பெண்கள் வெற்றி வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வருடம் முதலாம் தவணையில் நூற்றாண்டை நோக்கிய பயணத்தின் ஒரு செயற்பாடாக வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை

மாணவர்களுக்குப் பயிற்சிப் பாசறைகள் வைக்கப்பட்டுப் போட்டிகள் 4 வாரங்களாக நடாத்தப்பட்டது. அனுசரணையாளராக மக்கள் வங்கி சுன்னாகம், விளம்பர அனுசரணையாளராக தினக்குரல் பத்திரிகை தொழிற்பட்டன. அவர்களுக்குப் பாடசாலை நன்றியைத் தெரிவிக்கின்றது. இட வசதி தந்த மல்லாகம் மகாவித்தியாலய அதிபருக்கும் எம் நன்றிகள். இவர்களுக்குப் பயிற்றுவிப்பாளராக செல்வி.கு.அஜிராணி, செல்வன்.ஜெ.ஜெயப்பிரியந்தன், செல்வன் பா.பாலசஞ்சிதன் தொழிற்பட்டனர். பொறுப்பாசிரியராக மிகுந்த வினைத்திறனுடன் தொழிற்பட்ட திரு.ம.மணிசேகரன் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.இதற்கான பரிசளிப்பு இம்மாத இறுதியில் விழாவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

**ஒழுங்காற்றுச் சபை**

பாடசாலையின் ஒழுங்கை ஆற்றுப்படுத்தும் இச்சபையில் அதிபருடன் ஆசிரியர்களும் மாணவ முதல்வர்களும் உள்ளனர். மாணவ முதல்வர்களில் 19 ஆண்களும் 23 பெண்களும் இவ்வாண்டு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். அத்துடன் தரம் 7 -11 வரை வகுப்பு பிரிவுக்கு இருவராக மாணவ முதல்வர்கள் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள்.

சிரேஷ்ட மாணவ தலைவன் :- செல்வன்.பா.நீதுஜன்

சிரேஷ்ட மாணவ தலைவி :- செல்வி.சி.லக்ஷியா

உதவி சிரேஷ்ட மாணவ தலைவன் :- செல்வன்.இ. முரளிதரன்

உதவி சிரேஷ்ட மாணவ தலைவி :- செல்வி.மு.மோகனா, செல்வி.செ.ஜீவனா

பொறுப்பாசிரியர்கள் திரு.இ.துரைசிங்கம் , செல்வி.இ.சம்பந்தர்

மாணவ தலைவர்கள் பாடசாலைக்கு விசுவாசமாகவும் தம் பதவிக்கு மரியாதை கொடுப்பவர்களாகவும் தொழிற்பட்டு தம் பாடசாலை ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**நுண்கலை மன்றம்**

திணைக்களம் நடாத்தும் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தி அனுப்புவதுடன் தமிழ்த்தினப்போட்டிகளிலிலும் மாணவர்களைப் பயிற்றுவித்து மாகாண , தேசிய மட்டங்களில் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் உலக உள நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் 3 முதலாம் இடங்களையும் 2 மூன்றாம் இடங்களையும் பேச்சு, தனிநடிப்பு, ஓவியம் என்பவற்றில் பெற ஊக்குவித்துள்ளனர். பொறுப்பாசிரியர்களாக திருமதி.பா.கணேசதுரை, திரு.ச.செந்தில்வேல் தொழிற்படுகின்றனர்.

**சாரணியம்**

இவ்வருடம் எமது சாரணர் அமைப்பு வினைத்திறன் வாய்ந்ததாகத் தன்னை நிலைநாட்டத் தொடங்கியுள்ளது. பாடசாலையின் சகல நிகழ்வுகளிலும் தமது சேவையை வழங்கி வரும் சாரணர்கள் 30 பேரை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. 2007ல் நடைபெற்ற சாரணியர்களுக்கான மாவட்ட மட்ட போட்டிகளில் காவடி நடனம்,தாளலயம் என்பவற்றில் 1ம் இடங்களையும் பேச்சு செல்வன்.க.இதயராஜ்1ம்

இடத்தினையும் பெற்றுள்ளார். மாகாணமட்ட போட்டிகளில் தாள லயத்திலும் காவடி ஆட்டத்திலும் 1ம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.தொடர்ந்து மாவட்ட மட்ட சாரணிய விளையாட்டுப் போட்டியிலும் பங்கு பற்ற இருக்கின்றார்கள்.

சாரணியர்களுக்காக இலவசமாக முற்றான சீருடை வழங்க 35,000/= தந்துதவிய லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் திரு.கணேசலிங்கத்திற்கு எம் நன்றிகள். 07.02.2008ல் பாடசாலை மட்டத்தில் சாரணர்களும் வழிகாட்டிகளும் இணைந்து பேடன் பவல் தினம் கொண்டாடினார்கள். பொறுப்பாசிரியர்களாகக் கடமையாற்றும் திரு.சி.சிவகரன், திரு.இ.நந்தகுமாரனுக்குப் பாராட்டுக்கள்.

**வழிகாட்டிகள்**

உலக சாரணிய தினத்தையொட்டிய சிரமதானங்கள் செய்ததுடன் 22.02.2008ல் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியரிடம் பெண்களுக்கான முதலுதவிப்பெட்டிகள் கையளிக்கப்பட்டன. 8 மாணவிகள் கடந்த வருடம் வழிகாட்டிகளாகச் சின்னம் சூட்டப்பட்டனர். 19.04.2008ல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சிப்பாசறையில் 24 பேர் பங்கு பற்றினர். இணைவு பெறுவதற்கான பயிற்சியில் 15 பேரும் 2ம் வகுப்பு சின்னம் பெறும் பயிற்சியில் 25 பேரும் ஈடுபட்டுள்ளனர். இவர்களை வாழ்த்துவதுடன் பொறுப்பாசிரியர்களாகக் கடமையாற்றும் திருமதி.சா.கிருபாகரன், செல்வி. இ. செனகரத்தினம், திருமதி. த. கணேசானந்தன் இணைப்பாளராகக் கடமையாற்றும் திருமதி.செள.பத்மநாதன் ஆகியோருக்கு எம் நன்றிகள்.

**சிறுதோழியர்**

சிறுதோழியருக்கு திருமதி. சி. வனஜாவும், திருமதி. சி. பரமசிவமும் பொறுப்பாசியராகத் தொழிற்படுகின்றனர்.

**குருளைச்சாரணர்**

திருமதி.ஜெ.மயில்வாகனம், செல்வி.போ.டெய்சிதேவநாயகி, திருமதி.சா.பிரதீபன் குருளைச்சாரணருக்குப் பொறுப்பாசிரியர்களாகத் தொழிற்படுகின்றனர்.

**விளையாட்டுத்துறை**

ஒரு பாடசாலையின் வளர்ச்சியினை, ஒழுக்கம், கல்வி எந்தளவிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றதோ அந்தளவிற்குச் சமமாக விளையாட்டுத்துறையும் அளவுகோலாக அமைகின்றது என்பது நிஜம். எமது பாடசாலையில் இரு நாட்களுக்கு விளையாட்டுப் போட்டி நடைபெறும் கனிஷ்ட பிரிவு விளையாட்டுப் போட்டி 01.02.2008 ல் பிரதம விருந்தினராக திரு.மயில்வாகனம் அருள்சோதிநாதன் (பழைய மாணவன், பதில் முகாமையாளர், பிராந்திய கணக்காய்வாளர், இ.போ.ச. கோண்டாவில்) திருமதி.வள்ளிநாயகி அருட்சோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெற்றது,

02.02.2008ல் சிரேஷ்ட பிரிவு இல்ல மெய் வல்லுனர் போட்டி பிரதம விருந்தினராக எந்திரி சின்னத்துரை தயாபரன் அவர்களையும் வைத்திய கலாநிதி சகிதேவி தயாபரன் அவர்களையும் கொண்டு நடாத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக திரு. ச.கைலாசநாதன் (கோட்டக்கல்விப்பணிப்பாளர் தெல்லிப்பழை) அவர்களும்

துறைசார் விருந்தினராக திரு.முருகர் நடராசா (உதவிக்கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி) கலந்து கொண்டனர்.

**இல்லங்களின் நிலை**

| | கனிஷ்ட பிரிவு | சிரேஷ்ட பிரிவு |
|---|---|---|
| 1ம் நிலை | சின்னையா | சின்னப்பா |
| 2ம் நிலை | துரையப்பா | சின்னையா |
| 3ம் நிலை | சின்னப்பா | துரையப்பா |
| 4ம் நிலை | அருளம்பலம் | அருளம்பலம் |
| 5ம் நிலை | ஜயரத்தினம் | ஜயரத்தினம் |

இல்ல மெய் வல்லுனர் போட்டிக்காக திரு.க.செல்வகுணச்சந்திரன் (முன்னாள் ஆசிரியர் லண்டன் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்) 25,000/= அன்பளிப்பு செய்தார். 2007ம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் 1ம் இடம் பெற்று 17 மாணவர்கள் நேரடியாகத் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர். இவர்களில் செல்வன் .ம.கோகுலதாஸ்(21 வயது) முப்பாய்ச்சலில் 5ம் இடத்தினையும் செல்வன் தே.மோகுநாத்(17 வயது) கோலூன்றிப்பாய்தல் 5ம் இடத்தினையும் செல்வன்.ம.பார்த்தீபன் (21 வயது) தட்டெறிதலில் 8ம் இடத்தினையும் பெற்றதொடு செல்வி.இ.அனித்தா (21 வயது) 200 M ஓட்டத்தில் அரையிறுதிப் போட்டியில் தெரிவானார். இவர்களுக்கு வாழ்த்துக்கள்.

2008ம் ஆண்டு மெய்வல்லுனர் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 56 முதலாம் இடத்தினையும் 24 பேர் இரண்டாம் இடத்தினையும் 16 பேர் மூன்றாம் இடத்தினையும் பெற்றனர். வலயமட்டத்தில் 39 பேர் முதலாம் இடத்தினையும் 15 பேர் இரண்டாம் இடத்தினையும் 7 பேர் மூன்றாம் இடத்தினையும் பெற்றனர். மாவட்ட மட்டத்தில் 16 பேர் முதலாம் இடத்தினையும் 10 பேர் இரண்டாம் இடத்தினையும் 6 பேர் மூன்றாம் இடத்தினையும் பெற்றனர்.

பெரு விளையாட்டுக்களில் கோட்ட மட்டத்தில் 1ம் இடம் 7 குழுவும் 2ம் இடம் 6குழுவும் 3ம் இடம் 1 குழுவும் வலய மட்டத்தில் 1ம் இடத்தில் 6 குழுவும் 2ம் இடத்தில் 2 குழுவும் 3ம் இடத்தில் 3 குழுவும்வெற்றியீட்டின.

மாவட்ட மட்டத்தில் இரு விளையாட்டுக்கள் முதலாம் இடத்தினைப் பெறுகின்றன. இந்த வாரம் இறுதியில் வவுனியாவில் நடைபெற இருக்கின்ற வடமாகாண விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற வாழ்த்துக்கள்.

| விளையாட்டு | பிரிவு | பொறுப்பாசிரியர் | பயிற்றுனர் | அணித்தலைவர் |
|---|---|---|---|---|
| கரப்பந்து | 15 G | திருமதிச.சயந்தன் | திரு.சி.தயாளபாலன் | செல்வி.பா.புகழரசி |
| | 17 G | திருமதி.லோ.சுபேந்திரன் | திரு.சி.கமலமோகன் | செல்வி.மோ.மாதங்கி |
| | 19 G | திருமதி.சௌ.விஸ்வலிங்கம் | | செல்வி.லக்ஷியா |
| | 15 B | திரு.த.தவராஜா | திரு.க.ஜனார்த் | செல்வன்.ச.வகுளபூசணன் |
| | 17 B | திரு.சி.தேவகுமாரன் | | செல்வன்.ச.வஜிதன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 19 | B | திரு.E.K.V.ஜோன்சன் | | செல்வன்.ந.நிஷாந்தன் |
| மென்பந்து | 19 | | திரு.வ.உமாசுதன் | திரு.க.மயில்வாகனம் | செல்வன்.ச. ஜபாகர் |
| வலைபந்து | 15 | G | திருமதி.சி.மதிசீலன் | செல்வி.சி.மனோன்மணி | செல்வி.மதுரிகா |
| | 17 | G | திருமதி.பி.சாமினி | திருமதி.உ.குணனேசன் | செல்வி.அஜிதா |
| | 19 | G | செல்வி.இ.சம்பந்தர் | செல்வி.அனுஷா | |
| உதைபந்து | 13 | B | திரு.த.தயானந்தன் | திருசெ.ரமணன் | செல்வன்.ஜெ.ஜனந்தன் |
| | 15 | B | திரு.த.தயானந்தன் | செல்வன்கு.மோசிகீரன் | |
| | 17 | B | திரு.வ.உமாசுதன் | திரு.தி.புருஷோத்மன் | செல்வன்.தி.கஜேந்திரன் |
| | 19 | B | திரு.இ.தயாகரன் | திரு.க.வசந்தரூபன் | செல்வன்.மு.டயர்தன் |
| சதுரங்கம் | 15 | G | | | |
| | 19 | G | திரு.மணிசேகரன் | திரு.மணிசேகரன் | |
| | 15 | B | | செல்வி.கு.அஜிராணி | |
| | 19 | B | | செல்வன்.ஜெ.ஜெயப்பிரியந்தன் | |
| | | | | செல்வன்.பா.பாலசஞ்சிதன் | |
| | | | | திரு.க.வாணிமுகுந்தன் | |
| துடுப்பாட்டம் | 13 | B | திரு.த.தயானந்தன் | | செல்வன்.அ.பிரசாந் |
| | 15 | B | திரு.வ.உமாசுதன் | திரு.இ.சிறிதரன் | செல்வன்.சி.டிலக்சன் |
| | 17 | B | திரு.வ.உமாசுதன் | | செல்வன்.ம.கஜதீபன் |
| | 19 | B | திரு.க.மயில்வாகனம் | | செல்வன்.ம. எல்மோ நிக்சன் |

விளையாட்டுத்துறையில் 19 வயது உதைபந்தாட்டத்தில் 1987ற்கு பின் 21 வருடங்களின் பின் மாவட்டச் சம்பியனைப் பெற்றிருக்கின்றோம். இது எமக்கு ஒரு "Bench Mark" மேலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பெண்கள் கரப்பந்தில் 17 வயது பிரிவு மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இரு பிரிவினரும் தேசிய மட்டம் வரை செல்ல வாழ்த்துகின்றோம். விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காக லண்டன் ப.மா.சங்கம் மிகுந்த உதவியைச் செய்து வருகின்றது. அத்துடன் நலன் விரும்பிகளும் ஆதரவு கொடுக்கின்றார்கள். அவர்களுக்கு நன்றியைக் கூறுவதுடன் விளையாட்டுத்துறை தலைவர் திரு.நா.புனிததயாபரனுக்கும் செயலாளர் திரு.த.தயானந்தனுக்கும் பாராட்டுக்கள்.

இவ்வருடம் எமது விளையாட்டுத் துறையின் அர்ப்பணிப்பாளர் ஒருவரை இழந்து நிற்கின்றோம். எமது பழைய மாணவனும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளருமான அமரர் திரு.இராஜநாயகம் றொகான் இராஜசிங்கம் அவர்களின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். நூற்றாண்டில் பாடசாலையின் விளையாட்டுதுறையில் பல சாதனைகளை நிலை நாட்ட வேண்டும் என்று விரும்பிய அந்த நல்ல ஆத்மாவிற்கு மாணவர்களாகிய நீங்களும் விசுவாசமாக இருந்து சாதனை புரிவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நடத்தப்படும் சேவைகள்:

**வங்கிச் சேவை:**

மாணவரின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கியின் வங்கிச் சேவைகள் பாடசாலையில் நடைபெறுகின்றன. வங்கி, மாணவர்களைத் தேடி வரும் சேவையில் இவ்வருடம் தொடக்கம் இலங்கை வங்கியும் தன் சேவையை ஆரம்பித்துள்ளது.

| | |
|---|---|
| 1) தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம் | திருமதி.சிவசக்தி சயந்தன் |
| 2) மக்கள் வங்கி, சுன்னாகம் (சிசுஉதான அலகுண்டு) | திருமதி.சு.சுதாகரன் |
| | திரு.ம.மணிசேகரன் |
| 3) இலங்கை வங்கி | திருமதி ஜெ.மயில்வாகனம் |
| | திரு.க.வாணிமுகுந்தன் |

**புலமைப்பரிசில் கொடுப்பனவு:**

தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசில் கொடுப்பனவும் உரிய காலத்தில் மாணவர்களுக்கும் கிடைக்க உதவி செய்யப்படுகின்றது. இதில் முகாமைத்துவ உதவியாளர் (அவுஸ்திரேலியா சிட்னி பழைய மாணவர் சங்கம் அனுசரணை) செல்வி.பகீரதி புஷ்பநாதன் மிகுந்த வினைத்திறனுடன் செயலாற்றுகிறார். அவருக்குப் பாராட்டுக்கள்.

**தேசிய அடையாள அட்டை, தபால் திணைக்கள அட்டை, பாடசாலை அடையாள அட்டை**

சகல மாணவர்களுக்கும் பாடசாலை அடையாள அட்டை கிடைக்கத் தொழிற்படும் திருமதி.வளர்மதி அமரகுலசிங்கத்திற்கும் தபால் திணைக்கள அட்டை தரம் 6லிருந்து கிடைப்பதற்கு தொழிற்படும் திருமதி.சௌமியா விஸ்வலிங்கம், திரு.தர்மபுத்திரன் தயானந்தனுக்கும், தேசிய அடையாள அட்டை கிடைப்பதற்குத் தொழிற்படும் திரு.சுப்பிரமணியம் சயந்தனுக்கும் நன்றிகள். மேலும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இரண்டு நாட்களுக்குள் பெற்றுக்கொடுக்கும் திருமதி.சௌ.விஸ்வலிங்கத்திற்கும் நன்றி.

**இலவச பாடநூல்கள், சீருடைகள் வழங்கல்**

கல்வியமைச்சினால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள் மாணவர்களுக்குச் சரியாகப் பங்கிடப்படுவதில் பகுதித்தலைவர்களும் வகுப்பாசிரியர்களும் இவர்களுக்குப் பொறுப்பாக திரு.சு.முருகமூர்த்தி அவர்களும் வினைத்திறனுடன் தொழிற்படுகின்றனர். இலவச சீருடை வழங்குவதில் பொறுப்பாசிரியராக திரு.த.தவராஜா அவர்கள் சிறப்பாக தொழிற்படுகின்றார். இவர்களுக்கு நன்றிகள்.

**போக்குவரத்து, பருவகாலச் சீட்டு**

பஸ்ஸில் மாணவர்களுக்கு உரியகாலத்தில் பருவகால சீட்டுக்கள் பெற்றுக் கொடுப்பதில் உதவும் எமது ஆய்வு கூட உதவியாளர் திரு.க.சுரேஷ் அவர்களை நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

இவ்விடத்தில் எமது பாடசாலைக்கான போக்குவரத்து சேவை வினைத்திறனாக இல்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரச அதிபர், பிரதேச செயலாளர், முகாமையாளர், போக்குவரத்து சபை ஆகியோருடன் எவ்வளவு முறை தொடர்பு கொண்டும் முன்னேற்றம் எதுவும் இல்லை. என்பது வருந்தத்தக்கது. எனினும் காலம் கனியும் என்று நாமும் மாணவர்களும் காத்திருக்கிறோம். இதற்குப் பொறுப்பானவர்கள் கவனிப்பார்களா? என்ற வினாவை உங்கள் சிந்தனைக்கு விடுகின்றேன்.

**மாணவர் நலன் உதவி**

சீருடை, கற்றல் உபகரணங்கள், சப்பாத்துக்கள், கல்வித் தேவை அனுசரணை தேவைப்படும் மாணவர்கள் இனம் காணப்பட்டோ/பெற்றோர்களினால் வேண்டப்படும் போதோ மேற்படி தேவை நிறைவேற்றப்படுகின்றது. இதற்காகப் பல பழைய மாணவர்கள் உதவுகிறார்கள். அண்மையில் வெளிவாரி மதிப்பீட்டில் வலயக்கல்வித்திணைக்களம் எமது பாடசாலை மாணவர் நலன் உதவி ஆவணங்களைப் பார்வையிட்டு "Bench Mark" குறிப்பிட்டது மகிழ்ச்சிக்குரியது. உதவும் நல்ல உள்ளங்களுக்கு நன்றிகள்.

**கட்டாயக் கல்விக்குழு**

பாடசாலைகளில் இடைவிலகல் மாணவர்கள், அடிக்கடி வருகை தராமை தொடர்பாக அமைக்கப்பட வேண்டும் என்ற திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய 2007 July மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவில் அதிபர், பிரதி அதிபர், ஆலயக் குருக்கள், கிராம சேவையாளர் திரு.தவராசா, சமுர்த்தி அலுவலர் திரு.ஈஸ்வரன், நலன் விரும்பி திரு.ச.விநாயகரத்தினம்,ஆகியோருடன் இரு ஆசிரியர்களும் தொழிற்படுகின்றனர். மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமை கூடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் இது தொடர்பாகப் பாரட்டப்பட்ட பாடசாலை என்ற பெருமை எமக்கு உண்டு. பிரதி அதிபர்.திருமதி.சௌ.பத்மநாதன் வினைத்திறனுடன் தொழிற்படுவது பாராட்டுக்குரியது.

**வழிகாட்டல் ஆலொசனை**

எமது பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியர்களாகத் தொழிற்படும் திரு.சி.சிவாகரன், திரு.இ.நந்தகுமாரன் ஆகியோரால் விசேட கல்வி நிலைய அலகு இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுத் தொழிற்படுகின்றது. உள வள பகுதி நேர ஆலோசகராக எமது ஆசிரியர் திருமதி.பகீரதி கணேசதுரையும் தொழிற்படுகின்றார். மாணவர்களின் உளப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு மகிழ்ச்சியாகக் கற்பதற்கு உதவி செய்யப்படுகிறது. மேலும் எமது பாடசாலையில் சாந்திகம், சிறுவர்பாதுகாப்பு நிதியம், உள நலப்பயிற்சிகளை வழங்கியுள்ளனர். அதிபர் உட்பட ஆசிரியர்களுக்குப் (உள்ளக்கமலம்) பயிற்சி வழங்கப்பட்டு மாணவர்களுக்குப் பயன் உறுதியாக்கப்பட்டது.

**நூலக சேவை:-**

எமது நூலகம் தற்போது ஓரளவு மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியளவு நூல்களால் நிரம்பியுள்ளது. எமது பழைய மாணவர் திரு. S. சண்முகநாதன் (பன்னாலை) அவர்களால் கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு வழங்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாவில் நூலகப் புத்தகங்கள் 85,000/= பெறுமதியான நூல்கள் வாங்கப்பட்டடுள்ளன. இதில் 60,000/= பெறுமதியான ஆங்கில புத்தகங்கள் வாங்கப்பட்டு ஆங்கில நூலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது வேறான நூலகமாக இயங்க வேண்டும் எனத் தீர்மானிக்க ப்பட்டுள்ளது.முன்னாள் அதிபர்.திரு.பொ.கனகசபாபதிஅவர்கள் இது தொடர்பாக ஒரு வகுப்பறையை நூலகமாக மாற்றப்படக் கூடிய வகையில் செலவுகளை எதிர்கொள்ள எமது பழைய மாணவன் ஒருவர் தயாராக உள்ளார் என உறுதியளித்துள்ளார். மேலும் தர உள்ளீட்டின் மூலம் 70,000/= பெறுமதியான தமிழ்ப் புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளது. சிறுவர் பாதுகாப்பு நிதியமும் 20,000/= பெறுமதியான புத்தகங்களை வழங்கியுதவியுள்ளனர். ஆசிரிய நூலகர் செல்வி அஜிராணி குகநேசனும் ஆசிரியை செல்வி.ச ஜனிதா சண்முகமும் வினைத்திறனாகத் தொழிற்படுகின்றனர்.

**உலக உணவுத்திட்டம்:-**

இத்திட்டம் மாணவர்க்கு ஒரு வரப்பிரசாதம். சமயலறை வசதி இல்லாதிருந்த எமக்கு மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு பழைய மாணவர் சங்கங்களின் நிதியுதவியுடன் விடுதிச்சாலை, சமயலறை புனரமைக்கப்பட்டு நல்ல முறையில் பாவனைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் நன்மையானதாயினும் சரிவர செய்வதற்கு ஆசிரியர்கள் மிகுந்த முயற்சி எடுத்துள்ளனர். இதற்காக உலக உணவுத்திட்டத் தரவட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இணைப்பாளராக திரு.ம.மணிசேகரனும் உதவியாக திரு.நா.புனிததயாபரனும் அதிபருடன் இணைந்து தொழிற்படுகின்றனர். இவர்களுடன் மரக்கறிக் கொள்வனவில் திரு.அசோக்குமாரனும் மரக்கறித் தோட்டம் அமைப்பதில் திரு.த.கனகேஸ்வரனும் தொழிற்படுகின்றனர். அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

**(ESDFP) கல்வித்தர அபிவிருத்தி வழவமைப்பும் செயற்றிட்டமும்**

மேற்படி திட்டத்தின் கீழ் மாணவர்களின் தரவிருத்திச் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதன் இனைப்பாளராக திரு. ம. மணிசேகரனும், திரு.சிறீஸ்கந்தராசாவும் தொழிற்படுகின்றனர். அவர்களுக்கு நன்றி.

**கணனிக்கற்கை நிலையம்**

தரம்11 ல் 2007ல் மாணவர்கள் தகவல் தொழிநுட்பத்துக்கெனப் பொதுப்பரீட்சையில் தோற்றினாலும் இதுவரை நிரந்தர ஆசிரியர்கள் இல்லை. பழைய மாணவன் திரு.இ.செல்வஸ்கந்தனின் அனுசரணையோடு தகவல்தொழிநுட்ப ஆசிரியர்கள் திரு.மகேஸ்வரன் ரகுநந்தன், செல்வி.பிரவீனா சிவசுப்பிரமணியமும் தொழிற்படுகின்றனர்.

கணனிக்கற்கை நிலையத்திற்குப் பொறுப்பாக திரு.ம.மணிசேகரன் தொழிற்படுகின்றார். இந்நிலையம் பரீட்சைக்குழுவின் தேவைகளையும் நிறைவேற்றக் கூடிய வகையில் சிறப்பாகத் தொழிற்படுகின்றது. பொறுப்பாசிரியர்களுக்கு நன்றி. இத்துடன் எம்மிடம் ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி.சஜிரணி குமாரசாமிக்கும் இந்த இடத்தில் நன்றி கூறுகின்றேன்.

கணனி கற்கைநிலையம் அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கேற்ப விஸ்தரிக்கப்படவேண்டியதும் குறைந்தது 40 கணனிகள் கொண்ட நிலையமாக மாறவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது என்பதைப் பாடசாலை அபிமானிகளுக்கு இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இத்தேவை நூற்றாண்டிற்கிடையில் பூர்த்தி செய்யப்பட்டால் மகிழ்ச்சியடைவோம்.

**கட்புல செவிப்புல சாதன அறை:-**

கற்றல் கற்பித்தலுக்காக பயன்படுத்தப்படுகின்றது. போதிய எண்ணிக்கையான சாதனங்கள் இருந்தும் இடப்பற்றாக்குறைவும் மின்சார வசதி எல்லா இடங்களிலும் இல்லாமையும் பிரச்சினையாக இருந்தாலும் பொறுப்பாசிரியராக திரு.த.தவராசா வினைத்திறனுடன் சகல ஆசிரியர்களையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் நடாத்துகின்றார். பாராட்டுக்கள்.

**கால் கோள் விழா:-**

தரம் 1 மாணவர்களை வரவேற்கும் இவ்விழா ஜனவரி 09.01.2008 நடைபெற்றது. அன்றைய தினம் மக்கள் வங்கி சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் சகல மாணவர்களுக்கு தனித்தனியாக 100/= வைப்பிலிட்டு வழங்கி வரவேற்றார்கள். ஆசிரியர் நலன்புரிச்சங்கமும் பயிற்சிக்கொப்பிகள், எழுதுகருவிகள் வழங்கித் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். சிறப்பாக இவ்விழாவை கொண்டாடிய ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர் திரு.சி.தேவகுமாரன் மற்றும் ஆரம்பப்பரிவு ஆசிரியர்களுக்கு பாராட்டுக்கள்.

**பாண்ட் வாத்தியக்குழு:-**

கடந்த வருட அதிபர் அறிக்கையில் குறிப்பிட்ட எமது வேண்டுகோள் அடுத்தடுத்த மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு சிறுவர்பாதுகாப்பு நிதியத்திற்கு; இணைப்பாளராகத் தொழிற்பட்ட எமது பழைய மாணவி செல்வி.கிருஷ்ணலீலாவுக்கு எமது நன்றிகள். புதிய பாண்ட் வாத்தியக் கொள்வனவுக்கு 2,50000/= சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியிருந்தது. மேலும் கனிஷ்ட பாண்ட் வாத்தியக்குழுவும் எம்மால் அமைக்கப்பட்டு, ஜயரத்தினம் நினைவு தின விழாவில் அரங்கேறியது மகிழ்ச்சிக்குரியது. இதற்காக உழைத்த திரு.இ.ஞானேஸ்வரன் அவர்களுக்கும் உதவியாக இருந்த செல்வி.சு.கீதாஞ்சலி, திருமதி.உதயா குணனேசன் ஆகியோருக்கும் பாராட்டுக்கள்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**

ஆசிரியர் நலன்களைக் கருத்திலெடுப்பதிலும் அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்கெடுப்பதிலும் வினைத்திறனாகத் தொழிற்படுகின்றது. கடந்த வருடத்தில் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திரு.இராஜகுலேந்திரன், பகுதித்தலைவர் திருமதி.நி.இராசதுரை பதவியுயர்வு பெற்று இடம் மாறிச் சென்ற திரு.க.காராளசிங்கம் திரு.க.சிவகரன் மற்றும் வேறு பாடசாலைகளுக்கு 2007 ஜனவரியில் இடம்மாறிச் சென்ற திருமதி.சுகந்தி சிறிகரன், திருமதி.த.கணபதிப்பிள்ளை ஆகியோருக்குச் சேவை நயப்பு விழாக்கள் எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தலைவர்களாகத் தொழிற்பட்ட திரு.க.காராளசிங்கம், திரு.ம.மணிசேகரன் செயலாளர் திரு.வை.விஜயபாஸ்கர் பொருளாளர் திருமதி பு.அகிலலோகநாயகம் ஆகியோருக்குப் பாராட்டுக்கள்.

**மகாஜனன் சஞ்சிகை வெளியீடு**

1997ற்கு பின் 2007ம் ஆண்டு ஒக்.29ம் திகதி ஜயரத்தினம் நினைவுதினமும் கனிஷ்ட பிரிவுப் பரிசளிப்பும் விழாவில் "மகாஜனன்" XXXII வது இதழ் வெளியிடப்பட்டது. இதனுடைய ஆய்வுரையை கலாநிதி.த.கலாமணி அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்) நிகழ்த்தினார். முதற்பிரதியை அன்றைய தின, பிரதம விருந்தினர் திரு.சு.சுந்தரசிவம் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம், வலிகாமம்) வெளியிட்டு வைக்க, வைத்திய கலாநிதி சிவபாதநாயகி கனகசபை பெற்றுக்கொண்டார். 2006, 2007 நிகழ்வுகளை உள்ளடக்கிய ஆவணமாக வெளியிடப்பட்டு பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகளின் ஆதரவினால் செலவுகள் ஏற்கப்பட்டு அடுத்த "மகாஜனன்" வெளிப்பட ஆயத்தமாகின்றது என்பது பெருமைக்குரிய விடயம். மலர் ஆசிரியராக திருமதி.ரேணுகா கேசவன் வினைத்திறனுடன் தொழிற்பட்டார். "மகாஜனன்" வெளியீட்டு கூட்டு முயற்சியில் பங்கெடுத்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றிகள்.

**சுவடுகள் செய்தி மடல் வெளியீடு**

பாடசாலையின் வளர்ச்சியைப் படிப்படியாக ஆவணப்படுத்தி இன்னும் எப்படி வளரலாம் என்பதையும் வளர்ச்சிக்கு யார், யார் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் எமது "சுவடுகள்" மாதாந்த செய்தி மடலுக்கு (News letter - Suvaduhal) ஒன்றரை வயது பூர்த்தியாகி 17 மடல்கள் உங்கள் கைகளில் தவழ்ந்திருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்."சுவடுகள்" பெற்றுக் கொள்ளும் நலன்விரும்பிகளின் ஆர்வத்திலிருந்து சுவடுகளின் உயர் மதிப்பீடு வெளிப்படுகின்றது. சுவடுகள் தொடரும்.

இதற்காக மடலாசிரியர் செல்வி.இராஜேஸ்வரி செனகரத்தினமும் ஆலோசகர் என்ற வகையில் அதிபரும் நாற்பது ஐம்பது வருடங்கள் முந்திய ஆவணங்களைப் புரட்டும் போது எமக்கு ஒரு ஆத்மதிருப்தி கிடைக்கின்றது என்றால் மிகையாகாது. பழைய

ஆவணங்கள், புகைப்படங்கள், சஞ்சிகைகள் வைத்திருப்பவர்கள் நிச்சயமாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். சுவடுகள் தயாரித்தலில் ஈடுபடும் செல்வி.இராஜேஸ்வரிக்கு நன்றி கூறுவதுடன் இதை வெளியிட அடிப்படைச் செலவாக மாதாந்தம் 3,000/= படி 36,000/= எமக்களித்த அவுஸ்திரேலியா பழைய மாணவர்சங்க உறுப்பினர் (சிட்னி) DR.கேதீஸ்வரன் அவர்களுக்கு நன்றி.

**பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு:-**

ஒவ்வொரு தவணை முடிவிலும் மாணவர்களின் விடைத்தாள்களைப் பார்வையிடவும் தேர்ச்சியறிக்கையைப் பெறவும் பெற்றோர் குறிப்பிடப்பட்ட நாட்களில் அழைக்கப்படுகின்றார்கள். இதைவிட அதிபர் அனுமதியுடன் ஆசிரியர்களை வந்து சந்திக்கவும் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**ஐயரத்தினம் நினைவு தினம்**

வருடா வருடம் அக்டோபர் மாதம் 29ம் திகதி ஐயரத்தினம் நினைவு தினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் நடைபெறும் பாடசாலையின் தரம் 1-8 வரையான மாணவர்கள் அன்றைய தினம் கௌரவிக்கப்படுவார்கள். இவ்வருடம் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நிர்வாகம் வலிகாமம் கல்வி வலயம் திரு.சுப்பிரமணியம் சுந்தரசிவம் பிரதம விருந்தினராகவும், திரு.ச.கைலாசநாதன் (கோட்டக்கல்விப்பணிப்பாளர்) சிறப்புவிருந்தினராகவும், பல்கலைக்கழக விரிவுரையாளரும் பழையமாணவருமான திரு.ஸ்கந்தவரதர் ரமேஷ் நினைவுப்பேருரை ஆற்றவும் கலந்து கொண்டனர். விழாச்செலவு கனடா பழைய மாணவர் சங்கமும். தெல்லிப்பழை பழைய மாணவர் தாய்ச்சங்கமும் பொறுப்பேற்கின்றது.

**பாடசாலை அபிவிருத்திச்சங்கம்:-(செயற்பாட்டறிக்கை)**

பொதுக்கூட்டம்:-01: விசேட பொதுக்கூட்டம்:- 01 நிர்வாக சபை கூட்டம்:- 09

2007ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை 01.04.2007 தெரிவு செய்யயப்பட்டது. 2006ம் ஆண்டு செயற்திட்டங்களின் நிறைவு விழா கொண்டாடப்பட்டது. உலக உணவு நிதியத்தின் மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்துகின்றார்கள்

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அன்பளிப்பில் பான்ட் வாத்தியக் கருவிகள் வாங்கியும் வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசியும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு படங்களும் வரைந்துள்ளார்கள்.பிரதிஅதிபர்.திரு.செ.இராஜகுலேந்திரன். பகுதித்தலைவர். திருமதி.நி.இராசதுரை ஆகியோருக்கு சேவை நலன் பாராட்டு விழாவினை ப.மா.ச, ஆசிரியர் கழகம், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் இணைத்து சிறப்பாக நடத்தினர். கல்லூரியில் தேநீர்சாலை, புத்தகசாலையை நடாத்துகின்றார்கள், மற்றும் பெற்றோர்களுடன் இணைந்து சிரமதானம் செய்துள்ளனர். செயலாளராக தொழிற்படும் .திரு.க.ரவீந்திராவுக்கும் பொருளாளர் திரு.இ.துரைசிங்கத்திற்கும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் நன்றி.

**பழைய மாணவர் தாய்ச் சங்கம்:-(செயற்பாட்டறிக்கை)**

ஏனைய பழைய மாணவர் சங்க கிளைகளின் செயற்பாடுகள் 2007ல் தாய்ச்சங்கத்தின் ஊடாக நடைபெற்றது. கோவில் திருவிழாக்கள், இல்ல மெய்வல்லுனர் போட்டிகள், நடத்தினர். ஸ்கந்தவரோதயாக்கல்லூரியுடன் நடைபெறும் மாபெரும் துடுப்பாட்டப்போர்(கிரிக்கெட் போட்டி) 1984 Batch , பழைய மாணர்களின் உதவியுடனும் இச்சங்கம் நடாத்துகின்றது. இவ்வருடம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் எமது சிறப்பு விருந்தினராக திரு.ச.ஜனார்த்தனும் திரு.நா.துஷ்யந்தனும் கலந்து கொண்டனர். மேலும் திரு.சி.ஜசிதரன் ஊடாக ஆசிரியர்களுக்குரிய ஊக்குவிப்பு பணமாக திரு.Kசுதர்சன் (பழைய மாணவன்) 42,000/= வழங்கியுள்ளார். திரு.ம.அருள்சோதிநாதன் தனது சகோதரி எமது முன்னாள் ஆசிரியர் திருமதி.ச.பொன்னுத்தரை ஞாபகார்த்தமாக 40,000/= பெறுமதியான கோவைகள் பாதுகாக்கும் பைகளை தரம் 1-5 வரையான மாணவர்களுக்குத் தந்துதவியுள்ளார். பூந்தோட்ட, பராமரிப்புக்காக எந்திரி ராமதாசன் 26,000/= வும் திருமதி.சரஸ்வதி கருணாகரன் 5,000/= தந்துவியுள்ளனர். 1984 Batch CDMA அன்பளிப்புச் செய்துள்ளனர். திருமதி.நி.இராசதுரை மாணவர் நலன் நிதிக்காக 15,000/= வழங்கியுள்ளார். Dr. ஆரணி தம்பித்துரை தமிழ்த்தினப் போட்டிச்செலவுக்காக 10,000/= வழங்கியுள்ளார். தெல்லிப்பழைக் கோட்ட விளையாட்டுப் போட்டியில் எமது பாடசாலையினால் அமரர் றொகான் இராஜசிங்கத்தின் நினைவுக்காக வழங்கப்பட்ட வெற்றிக் கேடயங்களுக்குரிய 10,000/= பெறுமதியான செலவை தெல்லிப்பழை பழைய மாணவர் தாய்ச் சங்கம் பொறுப்பேற்றது.

பழைய மாணவரான அமரர்.றொகான் இராஜசிங்கம் அவர்களுக்குக் கல்லூரியில் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து அஞ்சலி நிகழ்வை நடத்தினார்கள். பழைய மாணவர்களில் இணைச்செயலாளர்களாகத் தொழிற்பட்ட திரு.இ.சிறிதரனுக்கும், திரு.சி.தேவகுமாரனுக்கும் பொருளாளராகத் தொழிற்பட்ட திரு.ம.மணிசேகரனுக்கும் பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் நன்றிகள்.

**அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி**

1) NECORD நிறுவனத்தால் 0.84 million பெறுமதியான 600 பிளாஸ்ரிக் கதிரைகள் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
2) 1 million செலவில் தண்ணீர் தாங்கி NECORD அனுசரணையில் பா.அ.சங்கத்தினால் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது.
3) 3 அலகு ஆய்வு கூடம் 10 million செலவில் கட்டப்பட ஆயத்தங்கள் நடைபெறுகின்றது.

இவ்வுதவிகளுக்கு பழைய மாணவன் திரு.லங்காநேசன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

**மகாஜன கல்லூரி கல்வி அபிவிருத்தி நிதியம்:-**

2007 ஏப்பிரலில் கம்பனி விதிக்குட்பட்ட (Company act) யாப்பு அமைப்பின் படி கல்வி அபிவிருத்தி நிதியம் (Mahajana College Foundation for Educational Development) பத்து பணிப்பாளர்களைக்கொண்டதான பணிப்பாளர் சபையினால் தலைவர் திரு.லங்காநேசனைக் கொண்டதாகத் தொழிற்படுகின்றது. இந்நிதியம் உலக பழைய மாணவர் சங்கக் கிளைகளை ஒருங்கிணைத்துப் பாடசாலை அபிவிருத்திக்குக் கைகொடுக்கிறார்கள். இதனூடாக எமது க.பொ.த சாதாரண தர மாணவர்கள் இவ்வருடமும் பரீட்சையில் 10A பெற்றவர்கள் இரு வருடங்களுக்கு மாதாந்தம் 2000/=ம் 5A ற்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்தம் 1500/= பெறுவதுடன் 2007ம் ஆண்டு க.பொ.த(சா/த) பரீட்சை எடுத்த மாணவர்கள் இப்புலமைப் பரிசிலுக்குட்பட்ட நான்காவது அணியினர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 2008ல் உயர்தர பரீட்சை எடுக்கும் நான்கு மாணவர்களும் 2009ல் உயர்தரபரீட்சை எடுக்கும் 4 மாணவர்களும் கல்வித்தேவைக்கான மானியமாக மாதாந்தம் 1000/= அவர்கள் பரீட்சைக்காலம் வரை பெறுகிறார்கள். 2010 ல் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் 07 பேருக்கு இம்மானியம் வழங்கப்பட இருக்கிறது. இதைவிட பிற பாடசாலைகளிலிருந்து எமது பாடசாலையில் அனுமதி பெற்றுக் கல்வி கற்கும் 8A/8Aற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு 1500/= மாதாந்தம் புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. அவ்வாறு ஒரு மாணவன் (2009 Batch) பெறுகிறான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் 6 மில்லியன் ரூபா செயற்றிட்டமாக கல்வி அபிவிருத்தி நிதியம் எமது பாடசாலைப் பழுதடைந்த கட்டிடங்கள், உடைந்த, கட்டிமுடிக்கப்படாமல் இருப்பவை மற்றும் மலசலகூடங்கள் என்பவற்றை இவ்வருடம் பெப்ரவரியிலிருந்து ஆரம்பித்துப் பாடசாலையைப் புதுப்பொலிவுடன் திகழ வைக்கத்தொடங்கியிருக்கிறார்கள் என்பது கண்கூடு. இதற்காக உலகிலுள்ள பழைய மாணவர்கள் உதவிக்கொண்டிருப்பதையிட்டு மகாஜன அன்னை தன் நன்றிகளையும் ஆசிகளையும் தன்மைந்தர்களுக்கு உவகையுடன் தெரிவிக்கிறாள். இதுவரை ஏறக்குறைய 25 லட்சம் செலவழிக்கப்பட்டுவிட்டது. பாடசாலை நாட்கூலியில் தொழிலாளர்களை அமர்த்தி வேலைகள் நடைபெறுகின்றன. எமக்கு ஆலோசகராகச் சகல விதத்திலும் தொழிற்படும் எந்திரி இராமதாசன் அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றோம்.அத்துடன் வேலைகளைப் பழைய மாணவர் திரு.சிறிதரன் மேற்பார்வை செய்வதுடன் இச்செயற்றிட்டத்திற்கு பாடசாலை மட்டத்தில் தலைவராக அதிபரும் செயலாளராக திரு.ம.மணிசேகரனும் பொருளாளராக திரு.சு.சயந்தனும் செயற்படுவதுடன் மற்றும் எமது ஆசிரியர் உபகுழுவும் இணைந்து மேற்பார்வை செய்வது குறிப்பிடத்தக்கது.

இந்த இடத்தில் அதிபர் என்ற வகையில் இங்கே கூடியிருக்கும் பழையமாணவர்கள்,பெற்றோர்கள்,நலன்விரும்பிகள் மற்றும் இங்கு வருகைதரமுடியாமல்

ஆனால் இவ்வறிக்கையை வாசிக்கும் யாபேருக்கும் ஒரு வேண்டுகோள். கட்டடங்கள் புனரமைப்புச் செயற்பாடுகளில் பல வகுப்பறைகள் கவனமாக இடித்தெடுக்கப்பட்ட கற்கள், மரங்களைக் கொண்டு செய்யப்படுவதால் உங்களாலும் சிறு உதவு தொகை வழங்கப்படும் போது ஒரு வகுப்பறை /வகுப்பறைகள் மிக இலகுவாகப் பூரணப்படுத்தப்பட்டு விடும். எனவே பாடசாலை மீண்டெழுவதைக் கண்ணால் நேரடியாகப் பார்க்கக்கூடிய அதிஷ்டமுள்ள நீங்களும் ஏன் இந்தச் செயற்திட்டத்தில் பங்கு கொள்ள முடியாது? புனரமைப்புச்செய்யப்படுகையில் எமது உதவி விலை மதிக்க முடியாததாக இருக்கும். விழா முடிந்ததும் பாடசாலையைச் சுற்றிப் பாருங்கள். நூற்றாண்டில் என் பங்களிப்பு இது என்று சொல்ல இங்கே ஒரு அடையாளம் நிச்சயமாக இருக்கவேண்டும் என்பதை உங்கள் சிந்தனைக்கு விடுகின்றேன்.

தற்போது எமக்குப் பழைய மாணவர் சங்கக் கிளைகளினால் வழங்கப்படும் நிதி கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு வருவதால் எம்முடைய தேவைகள் விரைவாகவும் இலகுவாகவும் தீர்க்கப்படுகின்றன. மேலும் இந்நிதியம் சிறப்புடன் செயலாற்ற எம் வாழ்த்துக்கள்.

**பழைய மாணவர் சங்க கிளைகள்:-**

கொழும்பு பழைய மாணவர்சங்கக் கிளை திரு.சிறீகணநாதன் தலைமையில் இயங்குகின்றது. கடந்த மார்கழி 2007 அதிபரைக் கொழும்புக்கு அழைத்துப் பாடசாலைத் தேவைகளை அறிந்தார்கள். அதனைத் தொடர்ந்து பாடசாலைக் கட்டட வேலைகள் ஆரம்பமானது. அதற்காக அவர்களுக்கு நன்றி. மேலும் எமது விளையாட்டு வீரர்கள், தமிழ்த்தின போட்டியாளர்கள் தேசிய மட்டப் போட்டிக்குச் சென்ற போது ஏனைய பாடசாலைகள் சிலாகிக்கும் அளவிற்கு எமது ஆசிரியர்களும் மாணவர்களும் திருப்தியுறும் வகையில் மிக அன்பாக நேர்த்தியாகக் கவனித்து அனுப்பியிருந்தார்கள். ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் மனதார நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எமக்கு விளையாட்டு உபகரணங்கள் தந்துதவியுள்ளனர். மேலும் நூல்கள் கொள்வனவு, கழுத்துப்பட்டி, (Tie) கொள்வனவு என்பவற்றில் கொழும்பு ப.மா.ச. கிளையின் உதவி பாராட்டத்தக்கது. இந்த இடத்தில் ப.மா.ச. உறுப்பினரும் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர்களின் ஒருவருமான திரு.த.பூ.முருகையா அவர்களுக்குப் பாடசாலை சார்பில் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

லண்டன் பழையமாணவர்சங்கக்கிளை திரு.A.விமலதாசன் அவர்கள் தலைமையில் விளையாட்டுத்துறைக்கு அனுசரணையாளர்களாகத் தொழிற்படுகின்றார்கள். மொத்தமாக கடந்த வருடம் (4,92065/=) நான்கு லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுபத்துஐந்து ரூபா வழங்கியிருந்தார்கள். இவ்வருடம் முதற்கட்டமாக 1,65000/= அபிவிருத்தி நிதியத்தினூடு அனுப்பியுள்ளார்கள். அத்துடன் கதிரேசர்பிள்ளை சிறுவர் முற்றத்தின் செலவின் மீதிப்பணமான 1,35000/= அனுப்பி

சிறுவர் முற்றத்திற்கான முழுச்செலவான மூன்று லட்சத்து முப்பத்தையாயிரத்தைப் பொறுப்பேற்றுள்ளனர். மேலும். திரு. கணேசலிங்கத்தினால் சாரணியர்களுக்குச் சீருடை வழங்க 35,000/= லண்டன் ப.மா.சங்கத்தினூடு தரப்பட்டுள்ளது. திரு.க.செல்வகுணச்சந்திரன் அவர்கள் குழந்தை கவிதை புத்தக வெளியீடு, மாவிட்டபுரம், திருக்கேதீஸ்வரம் திருவிழாச் செலவாக 1,50000/= அனுப்பியுள்ளார்.

பிரான்ஸ் பழைய மாணவர் சங்கக்கிளை திரு. இராதாகிருஷ்ணன் தலைமையில் எமக்கு உதவுகின்றது. அவர்களால் வைப்புச் செய்யப்பட்ள்ள5,00000/= லிருந்த வரும் வட்டிப்பணத்திலிருந்து ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகின்றது. கடந்த வருடம் மாணவர் நலன் கருதி, சம்பளகுறை நிரப்பு பணம், தளபாடதிருத்தம் என்பவற்றுக்கு மொத்தமாக 15,3509/= அனுப்பியுள்ளனர். இவ்வருடம் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டத்திற்காக பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் 15 பேர் சேர்ந்து மரம் நடுகைக்காக 38,718/= அனுப்பியுள்ளனர்.

அவுஸ்திரேலியா (சிட்னி) பழைய மாணவர் சங்கக்கிளை திரு.பகீரதன் தலைமையில் ஆங்கில ஆசிரியர்களுக்கு முகாமைத்துவ உதவியாளருக்குமாக கடந்த வருடம் மொத்தமாக 249480/= அனுப்பியுள்ளார். இவ்வருடத்தின் தேவையைக் கேட்டுள்ளனர்.

கனடா பழைய மாணவர் சங்கக்கிளை திரு.நந்தீஸ்வரர் தலைமையில் கடந்த வருடம் பாதுகாப்புச் சுருக்குக் கேற் 135000/= பரிசளிப்பு விழாவுக்காக 75,000/= தந்தவியுள்ளார். இவ்வருடம் புதிதாக நாம் அறிமுகப்படுத்திய கழுத்துப்பட்டிகள் 4500 க்குமுரிய 4½ லட்சம் ரூபா பண உதவியை கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடு செய்துள்ளார்கள். இதுவரை கழுத்துப்பட்டிகள் விற்ற பணம்130,000/= மீளவைப்புச் செய்துள்ளோம். அவ்வருடமும் அதே தலைமையின் கீழ் பரிசளிப்பு விழாச் செலவுக்கான நிதியினை அனுப்பியுள்ளனர்.

.அவுஸ்திரெலியா மெல்போர்ன் கிளையின் தலைமையில் 92,000/= பெறுமதியான ஒரு தொகுதி சப்பாத்துக்கள் அபிவிருத்தி நிதியத்தினூடு அனுப்பிவைத்துள்ளனர். பாடசாலைக்கான காணிக் கொள்வனவிற்கு அவர்கள் தயாராக இருப்பதை அறிந்து சந்தோஷப்படுகின்றோம்.

பரிசளிப்பு அறிக்கையில் உலகெங்கிலுமுள்ள பழைய மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க திரு.க. செல்வகுணச்சந்திரனின் அனுசரணையில் நூற்றாண்டு விழா பயணத்தில் மயிலங்கூடலூர் திரு.பி.நடராசா அவர்களினால் தொகுக்கப்பட்ட மகாஜனன்களின் குழந்தைக்கவிதைத் தொகுதி வெளியீடு ஒரு சிலவாரங்களில் நடாத்த இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

* பாடசாலை அபிவிருத்தியில் அக்கறையோடு பங்கெடுக்கும் அனைத்துக் கிளைகளுக்கும் எம் நன்றிகள்.

**பாடசாலையின் இன்றைய நிலையும் அதன் தேவையும்:-**

ஏறக்குறைய காலை 6.30ற்கு பின் கலகலக்கத் தொடங்கி பி.ப 5 மணிக்கு ஓய்ந்து போகும் குடி சன நடமாட்ட மற்ற உயர்பாதுகாப்பு வலய எல்லையில் அமைந்துள்ள எமது பாடசாலையில் இருந்து நாம் சாதனைகளைப் படைத்துக் கொண்டு இருக்கின்றோம். 2007 பரிசளிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பல தேவைகள் இப்போது சீர் செய்யப்பட்டு விட்டாலும் தளபாடப் பற்றாக்குறை இன்னும் சீர் செய்யப்படவேயில்லை. 2009ம் ஆண்டிற்குரிய இலக்காக அச்செயற்றிட்டத்தை உங்கள் முன் வைக்கின்றேன். அத்துடன் பஸ் போக்குவரத்து இன்னும் சீர்செய்யப்பட முடியவில்லை. நாங்களும் போகாத இடமில்லை, அனுப்பாத கடிதங்களுமில்லை நீங்களும் முயற்சியுங்கள்.

இத்தகைய நிலையிலும் பாடசாலையை உரிய நேரத்திற்கு திறந்து மாணவர்கள் வரும் போது சுயாதீனமாக உள்ளே வர உறுதுணையாக இருப்பவர்கள் எமது அலுவலக ஊழியர்கள் திரு.ஆ.நவரத்தினராசா, திரு.த.கனகேஸ்வரன். அத்துடன் பூந்தோட்டப் பராமரிப்பிலும் உலக உணவுத்திட்டத்திலும் உதவியாக திரு.அசோக்குமாரன் ஏனைய அலுவலக ஊழியரான எம்மிடமிருந்து மாற்றலாகிச் சென்ற திரு.இ.தெய்வேந்திரராசா ஆகியோரை நன்றியுடன் நினைவுகூருகின்றேன். ஆனாலும் எம்மிடம் ஊழியர் இருந்தும் இல்லை என்ற நிலையில் சுகாதாரத் தொழிலாளி எமக்கு பொருத்தமில்லாததால் ப.மா.ச.அனுசரணையுடன் சுத்திகரிப்புத் தொழிலாளியை அமர்த்தியுள்ளோம். எமது காவலாளியாக திரு.சிவானந்தராசா தொழிற்பட்டாலும் இரவு நேரக்காவலாளியின் அவசியத்தையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**நன்றி நவிலல்**

வேலைப்பளு மத்தியிலும் எமது அழைப்பை உடனடியாக ஏற்று வருகை தந்து பரிசில்களை வழங்கி விழாவைச் சிறப்பித்தமைக்குக் கலாநிதி கனகசபை சிவபாலன் அவர்களுக்கும் திருமதி. அருணேஸ்வரி சிவபாலன் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நினைவுப்பேருரை ஆற்ற வந்த எமது பழைய மாணவன் வைத்திய கலாநிதி கந்தஞானியார் இளங்கோஞானியாருக்கும் எம் நன்றிகள் உரித்தாகட்டும்.

தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் தகுந்த நேரங்களில் வழங்கி பாடசாலையை வழிநடத்தும் வலயக் கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர், கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் சகோதர பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழையமாணவர் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். நினைவுப் பரிசில்கள் வழங்கிய அனைவருக்கும், பாடப்பரிசுகள் வழங்குவதற்கு பண உதவிகள் செய்த அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகங்கள், மன்றங்கள் அனைத்திற்கும் பொறுப்பாக இருந்து மாணவர்களை வழிநடத்தும் பொறுப்பாசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலை சீராக இயங்க போக்குவரத்துச் சேவையினை வழங்கும் வடபிராந்திய போக்குவரத்து சபை பொது முகாமையாளருக்கும் ஏனைய ஆளணியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாடசாலைச் சுற்றாடலைக் காலத்திற்குக் காலம் துப்புரவு செய்யும் வேலைக்குத் தமது ஊழியர்களைத் தந்து உதவும் வலிகாமம் பிரதேச சபை ஆணையாளருக்கும் ஊழியருக்கும் எம் நன்றிகள்..

எமது உலக உணவுத்திட்டம் சிறப்பாக இயங்க தேவைப்படும் உணவுப்பொருட்களைத் தந்துதவும் உலக உணவுத்திட்ட நிதியத்திற்கும் தெல்லிப்பழை அளவெட்டி கூட்டுறவுச்சங்க கிளைகளுக்கும் நன்றிகள். பரிசுக்குரிய போட்டிகளையும் பரீட்சைகளையும் நடாத்தி பரிசுப்பட்டியல் தயாரித்துத் தம் பணியைத் திறமையாகச் செய்தபரிசுக்குழுவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக செல்வி.வே.பத்மலோஜினி, திருமதி.உ.புஷ்பராசா, திருமதி.சௌ.விஸ்வலிங்கம், செல்வி.செ.இராஜேஸ்வரி, திருமதி.ஆ.விமலதாசன், திரு.செ.சத்தியநாராயணன், திரு.க.வாணிமுகுந்தன் ஆகியோருக்குப் பாராட்டுக்கள்.

இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்கும் ஆசிரியர்களின் முயற்சிக்கு நன்றி. அத்துடன் தேநீர் விருந்து, மதியபோசன விருந்து ஒழுங்கு படுத்தும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**பழையதில் நில்லாதே புதியதைத் தேர்ந்தெடு:**
**பட்ட கல்வி போதாது பாண்டித்தியம் ஆகு**
**செயல்களில் என்றும் புதியதைக் காட்டு**
**முன்வைத்த காலை முன்னேயே வை**
**இயலாது என்று இருந்து விடாதே**
**நிகழ்வுகளை அவதானித்து நிறைவாகச் செய்**

இறுதியாக இப்பாடசாலை உன்னத இலட்சியத்துடன் உயர்ச்சி அடைய எம்முடன் தோள் கொடுக்கும் பிரதிஅதிபர்கள், உபஅதிபர், உதவிஅதிபர்கள், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், தர இணைப்பாளர்கள், வகுப்பாசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் எல்லோருக்கும் மேலாக மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் நன்றி கூறி அதிபர் அறிக்கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

வணக்கம்

திருமதி.சி.அனந்தசயனன்

யா/மகாஜனக் கல்லூரி.

தெல்லிப்பழை.

# விழாக்களின் பதிவுகள் 2007



# தமிழ்த்தின விழா - 2007



தமிழ்த்தின விழாவிற்கு வருகை தந்த பிரதம விருந்தினர் அவர்களை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கீழைத்தேய வாத்தியங்களுடன்
அழைத்துவருவதைப் படத்தில் காணலாம்



பிரதம விருந்தினராக வருகைதந்த
தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா அவர்கள்
உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்

## நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் (2008) அன்று பிரதம விருந்தினர் கலாநிதி கனகசபை சிவபாலன் அவர்கள் (M.B.B.S, Peredeniya, University, Ph.D, Leeds U.K) ஆற்றிய உரை......



மதிப்புக்குரிய கல்லூரி முதல்வர் அவர்களே, நினைவுப் பேருரையாற்ற வந்திருக்கும் சிறப்பு விருந்தினர் அவர்களே, கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, பழைய மாணவர் சங்கச் செயலாளர் அவர்களே, பிரதிஅதிபர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே,

இன்று இந்த நிகழ்விற்கு வரவேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப்பட்டபோது எனது மனநிலை அவ்வளவு நிறைவாக இருக்கவில்லை. எனது கடமை நிமித்தமாகவும் வேறுபல காரணங்களாலும் நான் பொது நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதைத் தவிர்த்து வந்திருக்கிறேன். ஆனால் மகாஜன அன்னையின் அழைப்பை எளிதாகத்தட்டிக் கழிக்க முடியவில்லை. ஆனால் இன்று இங்கு வந்த பின் மனதிலே ஒரு பூரிப்பும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது. ஏனென்றால் இங்கே ஒரு நம்பிக்கையை நான் பெற்றுள்ளேன். அந்தக் காலத்திலிருந்த மகாஜனாவின் மீளமைப்பு, புத்தூக்கம் ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு நம்பிக்கை வருகின்றது. அது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இன்று இங்கு என்னை அழைத்ததற்கு மிகவும் நன்றியுடைய வனாயிருக்கின்றேன். இன்று பல உரைகளைக் கேட்டுக் களைத்துப் போயிருக்கிறீர்கள், இருந்தாலும் சில கருத்துக்களைக் கூற வேண்டும் என்பது எனக்கிடப்பட்ட கட்டளை. எனவே சில கருத்துக்களை முன் வைக்கவேண்டி இருக்கின்றது. திருக்குறள் எனக்கு மிகவும் ஒரு வழிகாட்டி நூல். அதை நான் முழுவதும் படிக்கவில்லை. சில குறள்கள் எனது மனதைத் தாக்கியுள்ளன. என்னைத் தாக்கிய ஒரு குறள்

*"கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்"*

கற்றதன் பயனென்ன? என்ற கேள்விக்கு இது விடைதானா என்பது அந்தக்காலத்தில் எனக்கு ஒரு பெரிய கேள்வியாக இருந்தது. என்ன இது Botany யும் Zoology யும் படிக்கிறோம் Chemistry யும் Physics யும் படிச்சுப்போட்டு பின் எவ்வாறு கோயிலில் போய்க் கும்பிட்டுக்கொண்டு நிற்கிறது. அதுக்கும் இதுக்கும் என்ன சம்மந்தம்? ஏனென்றால் திருக்குறள்ப் புத்தகத்தைப் பார்த்தால் கற்றதன் பயன் இறைவனை வணங்குதல் என அர்த்தப்பட்டுள்ளது. எனக்கு அதை அவ்வளவாக ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. எனது தகப்பனார் ஒரு பண்டிதர், உறவினர்களும் தமிழ்

கற்றவர்கள், அவர்களுடன் பேசும் சந்தர்ப்பங்களில் இது ஏன் இப்படிப் போட்டிருக்கின்றது. எனக் கேட்டேன். இறைவன் எல்லாம் அறிந்தவன். நீ கற்றால் எல்லாம் அறிந்தவனை வணங்குவாய் என்ற மாதிரியான ஒரு கருத்தைச் சொன்னார்கள். பின் ஏன் வால் வைத்திருக்கினம்? வால் என்பதன் அர்த்தம் உண்மையான, தூய்மையான அறிவுள்ளவன் என்றார்கள். எனக்கு அப்போது ஒரு யோசனை வந்தது. இது ஆசிரியராக இருக்கக் கூடாதோ? வாலறிவன் உண்மையான தூய்மையான ஆசிரியனாக ஏன் இருக்கக்கூடாது? நீ உண்மையாகக் கற்றிருந்தால் நீ உன் ஆசிரியரை ஏன் வணங்கக்கூடாது, என்று திருவள்ளுவர் கூறியிருக்கவில்லை? கூறியிருக்கக் கூடாது? இறைவன் என்றால் ஆசிரியர் இல்லையா? எங்கள் பாரம்பரியம் மாதா, பிதா, குரு, தெய்வம்.

இப்படியான சிந்தனை எனக்குப் பல காலம் இருந்து வந்தது. அதன் முழுமையான அர்த்தம் எனக்கு முந்தநாள் இரவு தான் புரிந்தது. ஏனென்றால் முந்தநாள் இரவு 11 மணிக்கு எனக்கு ரெலிபோன் கோல் கனடாவிலிருந்து கனகசபாபதி கதைக்கிறேன் என்றார். அந்த நேரம் எனக்கு ஏற்பட்ட உணர்வு! (குரல் தழுதழுத்ததை சபையிலிருந்தோர் உணர்ந்திருந்தனர்) எனது ஆசிரியர் அவ்வளவு தூரம் நான் இங்கு வருகின்றேன். என்று அறிந்ததும், கனகாலம் தொடர்பில்லாமல் இருந்தவர், அவரது குரலைக் கேட்டதும் ஏற்பட்ட அந்த உணர்வு: விவரிக்க முடியாத நிலை. அது தான் வாலறிவனை வணங்குதல் என நினைக்கின்றேன். நான் இங்குகற்ற 3 வருடங்களும் கனகசபாபதி மாஸ்டருடன் பல விதங்களில் ஊடாடியிருக்கிறேன். அதில் ஒரு முக்கிய விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அந்தக்காலத்தில் A/L படிப்பில் Lab மிக முக்கிய பங்கை வகித்தது. எங்களுக்கு எழுத்து மூலமான பரீட்சை முடிந்தால் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று செய்முறைப்பரீட்சையிலே தேறிய பின் தான் பரீட்சைப் பெறுபேறு கிடைக்கும். எங்களுக்கு முதன் முறை சரிவரவில்லை பிரச்சினையில்லை. இரண்டாவது முறை theory முடிந்தது. Practical call வந்து விட்டது. போயாச்சு. Zoology Practical செய்து கொண்டிருக்கும் போது எனக்கு ஏற்பட்ட அளவுக்கு மீறிய சந்தோஷத்தில் சின்ன ஒரு தவறு நடந்து போச்சு. Practical ல் ஒரு பிழை விட்டுவிட்டேன். அந்தப் பிழை Practical முடிந்து வெளியே வந்து நண்பர்களுடன் உரையாடும் போது தான் தெரிய வந்தது.

அந்தத் தவறு நான் விட்டு விட்டேன் எனத் தெரிய வந்த போது என்னுடன் இருந்த எல்லோருக்கும் இருந்த உணர்வு, நான் பிழை விட்டு விட்டேன்; நான் fail பண்ணப்போறன்,

எனக்கு admission கிடைக்காது என்பதல்ல, இதை எப்படிக்கனகசபாபதி மாஸ்டரிடம் சொல்வது? அவரது மனநிலை எங்களுக்குத் தெரியும். அவருக்கு இதைப் போய் எப்படிச் சொல்வது, எனவே நாங்கள் அதை அவரிடம் போய் சொல்வதில்லை. எல்லாம் நல்லாச் செய்தனாங்கள் என்று சொல்வது என்பது தான் எங்கள் தீர்மானம். ஆனால் அவர் கேள்விக்கு யாரும் பதில் சொல்ல முடியாது. எனக்கு முதல் பரீட்சை முடிந்து திரும்பி வந்தவர்களிடம் அவர் கேட்டுவிட்டார். அது பிறகுதான் எங்களுக்குத் தெரியும். செய்முறைப் பரீட்சை முடிந்து இரவிரவாகப் பேராதனையிலிருந்து வாறம். இரவு train ஏறினால் அடுத்த நாள் காலை வந்து விடுவோம். சரியான சனம். படுக்க வழியில்லை.

இரவு முழுக்க நித்திரையில்லை, வீட்டுக்கு வந்து உடுப்பை மாத்திப் படுப்பம் என நினைக்க ஆள் வருகுது. கனகசபாபதி மாஸ்டர் வரட்டாம். அவர் எங்களுடைய வகுப்பு ஆசிரியர் திருமதி.சுந்தரராஜன் வீட்டில் நிற்கிறாராம், வரட்டாம். அங்கு போனால் அவரைப்பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. நாங்கள் நினைத்தமாதிரி அவருடைய நிலைமை. நான் அவருக்குச்சகல விடயங்களையும் கூறி, எனக்கு நிச்சயம் பாஸ் வரும் என்று அவருக்கு நாங்கள் சொல்ல வேண்டிய நிலைப்பாட்டில் இருந்தோம். நல்லகாலம் நல்ல result வந்தது. உண்மையில் அந்த வருடம் மகாஜனாவிலிருந்து 12 பேர் மருத்துவபீடத்திற்குச் சென்றோம். அதிலும் எனக்கு அதி கூடியபுள்ளி கிடைத்திருந்தது. இதற்கு எனது திறமை காரணம் என ஒரு நாளும் சொல்ல மாட்டேன். எனது நண்பர்கள், எனது ஆசிரியர்கள், கனகசபாபதி மாஸ்டரின் விடாமுயற்சி. இங்கு பாடசாலையில் நடந்த பல நிகழ்ச்சிகள்: அப்போதெல்லாம் நிறுவியவர் நினைவு நாள் விளையாட்டு மைதானத்தில் நடக்கும் நாங்கள் இரண்டு நாட்கள் மைதானத்தைச் சோடிப்போம். பின் பழைய நிலைக்குகொண்டு வருவதற்கும் உதவுவோம். ஆங்கிலக் கண்காட்சி, வைரவிழா நடந்தது. எல்லாவற்றிலும் பங்குபற்றினோம். ஆனால் எங்கள் கல்வி, எல்லாப் பாடங்களும் பாடசாலை நாட்களிலும் ஒழுங்காக நடந்தது. கனகசபாபதி மாஸ்டர் மட்டும் சனிக்கிழமையிலும் வாங்கோ! நாங்கள் Practical செய்வோம் என்பார். சில வேளைகளில் ஞாயிற்றுக்கிழமையிலும் வாங்கோ. சில வேளைகளில் சலிக்கிறனாங்கள். என்ன சேர் ஒரு நாள் லீவு தரமாட்டீங்களோ என்றால் ஒரு சிரிப்பு. அவர் இங்கு வந்து நிற்பார் எங்களுக்கு முன்னம். பிறகு எப்படி நாங்கள் வராமல் நிற்கிறது. நான் கல்வி கற்ற அந்த மூன்று ஆண்டுகளும் இப்பாடசாலையில் பின்னிப்பிணைந்து எல்லாநிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்தேன்.

நான் குறிப்பிடவேண்டிய இன்னொரு ஆசிரியர் எங்களுடைய Sundararajan. கனகசபாபதி மாஸ்டரை நான் எனக்கு ஒரு தந்தையாகத் தான் வர்ணிப்பேன், ஆசிரியராக வர்ணிக்க முடியாது. வீட்டில் ஒரு அப்பா இங்கு ஒரு அப்பா. அதே மாதிரி எங்களுக்கு வீட்டில் ஒரு அம்மா இங்கு ஒரு அம்மா. Mrs.Sundararajan இடம் எந்தப் பிரச்சினையையும் கதைக்கலாம். ஆனால் படிக்காமல் விட முடியாது. பலசந்தர்ப்பங்களில் பல அறிவுரைகளை வழங்கினார். அதற்காக மற்ற ஆசிரியர்களைக் குறைவாகக் கூற முடியாது. எல்லோரும் ஏதோ ஒரு வகையில் அதாவது எமக்கு நேரடியாகக் கற்பித்த ஆசிரியர்கள் மட்டுமல்ல பல துறைகளில் எமக்குத் தொடர்புள்ள ஆசிரியர்கள் எம்முடன் ஊடாடியிருக் கின்றார்கள்.

இவர்களை விட நான் குறிப்பிட்டுக் கூற வேண்டும். எமது ஆய்வு கூட உதவியாளர்களான சிவபாதம் - Physics lab, பஞ்சாட்சரம் - Botany, Zoology lab, சுந்தரமூர்த்தி அண்ணை - chemistry lab. சுந்தரமூர்த்தி அண்ணை, அவர் எல்லா மாணவர்களுக்கும் ஒரு அண்ணனாகச் செயற்பட்டார். பல மாணவர்களின் பல பிரச்சினைகளை ஆசிரியர் மட்டத்திற்கு வராமல், அதிபர் மட்டத்திற்கு வராமல், சுந்தரமூர்த்தி அண்ணை மட்டத்தில் தீர்க்கப்பட்டு நன்னெறிப்படுத்தப் பட்டுள்ளன. அவ்வாறாக மகாஜன சமூகத்தில்,ஒரு குடும்ப சூழ்நிலையிலே கற்றோம்.

பிற்காலத்தில் நான் மாணவர்களைக் கற்பிக்கின்ற போது எனது உறவினர்கள் நன்னூலில் ஒரு பாடலை எடுத்தக்காட்டினார்கள்

"ஆசானுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூறல்லது பற்றனவாகும்"
"அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.

இது தான் கல்வியைப் பற்றி முன்னோர்கள் சொல்லிவைத்தது.

நாம் எவ்வளவு தான் கவனமாக ஆசிரியர் கற்பிப்பதைக் கேட்டாலும் கால்வாசிதான் நிற்கும். நண்பர்களுடன் சேர்ந்து படிக்கும் போது இன்னொரு கால்வாசி நிற்கும் செல்லிடல் உரைப்ப - நீங்கள் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துப் படிக்கும் போது தான் உண்மையான மீதி அரைவாசிப் படிப்பும் உங்களுக்குக் கைவந்த கலையாகும் என்பது அந்தப் பாடலின் பொருள்.அதை உண்மை எனக் கண்டோம். என்னுடைய நண்பர்கள் பலவிதமான உரையாடல்கள், விவாதங்கள் மூலம் அதாவது றோட்டில் சைக்கிளில் போகும் போது பலவிதமான உரையாடல்களுடன் போய்க்கொண்டிருப்போம். இருந்தாற் போல் அது ஏன் அந்த அம்பியொட்சிசு அப்படி இருக்கு என்று கேட்போம். எங்களுக்குக் கல்வி வேறு வாழ்க்கை வேறாக இருக்கவில்லை. ஒரு

பூவைப்பார்த்தால் இது என்ன Classification என்று சொல்வான் ஒருவன் ஒருநாள் எனக்கு அது பாடமாக்குவது கஷ்டம். கீரிமலையில் போய் குளித்துக் கொண்டிருந்தோம். இருந்தாற்போல் ஞாபகப்படுத்துவான் ஒரு நண்பன். இப்படித்தான் நாங்கள் படித்தோம்.

ஆசிரியுர்கள், உதவியாளர்கள் மட்டுமல்ல: இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். நான் மேற்படிப்புக்காக Leeds University யில் இருந்த போது 6 மாதத்துக்குப் பிறகு எங்களுடைய அதுவரையும் செய்த செயற்பாட்டினை எல்லோருக்கும் முன் உரையாற்ற வேண்டும். எல்லோரும் என் உரை திறமாக இருந்ததெனப் பாராட்டினார்கள். நான் செய்த வேலைக்காக அல்ல. ஏனென்றால் எல்லோரும் அங்கு திறமையாகத்தான் செய்வார்கள். எவ்வாறு உன்னால் Queen's English கதைக்க முடிந்தது. இங்கிலாந்திலேயே மிக உன்னதமான புலமையுள்ள Queen பயன்படுத்தும் ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடிந்தது எவ்வாறு என்றார்கள், இது தான் அவர் ஆச்சரியமும் அவர் என்னைப் புகழ்ந்த விதமும். அப்போது எனக்குப் பெருமையாக இருந்தது, ஆனால் விளங்கவில்லை. நான் பிறகு யோசித்த போது நாம் A/L படிக்கும் போது கிழமையில் 4 பாடம் ஆங்கிலம் Ramasamy மாஸ்டர். அவருடைய அப்பழுக்கில்லாத ஆங்கில உச்சரிப்பு. உண்மையில் இந்த time table இல் English ஐக் கண்டவுடன் எங்களுக்குச் சலிப்புத் தட்டிப்போட்டுது. class teacher இடம் போய் இனியென்றாலும் இந்த English ஐ விடுங்கோ கொஞ்சம் free ஆக இருப்போம் என்று. நல்ல பேச்சு வாங்கினோம். நீங்கள் English இல்லாமல் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று ஆனால் இராமசாமி மாஸ்டரிடம் ஆங்கிலம் கற்கத் தொடங்கிய பின் எப்ப மாஸ்டர் வருவார் என்று காத்திருக்கும் நிலை வந்தது. ஆங்கிலத்தில் மிக அழகாகக் கதைகள் சொல்வார்.

பட்ட ஆலமரத்தடியால் சைக்கிளில் போன கதை, பேய் ஓட்டிய கதை, பேய்பிடித்த கதை, பேய்பொய் என்ற கதை ஆங்கிலத்தில் தான் சொல்வார். Grammar படிப்பிப்பதற்கு Citadel என்ற உபநூலைப் பயன்படுத்தினார். சரியான புத்தகம் இல்லை. அதில் ஆங்கிலம் மட்டும் நாம் கற்கவில்லை. அது ஒரு வைத்தியரின் கதை Dr.Ardrew. அவர் எப்படி மாணவனாக இருந்து, வைத்தியராக வந்து பணப் பேய் பிடித்து அலைந்து, அலுத்து, சலித்துப் பின் உண்மையான நற்பண்புள்ள வைத்தியராக மாறுகின்ற கதை. எனவே நாங்கள் படிக்கும் போதே ஆங்கிலத்துடன் சேர்த்து ஒரு மருத்துவருக்குரிய மனநிலை ஊட்டப்பட்டது. அதற்கும் மேலாக Libraryக்குக் கிழமையில் ஒரு

மணித்தியாலம் கட்டாயம் போக வேண்டும். அப்போது நூலகர் Protest பண்ணினார். இந்த நூல்களை அடுக்க ஆட்கள் இல்லை என்று அந்தப் பணிக்கு 3 Students ஐ பிடித்து தாருங்கோ என இராமசாமி மாஸ்டர் Mrs.சுந்தரராஜனிடம் கேட்க நானும், நரேந்திரன், கார்த்திகேசு, கருணாகரன் நான்கு பேரும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை வகுப்பு முடிந்த பின் அடுக்கி வைத்துவிட்டுப் போவோம். அதனால் எமக்குக் கிடைத்த பயன் நூலகத்திலுள்ள அனைத்து நூல்களையும் அறிந்ததுடன் பலபுத்த கங்களையும் வாசிக்கவும் கிடைத்தது. "இவ்வாறு மகாஜனாவிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டது பல. பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றினோம். பல ஆளுமைகளைப் பெற்றோம். பல பேருடன் மிகவும் திறந்த மனதுடன் பழகினோம். பல நன்மைகளைப் பெற்றோம். இந்த வகையில் பள்ளிக்கூடம் உங்களுக்கு என்னத்தைத் தரவேண்டும் என்று இங்கே அதிபரின் அறிக்கையிலிருந்து ஒரு விஷயத்தை மீண்டும் உங்களுக்கு வாசித்துக் காட்ட விரும்புகின்றேன். இன்றைய கல்வி நிலையில் பாடசாலையில் கல்வி கற்பவர்களில் குறிப்பிட்ட மிகக் குறைந்த வீத்ததினரே பல்கலைக்கழகம் செல்கின்றனர். ஏனையோர் க.பொ.த. உயர்தரத்துக்குப்பின் சமுதாயத்திற்குள் காலடி எடுத்து வைக்கின்றனர்.18-19 வயதில் அவன் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவனாக மாற்றும் களம் பாடசாலையே. இது தான் உண்மை. உண்மையிலேயே பல்கலைக்கழகம் செல்பவர்களுக்கும் இது பொருந்தும். பல்கலைக்கழகம் செல்பவர்கள் தொடர்ந்தும் மாணவனாக மட்டும் இருப்பதில்லை. இவர்களும் சமூகத்தில் செயற்பட வேண்டிய, சமூகத்திலே தன்னை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய சமூகத்தவருக்குத் தம்மைக்காட்டிக் கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது. பாடசாலை மாணவர்கள் எல்லோரும் பல்கலைக் கழக மாணவர்களைத் தான் முன்மாதிரியாகப் பின்பற்றுகிறார்கள். சமூகம் பல்கலைக்கழகத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் பார்த்துத்தான் தன்னைத் தயார்ப்படுத்துகின்றது பல்கலைக்கழகம் சமூகத்திற்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். முன்னைய காலங்களிலே நான் நினைக்கிறேன், எண்பதுகளிலே புயலடித்த போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் புயலடித்த களத்திலேயே சென்று தொண்டுகள் செய்தார்கள். அண்மையில் சுனாமி வந்த போது சுனாமியால் பாதிப்படைந்தவர்களை நாடிச் சென்ற முதலாவது team எமது மருத்துவபீட மாணவர்கள் என்பதைப் பெருமையுடன் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பல இடங்களுக்கு

எம்முடைய மாணவர்கள் திரண்டு தம்மை ஒழுங்கு படுத்திச் சென்றார்கள். கிட்டத்தட்ட இரு கிழமைகள் மற்ற உதவித்திட்டங்கள் அங்கு ஒழுங்கு படுத்தப்படும் வரைக்கும் அங்கே பலவிதமான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். பருத்தித் துறையிலிருந்து அம்பாறை வரைக்கும். ஆனால் இதே இடத்தில் மிக வருத்தத்துடன் இன்னொன்றையும் சொல்ல வேண்டும். சுனாமி அடித்த போது மட்டக்களப்பு வைத்திய சாலையிலே பயிற்சிக்காக இரு அணி மாணவர்கள் சென்றிருந்தார்கள். அவர்கள் அங்கிருந்த போது சுனாமி அடித்ததால் அவர்கள் சுனாமி Victims ற்கு உதவி செய்திருப்பார்கள் என்று எனக்குள் ஓர் கணக்குப் போட்டிருந்தேன். அது பிழை எனப் பின்னர் தெரிந்தது. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு அணி எனக்குத் தெரியாமல் எனது அனுமதியைப் பெறாமல் மட்டக்களப் பிற்குக் கடமை செய்வதற்குச் சென்றிருந்தது. இரண்டு விதமான மாணவர்களைப் பல்கலைக்கழகத்திலே பார்க்கின்றோம், மருத்துவபீடமாகட்டும் ஏனைய பீடங்களின் கல்வியாகட்டும். மக்களின் தேவைகளை அறிந்து ஏற்ற பணிகளைச்செய்வதற்குரிய கல்வியைக் கற்காவிட்டால் பல்லைக்கழகத்திற்குச் சென்று பயனில்லை. சமுதாயத்துடன் சேர்ந்து சமுதாய மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்ய வேண்டும். சமுதாய அங்கீகாரம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவை. தாமாகத் தந்துதவுவதுடன் தமக்குத் தேவையானவற்றைக் கற்கின்ற ஆற்றல் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவை.

மகாஜனாவில் எமக்கு கிடைத்த அனுபவம் பல்கலைக் கழகத்தில் உதவியது. இங்கே பாடசாலையில் உங்கள் ஆசிரியர்கள் இரவும் பகலும் முன்னால் இருந்து படிப்பிப்பதைப் போல இல்லைப் பல்கலைக்கழகம். உங்களுடைய வருங்கால முன்னேற்றத்திற்காக, உங்கள் இயல்புகளுக்கேற்ற வகையில் உங்களுடைய அறிவைப் பெருக்கிக் கொள்கின்ற அல்லது உங்கள் திறன்களை விருத்தி செய்கின்ற இடம் பல்கலைக்கழகம். அதுமட்டமல்ல இன்று உலகில் பல சந்தர்ப்பங்கள் உண்டு. பல்கலைக்கழகம் போனால் மட்டும் படிக்கலாம் என்கின்ற நிலை இல்லை. சில கற்கைகளுக்குச் சில இடங்களுக்குப் போக வேண்டும். பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்றவர்கள். இப்போது 5ம் வகுப்பு மாணவர்களைப் போலே வகுப்பில் முன்னால் இருந்து Notes ஐத் தாங்கோ! என்கிறார்கள். சொல்வதை அப்படியே எழுதி அதை அப்படியே பாடமாக்கி, முன்பின்னாக மாறிக் கேட்டால் மறுமொழி சொல்ல முடியாமல் திணறுகின்ற தன்மையைப் பார்த்து நாங்கள் மிக வருந்துகின்றோம். பல வருடங்களுக்கு முன் இந்த tuition

கலாசாரம் உருவாகிக்கொண்டிருந்த காலகட்டத்தில் எங்கள் Psychiatry Professor கணேஸ்வரன் ஒரு வசனம் சொன்னார். "We are making memorizing machines we are not producing students. "நாங்கள் பாடமாக்குகின்ற இயந்திரங்களை உருவாக்குகின்றோம். மாணவர்களை அல்ல", என்ற வாக்கியம் இன்று மிக உண்மையாக உள்ளது. மகாஜனாவில் அது மாறியிருக்கின்றது. என்றநம்பிக்கையில் நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். ஆனால் பல்கலைக்கழகத்தில் பல பேரைக் காணும் போது எனக்கு மனதில் மிகுந்த கவலையாக உள்ளது. இவர்களை எவ்வாறு எங்கள் மருத்துவபீடப் பட்டதாரிகளாக வெளியேற்றுவது என்பது எமக்கு மிகுந்த ஒரு சவாலாக இருந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில் நான் அங்கு கவலையுடன் இருந்தேன். "உனை நீ அறி" என்பது எனது பாடசாலை விருது வாக்கு: "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது எமது பல்கலைகக்கழக விருது வாக்கு; நான் கற்ற இன்னொரு பாடசாலை பரமேஸ்வராக்கல்லூரி, அது இன்று பல்கலைக்கழகம். ஆனதால் அது எனது பழைய கல்லூரி அல்ல. "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும" அருள் வாய் என்பது இக்கல்லூரியின் விருது வாக்கு. இவ்வாறான தாரக மந்திரங்கள் பல.

இதற்கு மேலாக இன்று இங்கே இந்தக் கல்லூரியின் பயணத்தின் எல்லை - Vision அதிபரினால் வரையறுக்கப்பட்டுள்ளது. "உயர் விழுமியங்களைப் பேணும் பூரணமான மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கம்" மிகவும் அருமையான உன்னதமான நோக்கம்.

அதற்குக் கீழே பயணத்தின் பாதை போடப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எங்களுடைய காலத்திலே இப்படியான ஒழுங்குகள் இல்லையே என்ற கவலையும் வந்தது. இவற்றை நீங்கள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். உங்கள் திறமைகளை வளர்க்க வேண்டும் தற்றுணிவும் (தற்பெருமையல்ல) திறமையும் வினைத்திறனும் உள்ள உளநலம் கொண்ட மாணவர்களாக நீங்கள் பாடசாலையில் இருந்து வெளியேற வேண்டும். இங்கே கூறப்பட்ட பல செயற்பாடுகள் மிகவும் சந்தோஷமாக இருந்தது. இவை உங்களை நிச்சயமாகப்பூரணமான மனிதனாக உருவாக்கும். அந்த வகையில் நீங்கள் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்ல ஏனைய எந்தத் துறையில் உங்கள் பயணம் இருந்தாலும் எந்த விதமான Shock ம் இல்லாமல் தொழிற்படுவீர்கள். உதாரணமாக நான் பல்கலைக்கழகம் போன முதல் நாள் Professor வருகிறார். Dissection Hall போகிறோம்.

Take your Dissection Manual; Turn to page No 70 Get down with it.

பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்ல ஏனைய எந்தத் துறையில் உங்கள் பயணம் இருந்தாலும் எந்த விதமான Shock ம் இல்லாமல் தொழிற்படுவீர்கள். உதாரணமாக நான் பல்கலைக்கழகம் போன முதல் நாள் Professor வருகிறார். Dissection Hall போகிறோம்.

Take your Dissection Manual; Turn to page No 70 Get down with it. புத்தகத்தை எடு: பக்கம் 70 உடனடியாகச் செய் என்றார். நாங்கள் புத்தகத்தை வாசித்து Dissection செய்தோம். யாரும் இப்படி வெட்டு அப்படி வெட்டு என்று சொல்லித் தரவில்லை அந்த ஒரு மனத்துணிவும் திறமையும் எந்த ஒரு காரியத்தையும் ஆற்றுகின்ற திறமை இந்த மாணவர்களுக்கு அமைய இத்தகைய செயற்பாடுகள் மிகவும் அவசியம் என்று கூறி இறுதியாக இன்னொரு திருக்குறள். "கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின்நிற்க. முற்றுப்புள்ளி போட்டு விடுவோமா? அது சரியா?

கற்கக் கசடற - சந்தேகமில்லாமல் கற்ற பின் சோதனை: கற்று முடிந்த பின் புத்தகங்களைக் கட்டி வைத்துப் போட்டு மறந்து போவது அதன் பின் இரு சொற்கள் உண்டு **நிற்க அதற்குத்தக.** நீங்கள் கற்ற ஒவ்வொரு செயற்பாடும் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டு விடை பெறுகின்றேன்.

நன்றி

**அறிந்து கொள்வோம்.**

**சிறுகதையின் பிரதான பண்புகள்**

- **வாழ்க்கையில் நடைபெறும் ஏதாவதொரு சம்பவம்**
- **பாத்திரப்படைப்பு**
- **மனவுணர்வுகளின் வெளிப்பாடு**
- **வாழ்வின் ஏதாவது ஒரு சிக்கல், செய்தி, பிரச்சினையை வெளிப்படுத்தல்**
- **மொழி நடை / உத்தி / வருணனை**

**பெண்களின் ஏழு பருவங்களும் ...........**

- **பேதை**
- **பெதும்பை**
- **மங்கை**
- **மடந்தை**
- **அரிவை**
- **தெரிவை**
- **பேரிளம் பெண்**

**(24.06.2008) நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அன்றைய தினத்தில் வைத்தியகலாநிதி நந்தஞானியார் இளங்கோஞானியார் (M.B.B.S Jaffna University) அவர்களால் வழங்கப்பட்ட நினைவுப்பேருரை**



## வள்ளுவரின் கல்விச் சிந்தனைகள்

பெருமதிப்பிற்குரிய கல்லூரி அதிபர் அவர்களே, இன்றைய விழாவின் பிரதம விருந்தினர் அவர்களே, மேடையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, ஆசிரியர்களே, மாணவ மாணவிகளே, கல்விசாரா அலுவலர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே அனைவருக்கும் எனது நிறைவான காலை வணக்கங்கள்.

எங்கள் கல்லூரி நிறுவுநர் அமரர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவு தினமாகிய இன்று அவரை நினைவு கூர்ந்து இச்சொற்பொழிவை ஆற்றுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு இக்கல்லூரிச் சமூகத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப்பெருமான் அருளால் நாமும் எமது கல்லூரியும் எங்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் இன்னும் பற்பல சாதனைகள் புரிந்து வளர அவரை வேண்டுகிறேன்.

இன்றைய நாளிலே எமது நிறுவுநர் எமக்கு அளித்த இலட்சிய வாசகம் "உனை நீ அறி" என்ற வாசகத்தின் வழிநின்று அவரை நன்றியோடு நினைவு கூர்வதோடு அவ்வாசகம் என்னுள்ளே தோற்றிய உணர்வலைகளை அவருக்கே காணிக்கையாக்கிச் சமர்ப்பிக்கின்றேன்.

### **"உனை நீ அறி"** (Know thyself)

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் எங்கள் தாயகத்தில் இரு வேறு கல்வி முறைமைகள் இருந்தன.

1. மரபுவழித் தமிழ்க்கல்வி
2. ஆங்கில வழிக் கல்வி

மரபுவழித்தமிழ்க் கல்வி தமிழ்ப்புலவர்களால் மரபு ரீதியான குரு குல முறையில் ஒவ்வொரு ஊரிலும் திண்ணைப்பள்ளிகளில் இடம் பெற்று வந்தது. இங்கு தமிழ் இலக்கியம், இலக்கணம், சோதிடம், சமஸ்கிருதம் போன்ற விடயங்கள் போதிக்கப்பட்டன. இப்பள்ளிகளிடையே ஒருங்கிணைப்போ, பொதுப் பாடத்திட்டமோ இருக்கவில்லை. அவ்வேளை, மேலை நாடுகளில் வளர்ந்த அறிவியல் கல்வியும் உள்ளடக்கப்படவில்லை. இதனால் இங்கு கல்வி பெற்ற பெரும்பாலோர் எங்கள்

பண்பாடு, விழுமியங்கள், மொழி போன்றவற்றில் அளப்பரிய ஆற்றல் பெற்றிருந்தும் அப்போது வளர்ந்த எமது சமுதாயத் தேவைகளுக்கு ஈடு கொடுக்கப் பெரிதும் சிரமப்பட்டனர்.

அதே வேளை ஆங்கில வழிக்கல்வி இங்கு தமது சமயத்தைப் பரப்ப வந்த கிறிஸ்தவ அமைப்புக்களால் நவீன தேவைக்கேற்ப வடிவாக்கப்பட்டு வழங்கப்பட்டது. அக்கல்வி எமது பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்த போதும் எமது பண்பாட்டு விழுமியங்களை வளர்க்கவும் வளப்படுத்தவும் தவறியது.

சிறந்த மரபுவழிக் கல்விப்பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்த எங்கள் கல்லூரி நிறுவுநர் பாவலர் அவர்கள் ஆங்கில வழிக்கல்வியைச் சிறப்பாகக் கற்றுத் தேறி இலங்கையில் அரச சேவையில் சிறிது காலம் பணியாற்றிய பின்னர், ஆசிரியராகப் பாணந்துறையிலும், இந்தியாவின் கோலாலம்பூரிலும் பின்னர் தெல்லிப்பழையிலும் பணியாற்றினார். இவ்வளவும் அவரை எமது மண்ணுக்கு, இக் கல்வி நிறுவனத்தை வழங்குவதற்கு, அவரைப் பக்குவப்படுத்தியது.

எமது மக்கள் முன்னேற வேண்டுமானால், ஆங்கிலக் கல்வியும், நவீன பாடத்திட்டங்களும் அவசியம் என்பதை உணர்ந்தார். அதேவேளை அக்கல்வி கிறிஸ்தவ அமைப்புக்களால் வழங்கப்படுவதைப் போன்றில்லாமல் எமது பண்பாட்டையும் பாரம்பரிய விழுமியங்களையும் வளப்படுத்துவதாக அமைய வேண்டும் எனக் கருதினார்.

எனவே எம்மண்ணின் தேவைக்கேற்ப இக் கல்லூரியை வடிவமைத்தார். தரமான நவீன ஆங்கிலக் கல்வியை வழங்குவதோடு தமிழர் பண்பாடு, சமயம், விழுமியங்கள் என்பவற்றையும் கட்டிக்காத்து வளர்க்கும் முறையில் செயற்பட்டார்.

அதனால் தான் எங்கள் கல்லூரியின் இலட்சிய வாக்கியமாக "உனை நீ அறி" என்பதை எடுத்துக் கொண்டார். உனை நீ அறி என்னும் போது உன் உள்ளே உள்ள இறைவன் உனது திறமை, உனது பலவீனம், உனது தேவை போன்றவற்றை அறிவதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது, நீ என்பது உனது சமூகத்தையும் உள்ளடக்கியது. ஆகையால் உனது சமூகத்தை அதன் விழுமியங்களை, அதன் சவால்களை எதிர் கொள்வதற்கான அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாக அமைகிறது.

எங்கள் வரலாற்றில் கல்வி தொடர்பாக பல புலவர்கள் கருத்துக்களைக் கூறியிருப்பினும் வள்ளுவரே அது தொடர்பாக அதிகம் பேசியிருக்கிறார். எனவே இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் கல்வி தொடர்பான அவரது சிந்தனைகளையும், இன்றைய சூழ் நிலையில் அவற்றின் பொருத்தப்பாட்டையும் விளக்குவது எம்மை மேலும் அறிந்து, எமது சவால்களுக்கு முகம் கொடுக்க உதவும்.

## வரலாற்றில் வள்ளுவர்

தமிழ் மிக நீண்ட வரலாற்றையும், பாரம்பரியங்களையும் கொண்ட மொழி. வள்ளுவருக்குப் பின் வந்த புலவர்கள் எல்லோரும் வள்ளுவரின் கருத்தியல் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளனர்.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவை எடுத்துக்கொண்டால் "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளை தெய்வந்தொழுந்தன்மை திண்ணிதால்" என ஒரு குறட்பகுதியையே தனது பாடலில் எடுத்து ஆண்டிருக்கிறார். பொய்யில் புலவர் என விழித்ததும் அவரே.

கல்வியில் பெரிய கம்பனோ தனது இராம காதையில் கதையையே மாற்றி இருக்கிறார்.

"கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல" என்பது குறள். அதனால் தான் மிதிலையில் இராமன் சீதையுடன் கண்களால் பேசிக் காதல் கொண்டான் என அமைத்தார்.

அது மட்டுமா?

"பேராண்மைஎன்ப தறுகண் ஒன்றுற்றக் கால்
ஊராண்மை மற்றதன் எ்.கு"

இதற்காகவே முதல் நாள், இராவணன் போருக்கு வருவதாகவும் ஆயுதங்கள் இழந்த நிலையில் இராமன் பேராண்மையுடன் அவனை "இன்று போய்ப்போர்க்கு நாளை வா" என உரைப்பதாகவும் கதையை மாற்றினார்.

இவை சிறு எடுத்துக் காட்டுக்கள் மட்டுமே. தமிழர் சிந்தனையில் வள்ளுவன் தாக்கம் பாரியது. இன்றும் தொடர்வது. ஒழுக்கவியலில் மட்டுமல்ல, தமிழர் பொருளியல், போரியல், வாழ்வியல், கல்வி எல்லாவற்றிலும் அதனை நாம் காணலாம்.

### வள்ளுவர் நோக்கில் கேள்வி, கல்வி, அறிவு:

அறிவு என்பது கல்வி, கேள்வி என்பவற்றிலிருந்து வேறுபட்டது என்பதை வள்ளுவர் அன்றே புரிந்திருந்தார். எனவே கல்வி, கேள்வி என்பவற்றுக்குப் புறம்பாக அறிவுடமை என்னும் அதிகாரத்தை அமைத்தார்.

### வள்ளுவர் நோக்கில் அறிவு என்பது

1. அற்றம் காக்கும் கருவி - அதாவது வரக்கூடிய தீங்குகளை முன்பே அறிந்து எம்மைக் காப்பதற்கு உதவுவது.
2. நன்றின்பால் உய்ப்பது - எங்களுக்கு எது நன்மையானதோ அதை நோக்கி எமது முயற்சியை ஊக்குவிப்பது.
3. எதிலும் மெய்ப் பொருள் காண உதவுவது - எப்படிப்பட்ட விடயமாக இருந்தாலும் இழிவானதோ, உயர்வானதோ, இலகுவானதோ எதுவானாலும் அதை யார்

சொன்னாலும் - அவர் உயர்வானவராகவும் இருக்கலாம். அல்லது தாழ்வானவராகவும் இருக்கலாம். அதில் உள்ள உண்மைகளை நாமாகவே உறுதிப்படுத்தி அறிய உதவுவது.

4. ஆவதை அறிவிப்பது அதாவது இனி ஏற்படக் கூடிய மாற்றங்களை முன் கூட்டியே உணர்த்துவது.

ஆனால் கல்வியும், கேள்வியும் அவ்வாறனது அல்ல. பெரும்பான்மையோர் எழுத்தறிவு இல்லாத அக் காலத்தில் விடயங்களை அல்லது தகவல்களைப் பெறும் முறைகளில் கேள்வி பிரதானமானது என்பது அவர் கருத்து. ஆனால் கல்வி என்பது எண், எழுத்தறிவு என்பவற்றோடு கூடிய தகவல்களை அறியும் முறையாகும். அதனால் தான் "கற்றிலன் ஆயினும் கேட்க" என்றார். அதாவது எழுத்தறிவு இல்லாவிட்டாலும் தகவல்களை நாம் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். அதனாலேயே செவிக்குணவு இல்லாத போதும் சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்றார். ஆனால் அது மட்டும் போதுமானதென்று அவர் கருதவில்லை. எண், எழுத்தறிவு ஒவ்வொருவருக்கும் கண் போன்றது என உறுதிபடத் தெரிவித்தார். கல்லாதவர்களைக் கண்ணற்றவர்களாக எள்ளி நகையாடி கற்றலின் அவசியத்தை உரக்க உரைத்தார்.

அறிவு என்பது கற்றல் மூலம் செழுமையடைகிறது என்பது அவர் கோட்பாடு. "கற்றனைத்தூறும் அறிவு" எனும் போது எவ்வளவு நாங்கள் கற்கிறோமோ அவ்வளவுக்கு நமது அறிவு வளரும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். அதனாலேயே சாந்துணையும் கற்குமாறு வலியுறுத்தினார்.

ஆனால் எவ்வளவு கற்றிருந்தாலும், அறிவுணர்வு இல்லாதவற்கு அதாவது உண்மையாராய்தல், நல்லதைக் கொண்டு அல்லாததைத் தள்ளுதல் போன்ற இயல்பு இல்லாதவருக்கு அக்கல்வியால் எப்பயனும் விளையாது என்பது அவர் முடிபு.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்"

அதாவது கல்வி என்பது தகவல்களைத் தரும் ஒரு முறையாக மட்டும் இருந்தால் அதனால் எப்பயனும் இல்லை. மாறாக அது அறிவியல் சிந்தனையை எம்மத்தியில் வளர்ப்பதாக இருக்க வேண்டும். வள்ளுவர் அக்காலத்திலேயே அறிவை வளர்க்கும் எழுத்தறிவுடன் கூடிய அனைவருக்கும் வலியுறுத்தியுள்ளார். எழுத்தறிவற்றோர் ஆக குறைந்தது கேட்டல் மூலமாக வாயினும் தமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அவர் வேண்டுகோள்.

மேலும் கற்றல் என்பது தனிமனித ஒழுக்கத்தை மேம்படுத்தி நிலைநிறுத்தவதாகவும் அமையவேண்டும் என விரும்பினார். எனவே தான் "கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்றும்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்" என்றும் குறிப்பிட்டார். நற்பண்புகளையும், ஒழுக்கத்தையும் இறைவழிபாட்டையும் வற்புறுத்துவதால் அக்கல்வி இனிவரும் பிறப்புகளிலும் எமக்குத் துணைபுரியும் என நம்பினார்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்பது அவர் குறள், எல்லா கல்விமான்களுக்கும் அவர் முக்கியமான ஒழுக்கமொன்றை அதாவது புத்திஜீவிகள் எனக் கூறப்படுவோரால் அடிக்கடி மறக்கப்படுகின்ற ஒன்றை மிகவும் ஆணித்ததரமாக எடுத்தரைத்தார்.

"கல்லாத மேற்கொண்டு ஓழுகல் கசடற

வல்லதூஉம் ஜயம் தரும்"

இதிலிருந்து அத்தகைய செயலின் சிறுமையை அவர் எவ்வளவு நாசூக்காக வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். உயர்கல்விப் பரீட்சைகளில் இது புள்ளியிடலைத் தீர்மானிக்கின்ற ஒரு கொள்கையாகவே இன்று போற்றப்படுகின்றது.

கற்றலும் அதன் மூலம் அறிவைச் செழுமைப்படுத்தலும் மட்டும் ஒருவற்குப் போதுமானதல்ல. தாம் கற்றவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தும் தன்மையும் அவருக்கு வேண்டும். இதனை வள்ளுவர்

"பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்

நன்கு செலச் சொல்லாதார்"

எனத் தெரிவிக்கிறார்.

மேலும் எல்லாவிதமான கல்வியும் இறுதியில் செயல் வெற்றிக்கு உதவவேண்டும். செயல் வெற்றியை வழங்காத கல்வியை உலகம் விரும்பாது என்பது அவர் கருத்து.

"எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்

வேண்டாரை வேண்டா உலகு"

ஆகையால் எமது கல்வியின் இலக்கு என்பது அறிவை வளர்ப்பதாகவும் செயல் வெற்றியைத் தருவதாகவும் அமைய வேண்டும்.

**மருத்துவம் தொடர்பான வள்ளுவர் கருத்துக்கள்:**

இன்றைய காலப்பகுதிக்கு வள்ளுவர் கருத்துக்களின் பொருத்தப்பாட்டை அவர் மருத்துவம்தொடர்பாகத் தெரிவித்த சில கருத்துக்களை எடுத்துக்கூறுவதன் மூலம் விளக்கலாம்.

நோய் வராமல் காப்பதன் முக்கியத்துவம் இன்றைய மருத்துவ நூல்களில் எல்லாம் மிகவும் வற்புறுத்தப்படுகிறது. அதற்குச் சரியான அளவு, சமச்சீரான

உணவு மிக அவசியம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனையே வள்ளுவர் "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்றார்.

இது இன்றைய மருத்துவத்தில் மிகவும் வலியுறுத்தப்படுகிறது. உங்களால் உபயோகிக்கப்படும் கலோரி அளவுக்கு மேலான கலோரி பெறுமானமுள்ள உணவுகளை நீங்கள் உட்கொண்டால் நீரிழிவு முதல் வேறும் பல நோய்கள் உங்களைத் தாக்கும் வாய்ப்பு அதிகம். தேவைக்குக் குறைவான அளவு உணவும் குறைபாட்டு நோய்களைத் தோற்றுவிக்கும்.

எனவே நாம் உண்ணும் உணவானது நாம் உபயோகிக்கும் அளவிற்குச் சமனாக இருக்குமாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் இன்றைய மருத்துவத்தின் அடிப்படையென்பது நோயைக் கண்டறிதல் (DIAGNOSIS) அதற்கான காரணங்களை அறிதல். (FIND OUT THE CAUSES FOR THE DISSEASE) நோய்க் காரணிகளை நீக்குதல் (ELIMINATION OF THE CAUSES) மற்றும் அதற்கு நோயாளியின் உடலுக்கு உதவுதல் (SUPPORT ) THE BODY TILL IT ELIMINATE THE CAUSES) என்பவற்றைக் கொண்டது. இதனைத் திருவள்ளுவர்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

எனக் குறிப்பிடுகிறார். அது போலவே நோயாளிக்கு வழங்கப்படும் சிகிச்சை என்பது அவர் நிறை, வயது என்பவற்றுக்கு ஏற்பவும் அவரது நோயின் தீவிரத்திற்கு ஏற்பவும் தீர்மானிக்கப்பட்டுத் தேவையான காலத்திற்கு வழங்கப்பட வேண்டும். (DOSE AND DURATION OF TREATMENT DEPENDS ON THE NATURE OF DISSEASE AND THE PATIENT'S WEIGHT, HEIGHT AND AGE) இது தொடர்பாக வள்ளுவர் இவ்வாறு சொல்கிறார்.

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

மருத்துவம் தொடர்பாக வள்ளுவர் கருத்துக்கள் எவ்வாறு இன்றும் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுகிறதோ, அது போலவே அவரது கல்வி தொடர்பான கருத்துக்களும் காணப்படுகிறன.

வள்ளுவர் கருத்துப்படி கல்வி என்பது:

✠ அறிவைச் செழுமை செய்ய வேண்டும்.

✠ அறிவுச் செழுமை வேண்டும். அதாவது ஆய்ந்து அறியும் உணர்வை ஊட்ட வேண்டும்

- ✠ ஒழுக்கத்தை நிலை நாட்ட வேண்டும்
- ✠ கற்றவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தக் கூடிய திறமையைத் தரவேண்டும்
- ✠ செயல் வெற்றிக்கு வழிவகுக்க வேண்டும்

இவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டிருந்தாலும் இன்றும் எங்களுக்குப் பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுகின்றது. எனவே இத்தகைய அறிவுடையோரை உருவாக்குவதன் மூலம் எமது சமூகம் தனது ஆபத்துக்களை அறிந்து அவற்றில் இருந்து எம்மைக் காத்து எமக்கு இனித் தேவையானவை எவையெனக் கண்டு அவற்றை எமது ஆய்வுகளாலும் முயற்சியினாலும் அடைய வேண்டும்.

எங்கள் கல்லூரி இத்தனை இடர்கள், சவால்கள், இடப்பெயர்வுகளைச் சந்தித்த போதும் மீண்டும் எமது தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து எழுந்து நிற்கிறது. இதைச் சாத்தியமாக்கியது எங்கள் நிறுவுநர் பாவலர், மகாஜன சிற்பி ஜயரத்தினம் போன்றோர் முதல் இன்று வரை தன்னலமின்றி அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களது உழைப்பும் ஆகும்.

எமது பழைய மாணவர்களும் அபிமானிகளும் உலகில் எங்கிருந்த போதும் எமது கல்லூரியின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் காட்டி வந்த ஆர்வமிக்க பங்களிப்பும் எங்கள் மாணவர்களாகிய உங்களுக்கேயுரிய விடாமுயற்சியும் ஊக்கமும் தான் என்றால் மிகையாகாது.

என்னுடைய ஆசான், இப்போது எங்கள் அதிபர் திருமதி.சி.அனந்தசயனன் அவர்கள் எம்மை இன்னும் இன்னும் உச்சிக்குக் கொண்டு செல்வார் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை. இன்று நாம் எமது நிறுவுநருக்கும் எங்கள் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளோம். எனவே எமது நன்றிகளை அவர்கள் பாதங்களுக்குக் காணிக்கையாக்குகிறோம். எங்கள் சாதனைகள் இனிவரும் காலங்களிலும் தொடர மீண்டும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜரின் திருவடியை வேண்டி விடை பெறுகிறேன்.

நன்றி

வணக்கம்

### பஞ்சபூத – தலங்கள்

| | |
|---|---|
| **காஞ்சி** | **– நிலம்** |
| **திருவானைக்கா** | **– நீர்** |
| **திருவண்ணாமலை** | **– நெருப்பு** |
| **காளஹஸ்தி** | **– காற்று** |
| **சிதம்பரம்** | **– ஆகாயம்** |

ஜயரத்தினம் நினைவுதினமும் கனிஷ்ட பிரிவு பரிசளிப்பு விழாவும் 29.10.2007, அன்றைய தினத்தில் சுமார் 10 வருடங்களுக்குப் பின்

வெளியிடப்பட்ட **'மகாஜனன் ~2007'** ~ XXXII சஞ்சிகையின் ஆய்வுரை

**திரு.த.கலாமணி (சிரேஸ்ட விரிவுரையாளர் கல்வியியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது**



இன்றைய ஜயரத்தினம் நினைவு தின பரிசளிப்பு விழாவுக்கும் மகாஜனன் வெளியீட்டு விழாவுக்கும் தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்ற மதிப்புக்குரிய கல்லூரி அதிபர் அவர்களே, இன்றைய விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.சுந்தரசிவம் அவர்களே, இன்றைய சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கின்ற தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன் அவர்களே, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களே, கலாநிதி கனகசபை அவர்களே, வைத்திய கலாநிதி திருமதி சிவபாதநாயகி கனகசபை சிவபாலன் அவர்களே, நினைவுப்பேருரையாற்ற வந்துள்ள சகபாடி திரு.ஸ்கந்தவரதர் ரமேஸ் அவர்களே, மற்றும் இக்கல்லூரி பிரதி அதிபர் அவர்களே, உபஅதிபர் அவர்களே, இங்கே வருகை தந்திருக்கின்ற பெற்றோர்களே, மகாஜனக் கல்லாரியின் அபிமானிகளே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது அன்பான பணிவான வணக்கங்கள்.

தொடர்ந்து 5 நாட்களாக உடல் நலக் குறைவாக இருந்த நிலையிலும் இக்கல்லூரி பிரதி அதிபருக்கும், நண்பர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும் கொடுத்த வாக்குறுதி காரணமாக எந்த விதத்திலேனும் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தோடு இங்கே வந்திருக்கின்றேன்.என்னைத் தனியே விட விருப்பமில்லாது எனது துணைவியாரும் தனது பாடசாலைக்கு லீவு கொடுத்து விட்டு இங்கே வந்திருக்கின்றார். எனவே நீண்ட நேரம் உங்கள் முன் நின்று உரையாட முடியாவிடினும் நேற்று மாலை எனக்குக் கிடைத்த இந்தக் கல்லூரிச் சஞ்சிகையை இயன்றவரை தற்போது வரை படித்து முடித்திருக்கிறேன். அதன் பிரகாரம் வேகமான மதிப்பீட்டைச் செய்ய வேண்டுமென நினைக்கிறேன். நான் மிகவும் வேகமாக வாசிப்பவன். எப்போதும் வாசித்துக்கொண்டிருப்பதில் விருப்பமுள்ளவன் அதனாலேயே இப்படியான ஒரு சஞ்சிகையை வெளியிடுகிறோம்; நீங்கள் வந்து ஆய்வுரையைச் செய்ய வேண்டுமெனக் கேட்ட போது எனக்கு அது மிகவும் விருப்பமாகவே இருந்தது.

இந்த சஞ்சிகையை நான் பார்க்கின்றேன். இந்தக் கல்லூரி கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு வளர்ச்சியைக் கண்டுள்ளது. 97 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையிலே

இன்றைக்கு இந்த விழா நடைபெறுகின்றது. 2010இல் நூற்றாண்டு நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு கல்லூரியினுடைய பதிவுகளை சாதனைகளை வெளியிடுகின்ற ஒரு மலர். இந்த மலரைப்பற்றி ஆய்வு செய்கின்ற போது நான் மிகவும் கவனமாக இருக்கின்றேன். அக்கவனத்தை விட எனக்கு இந்தச் சஞ்சிகையைப் படிக்கின்ற போது இந்த சஞ்சிகையை வெளிக்கொணரும் போது இந்த சஞ்சிகைக் குழுவினரும் மலராசிரியரும் பாடசாலைச் சமூகமும் மிகவும் பிரயத்தனப் பட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிகிறது. இந்தச் சஞ்சிகையில் இப்பாடசாலையின் முகப்பைப் பார்க்கின்ற போதே பாடசாலையின் மகுட வாசகமே எனக்கு விருப்பமான ஒரு மகுடவாசகம். நான் Carrier guidance & counseling lecturers - வழிகாட்டலும் ஆலோசனையும் விரிவுரைகள் எடுக்கின்ற போது நான் சொல்லிக் கொள்கின்ற ஒன்று Know thy self என்கின்ற அந்த சோக்கிரட்டீஸின் பிரபல்யமான கூற்று. உன்னையே நீ அறிவாய். நாங்கள் ஒவ்வொருவரும் எங்களை அறிந்து கொள்ளமுடியுமானால் அது எங்களிடத்தே மனிதப்பண்பை வளர்க்கும்; உன்னையே நீ அறிவாய் என்ற மகுட வாசகத்தைக் கொண்டு துலங்குகின்ற இக்கல்லூரியினுடைய இச்சஞ்சிகை ஓம் என்ற அந்த அட்சரத்தோடு தனது சின்னத்தை அட்டையில் பொறித்து கல்லூரியின் இன்றைய கோலத்தைப் படமாகத் தந்து XXXII வது தொகுதியாக இன்று வெளிவந்திருக்கின்றது.

124 பக்கங்களில் இப்பாடசாலையின் வரலாறு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இப்பாடசாலையிலேயே இன்று மாணவர்கள் படைத்துக் கொண்டிருக்கும் சாதனைகள் உட்பட இங்கு இயங்கும் பல்வேறு மன்றங்கள், சங்கங்கள் என்பவற்றின் விபரங்களை உட்படுத்தி 124 பக்கங்களில் இந்த வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு புகழ் பூத்த கல்லூரியினுடைய சஞ்சிகையிலே இடம் பெற வேண்டியவற்றுள் மிகவும் முக்கியமானது இது தான். ஏனென்றால் இக்கல்லூரியில் கல்வி கற்ற. மாணவர்கள் இப்போது கற்றுக் கொண்டிருப்பவர்கள், இனிக்கற்க வருபவர்கள் என்போருக்கு இக்கல்லூரியினுடைய வரலாறு நன்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் அந்த பிள்ளைகள் நாங்கள் இந்தக் கல்லூரியில் படித்தோம். இந்தப் புகழ் பூத்த கல்லூரியிலே எமது பிள்ளைகளை நாங்கள் கற்கச் செய்ய வேண்டும். என்று நினைத்து தங்கள் பிள்ளைகளையும் இப்பாடசாலைக்கு அனுப்புகின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்றால் இப்பாடசாலையின் வரலாறு கட்டாயமாகப் பிள்ளைகளுக்கு தெரிந்திருக்க வேண்டும். இக்கல்லூரி ஒரு உலகப் பழைய மாணவர் சங்கத்தைக் கொண்டிருக்கின்ற கல்லூரி என்பதனை இந்த மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இக்கல்லூரி சஞ்சிகையிலே பாரிசிலிருந்து, லண்டனிலிருந்து,

கனடாவிலிருந்து, அவஸ்திரேலியாவிலிருந்து, ப.மா.சங்கங்களின் வாழ்த்துரைகள் இங்கே வந்திருக்கின்றது. அந்த பழைய மாணவர்கள் தங்கள் நினைவுகளை இங்கே பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். வாழ்த்துச் செய்திகளை பல்வேறு தரத்தினர் அனுப்பியிருக்கிறார்கள். இந்த செய்திகளெல்லாம் இப்பிள்ளைகளுக்கு, பாடசாலை சமூகத்தினருக்கு இந்தக்கல்லூரி, எங்கள் கல்லூரி, இந்த நாட்டிலேயே புகழ் பூத்த ஒரு கல்லூரி, எங்களுக்குப் பெருமை தரக் கூடிய ஒரு கல்லூரி என்று இக்கல்லூரியின் வளர்ச்சியிலே அக்கறை கொள்ள உதவுவதாக இச்சஞ்சிகை அமைந்துள்ளது. இக்கல்லூரியை நான் நினைக்கின்ற போது இக்கல்லூரி பல்வேறு துறைகளிலே பல கல்வியியலாளர்களை எமக்குத்தந்திருக்கிறது. இன்றைக்கு 5000/= க்கு அதிகமாக இம்மலருக்கு அன்பளிப்புத்தந்து இம்மலரைப் பெற்றுக் கொண்டவர்களைப் பார்க்கின்ற போது பரந்து பட்ட தொழிற்றுறைகளிலே சிறந்து மிளிர்வதைக் காண்கிறோம். பல்வேறு வைத்திய கலாநிதிகளை இக்கல்லூரி தந்திருக்கின்றது. அது மட்டுமல்ல ஈழத்து இலக்கிய வரலாறு என்று ஒன்று வருகின்ற போது அது மகாஜனாக்கல்லூரியைத் தவிர்த்து விட்டு ஒரு வரலாறாக உருவாக முடியாது. நான் இதனைத் தட்டிக்கொண்டு போகின்ற போது எங்காவது ஒரு இடத்திலே இந்த ஈழத்து இலக்கியவாதிகள் இந்தப்பாடசாலையிலிருந்தே வந்தனர் என்று சொல்லக் கூடிய வகையில் ஒரு கட்டுரையை நான் கண்டேன். அக்கட்டுரையிலே “தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் முன்னோடிக் கவிஞர்கள்” என்று ஐயா மயிலங்கூடலூர் பி.நடராஜா அவர்கள் சில குறிப்புகளைத் தந்திருக்கின்றார். இக்கல்லூரியினுடைய ஸ்தாபகர் அதிபர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களே எங்கள் மூத்த கவிஞர். அந்த கலைஞரின் வழியிலே இப்பாடசாலை கவிஞர் கதிரேசர்பிள்ளை அவர்களை, மகாகவி உருத்திரமூர்த்தி அவர்களை, அ.ந.கந்தசாமி அவர்களை எல்லோரையும் தந்திருக்கின்றது. அவர்களின் வழித்தோன்றல்களாக கதிரேசர்பிள்ளையின் மகன் ஆதவன். ஒரு சிறந்த எழுத்தாளன்; எனது நண்பர். சேரன் மகாகவியின் புதல்வன், ஔவை என்று இந்த பாடசாலை ஒரு கலை இலக்கிய பாரம்பரியத்தைக் கொண்ட பாடசாலை. அந்த வரலாற்றைத் தொட்டுக்காட்டுவதாக, அந்தக்கவிஞர் பரம்பரையை தொட்டுக்காட்டக்கூடியதாக எங்களுடைய ஐயா அவர்களின் கவிதை இங்கே அமைகின்றது. அதை நீங்கள் எல்லோரும் படிக்க வேண்டும். அடுத்ததாக இந்த பாடசாலையினுடைய மாணவர்கள் தங்கள் ஆக்கங்களைத் தந்திருக்கிறார்கள். பாடசாலை நிலையிலேயே, மாணவர் நிலையிலேயே எழுகின்ற ஆக்கங்கள். அவர்களுடைய கவிதைகளை நான் படிக்கின்ற போது இவர்களும் எதிர்காலத்திலே இந்தக் கல்லூரியின் கவிஞர் முன்னோடி வரிசையிலே இவர்களும் கவிஞர்களாக வருகின்ற சாத்தியக் கூற்றை நான் காண்கின்றேன். அந்தக்

கவிதைகளை நான் தனித்தனியாகச் சொல்ல வரவில்லை. ஆனால் கவிதைப் போக்கு இந்தப் பருவத்திலே அவர்கள் சொல்ல வந்த விடயங்களை சொல்லுகின்ற போது அவர்கள் இப்பாடசாலையின் பெருமையை நிலை நிறுத்திக் கொள்கின்ற வகையிலே சிறந்த கல்வியாளர்களாக விளங்குவதோடு மட்டுமின்றி கலை இலக்கியவாதிகளாகவும் கவிஞர்களாக, படைப்பாளிகளாகத் திகழ்வார்கள் என்ற அடையாளங்கள் இங்கே காணப்படுகின்றன.

இங்கே சில விடயங்களைக் குறிப்பாக கட்டுரைகளிலே மாணவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே நான் படித்துக் கொண்டு செல்லும் போது என்னை மிகவும் கவர்ந்த ஒன்று "முயற்சியாளர்" என்கின்ற ஒரு சிறிய கட்டுரை. நான் பல்கலைக்கழக மட்டத்திலேயே முயற்சியாளன் - Entrepreneur என்பதற்கு எவ்வாறு விளக்கத்தைக் கொடுக்கலாம் என யோசித்துக்கொண்டிருக்கின்ற நிலை உள்ளது. முயற்சியாளர் என்பது பற்றி மிகச் சுருக்கமாக ஒரு பக்கத்திலே தரம் 10A மாணவன் ஒருவன் சிறப்பாக எழுதியுள்ளான்.

அடுத்ததாக இச்சஞ்சிகையிலே இடம்பெற்ற சிறுகதைகள் பற்றி ஒரு சில குறிப்புக்கள் சொல்லலாமென நினைக்கின்றேன். மு.தர்சனா என்பவர் எழுதியிருக்கின்ற 'Titanic துயரத்தின் பின்' அது சிறுகதைக்குரிய கட்டமைப்பிலிருந்து சிறிது விலகியிருந்தாலும் கூட அதனைச் சிறுகதையாகக் கொள்ளலாமென நான் நினைக்கின்றேன். தரம் 10A சே.சஞ்சிகா எழுதியிருக்கின்ற "ஒரு இடைவிலகல்" A/L Maths வகுப்பைச் சேர்ந்த பா. நீதுஜன் எழுதியிருக்கின்ற "ஒரு மரமும் கடவுளும்" து. கபில்ராஜ் A/LBio வகுப்பைச் சேர்ந்தவர் எழுதியிருக்கின்ற Inter net ல் உறவுகள். இந்த 4 சிறுகதைகளும் வெவ்வேறு கோணங்களில் அணுகுகின்ற சிறுகதைகளாக இருக்கின்றன. இவற்றைப் படித்த போது இந்த கதைக்களங்களை, கருக்களை எங்கே பெற்றுக் கொண்டார்கள். இவ்வளவு தூரத்துக்கு இவர்கள் வாசிக்கின்றவர்களா? என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் இக்கல்லூரி வரலாறு எமக்குச் சொல்லுகின்றது இவர்கள் இப்படியான தடத்திலே தான் செல்வார்கள். Titanic கப்பல் மூழ்கிய செய்தி எங்களுக்குத் தெரியும். அந்த titanic கப்பல் மூழ்கியதற்கான காரணம் ஒன்றை வைத்துக் கொண்டு அந்த வரலாற்றை உண்மை கலந்த கற்பனை என்று சொல்லி அந்த வரலாற்றை ஒரு சிறுகதை போல் எழுதியிருக்கின்ற அந்தப்பாங்கைப் பார்க்கின்ற போது மெச்சக் கூடியதாக இருக்கின்றது. நீங்கள் படிக்க வேண்டும். Titanic கப்பல் மூழ்கிய துயரத்திற்குக் காரணமான ஒருவர் இங்கே பிரதான பாத்திரமாக இடம்பெற்றிருக்கிறார். அடுத்ததாக இடைவிலகல் என்கின்ற சொல் கல்விப்புலத்திலே விளங்குகின்ற ஒரு சொல்.

மாணவர்கள் இடைவிலகிச்செல்வது கல்வி உலகு எதிர்நோக்குகின்ற ஒரு பிரதான சவால். ஆகவே அந்தப் பிரதான சவால் வெற்றி கொள்ளப்பட வேண்டும் என்றால் எமது பெற்றோருக்கு இந்த இடைவிலகலினால் ஏற்படக்கூடிய பாதிப்பு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். பாடசாலையை விட்டு உரிய காலத்திற்கு முன்னரே விலகிச் செல்லுகின்ற போது இந்த மாணவர்களுடைய முன்னேற்றத்தில் ஏற்படும் பாதிப்பையே இச்சிறுகதை ஊடாக எப்படிச் சொல்லலாமோ அவ்வாறு இவர் சொல்லியிருக்கிறார். ஆனால் இதற்காக எடுத்துக்கொண்ட பாத்திரம் தான் எனக்கு வியப்பைத் தந்துள்ளது. இவர் ஒரு முஸ்லிம் குடும்ப பின்னணியை எடுத்திருக்கிறார். நான் நினைக்கிறேன். சஞ்சிகாவுக்கு எங்காவது முஸ்லிம் பிரதேசத்திலே வாழும் சந்தர்ப்பம் கிடைத்திருக்குமோ என்று கூட நான் யோசித்தேன்.

அடுத்ததாக Inter net ல் உறவுகள். கபில்ராஜ் எழுதியிருக்கும் சிறுகதை இன்றைக்கு எங்களுடைய வாழ்க்கையில் நாங்கள் நிதம் நிதம் சந்திப்பது. Inter netஇல் தான் வாழ்க்கை உறவுகளைச் சந்திக்கிறோம். புலம் பெயர்ந்து இருப்பவர்களுக்கு இங்கே நாங்கள் படும் அவலங்களை, அவர்களுக்குப் பதிவுகளாகக் காட்டி, அல்லது எங்களுடைய கலாசாரங்களை, எங்களுடைய நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதுடன் மட்டும் போதும் என்று அதனுடன் நின்று விடும் சிலரைக் காட்டுவதாக அமைகின்றது.

அடுத்ததாக "ஒரு மரமும் கடவுளும்" இக்கதை ஒரு உலக தரத்திற்கு ஒப்பான கதை எனச் சொல்வேன். ஒரு போர்ப்படைஒரு கட்டாந்தரையிலே தங்கியிருந்தவாறு தேவைப்படும் போது யுத்தம் புரிகின்ற ஒரு படைக்கு உதவியாக, தேவைப்படும் போது செல்வதற்காக அங்கே தங்கிருக்கின்றது. குறித்த அளவு உணவைக் கொண்டு சென்றிருக்கின்றது. இவர்கள் கூடாரமிட்டிருக்கின்றார்கள். கூடாரம் தெரியாதிருக்க வேண்டும். ஒரு மரத்திற்குக் கீழே அக்கூடாரம் அமைந்திருக்கின்றது. எதிரி விமானங்கள் வந்து வட்டமிட்டுச் செல்கின்றன. அங்கே ஒரு மரமிருப்பதைக் கண்டு எதிரிகள் விமானத்திலிருந்து கதைக்கின்றார்கள். அங்கே ஒரு மரமிருக்கின்றது. அதற்குக் கீழே கூடாரம் இருக்கக் கூடும் என்பது போல. ஆனாலும் அந்தக் கூடாரத்தைக் காணாதவர்களாக விலகிச் செல்கின்றார்கள். அந்த மேஜர் உடனடியாக அந்த மரத்தை தறித்து விட வேண்டுமென்று சொல்கிறார். ஆனால் ஒரு வயது முதிர்ந்த ஒரு இராணுவ வீரன் சொல்கின்றார். இல்லை அந்த மரத்திலே குருவிக் கூடு ஒன்றிருக்கின்றது. அந்த குருவிகளுக்கு வேறு வழியில்லை. எனவே நாங்கள் அந்த மரத்தை அழிக்கக் கூடாதென்று சொல்கின்றார். நாட்கள் செல்கின்றன. உணவு தீர்ந்து விடுகின்றது. இன்னும் 3 நாட்களுக்கு மட்டும் போதிய உணவு இருக்கின்றது. அதே வேளையில் இவர்களுடைய தொலைத் தொடர்பு கருவிகளெல்லாம் பயனற்றுப் போகின்றன. அந்த நேரத்திலே இவர்களுக்கு

உதவுவதற்காக இரண்டு Helicopterகள் வந்து இவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றன. தேடிய விமானங்கள் திரும்பிப் போய் மீண்டும் வருகின்றன. வந்து செல்கின்றன. இந்த மரத்தைக் கண்ட படியால் தான் நாங்கள் நீங்கள் இங்கே இருக்கக் கூடும் என வந்திருக்கின்றோம் என்று சொல்லி அவர்களுக்கு வேண்டிய உணவுகளைக் கொடுத்துச் செல்கின்றன. அந்த நேரத்திலே குருவிக் குஞ்சுகளைக் காக்க வேண்டும், மரத்தைத் தறிக்கக் கூடாது என்று கூறிய இராணுவ வீரன் இறந்திருக்கிறான். அவன் உடலை Helicopter ஏற்றிச் செல்கிறார்கள். இப்படியாக ஒரு மரம், கடவுள் என்று சொல்லுகின்ற ஒரு குறியீடாக நின்று இக்களத்திலே மட்டுமல்ல மரமென்பது எமது மனித வாழ்க்கையில் நின்று ஒரு மரம் கடவுள் என்று சொல்லுகின்ற ஒரு குறியீடாக அக்கதை விளங்குவதை நாம் காண்கின்றோம்.

மாணவர்களுடைய ஆக்கங்களை விடுத்து ஆசிரியர்களுடைய ஆக்கங்களுக்கு வருகின்ற போது பல்வேறு ஆக்கங்கள் இங்கே இருக்கின்றன. ஆசிரியர் விஜயபாஸ்கர் அவர்கள் Swot Analysis ஊடாக இந்தப் பாடசாலையினுடைய பலங்கள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை மிகச் சுருக்கமாகப் பட்டியல் படுத்தி அளித்திருக்கிறார். How to face a public Examination without Excitement & thrill என்றகட்டுரையிலே ஒரு flow chart ஊடாக ஒரு பரீட்சையை எவ்வாறு எதிர் கொள்ளலாமெனத் திரு.செ.சத்தியநாராயணன் தந்துள்ளார். திருமதி.சிவசக்தி சயந்தன் அவர்கள் தரம் 5 புலமைப்பரீட்சையிலே பெற்றோரின் அழுத்தங்களை 2 பக்கத்திலே மிகச் சுருக்கமாகக் கூறியிருக்கிறார் - எமது சமூகம் ஒரு போட்டிச் சமூகம். முன்பள்ளியில் படிக்கின்ற போது கூட எமது பிள்ளை முதலாவதாக வரவேண்டுமென்ற போட்டிக்காக நாம் tuition ற்குஅனுப்ப வேண்டும் என நினைக்கின்ற சமூகம். ஆகவே உண்மையாக பெற்றோரின் உண்மையான அக்கறை 5ம்வகுப்பு புலமைப்பரீட்சையில் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற கட்டுரையாக உள்ளது. இது அவரின் ஆய்வின் ஒரு பகுதியாக இருக்கலாம் என நான் நினைக்கிறேன்.

அடுத்தது வகுப்பறை முகாமைத்துவமும் ஆசிரியரும் பற்றி பிரதி அதிபர் திரு.சு.சயந்தன் எழுதியிருக்கிறார். ஆசிரியர்கள் வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டுள்ளார். அடுத்ததாக Role of a teacher in the Personality Development of school student என்ற கட்டுரையை பொருத்தமாக, மாணவர்களின் ஆளுமையை கட்டி வளர்க்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள், அந்த ஆசிரியர்கள் தங்கள் பங்களிப்பை, வகிபாகத்தை அறிந்து கொள்ள வேண்டு மென்ற வகையிலே

மிகவும் அழகாக எளிமையான ஆங்கிலத்திலே இப்பாடசாலை அதிபர் திருமதி.சி.அனந்தசயனன் எழுதியிருக்கிறார். இசையின் முக்கியத்துவம்பற்றி திருமதி.அன்பரசி குகதாசனும் The food without salt suits for the bin என்கின்ற திரு.க. வாணிமுகுந்தனினதும் கட்டுரைகள் எல்லாம் இங்கே இடம்பெற்றிருக்கின்றன.

பிரதானமாக சமூகவியற் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள் எழுதியிருக்கின்ற "உதவும் மனப்பாங்கின் பரிமாணங்கள்" என்கின்ற கட்டுரை இங்கே இடம் பெற்றிருக்கின்றது. மனிதப் பண்புகளில் மிக முக்கியமானது உதவும் மனப்பாங்கு. பிறருக்காக தங்களுடைய நலனை நல்கின்ற போது அது தற்கொடையாகின்றது. தங்கள் பலத்தை தாங்களாகவே வளர்த்துக் கொள்ளுகின்ற போது அது ஒவ்வொருவருக்கும் வலுவாகின்றது. Empowerment ஆகின்றது. என்று எழுதியிருக்கின்றார். எனவே இக்கல்லூரிச் சஞ்சிகையிலே பல்வேறு ஆக்கங்கள் இருக்கின்றன. பல்வேறு துறைசார்ந்ததாக, இனி வரும் சமுதாயத்திற்கு வழிகாட்டுவதாக, பாடத்தைப் புகட்டுவதாக இக்கட்டுரைகள், ஆக்கங்கள் அமைந்திருக்கின்றன.

எனவே இந்தப் பாடசாலையின் தொலை நோக்கு - Vision :- Creation of perfect humanistic society of great value - "உயர்ந்த விழுமியங்களைப் பேணும் பூரண மனிதத்துவ மாணவ சமூக உருவாக்கம்" என்பதை தொலை நோக்காகக் கொண்டு தொழிற்படுகின்ற இக்கல்லூரிக்கு உதவுவதாக அனுசரணையாக இச்சஞ்சிகை அமைந்துள்ளது.

ஆனாலும் இச்சஞ்சிகை பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நான் பல்கலைக்கழகத்திலே முகாமைத்துவம் குறித்து விரிவுரையாற்றும் ஒருவன். இந்த சஞ்சிகையிலே இடம் பெற்றுள்ள ஆக்கங்கள் மிகவும் அதிகமானவை. எங்களுக்குத் தெரியும் ஆக்கங்கள் கடைசி நேரத்தில் கூட வந்திருக்கலாம் இச்சஞ்சிகை நேற்றுத்தான் வந்து சேர்ந்த போதே நான் யோசித்தேன். மிகவும் நெருக்கடியான நிலையிலே இந்தக்குழு இந்தச் சஞ்சிகை தொடர்பாக உழைத்திருக்கின்றது. ஆனாலும் இதிலே செய்யப்படுகின்ற பதிவுகள் பிழையற இருக்க வேண்டும். எனவே எழுத்துப்பிழைகள் இடம் பெறலாம். நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். 2010ல் இம்மலர் வெளிவருகின்ற போது ஒரு நூற்றாண்டு காலப்பதிவுக்குரிய ஒரு இதழாக இருக்கும். அது 2010ல் மேற்கொள்ள வேண்டிய முயற்சியல்ல. இன்றிலிருந்தே 2010ல் வெளிவர வேண்டிய மகாஜனன் இதழுக்குரிய ஆக்கங்கள்

சேகரிக்கப்படவேண்டும். கூடியளவு காலம் எடுத்து இச்சஞ்சிகை வெளிக்கொணரப்பட வேண்டும். இது குறையாக இல்லாமல் ஆலோசனையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இப்புகழ் பூத்த கல்லூரியின் விழாவிலே கலந்து

கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த அதிபர் அவர்களுக்கும், கல்லூரிச் சமூகத்திற்கும், மாணவச்செல்வங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மகாஜன சிற்பி ஜயரத்தினம் ஐயா அவர்களுக்குரிய நினைவு தினத்திலே நினைவுப்பேருரையை கேட்டிருக்கிறீர்கள். பிள்ளைகள் அனைவரும் சிறந்த பெறுபேறு பெற்று இச்சமூகத்தில் சிறந்த வாழ்வு வாழ என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி விடை பெறுகின்றேன்.

**"சந்தன மரத்தினைத் தறிக்குங் கோடரிக்**
**கந்த நன் மரம்மண மருளல் போலுனக்**
**கெந்தவல் லிடரினை யெவர்செய் தாலுநீ**
**சிந்தைவைத் தவர்க்கன்பு செய்தன் மேன்மையே"**

**- சிந்தனைச்சோலை-**

## பதினாறு பேறுகள்


| | |
|---|---|
| புகழ் | கல்வி |
| வலிமை | வெற்றி |
| நன்மக்கள் | பொன் |
| நெல் | நல்லூழ் |
| நுகர்ச்சி | அறிவு |
| அழகு | பெருமை |
| இளமை | துணிவு |
| நோயின்மை | நீண்ட ஆயுள் |


# ஜயரத்தினம் நினைவு தினமும்
# மகாஜனன் நூல் வெளியீட்டு விழாவும் 2007










# வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி நிகழ்வுகள் - 2008











ஐயரத்தினம் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் (29.10.2007) அன்று வழங்கப்பட்ட

நினைவுப்பேருரை

(ஸ்கந்தவரதர் ரமேஸ் விரிவுரையாளர் வணிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்)



நவ மகாஜனாவின் சிற்பி அதிபர் தெ.து.ஐயரத்தினம்

பெருமதிப்புக்குரிய கல்லூரி அதிபர் அவர்களே, இன்றைய விழாவின் பிரதம விருந்தினர் அவர்களே, மேடையில் வீற்றிருக்கும் பெரியோர்களே, பாடசாலையின் ஆசிரியர்களே, கல்விசாரா அலுவலர்களே, மாணவ மாணவிகளே, பெற்றோர்களே,பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, அனைவருக்கும் எனது நிறைவான காலை வணக்கங்கள்.

ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் 29ம் நாள் நவ மகாஜனாவின் சிற்பி அதிபர் தெ.து. ஐயரத்தினம் அவர்களை அவரது பிறந்த தினத்தில் நினைவு கூர்ந்து நினைவுப்பேருரை நிகழ்த்துவது மகாஜனாவின் பாரம்பரியமாகும். இவ்வருடம் இந்நினைவுப்பேருரையை நிகழ்த்துவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவ்வாய்ப்பை அளித்த இக்கல்லூரிச் சமூகத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிபர். தெ. து. ஜயரத்தினம் அவர்கள் இம் மகாஜனாவினை வழி நடத்திய மிகச்சிறந்த அதிபர்களில் முதன்மையானவர். சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்டவர். தலை சிறந்த கல்விமானாகவும் சமூகத் தொண்டனாகவும் சமய ஊழியனாகவும் வாழ்ந்தவர். மொத்தத்தில் தனக்கென வாழாது பிறருக்கெனத் தமது வாழ்வை அர்ப்பணித்த பெருந்தகையாவார். தனது அறிவு முதிர்ச்சியாலும் பணிவன்பு ததும்பும் பேச்சினாலும்உயர்ந்த பண்பினாலும் எளிமை நிறைந்த வாழ்க்கையாலும் எல்லோர் மனதிலும் இடம் பிடித்த அதிபராக அவர் பல ஆண்டு காலமாகப் பணியாற்றியுள்ளார்.

அதிபர் திரு.தெ.து. ஜயரத்தினம் அவர்களது காலம் மகாஜனாவின் வரலாற்றில் “பொற்காலம்” என வர்ணிக்கப்படுகின்றது. தனது தந்தையாரான பாவலர் துரையப்பாபிள்ளையால் தொடங்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வந்த மகாஜனாவை அதன் புகழும் பெருமையும் குன்றாமல் தொடர்ந்து வழி நடத்திய பெருமை இவருக்குரியது. 1932 இல் ஆசிரியராக இப்பாடசாலையில் கல்விப்பணியில் இணைந்து கொண்ட இவர் 1945 இல் அதிபராகப் பணியேற்கும் வரைக்கும் மாணவர்களுக்கு ஆங்கில இலக்கியம் முதலான பாடங்களை ஆர்வத்தோடு கற்பித்து வந்தார். இவர் ஆங்கில இலக்கியம் கற்பிப்பதில் தனி அழகும் கவர்ச்சியும் உடையவர். அன்றியும் ஒவ்வொரு மாணவர்களையும் சரிவர

அறிந்து அவரவர்க்கு ஏற்ப, கல்வியைப் போதிப்பதில் வல்லவர். 1945இல் இவர் பாடசாலையைப் பொறுப்பேற்ற போது 400 மாணவர்களும், 15 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். 25 வருட கால அதிபர் சேவையைத் திறம்பட 1970 இல் இவர் நிறைவு செய்த காலங்களில் மாணவர் தொகை 1800 ஆகவும் ஆசிரியர்களின் தொகை 64 ஆகவும் அதிகரிக்கப்பட்டு இருந்திருக்கின்றது. உண்மையில் சாதாரண அதிபர்களால் காணமுடியாத வெற்றியை அவரால் காணமுடிந்தது. இவரது காலப்பகுதியில் பல்கலைக்கழகப் படிப்பென்பது மிகவும் வரையறுக்கப்பட்ட மாணவர்களுக்கே சாத்தியமானதாக இருந்தது. நாட்டில் இக்காலத்திலிருந்த ஒரு சில பல்கலைக்கழகங்களுக்கு அதி கூடிய புள்ளியைப் பெறும் மாணவர் மட்டும் செல்லக் கூடிய வாய்ப்பு இருந்தது. இச்சூழலில் மகாஜனாவில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பட்டியலிட்டுப் பார்க்கும் போது அதன் எண்ணிக்கையில் ஒரு தொடர்ச்சியான ஸ்திரமான வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. இதனைக் கீழ் வரும் அட்டவணையில் தெளிவாகக் காணலாம். (தரவுகள் கிடைக்கப் பெற்ற சில ஆண்டுகளிற்கு மட்டும்)

அட்டவணை 1:- பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை

| | ஆண்டு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பீடம் | 1956 | 1961 | 1962 | 1965 | 1966 | 1967 | 1969 |
| மருத்துவம் | 01 | 05 | 03 | 10 | 02 | 07 | 07 |
| பொறியியல் | 01 | 01 | 02 | 06 | 04 | 04 | 01 |
| விஞ்ஞானம் | 04 | 07 | 05 | 08 | 10 | 06 | 15 |
| கலை | 01 | 05 | 04 | 14 | 05 | 08 | 02 |
| விவசாயம் | -- | -- | 01 | -- | -- | -- | -- |
| மிருக வைத்தியம் | -- | -- | --- | -- | -- | -- | 04 |
| மொத்தம் | 07 | 18 | 15 | 38 | 21 | 25 | 29 |

மூலம் :- மகாஜனன் - 1956, 1961, 1962, 1965, 1966, 1967, 1969

மேலும் அதிபர் ஜயரத்தினம் அவர்களின் காலப்பகுதியில் மகாஜனா கல்வித்துறையில் மட்டுமன்றி விளையாட்டுத்துறை, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், தொழிற் பயிற்சிச் செயற்பாடுகளிலும் முன்னேற்றங்களைக் கண்டது.

அதிபரது ஏனைய சில சாதனைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

★ இவரது காலத்திலேயே 1ஆம் பிரிவு உதைபந்தாட்டக்குழுவினர் யாழ் மாவட்டத்தில் 8 ஆண்டுகள் தொடர்ச்சியாக 1ஆம் இடத்தைச் சுவீகரித்தனர்

* 1954ம் ஆண்டு இவர் அதிபராக இருந்த போது கல்லூரியின் விடுதி ஒரு தனியார் வீட்டில் 6 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவர் ஓய்வு பெறும் போது அது பெரும் விடுதியாக உருப்பெற்றிருந்தது. சுமார் 120 மாணவர்கள் அப்போது அங்கு தங்கியிருந்து கல்வி கற்றனர்.
* 1961ம் ஆண்டில் 23 நாட்கள் நடாத்தப்பட்ட கல்விக் கண்காட்சியில் ஏறத்தாழ 30000 பேர் அதனைப் பார்த்துப் பயன் அடைந்தனர். மேலும் இதே ஆண்டில் மகாஜனா அதி உயர் கல்லூரியாக உயர்த்தப்பட்டது.
* தந்தையாரால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் கட்டட அமைப்பினை ஓர் சிறந்த ஒழுங்கமைப்பில் திறம்படச் செய்து முடித்தார்.
* கல்வி அமைச்சினாலும் கல்விமான்களினாலும் பொது மக்களாலும் சிறந்த எடுத்துக்காட்டாக, கணிக்கப்பட்டு கல்வி உலகிலே பெருஞ்சாதனை நிலைநாட்டியவர். இதன் காரணமான கல்லூரி அதிபர் என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

கல்லூரியின் பௌதீக வளங்களும் ஆளணி வசதிகளும் இவரால் மிக அதிகளவில் ஏற்படுத்தப்பட்டன. இதனால் மகாஜனா சம காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்று விளங்கிய பாடசாலைகளுக்கு இணையான வளர்ச்சியைக் கண்டது. இத்தகைய வளர்ச்சிக்கெல்லாம் அதிபர் அவர்களுடைய அயராத உழைப்பும் ஆளுமையும் தலைமைத்துவப் பண்பும் அத்திவாரமாக அமைந்தன. ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் முகாமைத்துவப் பண்புகள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. முகாமைத்துவம் பல வகைப்படும். நிவ்வாகத்தை ஒழுங்குபடுத்துதல், திட்டமிடல், கட்டுப்படுத்தல், நேர முகாமைத்துவம் என்பதனை வகை மாதிரியாகச் சுட்டலாம். இவற்றுள் நேர முகாமைத்துவம் என்பது நேரத்தை முகாமை செய்தலாகும். நேரம் என்பது இயற்கையால் வழங்கப்பட்ட நிலையான ஒன்றாகும். இது ஏழை, பணக்காரன், இனம், மதம், மொழி என்ற எந்த வேறுபாடுமின்றி ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. எனினும் ஒவ்வொரு தனிமனிதனும் அதனை வாழ்வில் எவ்வாறு சரியான முறையில் பயன்படுத்திக் கொள்கின்றான் என்பதிலேயே அவரது வெற்றி தங்கியுள்ளது. இதற்கு எமது அதிபர் அமரர். திரு.தெ.து. ஜயரத்தினம் அவர்கள் உதாரண புருஷனாக வாழ்ந்து எமது கல்லூரியின் வெற்றிக்கு வழிகோலியவர். ஆகவே தான் இன்று அதிபர் அவர்களுடைய நினைவு நாளில் நேர முகாமைத்துவம் தொடர்பாகப் பேருரையாற்ற முன் வந்துள்ளேன்.

இன்றைய கடும் போட்டி நிலவுகின்ற சூழலில் நாடுகள் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் என்ற வேறுபாடின்றி அவர்களுடைய நேரத்தை வினைத்திறனாகப்

பயன்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் ஓர் அத்தியாவசியமான விடயமாகும். இவ்வாறு நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தாவிடத்து அழுத்தம், அடிக்கடி கோபப்படல் , முரண்படல், விரக்தி ஆகிய விரும்பத்தகாத குணவியல்புகள் உருவாகி விரும்பிய அல்லது வினைத்திறனான இலக்குகளை அடைவதற்குத் தடையை ஏற்படுத்தும் எனவே தான் ஒவ்வொருவரும் தமது சுமுகமான நாளாந்த செயற்பாடுகளில் நேரத்தைச் சரிவர முகாமை செய்ய வேண்டிய கடப்பாட்டில் உள்ளனர்.

இதில் நேரம் என்பதனை நோக்கின் அது நிலையானதும் கண்ணால் பார்க்க முடியாததும் பதிலீடு செய்ய முடியாததும் மிகவும் பெறுமதி வாய்ந்ததுமான ஒரு வரையறுக்கப்பட்ட இலவசக் கொடையாகும்.

எனவே தான் நேரம் என்பதனை கட்டுப்படுத்தவோ நேரத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது மெதுவாக்கவோ அல்லது விரைவாக்கவோ முடியாது நேரத்தை நேரடியாக முகாமை செய்யவோ முடியாது. நாம் எம்மையும் எம்மால் பயன்படுத்தப்படும் நேரத்தையும் வினைத்திறனாக முகாமை செய்தல் தான் நேர முகாமைத்துவமாகும். இதற்கு அமைவாகவே எமது பாடசாலையின் மகுட வாசகமும் "உனை நீ அறி" என அமைந்தள்ளது. இதன் படி ஒருவர் தனது கடமையை ஆற்றும் போது தனது பலம் என்ன பலவீனம் என்ன என்பதனை அறிந்து அக்கடமையை ஆற்றும் போது நேரம் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுவதுடன் அவரது இலக்கும் குறித்த கால எல்லைக்குள் சிறப்பாக எட்டப்படும்.

உண்மையில் பெரும் பகுதி மக்கள் இன்று முகம் கொடுக்கும் மிகப்பெரும் பிரச்சினையாக நேர வறுமை காணப்படுகின்றது. இந்நேரவறுமைக்குப் பிரதான காரணமாக நேரத்தின் வீண் விரயத்தினைக் கூறிக்கொள்ளலாம். பொதுவாக நேரவிரயம் உருவாகும் சந்தர்ப்பமாகப் பொருத்தமற்ற அல்லது இலக்கற்ற கூட்டங்களையும் முடிவில்லாத கூட்டங்களையும் கூறிக்கொள்ளலாம். இல்லை என்று சொல்வதற்கு இயலாமை - அதாவது மேலதிகாரியை அல்லது மற்றவரை வெறுக்கக்கூடாது என்பதற்காக இல்லை என்று சொல்வதற்கு தயங்குதல், ஒவ்வொருவருக்கிடையிலான சரியான தொடர்பாடலின்மை, தேவையற்ற நீண்ட நேர தொலைபேசி அழைப்புக்கள், உயர் அதிகாரிகள் தங்கள் பணிகளை உடன் முடித்துத்தரும்படி வேண்டுதல், ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னுரிமைப் படுத்துவதில் உள்ள ஆற்றலின்மை, தகுதியற்ற உத்தியோகத்தர்கள். செயற்பாட்டினைக் காலம் கடத்துதல் அல்லது தாமதப்படுத்தல் போன்றவை நேர வீண் விரயத்திற்கான மேலதிக காரணங்களாகக் கூறிக்கொள்ளலாம். எனவே தான் நேரம் என்பது எமது வாழ்க்கையின் ஆயுட்காலத்தைக் குறித்து நிற்கின்றது. நேரத்தினை வீண்விரயமாக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் எமது வாழ்க்கைக் காலத்தை நாம் வீணடிப்பதற்குச் சமனாகும்.

இவ்வாறான நேரவிரயத்தைத் தவிர்ப்பதற்கு நாம் சரியாகத் திட்டமிட்டுக் கருமத்தை ஆற்றுதல் வேண்டும். செயற்பாடுகளில் முக்கியத்துவமான செயற்பாடுகளையும் அவசரமான செயற்பாடுகளையும் வேறுபடுத்தி அவற்றை முன்னுரிமைப்படுத்தி முதலில் செய்யப்படவேண்டிய பணிகளை பட்டியல்படுத்துதல், இலக்கை சரிவர நிர்ணயித்து அட்டவணைப்படுத்துதல், எமது வேலைப்பளுவைச் சரியாக முகாமை செய்தல், மற்றும் தினக்குறிப்பேடு போன்ற நேரத் திட்டமிடற் கருவியைப் பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகளினூடாக இதனைச் சாத்தியமாக்கிக் கொள்ள முடியும்.

ஆசிரியர்களிற்கு முன் இருக்கும் மிகப் பெரும் சவால் தங்களது நேரத்தையும் மாணவர்களது நேரத்தையும் முகாமை செய்தலாகும். கற்பித்தலின் மிக முக்கிய அம்சங்களான நாளை ஒழுங்கமைத்தல், வகுப்பறையை ஒழுங்கமைத்தல், ஒவ்வொரு பாடத்தையும் எத்தனை தடவை கற்பிப்பது மற்றும் எவ்வளவு காலம் கற்பித்தல் என்பதனைச் சரியாகத் தீர்மானித்தல், மாணவனின் முன்னேற்றங்களைப் பதிவு செய்தல் போன்ற இவ் அம்சங்களின் ஊடாக நேரம் தொடர்பாக எழும் அச்சுறுத்தலினைத் தவிர்த்துக் கொள்ளலாம். இல்லாவிடில் நேரம் அச்சுறுத்தலாக எழுவதனைத் தவிர்த்துக்கொள்ள முடியாது போய்விடும். எனவே தான் பாடசாலை நேரத்தின் பயனுறுதித்தன்மை என்பது வினைத்திறனான வகுப்பறை ஒழுங்கமைப்புடனும் முகாமைத்துவத்துடனும் ஆரம்பிக்கின்றது. வகுப்பறை நேர ஒழுங்கமைப்பு, என்பது கடதாசி வேலைகளைக் குறைத்தல், நீக்குதல், கற்பித்தலிற்குப் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துதல், மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து வேலையை ஒப்படைத்தல், வகுப்பறைச் சூழல் போன்ற விடயங்களை உள்ளடக்குவதாகும்.

மேற்கூறிய விடயங்களை உற்று நோக்குகின்ற போது பாடசாலை ஒன்றுக்கு நேர முகாமைத்துவம் எவ்வாறு முக்கியத்துவமாக இருக்க முடியும் என்பதனை இனி இங்கு நோக்கலாம்.

✶ ஆசிரியர்கள் ஏனைய அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்பாகவே தமது வேலைத்தளத்திற்கு சமூகமளிப்பதானது அதிபருடன் ஏற்படும் முரண்பாடு, தேவையற்ற மன அழுத்தம், படபடப்பு போன்றவற்றைத் தவிர்த்துச் சுமுகமானநிர்வாகத்தினை நகர்த்த உதவியாக அமையும்.

✶ மாணவர்களது வரவு என்பது கற்பித்தலிலும் கற்பித்தல் நேரத்திலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் ஒரு விடயமாகும். எனவே மாணவர்களது வரவை முன்னேற்றத்தக்க வகையில் ஆசிரியர்களது கற்பித்தல் பணி அமைய வேண்டும். இதனைத் தூண்டுவதற்குப் பாட வேளை முடிவடைவதற்கு சற்று முன் அடுத்த நாள்

என்ன கற்க இருக்கின்றோம் என்பதனை தெளிவுபடுத்துதல்.

✶ பாட நேர அட்டவணை தயாரிக்கும் போது முதலில் கடினமான பாடம் என்ற அடிப்படையில் பாடங்களை முன்னுரிமைப்படுத்துதல்.

✶ ஆசிரியர்கள் நேரத்துடன் பாடவிதானங்களைத் தொடர்புபடுத்தித் திட்டமிடுவதுடன் அவற்றைத் திட்டமிட்ட நேரத்திற்குள்ளேயே ஆற்ற பழகிக் கொள்ள வேண்டும்

✶ பாடசாலை நேரத்தில் தேவையற்ற உரையாடல்களை இயலுமான மட்டும் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

✶ ஆசிரியர்களது பிரச்சினைகளையும் மாணவர்களது பிரச்சினைகளையும் கலந்துரையாடுவதற்கென அதிபர் தனியான நேரத்தை ஒதுக்கி வைத்திருத்தல் வேண்டும்.

✶ ஆசிரியர்களும் பாடசாலை நிர்வாகத்தினரதும் எந்தவொரு செயற்பாட்டையும்பிற்போடலாகாது. எந்த நேரத்தில் எந்த வேலையை ஆற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டதோ அந்த நேரத்தில் அது நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.அதாவது நாளை என்ற நிலை வரவேற்கப்படலாகாது.

✶ தேவைக்கதிகமான கூட்டங்கள் கூட்டப்படுவதனைத் தவிர்த்து கூட்டங்கள் எப்பொழுதும் வினைத்திறனாக இருப்பதனை உறுப்படுத்திக் கொள்ள வேண்டும்

✶ பாடசாலை வேளைகளில் நேரப் பயன்பாடு தொடர்பான தினக்குறிப்பேடு பேணப்பட்டு அதில் விரயமாக்கப்பட்ட நேரத்தையும் வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்ட நேரத்தையும் கண்டறிந்து அதில் நேரம் விரயமாக்கப்படுகின்ற எல்லா நடவடிக்கைகளையும் ஆய்வுக்குட்படுத்துதல் வேண்டும்.

➢ ஒரு மாணவனைப் பொறுத்தவரையில்

* ஒரு மாணவன் தனது கல்விகற்பதற்கான பொருத்தமான நேரத்தினை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அதாவது பாடத்தை உயர்வாக கிரகிக்கத்தக்கது காலை வேளையா? அல்லது மாலை வேளையா? அல்லது இரவு வேளையா? என்பதனைக் கண்டறிந்து மற்றைய நேரத்தில் தனது வழமையான கடமைகளை ஆற்றுதல்.

* சிக்கலானதும் கடினமானதுமான பாடங்களை முதலில் கற்க ஆரம்பித்தல்.

* கற்கும் இடம் கற்றலிற்கு உகந்ததாக இருப்பதனை சரியான

உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

* சந்தோசமாகவும் ஓய்வாகவும் இருப்பதற்கு தனி அறை ஒன்றினை ஏற்படுத்துதல்.

* சரியான அளவு தூக்கமும் சரியாக உணவு உட்கொள்வதினையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இவையிரண்டும் சரியாக இல்லாவிடத்து எமது செயற்பாட்டின் வினைத்திறன் குறைவாகக் காணப்படும்.

* அன்றாடக் கடமைகளிற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துதல் அதாவது செயற்பாடுகளை ஒன்றிணைக்க முயற்சித்தல். அதன்படி பாடசாலை பஸ்ஸில் பிரயாணம் மேற்கொள்ளும் போது வாசித்தல். குளியலறையில் இருக்கும் போது தேவாரம், பொழிப்பு, ஆங்கிலச்சொற்கள் போன்றவற்றை மனப்பதிவு செய்தல்.

முடிவாக கணக்கியலில் சொத்துக்கள், பொறுப்புக்கள், எனும் இரு பதங்கள் உள்ளன. பாடசாலையையும் பாடசாலையில் உள்ள ஆளணி வளமும் மாணவருக்குரிய சொத்து. இத்தகைய சொத்துக்களைப் பாதுகாத்து கௌரவப்படுத்துகின்ற தார்மீகக் கடமை மாணவர்களுக்குரியது. அதேவேளை மாணவர்களை சிறந்த பிரஜைகளாகவும், ஒழுக்கசீலர்களாகவும், கல்வியாளராகவும், உருவாக்கும் கடமைப்பாடு பாடசாலையைச் சாரும். எனவே தான் மாணவர்கள் பாடசாலைக்கு ஒரு பொறுப்பாகும். தற்போதைய அதிபர் சிவமலர் அனந்தசயனன் அவர்கள் இச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் நேரத்தினை வினைத்திறன் மிக்க முறையில் முகாமை செய்வதன் ஊடாகப் பல சாதனைகளை நோக்கி மகாஜன மாதாவை முன் நகர்த்த எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

**சிறப்புப்பெயர்கள்**

**தமிழ் – பக்திமொழி**

**ஆங்கிலம் – வணிகமொழி**

**பிரேஞ்சு– காதல்மொழி**

**இத்தாலி– இசைமொழி**

**கிரேக்கம்– சட்டமொழி**

**உருது– கவிதைமொழி**

## Good Bye - My Dear



Rohan, This is how we call you with affection
Felicitations for you, for your service to the sports
We pause for a moment to see the beautiful smile of yours.
That makes the surroundings active and pleasant

Our hearts to thank you, no hearts dare to stop to frown,
For your service stand firm to crown
You have really and rightly
Put the school on the national education map

When the heart starts to speak, words fail
Sincerity and affection reacts responds and propagates
Rohan, you have done it, you have given the impulse
To the educational institutions, rise to serve

Rohan, we the school community stand firm
To salute your achievements
To salute your inspiring service to the sports field
To rise to salute you, for your hard and stifle efforts

Those are keeping you and the school forever
Thank you and say a big thanks Rohan
To you for the service you have rendered
And for you dreams of our school sports field

Let our school, our society
Our students make your dreams come true
Let's hope we send the message of our school victory soon
Until then, with tears in our eyes, good bye Rohan

May your soul rest in peace and rise in glory.

Mrs. Sivamalar Anandasayanan
Principal .J/Mahajana College

# ஆசிரியர்



முன்வரிசையில் இருப்போர் (இடமிருந்து வலமாக):
திருமதி.உ.புஸ்பராஜா, செல்வி.இ.சம்பந்தர், திரு.தி.ப.கணேசதுரை, திருமதி.ப.லோகநாதன், திருமதி.சௌ.செ
திருமதி.சி.அனந்தசயனன் (அதிபர்), திரு.சு.சயந்தன், திரு.இ.துரைசிங்கம், திரு.ம.மணிசேகரன், திரு.சி.தே

முதலாம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக):
திருமதி.க.தமயந்தி, செல்வி.கி.வரதவாணி, செல்வி.கு.அஜிராணி, திருமதி.ம.முருகமூர்த்தி, திருமதி.உ.குண
திருமதி.லோ.சுபேந்திரன், திருமதி.வ.அமரகுலசிங்கம், திருமதி.பு.அகிலலோகநாயகம், செல்வி.வே.பத்மலே

இரண்டாம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக):
செல்வி.சி.பிரவீனா, செல்வி.எஸ்.கமலினி, செல்வி.இ.செனகரத்தினம், திருமதி.ஆ.விமலதாசன், செல்வி.வ.சு
திருமதி.நி.செந்தூரன், திருமதி.ப.சிவசிவா, திருமதி.சி.மதிசீலன், திருமதி.சி.சயந்தன், திருமதி.சா.பிரதீபன்,

மூன்றாம் வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக):
திரு.கு.ஸ்கந்தரூபன், திரு.இ.கே.வி.ஜோன்சன், திரு.வை.விஜயபாஸ்கர், திரு.இ.ஞானேஸ்வரன், திரு.சி.சிவ
திரு.க.வாணிமுகுந்தன், திரு.சி.சிவாகரன், திரு.பா.பாலமுரளி, திரு.சு.முருகமூர்த்தி, திரு.செ.சத்தியநாராயன
திரு.த.தயானந்தன்

# யர் குழாம்



தி.சௌ.சௌந்தரராஜன், திருமதி.சௌ.விஸ்வலிங்கம், திருமதி.சௌ.பத்மநாதன்,
திரு.சி.தேவகுமாரன், திரு.செ.ஸ்ரீஸ்கந்தராஜா, திரு.த.தவராஜா, திரு.நா.புனிததயாபரன்.

தி.உ.குணநேசன், திருமதி.அ.குகதாசன், திருமதி,ரே.கேசவன், திருமதி.கா.சிவரூபன், திருமதி.சி.பரமசிவம்,
வ.பத்மலோஜினி, திருமதி.சி.கிரிதரன். திருமதி.சு.சுதாகரன், திருமதி.சா.கிருபாகரன், திருமதி.உ.பத்தவக்சலம்

சல்வி.வ.சுபாஜினி, செல்வி.சி.கவிதா, செல்வி.பா.தாட்சாயினி, திருமதி.ஜெ.மயில்வாகனம், செல்வி.ச.ஜெனித்தா,
.பிரதீபன், செல்வி.போ.டெய்சி தேவநாயகி, செல்வி.சு.அம்பாலிகை

திரு.சி.சிவகரன், திரு.வே.ஜீவரூபன், திரு.ந.குமரவேள், திரு.வை.உமாசுதன், திரு.சி.கமலமோகன்,
யநாராயணன், திரு.க.வசந்தரூபன், திரு.இ.தயாகரன், திரு.இ.நந்தகுமார், திரு.செ.செந்தில்வேல்,

# The Staff - 2008

| | | |
|---|---|---|
| | **Principal** | |
| 1. | Mrs.S.Anandasayanan | B.sc.(Cey), PGDE(Merit), SLTS - I |
| | **Deputy Principal** | |
| 2. | Mrs.S.Pathmanathan | B.A.PGDE, M.Phil, SLTS - I |
| | **Co - Deputy Principal** | |
| 3. | Mr.S.Sayanthan | B.A.,PGDE (DIST) SLTS 2 - II |
| | **Vice Principal** | |
| 4. | Mr.E.Thuraisingam | B.Com, PGDE, M.ED, SLTS 2-I |
| | **Assistant Principals** | |
| 5. | Mr.M.Maniseharan | B.Sc, PGDE, SLTS 2-II |
| 6. | Mrs.S.Visvalingam | Sp.Trained (Maths), SLTS -I |
| 7. | Mr.S.Thevakumaran | B.A, PGDE, M.ED SLTS 2 -II |
| | **Prefect of Games** | |
| 8. | Mr.N.Punithathayaparan | B.Sc, PGDE, SLTS 2-II |
| | **Sectional Heads** | |
| 9. | Mrs.U.Pushparajah | B.A (Hons), PGDE, SLTS - I |
| 10. | Mrs.P.Loganathan | S.p. Trained (Science), SLTS -I |
| 11. | Mr.T.Thavarajah | Sp. Trained (Maths), SLTS 2-I |
| 12. | Mrs.T.Sounthararajan | Dip in Music, PGDE., SLTS -I |
| | **Teachers** | |
| 13. | Mrs.B.Ganesathurai | B.A, PGDE., SLTS - I |
| 14. | Ms.R.Sampanthar | B.A, PGDE., SLTS -I |
| 15. | Mrs.Paththavathsalan | Sp.Trained (Agriculture) Dip.in Agr. SLTS -I |
| 16. | Mrs.L.Subendran | Sp (Trained) (Home .Sci), SLTS -I |
| 17. | Mrs.R.Kesavan | B.A, PGDE. (Merit), SLTS - I |
| 18. | Mrs.P.Akilaloganayagam | B.A, PGDE., SLTS 2-I |

| | |
|---|---|
| 19. Mr.E.Gnaneswaran | B.A., PGDE., SLTS 2-I |
| 20. Mrs.A.Kugathasan | Dip in Music, PGDE., SLTS 2-I |
| 21. Ms.P.Daisy Thevanayaki | Sp. Trained (R.C), SLTS 2-II |
| 22. Mrs.S.Paramasivam | Trained (Primary) SLTS 2 -II |
| 23. Mrs.S.Sayanthan | B.A.,PGDE.(Merit), M.ED, SLTS 2-II |
| 24. Ms.V.Pathmalogini | Sp. Trained (Science), SLTS 2 -II |
| 25. Mrs.S.Kiritharan | B.A(Hons), SLTS 2-II |
| 26. Mrs.S.Suthakaran | Trained (Pri), SLTS 2 -II |
| 27. Mrs.A.Vimaladasan | B.Sc(Hons)., PGDE.(Merit), SLTS 2-II |
| 28. Mrs.V.Amaragulasingam | Sp.Trained (Social Studies), B.A, SLTS -2-II |
| 29. Mrs.J.Myilvakanam | Trained (Primary) SLTS 2-II |
| 30. Mr.S.Murugamoorthy | Sp Trained (English) Dip in Eng. SLTS 2 -II |
| 31. Mrs.M.Murugamoorthy | B.A, PGDE (Merit), SLTS 2- II |
| 32. Mr.V.Vijayabaskar | B.Com (Hons), PGDE. (Merit), M.ED, SLTS 2-II |
| 33. Mr.N.Kumaravel | Sp.Trained (Dance) SLTS 2 -II |
| 34. Mr.E.K.V.Johnsan | B.Sc, PGDE, SLTS 2-II |
| 35. Mrs.S.Kirubakaran | B.Sc(Hons)., PGDE,SLTS 2-II |
| 36. Mrs.I.Veerasakthiruban | Dip in Dance, SLTS 2-II |
| 37. Mrs.P.Sivasiva | B.A, PGDE(Dist), SLTS 2-II |
| 38. Ms.R.Senagaratnam | B.A (Hons), PGDE (Merit), SLTS 2-II |
| 39. Mrs.U.Gunanesan | Dip in Dance, PGDE, SLTS 2-II |
| 40. Mr.T.Thayananthan | B.A,(N.Dip in teach) SLTS 2-II |
| 41. Mrs.T.Kanesananthan | Trained (Science) B.A PGDE, SLTS 2 - II |
| 42. Mr.R.Kugananthan | B.Sc PGDE,M.Ed.SLTS 2-II |
| 43. Mr.S.Sriskantharajah | B.A (Hons) ,SLTS 3-I |
| 44. Mr.V.Umasuthan | Sp.Trained (English) SLTS 3-I |
| 45. Mr.R.Thayakaran | B.Com, SLTS 3-I |
| 46. Mrs.V.Sivananthan | B.B.A (Fm.spe), SLTS 3 -I |
| 47. Mrs.K.Sivaruban | Dip in Teaching (Pri), SLTS 3-I |

## பதவியுயர்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்



திரு. க. காராளசிங்கம்
பகுதித்தலைவர்
(அதிபராக...)



திரு. க. சிவகரன்
(ஆசிரிய ஆலோசகராக...)

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்



திருமதி.
சீதாதேவி தேவதாசன்



திருமதி.
யாழினி ஞானபரன்



திருமதி.
கீதாஞ்சலி சாய்குமார்

## இடமாற்றம் பெற்றுச் சென்ற கல்விசாரா ஊழியர்



திரு. இ. தெய்வேந்திரராசா

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2007-2008



## பழைய மாணவர் சங்கம் 2007-2008



## ஒழுங்காற்றுக் குழு



## கல்விசாரா ஊழியர்கள்



கனிஷ்ட பான்ட் வாத்தியக்குழுவினர்



சிரேஷ்ட பான்ட் வாத்தியக்குழுவினர்



| | |
|---|---|
| 48. Ms.S.Ampalikai | Dip in Teaching (Maths), SLTS3-I |
| 49. Mr.S.Sathyanarayanan | B.Sc (Hons), SLTS 3-I |
| 50. Mr.K.Vanimugunthan | B.Sc,SLTS 3-I |
| 51. Ms.G.Ayranee | B.B.A (Hons), SLTS 3-I |
| 52. Mrs.S.Biratheepan | B.A (Hons), SLTS 3-I |
| 53. Ms.T.Varathavani | B.A (Hons), SLTS 3-I |
| 54. Mr.S.Senthilvel | Sp.Trained (Art) SLTS 3-I |
| 55. Mr.S.Sivaakaran | Dip in Teaching (Special Ed), SLTS 3-I |
| 56. Mr.R.Nanthakumaran | Dip in Teaching (Special Ed), SLTS 3-I |
| 57. Mrs.T.Vamadevan | Dip in Teaching (Science), SLTS 3-I |
| 58. Mr.S.Kamalamohan | Dip in Teaching (P.T), SLTS 3-I |
| 59. Mrs. N.Sutharsini | Dip in Teaching (English), SLTS 3 -I |
| 60. Mr.S.Sivakaran | Dip. in Teaching (Science) B.A SLTS 3-I |
| 61. Mr.G.Kantharuban | Dip. in Teaching (Maths) SLTS 3 -I |
| 62. Mr.B.Balamurali | B.A (Hons) SLTS 3-I |
| 63. Ms.V.Subasini | Dip in Teaching (English), SLTS 3-I |

**Temporarily attached Teachers**

| | |
|---|---|
| 1. Mrs.N.Senthuran | B.F.A, SLTS 3-I |
| 2. Mr.V.Geevaruban | B.B.A ,SLTS 3-I |
| 3. Ms.S.Janitha | B.Com(HNDA), SLTS 3-I |
| 4. Mrs.S.Mathiseelan | B.F.A, SLTS 3-I |
| 5. Mrs. S.Ketheswaran | B.Sc SLTS 3 -I |
| 6. Mr.K.Vasantharuban | B.A (Hons) SLTS 3-I |

**Trainee Teachers**

| | |
|---|---|
| 1. Ms.S.Kavitha | Music |
| 2. Ms.B.Thadsayini | Dance |

**Teachers Sponsored by OSA**

| | |
|---|---|
| 1. Mr.K.Myilvakanam | Sports Teacher |
| 2. Mr.M.Ragunanthan | IDCS, Diploma in Computer Programming and Data processing |
| 3. Ms.S.Piraveena | Diploma in MSO, DTP |
| 4. Ms.R.Irathika | B.A (English) |
| 5. Ms.K.Manogari | N.D.E (Diploma) |

**Non - Academic Staff**

| | |
|---|---|
| 1. Mr. T.Kanakeswaran | Office Laborer Grade I |
| 2. Mr. A.Navaratnarajah | Office Laborer Grade I |
| 3. Mr. S.Ashokumaran | School Laborer Grade III |
| 4. Mr. S.Suresh | Lab Asst..... Grade II |
| 5. Mr. S.Sinnarajah | School Laborer Grade I |
| 6. Mr. K.Sivanantharajah | School Watcher Grade III |
| 7. Mr. K.Akilan | School Laborer |

**Sponsored by OSA**

| | |
|---|---|
| 1. Ms. P.Bageerathy | Management Assistant |
| 2. Ms. S.Gowthamy | Clerk |

**Sponsored by SDS**

1. Mr. N.Thulasithasan
2. Ms. S. Amutha

## மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## செயற்பாட்டறிக்கை - 2007

பொதுக்கூட்டம் :- 01
விசேட பொதுக்கூட்டம் :- 01
நிர்வாக சபைக் கூட்டம் :- 07
சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் :- 310

இவ்வாண்டிற்கான புதிய நிர்வாக சபை 01.04.2007 அன்று தெரிவு செய்யப்பட்டு, நல்ல பல பணிகளைச் செய்து வருகின்றது. அவையாவன:- சென்ற ஆண்டு (2006) செயற்படுத்திய திட்டங்கள் தேநீர்ச்சாலை, சைக்கிள் கொட்டகை, 4சுருக்குக்கேற், விளம்பரப்பலகை, கருத்துப்பெட்டி, 14 அதிபர்களின் படங்கள் ஆகியன திறந்து வைத்து, சென்ற ஆண்டு செயற்றிட்ட நிறைவு விழாவினைக் கொண்டாடினோம். உலக உணவு நிறுவனத்தின் (WFP) மாணவர்களுக்கு உணவு வழங்குந் திட்டத்தினைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களின் ஒத்தழைப்புடன் செயற்படுத்தி வருகிறோம்.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனம் 250,000 ரூபா நிதி உதவிகளை எமது கல்லூரிக்கு வழங்கியிருந்தது. இந்நிதியில் Band வாத்தியக்கருவிகள் வாங்கியும், வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசியும் ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கு படங்களை வரைந்தும் செயற்படுத்தியுள்ளோம். பிரதி அதிபர்.திரு.செ.இராஜகுலேந்திரன், பகுதித் தலைவர் திருமதி நி.இராசதுரை ஆகியோருக்குச் சேவை நலன் பாராட்டு விழாவினைப் பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கழகம், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் இணைந்து சிறப்பாக நடாத்தியுள்ளோம். சென்ற வருடம் வெளியிட இருந்து மகாஜனன் சில தடங்கல் காரணமாக வெளியிடமுடியவில்லை. இவ்வாண்டு ரூபா ஒரு லட்சம் முற்பணம், வழங்கி உதவி புரிந்துள்ளோம். கல்லூரியில் தேநீர்ச்சாலை, புத்தகசாலையினை மாணவர்கள் நன்மை கருதி நடத்தி வருகிறோம். பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து கல்லூரி வளாகத்தினுள் சிரமதானம் செய்துள்ளோம்.

நன்றி

செயலாளர், க.ரவீந்திரர்

## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை

## பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தத் திரட்டறிக்கை- 2007/2008

15/04/2007 ஆந்திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் 2007/2008ற்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பெற்றது. அன்று முதல் கல்லூரியின் நிகழ்வுகள், அபிவிருத்திகள், தேவைகள் அனைத்தையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் கழகம், மாணவர் மன்றங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

எமது பழைய மாணவராகிய திரு.க.செல்வகுணச்சந்திரன் அவர்களின் உதவியுடன் திருக்கேதீஸ்வரத் திருவிழா, மாவிட்டபுரம் திருவிழா என்பன வழமை போல சிறப்பாக நடைபெற எமது பங்களிப்பை வழங்கியுள்ளோம்.

தரம் 1 மாணவர்களின் பெற்றோரின் உதவியுடன் முதன்மை நிலை ஒன்றுக்கான வகுப்பறைகள், மேசைகள், கதிரைகள், என்பன வர்ணம் பூசப்பட்டு ஆரம்பப் பிரிவுகளின் கவின் நிலையைச் சிறந்த முறையில்

ஒழுங்கமைத்துக் கொடுத்துள்ளோம். விளையாட்டுப்போட்டிகள், பெரு விளையாட்டுக்கள் என்பன U.K பழைய மாணவர் சங்கம் பழைய மாணவர் களாகிய திரு.க.செல்வகுணச்சந்திரன், திரு.ச.ஆறுமுகநாதன், திரு.ந.பகீரதன், துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியோரின் உதவியுடன் சிறப்புற நடந்தேற எம்மாலான பங்களிப்பைச் செய்துள்ளோம்.

பாடசாலையின் முகப்புத் தோற்றத்தை அழகுபடுத்தும் நோக்குடன் எமது பழைய மாணவரான திரு.மா.இராமதாசன் அவர்களின் உதவியுடன் முன்பக்கம் பூந்தோட்ட அமைப்பு வேலைகள் சிறப்புற நடந்தேற உதவியுள்ளோம்.

பாடசாலையின் சுற்றாடல் பாதுகாப்பு அபிவிருத்திச் செயற்றிட்ட நடவடிக்கையின் போது எமது பழைய மாணவரான திரு.இராதாகிருஷ்ணன் (OSA பிரான்ஸ்) அவர்களின் உதவியுடன் பாடசாலைச் சுற்றாடலுக்கான மரம் நடுகைச் செயற்பாட்டுக்கு எமது பங்களிப்பைச் செலுத்தியுள்ளோம்.

பாடசாலையின் தொடர்பாடல் தேவைகளுக்கு மேலும் வசதி செய்யும் முகமாக எமது பழைய மாணவரான திரு.S.ஜனார்த்தனன் ஊடாக 84 O/L Batch மாணவர்களின் உதவியைப் பெற்று CDMA தொலைபேசி இணைப்பைஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

எமது பாடசாலை சதுரங்கக் கழகம் நடாத்தும் நூற்றாண்டையொட்டிய சதுரங்கப்போட்டிக்கு மக்கள் வங்கி சுன்னாகம் கிளையினரின் நிதி உதவியைப் பெற்று, போட்டி சிறப்பாக நடந்தேற உதவியுள்ளோம்.

எமது பாடசாலையின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தின் அரங்கத்திற்கான திரைச்சீலை பழைய மாணவரான திரு.மா.சந்திரகாந்தன் அவர்களின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்கு முன்னாள் அதிபராகிய திரு.பொ.கனகசபாபதி, எமது பழைய மாணவராகிய திரு.நந்தீஸ்வரன் மற்றும் கனடா பழைய மாணவர் சங்கம் ஆகியோரின் நிதி உதவிகளைப் பெற்று விழா சிறப்புற எம்மாலான பங்களிப்புக்களைச் செலுத்தியுள்ளோம்.

வருடம் தோறும் நடைபெறும் துடுப்பாட்டப் போருக்கு எம்மாலான பங்களிப்புகளைச் செய்துள்ளதுடன் கல்லூரி அபிவிருத்தி நிதியத்திடம் இருந்து போட்டி வீரர்களுக்கான சீருடைகளைப் பெற்றுவழங்கியுள்ளோம்.

பாடசாலை விளையாட்டுத் துறையினருக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை எமது பழைய மாணவரான திரு.சி.சிவகரன் அவர்களின் அன்பளிப்பாகப் பெற்று வழங்கியுள்ளோம்.

பாடசாலை பான்ட் வாத்திய அணிக்காக Save The Children - Sri Lanka வழங்கிய நிதி உதவியில் பான்ட் வாத்தியங்களைக் கொழும்பில்

## சாரணர் குழு



## குருளைச் சாரணர்



சிறு தோழியர்



பெண்கள் சாரணியம்



இன்ரறட் கழக நிர்வாக உறுப்பினர் - 2008



கொள்வனவு செய்து விமானம் மூலம் எடுத்து வந்து வழங்கியுள்ளோம்.

பதவி உயர்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முகமாக பத்திரிகைகள் வாயிலாக பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துச் செய்திகள் தெரிவிக்கப்பட்டன.

ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக பாடசாலைச் சமூகத்தினருடன் சேர்ந்து பாராட்டு விழாவை நடத்தினோம்.

பாடசாலையின் O/L மாணவர்கள் A/L மாணவர்கள் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் சிறப்புத்தேர்ச்சிகளையும் சாதனைகளையும் பத்திரிகைகள் மூலமாக வாழ்த்தியுள்ளோம்.

எமது பழைய மாணவரான அமரர் றொகான் இராஜசிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வை கல்லூரியில் பாடசாலைச் சமூகத்தினருடன் சேர்ந்து பத்திரிகைகள் வாயிலாகவும் அஞ்சலி செலுத்தியுள்ளோம்.

எமது பழையமாணவரான டாக்டர் கேதீஸ்வரன் (சிட்னி பழைய மாணவர் சங்கம்) அவர்களின் நிதி உதவியைப் பெற்று பாடசாலையின் சாதனை ஏடான "சுவடுகள்" சஞ்சிகை தொடர்ந்து வெளிவர எம்மாலான பங்களிப்புக்களை வழங்கி வருகிறோம்.

மேற்படி செயற்பாடுகளைச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்வதற்கு பழைய மாணவர் சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர் கழகம், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்பு பெரிதும் உதவியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.. அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றோம். மேலும் லண்டன், பாரிஸ், சிட்னி, கொழும்பு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்ற எமது பழைய மாணவர் சங்க கிளைகளின் உதவிகள் மற்றும் எமது பழைய மாணவர்களின் தனிப்பட்ட நிதி உதவிகள் கல்லூரி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பெரிதும் துணை புரிவது தாய்ச்சங்கத்தினரான எமக்குப் பெருமை தருகின்றது. அவர்களின் கடந்த கால உதவிகளுக்கும் வருங்கால பங்களிப்புக்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

திருமதி.சி.அனந்தசயனன்
தலைவர்

திரு.இ.சிறீதரன்,திரு.சி.தேவகுமாரன்:-
இணைச்செயலாளர்கள்



# மன்றங்கள் ~ கழகங்கள்
# 2007 ~ 2008

### இந்து மன்றம் -2007

பொறுப்பாசிரியர் :- திருமதி.உ.புஷ்பராஜா
திருமதி.சு.சுதாகரன்
தலைவர் :- செ.சாரங்கன்
செயலாளர் :- ந.விஜயரூபன்
உபதலைவர் :- இ.இந்துஜா
உபசெயலாளர் :- சி. யதூசன்
பொருளாளர் :- S. கவிதா
பத்திராதிபர் :- யே.ா.சுகந்தன்
நிர்வாக உறுப்பினர்கள்:- கு. மாதவன்
கா.தாட்சாயினி
த. கமலினி

### இந்து மன்றம் - 2008

பொறுப்பாசிரியர் :- திரு.மா.பாலமுரளி
திரு.சி.சிவாகரன்
திருமதி.கா.சிவரூபன்
(ஆரம்பப்பிரிவு)
தலைவர் :- ப.பிரியதர்சினி
செயலாளர் :- ப.துஷ்யந்தன்
உபதலைவர் :- ஞா.டயானதர்சினி
உபசெயலாளர் :- இ.இந்துஜா
பொருளாளர் :- ந.மதுரா
பத்திராதிபர் :- பா.யுகந்தினி
நிர்வாக உறுப்பினர்கள்:- நி.பாபுதரன்
சி.ஜதீசன்
ம.கோகுலன்
செ.தர்மிலன்
க.ராதாகிருஷ்ணன்
ஈ. றோகீசன்

### விஞ்ஞான மன்றம் - 2007

பொறுப்பாசிரியர் :- திரு.க.வாணிமுகுந்தன்
தலைவர் :- J.கௌசிகன்
செயலாளர் :- B.பபிதா
உபதலைவர் :- இ.கலைவாணி
உப செயலாளர் :- V.மதிவதனி
பொருளாளர் :- J.கஜன்
பத்திராதிபர் :- N.நிதர்சன்
நிர்வாக உறுப்பினர்கள்:- ஞா.பிரதீப்
அ.அமிர்தாயன்

### விஞ்ஞான மன்றம் - 2008

பொறுப்பாசிரியர் :- திரு.க.வாணிமுகுந்தன்
தலைவர் :- ஸ்ரீ.யதுகுலன்
செயலாளர் :- க.கிருஷ்ணா
உபதலைவர் :- கு.யுவராஜ்
உபசெயலாளர் :- க.ஜனார்த்தனன்
பொருளாளர் :- ந.கிரிஜாந்
பத்திராதிபர் :- இ.முரளிதரன்
நிர்வாக உறுப்பினர்கள் :- தி.பாலகுமார்
ம.கவியரசி

### தமிழ் மன்றம் - 2007

பொறுப்பாசிரியர் :-திருமதி.ம.முருகமூர்த்தி
தலைவர் :- இ.கஜிதரன்
செயலாளர் :- செ.குகப்பரியா
உபதலைவர் :- க.ஜானி
உபசெயலாளளர் :- நா.சுவேந்திரன்
பொருளாளர் :- க.விதுஷா
பத்திராதிபர் :- பா.அபிஷாரிகா

நிர்வாக உறுப்பினர்கள்:- ம.கோகிலதாஸ்
ப.கௌதமி
தி.லசிகா
தி.ஜாமினி

**தமிழ் மன்றம் - 2008**

பொறுப்பாசிரியர் :-திருமதி.ம.முருகமூர்த்தி
தலைவர் :- நா.விஜயரூபன்
செயலாளர் :- தர்ஜா.பா
உபதலைவர் :- ம.கஜதீபன்
உபசெயலாளர் :- இ.துஷாந்தன்
பொருளாளர் :- க.தயாளினி
பத்திராதிபர் :- வி.கிரிஜா
நிர்வாக உறுப்பினர்கள்:-ஜெ.பிரசன்னா
ந.விந்துஜா
கு.யகீந்தன்
செ.சயந்தன்

**ஆங்கில மன்றம் - 2007**

பொறுப்பாசிரியர் :- திரு.வை.விஜயபாஸ்கர்
தலைவர் :- S.பிரியதர்சினி
செயலாளர் :- இ.கலைவாணி
உபதலைவர் :- B.பபிதா
உபசெயலாளர் :- பா.நீதுஜன்
பொருளாளர் :- வ.சுரேகா
நிர்வாக உறுப்பினர்கள் :- ந.விந்துஜா
K.சிவதையல்நாயகி
R.சாளினி
N.சுகாஜினி

**ஆங்கில மன்றம் - 2008**

பொறுப்பாசிரியர் :- வ.உமாசுதன்
தலைவர் :- சி.பிரணவன்
செயலாளர் :- ந.விந்துஜா
உபதலைவர் :- இ.தனுசன்
உபசெயலாளர் :- சி. லக்சிகா
பொருளாளர் :- இ.முரளிதரன்
பத்திராதிபர் :- கிரிஜா.V
நிர்வாக உறுப்பினர்கள் :- S.யதுகுலன்
M.கஜதீபன்
S.சஞ்சீவ்
N.கிரிசாந்
B.நீதுஜன்

**சைவ வளர்ச்சிக்கழகம் - 2007**

பொறுப்பாசிரியர் :- திருமதி.சீ.தேவதாசன்
திருமதி.சு.சுதாகரன்
தலைவர் :- த.மதுரா
செயலாளலர் :- ம.கோகிலதாஸ்
பொருளாளர் :- செ.பேபிகா

**சைவவளர்ச்சிக்கழகம் - 2008**

பொறுப்பாசிரியர் :- திருமதி.உ.புஷ்பராஜா
தலைவர் :- ந.மதுரா
செயலாளர் :- சொ.சாம்பவி
உபதலைவர் :- ப.துஷாந்தன்
உபசெயலாளர் :- கா. கஜன்
பொருளாளர் :-க.இராதாகிருஷ்ணன்

**உயர் தர மாணவர் மன்றம் - 2007**

பொறுப்பாசிரியர் :- இ.தயாகரன்
தலைவர் :- ந.சுகந்தன்
செயலாளர் :- வ.மேரிடினேகா
உபதலைவர் :- செ.சாரங்கன்
உபசெயலாளர் :- தே.குணாளன்

பொருளாளர் :- ந.சுகாஜினி

பத்திராதிபர் :- T.துசிகரன்

நிர்வாக உறுப்பினர்கள்:-S.மருதாசலன்

இ. கலைவாணி

இ. பிரியதர்சினி

க. ஜானி

கி. றஜீவன்

**உயர்தர மாணவர் மன்றம் -2008**

பொறுப்பாசிரியர் :- திரு.இ.தயாகரன்

தலைவர் :- சி.கஜேந்திரன்

செயலாளர் :- அ.அமிர்தாயன்

உபதலைவர் :- க.ரதினி

உபசெயலாளர் :- இ முரளிதரன்

பொருளாளர் :- க.செந்தூரன்

பத்திராதிபர் :- மு.மோகனா

நிர்வாக உறுப்பினர்கள் :- யோகார்த்திகா

கா.கஜன்

யோ.ஜகிந்தன்

கு.யுவராஜ்

ப.துசாந்தன்

இ.கஜந்தன்

**சதுரங்கக்கழகம் - 2007**

பொறுப்பாசிரியர் :- திரு.ம.மணிசேகரன்

தலைவர் :- பா.நீதுஜன்

செயலாளர் :- சி.பிரணவன்

உபசெயலாளர் :- மு.தர்ஷனா

பொருளாளர் :- சி.லக்சிகா

பத்திராதிபர் :- பு.திருமாறன்

**வணிக மன்றம் - 2008**

பொறுப்பாசிரியர் :- திரு.இ.தயாகரன்

தலைவர் :- இ.மலரவன்

செயலாளர் :- ச.சுலோஜினி

உபதலைவர் :- க.சிவதையல்நாயகி

பொருளாளர் :- ந.திலீபன்

நிர்வாக உறுப்பினர்கள் :-இ.பிரியதர்சினி

வ.மேரிடினேக்கா

**வணிக மன்றம் - 2008**

பெறுப்பாசிரியர் :- திரு.இ.துரைசிங்கம்

தலைவர் :- ச.சஞ்சீவ்

செயலாளர் :- சி.ஜயப்பிரபாகரன்

உபதலைவர் :- ச.துஜிதா

உபசெயலாளர் :- துசானி

பொருளாளர் :- இ.செந்தூரன்

நிர்வாக உறுப்பினர்கள் :- S.கஜனி

S.தக்சாயினி

**சுகாதார மன்றம் - 2008**

பொறுப்பாசிரியர் :-திருமதி.லோ.சுபேந்திரன்

தலைவர் :- பி.புவிதரன்

செயலாளர் :- சி.ரோபிதா

உபதலைவர் :- பா.பாலஸ்காந்தன்

உபசெயலாளர் :- வெ.வைஷ்ணவி

பொருளாளர் :- ச.நிரோஜன்

நிர்வாக உறுப்பினர்கள் :- தரம் 10

தரம் 11

**ஆசிரியர் கழக நிர்வாக உறுப்பினர்கள்**

**2008**

தலைவர் :- திரு..செ.செந்தில்வேல்

உபதலைவர் :- செல்வி.இ.சம்பந்தர்

செயலாளர் :- திரு.இ.தயாகரன்

பொருளாளர் :- செல்வி.வே.பத்மலோஜினி

பத்திராதிபர் :- திரு.செ.சத்தியநாராயணன்

நிர்வாகஉறுப்பினர்கள்:-திருமதி.ப.சிவசிவா

திரு.செ.ஸ்ரீஸ்கந்தராஜா

திருமதி.ஜெ.மயில்வாகனம்

திருமதி.க.தமயந்தி

# மெய்வல்லுநர் போட்டியில் பதக்கங்கள் பெற்ற வீர வீராங்கனைகள் - 2008

## தேசியமட்டத்தில் வெற்றியீட்டிய வீரன்



### மகாராஜா பார்த்தீபன்

**தேசிய மட்டம்**
21வயதுப் பிரிவு
தட்டெறிதல் வெள்ளிப்பதக்கம்

**மாகாண மட்டம்**
தட்டெறிதல் - வெள்ளிப் பதக்கம்
ஈட்டியெறிதல் - வெள்ளிப் பதக்கம்

## செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் பதக்கங்கள் பெற்ற வீராங்கனை கீரத்திகா செல்வராசா



**தேசிய மட்டம்**
19வயதுப்பிரிவு
தட்டெறிதல் - வெள்ளிப்பதக்கம்
குண்டுபோடுதல் - வெண்கலப்பதக்கம்

**மாகாண மட்டம்**
தட்டெறிதல் - தங்கப்பதக்கம்
குண்போடுதல் - தங்கப்பதக்கம்
உயரம் பாய்தல் - வெள்ளிப்பதக்கம்
வெற்றி வீராங்கனை - மாகாணம்

# மாகாண மட்டத்தில் பதக்கங்கள் பெற்றோர்



**செல்வன் சிவபாதம் டிலக்ஷன்**
11வயதுப் பிரிவு
உயரம் பாய்தல் - தங்கப்பதக்கம்



**செல்வன் குகதாசன் மோசிகீரன்**
15 வயதுப் பிரிவு
தட்டெறிதல் - தங்கப்பதக்கம்
ஈட்டியெறிதல் - தங்கப்பதக்கம்



**செல்வன் ஜெயபாலசிங்கம் ஜெனந்தன்**
15 வயதுப் பிரிவு
உயரம் பாய்தல் - தங்கப்பதக்கம்



**செல்வன் சத்திய நாதன் லகீசன்**
17வயதுப் பிரிவு
முப்பாய்ச்சல் - தங்கப்பதக்கம்



**செல்வன் முருகதாஸ் கிருஷ்ணா**
17வயதுப் பிரிவு
உயரம் பாய்தல் - தங்கப்பதக்கம்



**செல்வி கஜானி காசிலிங்கம்**
17வயதுப் பிரிவு
குண்டுபோடுதல் - தங்கப்பதக்கம்



**செல்வன் சக்திவேல் ஜபாகர்**
19 வயதுப் பிரிவு
100m தடைதாண்டல் - தங்கப்பதக்கம்
400m தடைதாண்டல் - வெண்கலப்பதக்கம்



**செல்வன் முருகையா டயர்தன்**
19 வயதுப் பிரிவு
நீளம் பாய்தல் - தங்கப்பதக்கம்



**செல்வன் தேவராசா மோகனாத்**
19 வயதுப் பிரிவு
கோலூன்றிப் பாய்தல் - தங்கப்பதக்கம்



**செல்வி சிந்துஜா மனோகரன்**
13வயதுப் பிரிவு
உயரம் பாய்தல் - வெள்ளிப்பதக்கம்



**செல்வன் சிவமகாராசா சாந்தகுமார்**
19வயதுப் பிரிவு
கோலூன்றிப் பாய்தல் - வெள்ளிப்பதக்கம்



[illegible]வன் மகாராஜா கஜதீபன்
19வயதுப் பிரிவு
[illegible] - வெள்ளிப்பதக்கம்



செல்வன் மகேஸ்வரன் கோகிலதாஸ்
21 வயதுப் பிரிவு
முப்பாய்ச்சல் - வெள்ளிப்பதக்கம்




செல்வி கௌதமி பசுபதி
21 வயதுப் பிரிவு
ஈட்டியெறிதல் - வெள்ளிப்பதக்கம்



செல்வி துசிக்கா சந்திசேகரம்
21வயதுப் பிரிவு
தட்டெறிதல் வெள்ளிப்பதக்கம்



செல்வன் கணேசன் வினேஸ்குமார்
21 வயதுப் பிரிவு
உயரம் பாய்தல் - வெள்ளிப்பதக்கம்



செல்வன் கிருஷ்ணவசீகரன் திலக்சன்
15வயதுப் பிரிவு
நீளம் பாய்தல் - வெண்கலப் பதக்கம்

# கல்லூரியின் சாதனையாளர்கள் 2007
# (தமிழ்த்தினப்போட்டி - தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியோர்)



செல்வன். பு. திருமாறன்
(பேச்சு பிரிவு - 4)
முதலாம் இடம்



செல்வி. ந. அபிராப
(தனிநடனம் பிரிவு - 1)
முதலாம் இடம்

## தமிழறிவுப்போட்டி (திறந்த போட்டி) முதலாம் இடம்



செல்வி. க. ஜானி



செல்வி. க. சுகன்யா



செல்வி. க. விதுஷா



செல்வி. த. மதுரா



செல்வி. செ. குகப்பிரியா

# தமிழ்த்தினப்போட்டி - இசை நாடகம்
# மகாண மட்டம் முதலாம் இடம்



01. ர.சஜீதன் (சத்தியவான்), 02. த.சிவரூபி (சாவித்திரி), 03. ந.விஜயரூபன் (இயமன்), 04.ந.தர்சினி(நாரதர்), 05. ப.பிரியதர்சினி (தூமச்சேனன் மகாராஜன்), 06. சி.ரோபிதா (தூமச்சேனன் மகாராணி), 07. வெ.வைஸ்ணவி (சுமாலி), 08. பா.தர்ஜா (மல்லிகா), 09. ம.கவியரசி (சித்திரகுப்தன்), 10. த.சுகுணராஜா (இயமதூதன்), 11. கு.சசிதரன் (இயமதூதன்), 12. செ.லலிதாதாஸ் (பாவி)

நெறியாள்கை, பொறுப்பாசிரியர்: திரு. செ. செந்தில்வேல்

## English Recitation



Miss. Dharanya Maniseharan
Provincial Level - 1st Place

## கணித அறிவுப்போட்டி



செல்வி. விஷ்ணுகா கிருபாகரன்
மாகாணமட்டம் - இரண்டாம் இடம்

## விஞ்ஞான அறிவுப்போட்டி

செல்வன். தவேந்திரநாதன் பிரதீப்
மாகாணமட்டம் - ஆறுதல் பரிசு

# மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியோர்



Miss. Mathura
Tharmaratnam
Copy Writing - 1st Place



செல்வி. ஆ. அனுசுயா
பேச்சு பிரிவு 5
இரண்டாம் இடம்



செல்வி. சி. ஹஜானா
பேச்சு பிரிவு 3
இரண்டாம் இடம்

# வலய மட்டத்தில் வெற்றியீட்டி
# மாவட்ட மட்டத்திற்குத் தகுதி பெற்றோர்



செல்வன். பு.திருமாறன்
விவாதம் - 1ம் இடம்



செல்வி. ஆ. அனுசுயா
விவாதம் - 1ம் இடம்



செல்வி.மு.தர்ஷனா
விவாதம் - 1ம் இடம்



செல்வி.யோ.கார்த்திகா
இலக்கணம் பிரிவு 4
மாவட்டம் இரண்டாமிடம்



செல்வி. பா. பிரியதர்சினி
பாவோதல் - பிரிவு 5
முதலாம் இடம்



செல்வி.பா.அபிஷாரிகா
தனி நடனம் - பிரிவு 5
மாவட்டம் இரண்டாமிடம்

## 17 வயதின் கீழ் கரப்பந்தாட்டம் பெண்கள்
## (மாகாண மட்டம் 1ம் இடம் - 2008)



## 15 வயதின் கீழ் வலைப்பந்தாட்டம் பெண்கள்
## (வலய மட்டம் 3ம் இடம் - 2008)



## 19 வயதின் கீழ் உதைபந்தாட்டம் ஆண்கள்
## (மாவட்ட மட்டம் 1ம் இடம் - 2007)



## Action Song
## (Zonal Level 3rd Place)



சதுரங்கம் 15 வயதின் கீழ் ஆண்கள்

(வலயம் 1ம் இடம் - 2008)



சதுரங்கம் 15 வயதின் கீழ் பெண்கள்

(வலயம் 1ம் இடம் - 2008)



## சதுரங்கம் 19 வயதின் கீழ் ஆண்கள்
## (வலயம் 1ம் இடம் - 2008)



## சதுரங்கம் 19 வயதின் கீழ் பெண்கள்
## (வலயம் 1ம் இடம் - 2008)



## சாதனையாளர்களுடன் ஒரு பகிர்வு

## கடந்து விட்ட க.பொ.த சாதாரண தரத்தின் நினைவுகளுடன் ஒரு நிமிடம்.........

"துள்ளித்திரிந்ததொரு காலம் பள்ளி சென்றதொரு காலம்" எனப் பள்ளிக்காலப் பசுமை நினைவுகளை மீட்டிருக்கிறார்கள் பாவலர்கள். ஆனால் நானோ படித்துக் கொண்டிருக்கையிலே சாதனையாய் முடித்துவிட்ட (சா/த) வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறேன். ஆஹா! எட்டுத்திக்கிருந்தும் சிறகடித்த சிட்டுக்களாய் வெண்ணிற ஆடை பூண்டு கல்விதனைக் கற்றிட புகழிலே சுடர் விரிக்கும் மகாஜனமாதாவிடம் தடம் பதித்திட நினைக்கையில் தடுத்து நிறுத்தியது யாழ் மாவட்டத்தில் சூழ்ந்திருந்த யுத்த மேகம். சொந்த ஊரிலே, கல்லூரிக்கு மிக அண்மையில் இருந்தும், இடப்பெயர்வினால், சொத்துக் களையிழந்து; சொந்தங்களைத் தொலைத்து, உடன் பிறப்புக்களைத் தொலைத்து, உடல் உறுப்புக்களைத் தொலைத்து நின்ற அந்தக்கணம், பல சோதனைச் சாவடிகளைக் கடந்து மகாஜன மாதாவிடம் வர வேண்டிய இக்கட்டான நிலை.

என்ன செய்வது? வாழ்க்கையே "இருள்மயம்". யுத்த வடுக்களால் சூழப்பட்ட அதிஷ்டமற்ற பூமி வாழ்க்கையை "கல்வி" என்னும் மூன்றெழுத்தால் மட்டுமே எதிர் நீச்சல் போடக்கூடிய நிரப்பந்தம். என் கனவும் மருத்துவ பொறியியல் பீடங்களிற்காகக் கதவைத் திறக்க வைத்துக் கொண்டிருக்கும் மகாஜன மைந்தர்களில் ஒருத்தியாகிவிடுவதே.

அந்த வேளையில் எனக்குத் தோள்கொடுத்து என் கனவை நிறைவு செய்து வைத்த மாமனிதர் மறைந்த எமது முன்னாள் அதிபர் திரு.க.நாகராஜா அவர்கள். என் மனக்கண்ணில் இப் போதும் நிழலாடும் அவ்வுருவம், புன்னகை தவழும் முகம், கள்ளமற்ற உள்ளம், கண்டோரைத் தன்பக்கம் இழுத்திடும் காந்தசக்தி கொண்டிருந்தவரை இக்கணத்தில் தலைசாய்த்துக், கரம் குவித்து, வணங்கி, வானுறையும் தெய்வமாகிவிட்டவருக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

ஞாபகம் வருதே, பொக்கிசமாக ஏதோ ஒன்றைத் தொலைத்தது போல, ஏதோ மீண்டும் பிறந்தது போல கண்களின் ஓரம் கல்லூரி நினைவுகள் ஞாபகம் வருதே........................"இரண்டாம் ஆண்டினிலே அப்பாவின் கைபிடித்து மருதனார்மடத்திலே மண் குடிலில் கால் பதித்த வேளையில் இரண்டாம் ஆண்டில் இரட்டை றூள் கொப்பியிலே என் கரம் தனைப்பிடித்துக்கல்விதனை ஊட்டி விட்டவர் "சிவனேஸ்வரி" ஆசிரியை. மாணவ முத்துக்களின்

வாழ்வை வளமாக்கி, வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்கும் ஆசிரியத் தெய்வங்களிற்காக எடுக்கப்படும் ஆசிரியர் தின விழா முதல் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பேசிப்பங்கு பற்றுவதற்கு மட்டுமன்றித் தொடர்ந்தும் பேச்சு, கட்டுரைப்போட்டிகளிலே பங்கு பற்றித் தங்கப்பதக்கம், பரிசுகள் பல பெறப்பலமான அத்திவாரமிட்டவர்கள் எம் ஆரம்ப கால ஆசிரியத்தெய்வங்கள். நாம் தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தியடைய அடித்தளமாக இருந்தவர்கள் அப்பாத்துரை ஆசிரியர் தலைமையிலான ஆசிரியத் தெய்வங்களே!

"மாற்றான் பிள்ளையைத் தலைதடவி வளர்த்தால்தன் பிள்ளை தானே வளரும்".

என்ற வார்த்தையை நன்குணர்ந்தவர்களாய் மகாஜன மைந்தர்கள் யாவரும் தம் பிள்ளைகள் எனச் சொந்தப் பிள்ளைகளைப் போல எம்மை நினைத்து நாம் மனம் தளரும் வேளையில் தட்டிக்கொடுத்துப்பாட விளக்கங்களை அக்குவேறு ஆணி வேறாகப்பிரித்து வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல விளங்கப்படுத்தி விடுவது மட்டுமன்றி சிறு பிள்ளைகளாகிய நாம் அறியாத, தெரியாத பருவத்தில் செய்யும் சிறுசிறு குழப்படியான தவறுகளையும் கூடத் தெளிவாகச் சுட்டிக்காட்டித் தண்டிக்கத் தயங்குவதில்லை. எம் பெற்றோர்களிடம் அதை விளக்கி மீண்டும் அத்தகைய தவறுகளைப் புரிந்திடாது தடுத்து விடுபவர்கள் எம்மினிய ஆசிரியர்கள்/

கடந்த ஆண்டில் ஓய்வு பெற்றுச் சென்ற திரு.ந.காளிதாசன் ஆசிரியர் கூட ஓய்வினை ஒரு பொருட்டாகக் கூட மதியாது மகாஜன மைந்தர்கள் தனது மைந்தர்கள் என நினைத்து இன்றும் அவர்களது பாட சம்பந்தமான சந்தேகங்களைக்களைந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான தன்னாலான பங்களிப்பை வழங்கி வருவது நாமனைவரும் அறிந்ததே.

"எங்கேயோ பிறந்தோம், எங்கேயோ வளர்ந்தோம், எங்கிருந்தோ வந்த மணிப்புறா இட்ட எச்சத்தின் விளைவால் சேர்ந்திட்ட நண்பர் குழாம் எம்மினிய நண்பர் குழாம்.

**"உடுக்கை யிழந்தவன் கைபோல் ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு"**

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க காலம் அறிந்து உதவி புரிந்திடும், காட்டிக்கொடுத்திடாத வெண்மனம் கொண்ட நண்பர் குழாம் எம்மினிய நண்பர் குழாம். இடைவேளை தவிர்ந்த ஏனைய நேரங்கிளில் தண்ணீர் குடிக்கச் செல்லக்கூடாது என்பது உத்தரவு. எனினும் தண்ணீர்த்தாகத்தால் இடைவேளை தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் கிணற்றடிக்குச் சென்று

"குழாயைத் திருப்பினோம் தண்ணீர குடிக்க

குழாயில் தண்ணீர் வந்தது
குடித்த குறையில் அதுவும் நின்றது.

திரும்பிப்பார்க்கையில் பிரம்புடன் இராஜகுலேந்திரன் ஆசிரியர்" இருப்பினும் எம் நண்பர் குழாத்திடம் பேதமில்லை, பிரிவில்லை, ஒழிவு மறைவில்லை, யாரையும் சேரிடம் மாட்டிவிடாத ஓர் குழாம் அது தான் நம்மினிய வகுப்பு. இப்போதும் நம்மினிய நண்பர் குழாம் மகாஜன மாதாவிற்குள் இருந்தாலும் நாமே நமக்குள்ளே Bio,Maths,Arts,Commerce என வரம்பிட்டு உள்ளே இருக்கின்றோம். புதுப்புது முகங்கள், புதுப்புது வகுப்பு. இருப்பினும் 2007ம்(சாதாரணதர வகுப்பு) சகோதர வாழ்வு கிடைத்திடுமோ?............

2007ம் ஆண்டு (சாதாதாரண) வகுப்பிற்கு வகுப்பாசிரியையாக வந்து விட்டதற்காகவே வருந்தப்பட்ட வகுப்பாசிரியை திருமதி.ரேணுகா கேசவன் அவர்கள் அன்னையே! உமக்கு நாம் மாணவர்களாக வந்து விட்டோம் என்பதற்காகவா இத்தனை தியாகங்கள் புரிந்தீர்? அத்தனையும் நினைக்கும் போது என்மனம் ஏங்குகிறது! எம்மினிய ஆசிரியர்கள் எம்மை உயர்த்துவதற்காக ஏணியாக மட்டுமா இருந்தார்கள்? இல்லை மெழுகாகவும் அல்லவா உருகிவிட்டார்கள். எமக்கு ஆசிரியர்களாக வந்து விட்டதற்ககாகக் கற்பித்த ஆசிரியர்கள் சுமந்த வேதனை எத்தனை? அதிபரிடம் வேண்டிய பேச்சுக்கள் எத்தனை? இதற்கென்ன கைம்மாறுசெய்வோம்,? மறு ஜென்மம் என ஒன்று இருந்தால் மீண்டும் நாம் அனைவரும் ஒரு வகுப்பில் இருந்து நன்மாணாக்கராய் உங்கள் போதனைகளைக் கேட்டு விட வேண்டும்.

எம் கவலையீனத்தால் ஏதாவது பகுதிகளைத் தவற விட்டிருப்போமா? என இப்போது தான் நினைத்துப் பார்க்கின்றோம். ஆனாலும் எம் உள் மனம் "இல்லவே இல்லை" எனக் கூறி மறுக்கிறது. ஏனெனில் பாடசாலை தவிர்ந்த ஏனைய போயா, விடுமுறை நேர வகுப்புக்களினால், "தனியார் வகுப்பு" என்ற வார்த்தைக்கே "மகாஜன அகராதியில்" இடம் பதிக்க விடாது எம்மை எந்நேரமும் உற்சாகப்படுத்தி விளக்கியவர்களல்லோ எம் அதிபரும் ஆசிரியப்பெருந்தகைகளும்.

மாதா, பிதாவுக்கு அடுத்தது குரு, தெய்வம் ஆகும். "ஆசான் அமைவது அவரவர் தலைவிதி" என்பார்கள் மாணிக்கவாசகருக்கு அழகிய சிற்றம்பலவனே குருவாய் வந்து அருளியது நாமனைவரும் அறிந்ததே! அதுபோலவே நாம் செய்த நற்தவத்தின் பேறாக அனைத்துப் பாடங்களையும் சிறந்த முறையில் ஆசிரியர்கள் கற்பித்தனர். கடினமான விஞ்ஞானத்தையும், சிலருக்கு பாகற்காயாகக் கசக்கும் கணிதத்தையும் கூட சிறந்த முறையில் கற்பித்ததுடன் எமக்கு விளங்காத சங்தேகங்களை எல்லாம் தமது நேரங்களையெல்லாம் பொருட்படுத்தாது விளங்க வைத்ததன் விளைவாகவே

இன்று நாம் கணித, விஞ்ஞானத் துறைகளுக்குக் காலடி எடுத்து வைக்கக் கூடியதாக இருந்தது.

தன்மைந்தர் யாவரும் என்ன நிகழ்ச்சிக்குப்போனாலும் முதலாவதாகத் தான் வரவேணும் என நினைத்திட்ட சுந்தரலிங்கம் அதிபர் அவர்கள்,

"தோற்றுத் தோற்றுக்களைத்தவன் சொன்னான் எந்தன் தலையின் எழுத்து என்று, வெற்றிகளினூடு நடந்தவன் சொன்னான் என்னால் எதுவும் முடியும்' என்று" என்ற கவிஞனின் வார்த்தையை நன்கு உணர்ந்தவராய், உன்னால் முடியும் தானே என்று.................. " என்ன $1^{st}$ராய் வந்திடுவாய் தானே" என நம்பிக்கையேத்திப் போட்டிகளுக்கு அனுப்பி வைப்பதோடு மட்டுமன்றி மகாஜனாவின் வெற்றி இலக்கிற்கு ஊன்று கோலாக இருந்து போட்டி நடைபெறும் இடத்திற்கு வந்து தட்டிக்கொடுப்பார். இத்தகைய துடிப்பு மிக்க எம்மினிய அதிபர் ஓய்வு பெறப்போகிறார் எனக் காதோரம் வந்து இடியென இடித்த செய்தியை ஏற்றிட எம்மனம் ஒரு கணம் தவித்தது. எனினும் நாம் பட்ட கவலையைப் போக்க எம் கல்லூரியில் குடிகொண்ட சிவகாமசுந்தரியே உருவெடுத்து வந்தது போல பாரதியின் புதுமைப்பெண்ணாக. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் படைக்க வந்தோம்" என்ற பாரதியின்வாக்கிற்கு இலக்கணமாக

'முன்னே வைத்த காலை முன்னேவை முடியாதென்று எதுவும் இல்லை"

என்று நம்பிக்கையேத்திக் கல்லூரியின் உச்ச வளர்ச்சிக்குத் தோள் கொடுத்து நிற்பவர் எங்கள் அதிபர் திருமதி.சிவமலர் அனந்தசயனன் அவர்கள்.

எங்கு எவ்வேளையில் எம்மைக்கண்டாலும் 10A எடுக்கும் படி கூறி எம்மை வழிப்படுத்துவோரில் ஒருவரான நாகராஜா அதிபரை 10A எடுத்து விட்டுத் திரும்பிப்பார்க்கிறேன். தேடுகிறேன் தேடுகிறேன் காணவில்லை. அப்போது தான் புரிந்தது அவர் வானுறையும் தெய்வமாகி விட்டார் என்பது.

வழமை போலவே எம் நண்பர்கள் 9A - 4 பேர், 8A - 3 பேர், 7A - 2 பேர் என எடுத்ததுடன் மட்டுமல்லாது 5Aற்கு அதிகமாக 19பேர் எடுத்துச் சாதனை படைத்தனர். புலமைப்பரிசில் பரீட்சை சித்தியடைந்த மாணவர்களை மட்டுமே அனுமதிக்கும் நகர்ப்புறப் பாடசாலை களுக்கு நிகராக அங்கோர் சோதனைச் சாவடியின் மத்தியிலே கிராமப்புறத் தோட்ட விவசாயிகளின் பிள்ளைகளை இத்தகைய பெறுபேற்றைத் தொடர்ந்தும் எடுக்க வைத்தவர்கள் எம் ஆசான்கள். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி தம் நினைவெல்லாம் எமக்காக்கி என்னை 10A எடுக்க வைத்தமைக்கு சக சகோதரர்கள் சிறந்த பெறுபேற்றைப்

பெற வைத்தமைக்காகவும் 2007 (சா/த) வகுப்பினர் சார்பில் நன்றி கூறித் தொடர்ந்தும் எம் வருங்கால மகாஜன சந்ததியும் கல்விப்பெறுபேற்றில் சாதனை படைக்கும் எனத்திடமாகக் கூறி, தொடர்ந்தும் எம் ஆசான்கள் எமக்குக் கல்வி புகட்டி எம்மை மருத்துவ, பொறியியல் பீடங்களிற்குச் செல்ல வைப்பார்கள் என நம்பி, ஆனந்த நடராஜப்பெருமானை வணங்கி விடை பெறுகிறேன்.

"வெல்லுக மகாஜன மாதா"

யோகேந்திரா .கார்த்திகா 2010 Bio

**நவ தானியங்கள்**

உழுந்து
எள்ளு
கடலை
கொள்ளு
சாமை
தினை
துவரை
நெல்
பயறு

## பொறியியல்பீட மாணவனின் அனுபவப் பகிர்வு.........

க.பொ.த உ/த பரீட்சை 2007 இல் எமது கல்லூரியில் கணிதப்பிரிவில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். பாலர் வகுப்பு முதல் க.பொ.த உ/த வகுப்பு வரை கற்பித்து, நான் இந்த சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு உந்து சக்தியாக விளங்கிய அன்பிற்குரிய ஆசிரியர்களுக்கும் அதிபர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றினால் மாணவரின் கல்வி பாதிக்கப்படும் என்ற எண்ணம் பல பெற்றோரிடம் காணப்படுகிறது. இது ஒரு தவறான கருத்தாகும். விளையாட்டிலும், படிப்பிற்குரிய நேரத்தில் படிப்பையும், ஒரு திட்டமான முறையில் மேற்கொண்டால் இரண்டிலும் எம்மால் சிறந்து விளங்க முடியும். நான் தரம் 7 தொடக்கம் க.பொ.த உ/த வரை பாடசாலை மென்பந்து துடுப்பாட்ட அணியிலும், சதுரங்க அணியிலும் விளையாடினேன். எமது கிரிக்கெட் அணி பலமுறை வலயமட்டத்தில் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது. இருமுறை மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்று மாகாண மட்ட போட்டியில் பங்கு பற்றியது. எமது சதுரங்க அணி

தொடர்ந்து பல வருடங்கள் மாவட்ட மட்டத்தில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. இரு முறை தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியது. கல்லூரியில் சிறந்த சதுரங்க வீரன் என்ற பரிசினையும் பெற்றுக் கொண்டேன். க.பொ.த சா/த பரீட்சையிலும் 8A,B,C என்ற சிறந்த பெறு பேற்றைப் பெற்றேன். யாழ். இந்துக்கல்லூரிக்கு மாறிச் சென்று க.பொ.த உ/த வகுப்பை படிக்கும் படி உறவினர் பலர் கூறினர். அதிபராக இருந்த எனது தந்தையார் நான் மாறிச் செல்வதை விரும்பவில்லை. ஆரம்பக் கல்வி முதல் எனக்கு அறிவூட்டிய ஆசிரியர்களையும், நண்பர்களையும் விட்டுப் புதிய பாடசாலைக்குச் செல்ல நானும் விரும்பவில்லை.

இக்கல்லூரியிலேயே தொடர்ந்து படித்து சிறந்த பெறுபேற்றைப் பெற்று பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டும் என விரும்பினேன். இதனால் க.பொ.த உ/த கணிதப்பிரிவில் கல்வியைத் தொடர்ந்தேன். பாடசாலையில் கற்றதுடன் யாழ் நகரில் உள்ள தனியார் கல்வி நிலையத்திலும் கற்றுவந்தேன். ஒவ்வொரு நாளும் கற்றவற்றை வீட்டில் மீளப் படித்துக்கொள்வேன். இரு இடங்களிலும் எழுதிய பாடக்குறிப்புக் களைத் தொகுத்து முக்கியமானவற்றைப் புதிதாகக் குறிப்பெடுத்துக் கொண்டேன். பரீட்சைக் காலத்தில் இக்குறிப்பையே படித்தேன். இரவில் பாடக்குறிப்புக்களை படிக்கும் போது நித்திரை வரும் சந்தர்ப்பத்தில் பயிற்சிகளைச் செய்வேன். தெரியாத விடயங்களை அடுத்த நாள் ஆசிரியர்களிடம் கேட்பேன். அவர்களும் நேரம் காலம் பாராது எனக்கு விளக்கமளித்து உற்சாகப்படுத்தினர்.

இரவில் 11 மணிக்கு மேல் கண் விழித்துப் படிக்கவில்லை. ஆனால் முதல் படித்தவற்றை யோசித்துக் கொண்டு நித்திரைக்குச் செல்வேன். பரீட்சைக் காலங்களில் மட்டும் காலை 5 மணிக்கு எழுந்து படித்தேன். பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையத்திலும் நடைபெற்ற சகல பரீட்சைகளுக்கும் தோற்றி பயிற்சி எடுத்தேன். க.பொ.த உ/த பரீட்சைக்காக கல்லூரி படிப்பு லீவு விட்ட பின் வீட்டில் இருந்து கடந்த காலப் பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதிப்பழகினேன். வினாத்தாள்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் விடை எழுதுவதற்கு பயிற்சி எடுத்துக்கொண்டேன். நான் எழுதிய விடைகளைப் புத்தகத்தில் தரப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டு பிழைகளிருப்பின் அதற்கான காரணத்தை யோசிப்பேன். காரணம் தெரியாத சந்தர்ப்பத்தில் பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களிடம் கேட்பேன். அவர்கள் அன்பாக விளங்கப்படுத்தி உற்சாகமூட்டினர். கணிதப்பிரிவு மாணவர் இரசாயனவியலில் கூடிய புள்ளி பெற்றால் கூடிய Z புள்ளி பெறலாம் என்பதால் இரசாயனவியலில்

கூடிய கவனம் செலுத்தினேன். இரசாயனவியலில் தெரியாதவற்றை எனது தந்தையாரிடம்கேட்டு அறிந்து கொண்டேன். ஆசிரியர்களையும் பெற்றோரையும் மதித்து நடந்தேன். கடவுளை நம்பினேன். பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பொறியியல் பீடத்திற்குத் தெரிவானேன். நான் பெரு மகிழ்ச்சி அடைந்தேன். எனது குடும்பத்தினர் பெருமை அடைந்தனர். மகாஜன மாதா பெருமை அடைந்தாள்.

சுந்தரலிங்கம் நிஷாகன்

1ம் வருட, பொறியியல்பீட மாணவன்

பேராதனைப்பல்கலைக்கழகம்

## Olympiad an Experience (NMSO - National Maths & Science Olympiad)

olympiad is an international competition in a particular subject especially for Science and Maths. This year I got the opportunity to participate in the Olympiad competition, as I got the highest marks in the grade five scholarship examination.

There were hundred students altogether and we were selected after a training. Twenty candidates were selected for Maths and twenty candidates were selected for Science. I was selected for Maths. We underwent eight days training at the Zonal Education Office Jaffna.

I was selected among the candidates who sat the Provincial level examination in English Medium. The selected candidates were trained at Meepay for three days for an examination.

The meeting of hundred and eight students from various communities in Sri Lanka was a new experience for me. There was multi cultural understanding and lot of entertainment. The unforgettable day is the visit to the satellite station. We viewed the modern technology in communication. The cultural programme enriched us during the nights.

Meeting is a different and new experience and Olympiad provided me this great opportunity. The best three students will be qualified for international competition. If I were one of the students my college will have a glorious future and my name will be ever in the list of '"Mahajanan"

Fortunateley I had have a chance to get a prize from Minster of Education, Hon. Susil Premajayanntha for the award ceremony of the National mathematics & Science olympiad Competition (Junior) on 07th Oct 2008 at Kularathna Hall, Ananda College Colombo.

But I Missed the golden Chance cause of lack of transport comports to Colombo.

Dharanya Maniseharan

Grade 6 E

**Can Jaffna produce cricket's next Sanath or Malinga**

**- The Island Sports-**

**Wednesday 26th September, 2007**



26.09.2007 புதன்கிழமை ஐலண்ட் பத்திரிகையில் பிரசுரமான படத்தில் மகாஜனக்கல்லூரி மாணவன் வைத்திலிங்கம் புவனீசன் (இடமிருந்து வலமாக 1வது நபர்) அவர் 26.09.2007 அன்று கொழும்பு பொலிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற கொழும்பு மாவட்ட அணிக் கெதிரான போட்டியில் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகள் கிரிக்கெட் அணி தொடர்பாகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் வீரனின் மனப்பதிவுகள்....

நான் வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகள் கிரிக்கெட் அணி சார்பாக கொழும்பில் நடைபெற்ற கொழும்பு மாவட்ட அணிக்கெதிரான போட்டியில் பங்கு பற்றினேன். சர்வதேச சமாதானத்தை முன்னிட்டு அரசாங்க, சமாதான செயலகமும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் இணைந்து இப்போட்டியை ஏற்பாடு செய்திருந்தன. இப்போட்டி 26.09.2007 அன்று கொழும்பு பொலிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இதற்காக நாம் 7 பேர் வட மாகாணத்திலிருந்தும் 6 பேர் கிழக்கு மாகாணத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டிருந்தோம்.

கொழும்பில்24.09.2007 அன்று எமக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு கிழக்கு மாகாண பயிற்றுவிப்பாளர் குமார் இராமநாதனால் பயிற்சிகள் வழங்கப்பட்டது. அன்று மாலை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அவர்கள் எமக்கு தேநீர் விருந்துபசாரம் ஒன்றை வழங்கியிருந்தார். மறுநாள் சமாதான செயலகத்தில் நடைபெற்ற சமாதானம் தொடர்பான ஓர் செயலமர்வில் கலந்து கொண்டோம். இப்போட்டியில் பங்கு பற்றியதன் மூலம் எனக்கு 'turf' இல் விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

என்னை இந்த அணிக்கு சிபாரிசு செய்த அதிபர், பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுவிப்பாளர் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வை.புவனீசன்
யா/மகாஜனக் கல்லூரி
2007 கணிதப்பிரிவு



# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்- 2007



சு. நிஷாகன்
பொறியியல்



ஆ. அனுசுயா
பொறியியல்



கு. ஜனகன்
பொறியியல்



சி. மயூரா
பொறியியல்



வை. வாமனன்
உணவு விஞ்ஞானமும்
போசாக்கும்



த.யாதவன்
விவசாய விஞ்ஞானம்



சி. நளினமயூரதி
பௌதீக விஞ்ஞானம்



பா. பானுஜா
தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்பம்



மு. மகிழன்
தகவல் தொடர்பாடல்
தொழில்நுட்பம்



சி. பிரணவன்
சித்தவைத்தியம்



வி. விஜயஜங்கரன்
சித்தவைத்தியம்



த. சுகன்யா
சித்தவைத்தியம்



செ. ஜயானி
சித்தவைத்தியம்



க. சுகன்யா
கலை



இ. பிரதாபன்
கலை



த. தனுஜன்
கலை

# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்- 2007


ம. வித்தியா
கலை


நி. கஜிதரன்
கலை


ஜெ. ராதிகா
கலை


நா. சசிகரன்
கலை


கா. சிவாஜினி
கலை


ஞா. கிரியங்கா
கலை


ந. கயூரன்
நுண்கலை


அ. சுஜீந்திரன்
நுண்கலை


அ. பிங்கலை
நுண்கலை


மு. பிரதாஸ்
நுண்கலை


இ. வஜினா
நுண்கலை


வ. தர்சியா
நுண்கலை

# தரம் 5
# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்- 2007



விஜயபாஸ்கர்
சேஷன்
172



தரண்யா
மணிசேகரன்
171



கதிர்காமநாதன்
குகவர்மன்
168



தேவதாசன்
கோகுலன்
162



ஜெகதீஸ்வரன்
வினுசாயினி
156



மதியாபரணம்
பிறைசூடன்
152



ஐயாத்துரை
தஜீகா
150



மனோகரன்
சிந்துஜா
149



சிவநாதன்
கணாதரன்
148



சுரேஸ்குமார்
சோபிதா
145



கருணாநிதி
வினித்
145



விஜயகுமாரன்
ரிஷிகேசவன்
143



சிவபாலன்
வர்ணிகா
141



நிமலன்
செந்தூரன்
141



நித்தியானந்தன்
கஜானனன்
140

# க.பொ.த.சாதாரண தரம்
# அதியுயர் திறமைச்சித்தி பெற்றோர் - 2007


யோகேந்திரா
கார்த்திகா
10A


கனகரத்தினம்
கோகிலன்
9A B


அருளானந்தம்
வாசந்தி
9A B


நவரத்தினராஜா
நிரோஜன்
9A B


சிவபாதம்
ரோபிதா
9A S


பிரபாகரன்
புவிதரன்
8A 2B


பசுபதி
மோகன்ராஜ்
8A B C


வெற்றிவேல்
வைஸ்ணவி
7A 3B


ஆறுமுகம் துளசி
7A B C S

புகைப்படத்திற்கு சமூகமளிக்காதவர்: சிவச்சந்திரன் சேயோன் 8A 2C

# மழலை விருந்து

## தரம் 1 - 5


1. சுத்தம் 83
2. நற்பண்புகள் 83
3. மாதா பிதா குரு தெய்வம் 83
4. மும் மொழிகளில் நாட்களை அறிவோம் 83
5. விடுகதைகள் 84
6. My favourite game cricket 84
7. சிறுதோழியின் பார்வையில் 84
8. அம்மா 85
9. மலர்கள் 85
10. My favourite game 86
11. My Pet 86
12. Some valuable thought 87
13. உன் வாழ்வு வளம் பெற 87
14. அறிந்து கொள்வோம். 87


## அறிவு ஆரம்


1. ஏணிப்படிகள் ஆசான்கள் (கவிதை)
2. இனி எப்போ வரும் (கவிதை)
3. பரிகாரக்கற்பித்தல் பற்றிய ஓர் நோக்கு
4. சிரித்திட்ட சிறுமலர்கள் (சிறுகதை)
5. College magazines and their Uses
6. Responsibility and Responsible

## சுத்தம்

**சுத்தம் என் பல்லில் வேண்டும்.**

**என் உடலில் வேண்டும்.**

**என் உடையிலும் வேண்டும்.**

**சுத்தம் என் வகுப்பில் வேண்டும்.**

**எனது பாடசாலையிலும் வேண்டும்.**

**எனது சமூகத்திலும் வேண்டும்.**

**என் வீட்டிலும் நாட்டிலும் வேண்டும்.**

**ஏன்? எனது உள்ளத்திலும் வேண்டும்.**

**எங்கும் தூய்மையைப் பேணுவோம்**

**ஆக்கம்**

**ஸ்ரீ.சாயுக்தன்**

தரம் 1A

## விலங்குகளில் காணப்படும் நற்பண்புகள்

1. எறும்பு - ஒழுக்கம்
2. சிலந்தி - விடாமுயற்சி
3. நாய் - கட்டளை
4. யானை - விவேகம்
5. மான் - சுத்தம்
6. குயில் - இனிமை
7. நரி - தந்திரம்
8. எருது - கடினஉழைப்பு
9. தேனீ - கூட்டுறவு
10. புலி - துணிச்சல்
11. குதிரை - வேகம்
12. மயில் - அழகு, ஆடல்
13. அன்னம் - சமாதானம்
14. காகம் - பகிர்ந்து உண்ணல்

க.வித்தகன்

தரம் 1A

## மதா பிதா குரு

அன்னை என்னும் தெய்வத்தை
அன்பாய் நாமும் வணங்கிடுவோம்
அவர் அறிவுரை தன்னைக் கேட்டே நாம்
அகிலம் போற்ற வாழ்ந்திடுவோம்

தந்தை என்னும் தலைமகனைத்
தாள் பணிந்தே வணங்கிடுவோம்
தந்தை சொல்லே மந்திரம் என்று - நாம்
தரணியில் என்றும் தலை வாழ்ந்திடுவோம்.

குருவாய் எமக்கு அறிவு அளித்த
குலத்தை நாமும் பாடிடுவோம்
குருவின் வார்த்தை குறளென்று - நாம்
குவலயம் போற்ற வாழ்ந்திடுவோம்.

தர்மிலா.G

தரம் 3B

## மும்மொழிகளில் நாள்களை அறிவோம்

1. திங்கட்கிழமை - Monday
சந்துதா - **ඉඳ්ඔඩ**

2.செவ்வாய்க்கிழமை - Tuesday
அங்காருவதா - **තඕය්ඩශ්‍රීජඩඔඩ**

3. புதன்கிழமை - Wednesday
பதாதா - **ජඔඩඔඩ**

4. வியாழக்கிழமை - Thursday
பிறாஹஸ்பதின்தா-
**ජයඉඇජඔසබඇඔඩ**

5. வெள்ளிக்கிழமை - friday
சிக்குறாதா - සිකුරාදා

6. சனிக்கிழமை - Saturday
செனசுராதா - සෙනසුරාදා

7. ஞாயிற்றுக்கிழமை - Sunday
இரிதா - ඉරිදා

ச.அபிசரண்

தரம்:- 3A

## விடுகதைகள்

1. சிறிய கிணற்றில் சுவையான நீர் அது என்ன?

   இளநீர்

2. வட்டவட்டப்பாய், வாழ்வு தரும் பாய், ஊரெல்லாம் சுற்றும் பாய் அது என்ன பாய்?

   ரூபாய்

3. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?

   இளநீர்

4. வீட்டுக்கு வந்த விருந்தாளி தங்குவதே ஓராண்டு அது என்ன ?

   கலண்டர்

5. எனக்குத் தலை ஒன்று கண்கள் மூன்று நான் யார்?

   தேங்காய்

6. கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன் அவன் யார்?

   பூட்டு

7. ஆடும் அசையும் ஆனால் பிடுங்க முடியாது அது என்ன?

   கைவிரல்

8. கொக்கு நிற்க நிற்கக் குளம் வற்றுகின்றது. அது என்ன?

   விளக்கு

9. இதோ ஓடுகின்றான் காலடி தெரியவில்லை. அவன் யார்?

   எறும்பு

10. கண் காண உருவமுண்டு கட்டிப்பிடிக்க உடலில்லை அது என்ன?

    புகை

லோ.துளசிகா

தரம் - 3A

## My Favourite Game

## Cricket

1. My Favourite game is Cricket.
2. There are eleven players in a cricket team.
3. The cricket has to be played under the leader ship of a captain.
4. The cricket improves not on our health but go a long in the promotion of our character.
5. When the cricket match is held two groups are playing in the ground.
6. The cricket game is growing in our world.
7. The instruments , a bat, wickets sticks, boots and helmet are used by a cricket player.

J.Jethusan 5A

## சிறுதோழியின் பார்வையில்....

நான் ஒரு சிறுதோழி. எனது பெயர் பவதாரணி. நான் நான்காம் தரத்தில் கல்வி கற்கிறேன். எனக்கும், என் தோழருக்கும், நாம் சிறுதோழர்களாக இருப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சி. பாடசாலை நாட்களில் வியாழக்கிழமை தோறும் ஆசிரியர்கள் எம்மை இவ் அமைப்பின் படி ஒழுக வழி நடத்துவர்.

சிறு தோழி தன் இணைவு வைபவ தினத்தில் "என் சமயத்திற்கும் நாட்டிற்கும் என் கடமைகளைச் செய்யவும் தினமும் ஒரு நற் செயல் செய்யவும் என்னால் இயன்றவரை முயற்சி செய்வேன் என்று வாக்குறுதி செய்கின்றேன்". வாக்குறுதி செய்வதுடன் அதன் படி ஒழுகுவதிலும் திறமைசாலியாக இருப்பேன்.

இதற்கமைய நான் எப்பொழுதும் உண்மையே பேசுவேன். முக மலர்ச்சியுடன் இருப்பேன். தைரியமாக இருப்பேன்.

சிறுதோழர் குறிக்கோள் "உதவி செய்" என்பதாகும். அதற்கிணங்க நான் வீட்டில் உள்ளவர்களுக்குத் தினமும் உதவுவேன். பல்வேறு சவால்களை எதிர் கொண்டு வெற்றி வாகை சூடுவேன். விசேட தினங்களில் விருந்தினரை வரவேற்பதில் மன மகிழ்வடைவேன். எமது சூழலை அனுபவித்து இன்புறுவேன். எப்பொழுதும் ஆடிப்பாடி மகிழ்வதோடு, தேடி அறியும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வேன். எனது கற்றலுக்குச் சிறு தோழர் அமைப்புப் பெரிதும் உதவுகின்றது எனலாம்.

பி.பவதாரணி
தரம் 4

## அம்மா

அம்மா நல்ல அம்மா
அன்பைத் தருவார் அம்மா
இம் மாநிலத்தில் நீயே
நேரில் கண்ட தெய்வம்

கண்ணைப் போலே ஒழுக்கம்
காப்பாய் கண்ணே என்று
உண்ண உணவும் ஊட்டி
உறங்க வைப்பார் அம்மா

உண்மை ஒன்றே உலகில்
உணர்வு தரும் என்பார்
எத்திப் பிழைக்கும் வாழ்க்கை
ஈனச் செயல் என்பார்

அருமை உலகில் கண்ணே
பெருமை பெற வேண்டில்
ஒழுங்காய் பள்ளி சென்று
விரும்பிக் கற்பாய் என்பார்

அ.வித்தகி
தரம் - 4

## மலர்கள்

வண்ண, வண்ணச் சோலையில்
வகை, வகையாய் மலர்களாம்
கண்ணைக் கவரும் மலர்களாம்
காணக் களிப்புக் கொள்ளுமாம்

சின்னச் சின்ன மலர்களாம்
சிங்காரச்சிவப்பு மலர்களாம்
அமுதம் உள்ள மலர்களாம்
அன்பு கொள்ளும் மலர்களாம்

சி.ஜெயதரன் 4A

## My Favourite Game

1. My favourite game is cricket.
2. It is a very interesting game.
3. It is played all over the world.
4. It was introduced to the world by England.
5. Cricket is a bat and ball team game played by eleven players per side.
6. The batsmen hit shots and score runs.
7. The players are judged by two umpires.
8. The west Indies and the Sri Lankan cricket team are the best in the world.
9. My country Sri Lanka has a fantastic cricket team.
10. They won the world cup in 1996.
11. Arjuna Ranatunga is an experienced captain and leads the Sri Lankan side.
12. Aravinda and Jaya suriya are world famous batsman.

T.Kobikan

5A

## My Pet

1. My pet is a dog
2. My uncle gave it to me.
3. Its name is Jutee.
4. It is brown and white in colour
5. It is six months old now.
6. I have two bowls for it.
7. One is for food and the other is for water.
8. I bathe it every Sunday.
9. It sleeps in a basket.
10. It sleeps during the day.
11. It guards our house at night.
12. It has a lot of exercise.
13. I play with it every evening.
14. When I throw a ball, it bring the ball back to me.
15. When I came home from the school it welcome me.
16. take it to the beach every Saturdays.
17. I like my pet very much

N.Jasmila

Grade 4

**Benjamin Franklin was the first person other than a head of state portrayed on a postage stamp in 1847**

## Some Valuable Thoughts

- ★ Love is God
- ★ Think of God
- ★ Sing about God
- ★ Pray to God
- ★ Fast during one day in a week
- ★ Be honest
- ★ Be happy
- ★ Be Contented
- ★ Be faithful
- ★ Be Economical
- ★

**"Never too late to learn"**

R.Mathumitha

Gr.1A

**God make every things life**
**Life make every thing love**
**Love make every thing Sweet**
**Sweet make every thing pleasure**
**Smile make all the above possible**

## உன் வாழ்வு வளம் பெற.....

- ✪ அனைவரிடமும் காட்ட வேண்டியது - அன்பு
- ✪ உன்னிடம் இருக்கக்கூடாதது - பொறாமை
- ✪ மிகவும் அவசியமானது - பொறுமை
- ✪ பொறுமையின் பலாபலன் - வெற்றி
- ✪ வெற்றிக்களிப்பில் காக்க வேண்டியது - அமைதி
- ✪ அமைதிக்கு அடிப்படை - அறிவு
- ✪ பிரியக்கூடாதது - நட்பு
- ✪ பிரிக்கமுடியாதது - கல்வி
- ✪ இவற்றின் சேர்க்கை - வாழ்க்கை

த.தனுஜா

தரம் - 1B

## சில ஊர்ந்து செல்லும் பிராணிகளின் சிங்களச் சொற்கள்

1. கூம்பியா - எறும்பு
2. வெயா - கறையான்
3. மகுளுவா - சிலந்தி
4. கூடல்லா - அட்டை
5. மந்துறுவா - நுளம்பு
6. குறா - தும்பி
7. குறுமியா - வண்டு
8. நயா - பாம்பு
9. கிம்புல்லா - முதலை
10. லேனா - அணில்

க.வித்தகன்

1 A

## உரிமையைப் பேணுவோம்

உரிமையைப் பேண வேண்டிய பொறுப்பும், கடமையும் அனைவருக்கும் உண்டு. உரிமையைப் பேணாத இனம் கால கதியில் அழிந்தொழிந்து போய்விடும். இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவனுக்கும் இங்கு வாழும் உரிமை, தான் பிறந்த இனத்தின் மொழியுரிமை, பேச்சுரிமை, இனத்தின் கலாசாரத்தைப் பேணும் உரிமை முதலிய பல உரிமைகள் அவனுக்குண்டு. தன்னைத்தானே ஆளும் உரிமையும் பிறர் ஆக்கிரமிப்பிலிருந்து நிலத்தைப் பாதுகாக்கும் உரிமையும் இனத்துக்குண்டு. உரிமையைப் பாதுகாக்க வேண்டும். உரிமையைப் பிறருக்கு விட்டுக்கொடுத்து உரிமையிழந்த மனித குலம் உலகில் ஏராளம்! ஏராளம்!

ஆபிரிக்க நாடுகள் பலவும் ஒரு காலத்தில் இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன எனும் போக்கில் வாழ்ந்து வந்தன. தாம் வெள்ளைக்காரரே ஆளும் இனமெனவும் கருதியதோடு, வந்தாரைச்செங்கம்பளம் விரித்து வரவேற்றதோடு, தமது உரிமைகளை மறந்து வாழ்ந்ததால் மீண்டும் தமதுரிமையைப் பெற்று வாழப்பல்லாண்டு காலம் போராட வேண்டி நேர்ந்ததை உரிமையை இழந்து தவிக்கும் இனங்கள் இனியாவது சிந்தித்து உரிமையைப் பேணுவோம் என்ற தாரக மந்திரத்தைக் கடைப்பிடித்து ஒழுகினால் பயன்கிட்டாது போகாது என்பது உண்மையே.

அமெரிக்க நாட்டைப்பாருங்கள். அந்நாட்டில் ஆதிக்குடிகள் யாரென்று சிந்தியுங்கள். அந்நாட்டின் ஆதிக் குடிகள் கறுப்பின மக்கள். ஆனால் இன்று அங்கு வாழ்ந்து உலக நாடுகளுக்குப் பொலிஸ்காரராக நிற்கும் இனம் எது என்று சிந்தியுங்கள்.

ஆட்சிபுரிந்து கொண்டிருக்கும் இனம் ஐரோப்பிய வெள்ளைக்காரர். இன்று அங்கு அவர்களின் ஆதிக்கம் முளைத்து விட்டதென்றால் உரிமை பேணாத எந்த மனிதனும்? ஏன்? எந்த இனமும் அழிந்தொழிந்து ஆக்கிரமிக்கப்பட்டு நிற்கும் என்பதற்கு இதைவிடச் சான்றாதாரம் வேண்டுமோ? கொலம்பஸ் எனும் தேச ஆராய்ச்சியாளர் அசுரத்துணிவோடு ஆழ் கடலைக்கடந்து தன்னோடு வந்தோரின் நச்சரிப்புக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் கண்டு பிடித்த நாடு தானே அமெரிக்கா. அந்நாடு ஒரு சில நூற்றாண்டுகளுள் ஐரோப்பியர் கையில் சிக்கியமை உரிமை பேணாத செயலால் ஏற்பட்டதே. ஒரு சில படகோடு வந்த பிறநாட்டினரை அங்கு அடிக்கடி வரவும் குடியேறவும் விடாமல் தடுத்திருந்தால் இன்று அந்நாட்டின் பெரு வளங்களின் தன்மையும், ஆட்சியுரிமையும் கறுப்பின மக்களின் கைகளில் அல்லவா இருந்திருக்கும். மீண்டும் அம்மக்கள் அங்கு தலைநிமிரவும் உரிமை தமதேயெனப்பேணவும் பல்லாண்டு காலம் போராட வேண்டி நேர்ந்ததை உரிமை பறிகொடுத்து நிற்கும் இனங்கள் இனியாவது சிந்தித்துச் செயற்பட்டால் பலன் கிட்டாது போகாதென்பதில் ஐயமில்லை.

## மாணவர் சிந்தனை ..........

1. உரிமையைப் பேணுவோம்
2. பிரமிட்டுக்கள்
3. பெண்கள் நாட்டின் விண்மீன்கள்
4. பஞ்ச பெருமை
5. கற்றலுக்கேற்ற சக்தியைத் தரும் மனம்
6. தமிழ் இலக்கியங்களின் இன்றைய நிலை
7. கல்வி
8. சமயமும் வாழ்வும்
9. உலகின் பெரிய பாலைவனங்கள்
10. உலகில் உயரமான சிகரங்கள்
11. சமூக சேவை மூலம் சாரணிய அபிவிருத்தி
12. உள்ளம் கசிந்த உணர்வுகள்
13. யாழ்ப்பாணக்கல்லூரிக்கு ஒரு மகாஜனனின் விஜயம்.
14. ஹெலிகொப்டர் மேலே பறப்பது எவ்வாறு?
15. பூகோள வெப்பமாகுதல்
16. அறிந்து கொள்வோம்
17. நன்றிக்கடன்
18. காலதூதன்
19. முடியும் பொழுதெல்லாம் விடியும்
20. பதிந்து விட்ட தடங்களின் எதிரொலி
21. Importance of games
22. News papers as the easy available Source of information.
23. The internet as a Source of information.
24. The girl guide movement.
25. Scrabble
26. Sport popular sayings with words of advice warning
27. Peace

நாம் உலகில் இரண்டொரு நாடுகளை மட்டும் உதாரணத்துக்கு எடுத்துக்கூறினோமேயன்றி மற்றைய நாடுகளில் உரிமை பேணப்படுகின்றது என்று அர்த்தப்படாது. ஐரோப்பிய அரசுகளின் குடியேற்ற நாடுகளில் என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவர். இலங்கை ஒரு சின்னஞ் சிறிய நாடு. இந்நாட்டில் கூட உரிமை பேணாத செயலால் என்ன நடந்தது என்பதை அனைவரும்அறிவர்.

போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும், பிரித்ததானியராலும் 41/2 நூற்றாண்டு வரை மக்கள் பட்ட அவலம் விரிக்கிற் பெருகும். ஓரின மக்களாய் வாழ்ந்த தமிழ் சிங்கள மக்களிடையே பல சமயப் பிரிவினைஏற்பட்டது. பிற நாட்டில் வாழிடங்கள் இழந்து அல்லோல கல்லோலப்படுவதும், நாம் எமது வாழிட உரிமையைப் பிறருக்கு விட்டுக் கொடுத்ததால் அல்லவா? ஆகவே உரிமையை மறந்தாலோ - மறுத்தாலோ அனைவருக்கும் இக்கதியே நேரும்.

கேதீஸ்வரன் கௌசிகன்

தரம் 8A

| 'கடையெழு வள்ளல்கள்' | |
|---|---|
| 1. எழினி | 5. பாரி |
| 2. ஓரி | 6. பேகன் |
| 3. காரி | 7. அதியமான் |
| 4. நள்ளி | |

## பிரமிட்டுக்கள்

எகிப்திய நைல் நதிக்கரையோர நாகரீககத்தின் எச்சமாகவும் உலகின் ஏழு அதிசயங்களில் இன்று நாம் காணக் கூடிய ஒரேயொரு உலக அதிசயமாகவும் விளங்க வருவது பிரமிட்டுக்களாகும். எகிப்திய மன்னர்களின் பிரமாண்டமான கல்லறைகளே பிரமிட்டுக்களாகும். லிபியன் பாலைவனத்தின் எல்லைப் பிரதேசமான கீசா என்னும் இடத்தில் மிக முக்கியமான 3 பிரமிட்டுக்கள் முக்கோணங்களாக உச்சியில் ஒன்று சேரும் வடிவினதாகக் காணப்படுகின்றன.

கீசாசவில் கி.மு. 2900 ஆண்டில் வாழ்ந்த கூபூ எனும் எகிப்திய மன்னனினால் கட்டப்பட்ட மிகப்பெரிய பிரமிட்டு ஒன்றுள்ளது. இந்தப் பிரமிட்டின் அடித்தளம் 13 ஏக்கர் பரப்புடையது. உச்சி தரையிலிருந்து 54 அடி உயரத்திலுள்ளது. இந்தப் பிரமிட்டை அமைக்க 25,00,000 கற்கள் பயன்பட்டன. ஒவ்வொரு கல்லும் 21/2 தொன் எடையுள்ளது. பிரமிட்டின் உச்சியில் 36 சதுரஅடித் தட்டையான தளம் உள்ளது. பிரமிட்டினுள்ளே மத்தியில் மன்னனதும், அரசியினதும் கல்லறைகளுள்ளன. அவற்றிற்குப் போகும் வழி குறுகியது.

அங்கு அரசனதும், அரசியினதும் மம்மிகள் பதப்படுத்தப்பட்டு வைக்கப் பட்டுள்ளன. பண்டைய எகிப்தியர் மனிதன் இறந்தகாலம் அவனுடைய ஆன்மா அவனது உடலை நாடி வரும் என நம்பினர். அதனால் அவர்கள் மன்னரின் உடலை அழிக்காமல்

மருந்தூட்டிப் பாதுகாத்து வைத்தனர். அவையே மம்மிகள் எனப்பட்டன. இறந்த அரசனதும், அரசியினதும் உடல்களை மம்மிகளாக்கி உடை, உணவு, நகை முதலான பல பொருட்களையும் சேர்த்துப் பிரமிட்டுக்கள் மத்தியில் வைப்பர்

எகிப்தில் இன்று 75 பிரமிட்டுக்கள் வரையிலுள்ளன. அக்கால மக்கள் இவ்வளவு பிரமாண்டமான கல்லறை களை எப்படிக் கட்டினர் என்று வியக்க வேண்டியுள்ளது. பெரிய பிரமிட்டுக் களைக் கட்ட ஒரு லட்சம் மக்கள் 20 ஆண்டுகள் வரை வேலை செய்தனர்.

செ. செல்வநொயிலின்
தரம் 10A

## பஞ்ச – பெருமை

பஞ்சநிலம் :- பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல்
பஞ்சவர்ணம் :- பச்சை, கருமை, செம்மை, வெண்மை, மஞ்சள்
பஞ்சபாதகம் :- குருநிந்தை, கள், காமம், கொலை, கொள்ளை
பஞ்சபொறி :- மெய், வாய், கண், மூக்கு, செவி
பஞ்சபூதம் :- நிலம், தீ, நீர், காற்று, வானம்
பஞ்சபுலன் :- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
பஞ்சபட்சி :- ஆந்தை, காகம், மயில், கோழி, வல்லூறு
பஞ்சபுராணம்:- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம்

சி.கணாதரன் தரம் - 6

## பெண்கள் நாட்டின் விண்மீன்கள்

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்களைப் பெருமைப்படுத்திக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் இயம்பியுள்ளார். "பெண் பிறப்பே பெருமை மிக்க பிறப்பாகும்" இன்று சகல துறைகளிலும் பெண்களே விண்மீன்களாகத் திகழ்கின்றார்கள். உலகளாவிய நாடுகளிலும் பெண்களின் சேவையானது அளப்பரியதாகக் காணப்படுகிறது.

பெண்களிடம் அன்பு, கருணை, பொறுமை. தூய்மைக்குரிய பண்புகள் குடிகொள்கின்றன. இதன்மூலம் பெண்ணானவள் சாத்வீக குணமுடை யவளாகத் திகழ்கிறாள். ஒரு தாயானவள் குழந்தையைப் பத்து மாதம் சுமந்து பிரசவிக்கிறாள். சாத்வீக குணமுடைய பெண்களே சகல துறைகளிலும் மிளிர்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க ஒரு பெண்ணானவள் தன்னையும் காத்துத் தன்னை மணந்து கொண்டவனையும் காத்து மனை அறங்களிலே தளர்ச்சியற்றவளாகக் காணப்படுகிறாள். இவ்வாறான பெண்களே கற்புக்கரசியாகத் திகழ்கிறார்கள்.

சீதை, கண்ணகி, சாவித்திரி போன்றோர் சங்க காலத்தில் கற்புக்கரசிகளாகத் திகழ்ந்தவர்கள்.

சீதையானவள் இராவணனது கைவசம் இருக்கும் போது கற்புத்தவறாதவாறு நடக்கிறாள். கண்ணகியானவள் தனது கணவர் இறந்த செய்தியைக் கேட்டு வெஞ்சினம் கொண்டு மதுரை மாநகரையே தீக்கிரையாக்கினாள். சாவித்திரி தனது கணவனது உயிரைக் காலன் கவர்ந்து சென்ற போது காலனுடன் வாதிட்டு உயிரை மீட்டவள் ஆவாள். திருவள்ளுவருடைய மனைவி வாசுகியும் கற்புக்கரசியாக விளங்கியவள். கற்புக்கரசிகள் வாழ்வதனாலேயே நாடானது செழிப்புற்று வளர்ச்சியடைகிறது.

வீரத்தாயின் வரலாற்றைப் புறநானூறு என்னும் நூலிலிருந்து பெரிதுங் காணலாம். போரிலே தனது கணவன் இறந்த போதும் சிறியவனான ஒரே ஒரு மகனைக் கூட இன் முகத்துடன் வீரத்தாயானவள் போருக்கு அனுப்புகிறாள். அங்கே புறமுதுகு காட்டி ஓடக்கூடாது எதிரியுடன் நேருக்கு நேர் நின்று போர் புரிய வேண்டும் என்று கூறி வழியனுப்புகிறாள். அவ் வேளையில் மகனும் கணவனும் நெஞ்சிலே காயப்பட்டு இறக்கும் போது வீர இறும்பூது எய்துகிறாள்.

தமிழர் வாழ்விலே சங்க காலத்தில் பெண்கள் சமவுரிமையுடன் வாழ்ந்து வந்தனர். இதற்குச் சங்க காலத்தில் வாழ்ந்த பெண் புலவர்கள் சான்று பகர்வர். காக்கை பாடினியார், ஆண்டாள், ஔவையார் போன்றோரே சங்க காலத்துப் பெண்கள் ஆவார். நீதி நெறிகளை வாழ வைத்தவர் ஔவையார். நீதி நெறிகளை வாழ வைத்த பின் சைவ உலகிற்குப் புத்துயிர் கொடுத்தவர் மங்கையர்க் கரசியார். வைணவ சமயத்திற்கு வாழ்வு அளித்தவர் ஆண்டாள் அம்மையார், இவ்வாறு சங்க காலம் தொடக்கம் பெண்கள் விண்மீன்களாக மிளிர்கின்றனர்.

பாரதி கவிதை வடிவில் பெண்ணை வடித்துப் புதுமைப் பெண்ணைக் கற்பனை கண்டார். இருபத்தோராம் நூற்றாண்டைச் சற்று நோக்குவோமானால் பாரதி கண்ட கனவானது இன்றைய காலகட்டத்தில் நனவாகிவிட்டது. பாரதி கண்ட புதுமைப் பெண்கள் பலர் உருவாகிவிட்டனர். சிலர் உருவாகிக்கொண்டு இருக்கின்றனர். என்றால் ஐயமில்லை.

ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற நிலை சமுதாயத்தில் பரவலாக முன்னைய காலத்தில் காணப்பட்டது. ஆணுக்குப் பெண் சரி நிகராக இடைக்காலத்தில் திகழ்ந்தாள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஆணைவிடப் பெண்ணே சிறந்து மிளிர்கிறாள். இன்று பெண்கள் இல்லாத துறையே இல்லை என்றே கூறலாம். மண்ணில் இருந்து பெண்ணானவள் விண்ணுக்குள் பிரவேசித்து விட்டாள். இவ்வாறு சகல வழிகளிலும் முன்னேறும் பெண்களே எதிர்கால வாழ்விற்கு ஒளியூட்டிகள். வாழ்க்கை எனும் பாரம்பரியத்தை வளமாக நடத்திச் செல்ல வல்லவர்கள். இத்தகைய பெண்களே, தற்காலத்தில் நாட்டின் விண்மீன்களாகத் திகழ்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

ச.குலவேணி

தரம் - 10A

## கற்றலுக்கு ஏற்ற சக்தியைத் தரும் மனம்

சற்று நேரம் இயற்கை பற்றிச் சிந்தியுங்கள். சூழலில் காணப்படும் வெப்பம், குளிர், காற்று மெல்ல மெல்ல உங்களை வருடிச்செல்லும். வீசிய காற்று, தென்றலக்காற்று என உணர்வீர்கள். அண்டத்தில் நிகழும் சக்தியை ஓரளவிற்காவது ஒரு நிலைப்படுத்தும் அளவிற்கு எம்மனம் கட்டுப்பட்டிருக்கும். எமது மனதைக் கட்டுப்படுத்த சிறுவயது முதற்கொண்டு பயிற்சி செய்ய வேண்டும். இத்தகைய பயிற்சியின் பின் மனம் பழக்கப்பட்டு விடும். இதன் பின் நீங்கள் பெரியவர்களானதும் எந்த விடயத்தைச் செய்யும் போதும் புதிதாக ஆயத்தம் செய்ய வேண்டிய அவசியமிருக்காது.

* எமது கற்றலுடன் தொடர்பு படும் மனம் தேவையற்ற விடயங்களைப் பற்றி நினைக்காமல் விடும் போது உங்களுக்குக் கற்க வேண்டிய விடயங்கள் பற்றி நினைக்க நேரம் கிடைக்கும். அப்போது கற்றல் சூழ்நிலை ஒன்று தானாகவே உருவாகும்.

* பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள் உங்கள் உள்ளம் சக்தியுள்ளதாக அமைந்தால் பரீட்சையில் தோல்வியைடைந்து விடுவேனோ என்ற பயம் உங்களை ஆட்கொள்ளாது. ஆகவே பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள் நல்லாசிரியர்களின் வழிகாட்டலில் அன்றாடம் கற்கும் பாடங்களைக் கவனமாகச் செவிமடுத்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். பலருக்கு நல்ல அறிவிருந்த போதும் பரீட்சையின் போது தாம் பெற்ற அறிவைச் சரியான முறையிற் பயன்படுத்திக் கேள்விகளுக்குப் பதில் எழுத முடியாமலும் உள்ளனர். மனதைக் கட்டுப்படுத்தும் தியானம் மற்றும் கீழைத்தேய சாஸ்திரிய சங்கீதம் என்பன எமது மனக் கட்டுப்பாட்டுக்குஉதவுகின்றன.

* கற்றலுக்கு ஏற்ற சக்தியைப் பெற மனதைப் பயிற்றுவித்தல்

ஒரு நாளில் ஒரு சில மணித்தியாலங்களாவது மனம் என்ற இயந்திரத்தை நாம் கட்டுப்படுத்தி அமைதிப்படுத்தப் பழக வேண்டும். மனம் அமைதியானால் மகிழ்ச்சி உண்டாகும். மனம் மகிழ்வடைந்தால் ஓர் ஆத்ம திருப்தி ஏற்படும். எமது மனம் வேலை செய்யும் போதும் உள்ளார்ந்த சக்தி விரயமாகின்றது. ஆகவே பாடசாலையில் மாணவர்களாகிய நீங்கள் தேவையற்ற விடயங்களைப் பற்றி நினைத்து உள சக்தியை வீணாக்காமல் தேவைப் படுபவற்றை நினைத்து உள சக்தியை மென்மேலும் கூட்டிக் கொள்ள வேண்டும். பாடங்களைப்படித்த பின் மனதில் இருத்திக் கொள்ளாமைக்கு மனக்குழப்பம் மிகப் பெரிய காரணமாகும். ஆகவே நூற்றாண்டை நோக்கி வீறு நடை போடும் எமது பாடசாலையில் சிறந்த மகாஜனன்களாகத் திகழ மனக் குழப்பத்தைத் தவிர்த்து மனதைக் கட்டுப்படுத்திக் கற்றால் நீங்களும் வெற்றியடையலாம் என்பதில்ஐயமில்லை.

ஜெயநாதன் ஜெயக்கமலன்

தரம் 10 A

## தமிழ் இலக்கியங்களின் இன்றைய நிலை

**[ தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற பேச்சு]**

மொழி என்பது ஒரு தொடர்பாடல் ஊடகமாகக் காணப்படுகிறது. தொடர்பாடல் வளர்ச்சி என்பது மொழிப்பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அமைவதோடு இவ்வளர்ச்சி மொழிச்செம்மை என்பதற்கு அடையாளமாக அமைகிறது. எனவே மொழியின் செம்மையைப் பேணுவதற்குச் சில எல்லைகள் வரையறைகள், விதிகள் என்பன அமைக்கப்டுகின்றன. இவையே இலக்கணங்களாகப் பிரதிபலிக்கின்றன. அது போல மன உணர்வுகளைக் கருத்துக்களைக் கலை உணர்வும் இனிமையும் ததும்பக் கூறும் போது இலக்கியங்களாக அவை உருவாகின்றன. இவ்வாறு ஆரம்பக் காலகட்டங்களில் ஏட்டில் எழுதாது செவிவழியாகப் பேணப்பட்ட இலக்கிய வடிவங்களை நாம் நாட்டாரியல என்கின்றோம். அவை இன்றும் பயன்பாட்டிலுள்ளமை காணக்கூடியதாக உள்ளது. விதிகள், நியதிகள் என்பவற்றிற்கு அமைய ஏட்டில் எழுதப்படும் இலக்கியங்கள் ஏட்டிலக்கியங்கள் என ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

உலகில் இன்று பயன்படுத்தப்படும் மொழிகள் தமக்கெனத் தனித்துவமான தழுவல்கள் நிறைந்ததுமான இலக்கிய வடிவங்களைக் கொண்டுள்ளன. ஆனாலும் ஒரு மொழியின் சிறப்பு என்பது அம்மொழியில் எழும் இலக்கியங்கள் மூலம் தீர்மானிக்கப்படுவதோடு உலகில் ஒரு தனித்துவத்தைப் பெற முடிகிறது. அவ்வகையில் எம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் எழுந்த இலக்கியங்கள் உலக அரங்கில் தமிழின் சிறப்பைப் பேண அடிப்படையாக அமைந்துள்ளன.

இலக்கியங்கள் என்பவை காலத்தின் கண்ணாடிகள். அவை தோன்றும் சந்தர்ப்பத்தை அவை கூறும் கருத்துக்கள் ஊடாக அனுமானிக்கக்கூடியதாக உள்ளதற்குக் காரணம் அவைகாலக் கண்ணாடிகளாக அமைவதனால் என்றால் மிகையாகாது. இவை எம் தமிழ் மொழிக்கும் விதிவிலக்கானது அல்ல. காரணம் எம் தாய் மொழியில் ஆரம்ப கால இலக்கியங்கள் சங்கங்கள் ஊடாகச் செம்மையாகப் பேணப்பட்ட இலக்கியங்கள் உண்மையில் தற்கால வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டி நிற்கின்றன. அவ் இலக்கியக் கருத்துக்களை நாம் அகம் சார்ந்தவையாகவும் புறம் சார்ந்தவை யாகவும் நோக்குவதற்குக் காரணம், அக்கால கட்டத்தில் நிலைகள், நிகழ்வுகள், அம்சங்கள் அவ் இலக்கியங்கள் மூலம் வெளிப்பட்டுநிற்கின்றன. இவ் அடிப்படையில் மாற்றங்கள் மூலம் மாற்றமடைந்து மொழிநடை, கருத்து என்பவை சீர்திருத்தம் அடைந்து இலக்கியங்கள் தமிழ் மொழியில் உருவாக்கம் பெறுகின்றநிலை இன்றுவரை தொடர்ந்து கொண்டுள்ளது,

உண்மையில் தமிழ் மொழியின் இன்றைய மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைந்தவிடயங்களுள் இலக்கியத்துறையின் மாற்றங்களைக் காரணகர்த்தாவாக நாம் நோக்கினாலும் உலகியலின் நிலை அதன் மாற்றங்கள் உலக மொழிகளிலும் அதன் இலக்கியங்களிலும் பாரிய செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. இதன் அடிப்படையில் உலகியலை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய உருவாக்கம் எம்மொழியில்

மாற்றம் பெற்றுள்ளது. இவ்வாறான நிலை உண்மையில் தமிழ் மொழிக்கும் அதன் செம்மைக்கும் ஆரோக்கியமாகக் காணப்படுகின்றதா அல்லது பங்கம் விளைவிக்கின்றதா எனச் சீர்தூக்கிப் பார்த்தால் சாலச்சிறந்ததே.

வெண்பாவடிவிலும் விருத்தப்பாக்களிலும் உருவாக்கம் பெற்ற இலக்கியங்களின் சிறப்பு, பொருள் என்பவற்றை நான் அறிய அல்லது நயக்க முற்படும் போது அவற்றின் மொழிநடை எமக்கு உண்மையில் சில தடைகளை ஏற்படுத்தியுள்ளன. உண்மையில் அவற்றிற்குப் பொருள் கொள்வதில் கூட பல வாதப்பிரதிவாதங்கள் அறிஞர்கள் இடையே ஏற்பட்டுள்ள நிலையில் அவற்றை நயக்க முற்படும் பாமரர்களின் நிலை கேள்விக்குறியானதேயாகும். எனினும் இவ்வடிவங்களில் இருந்து தமிழ் இலக்கியங்கள் மாற்றம் பெறுவதற்குப் புரட்சி ஒன்றை இலக்கிய வடிவில் ஏற்படுத்திய பெருமை உண்மையில் வ.வே.சு.ஐயரைச்சாரும். காரணம் தமிழ் இலக்கியங்களினுள் அவர் புகுத்திய சிறுகதை வடிவம் மேற்குநாட்டுத் தழுவலாக அமைந்தாலும் இன்றைய இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. மேலும் உருவாகியுள்ள புதுக்கவி வடிவங்கள் உண்மையில் தமிழ் இலக்கிய வடிவில் பாரிய செல்வாக்குச் செலுத்தி நிற்கின்றன.

இன்றைய தமிழ் இலக்கியங்களின் நிலை எனும் உண்மையில் எமக்கு கூறுவது, அதன் போக்கு, அதன் கருத்தம்சங்கள், அவற்றின் சமூகச் செல்வாக்கு என்பவற்றையே ஆகும். அவ்வகையில் இன்றைய தமிழ் இலக்கியங்கள் அவலங்களின் சித்திரிப்பே. காரணம் உண்மையில் இலக்கியங்கள் பிரதிபலிப்பவை அக்காலத்தின் நிலைமைகளையே. எனவே இன்று எழும் இலக்கியங்கள் அப்பணியைச் செம்மையாகச் செய்கின்றன.

தமிழில் இன்று எழும் இலக்கியங்களிற்குப் பலவீனமாகப் பொருளாதாரம் காணப்படுகின்றது. இதனால் நன்மையைக் கூறும் நல் இலக்கியங்கள் நலிந்து செல்கின்றன. மாறாகப் பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. பணம் எனும் சங்கிலி கொண்டு இலக்கியவாதிகளின் கைகளும் நாவும்கடிவாளமிடப் பட்டுள்ளன. அறிவைத் தந்து அறியாமையை நீக்கும் இலக்கியப் படைப்புகளுக்குப் பதிலாக அறிவை மயக்கி உண்மையை மறுதலிக்கும் இலக்கியப் படைப்புக்கள் சில உருவாவது தமிழ் இலக்கியத் துறைக்குக் கரும்புள்ளியே.

செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பு, தமிழ் அன்னைக்கு அணிகலன் களாக அமைந்த இலக்கியங்கள் மூலம் மெருகூட்டப்பட்டன. அவ் அரிய பணியை இன்றைய இலக்கியங்கள் செய்வதை ஊக்குவிப்பது இலக்கியவாதி களாலும் அறிஞர்களாலும் ஒட்டு மொத்த

தமிழ் பேசும் மக்களதும் கைகளில் உள்ளது. எனவே எம் தாய்மொழியின் சிறப்பை உலகுக்குணர்த்த சிறந்த ஓர் ஆயுதம் இலக்கிய வடிவங்களே. எனவே எம் தாய்மொழி தமிழின் சிறப்பை நல் இலக்கியங்களின் கண் உயர்த்திட முனைவோம்.

புனிததயாபரன்.திருமாறன்

தரம் - 11A

## கல்வி

கல்வி அது தான் அழியாத செல்வம்
அதை நாம் தேடிக் கற்றிடுவோம்
நித்தம் அதனை நிறைவாய்க் கற்று
வாழ்வில் உயர்வைக் கண்டிடுவோம்

இளசுகள் நாமும் நன்றாய்க் கற்று
"இளமையிற் கல்வி சிலையில்
எழுத்து" என்றே
அறிவைப் பெருக்குவோம்

இளமை முதலே கற்றலிற் தேர்ந்து
புகழ் அதனைப் பெற்று
கல்வியின் பயனை அனைவரும்
அறிந்தே கனவுடன்
அதனைக் கற்றிடுவோம்
கற்றதைக் கொண்டு வாழ்வில்
நாமும் பணிவாய் நடந்திடுவோம்.

கல்வி அறிவால் எட்டுத்திக்கும்
கல்வி எனும் ஒளியைப் பெற்றே
நாமும் மிளிர்ந்திடுவோம்
அழியாச் செல்வம் நிறைவாய்ப்
பெற்றுப் பயனை நாமும்
அடைந்திடுவோம்.

சி.கணாதரன் தரம் - 6A

## சமயமும் வாழ்வும்

**"சமயமும் வாழ்வும் இணைந்திட்ட போது தான் உலகம் பிரகாசிக்கின்றது"** என்பது ஒரு கவிஞனின் கூற்று. உண்மை தான் சமயமும் வாழ்வும் இணைய வேண்டும். அதாவது நகமும் சதையும் போல ஆக வேண்டும். அப்போதே வாழ்வில் ஒளி உண்டாகும். மனம் தூய்மை அடையும். நம்பிக்கை உருவாகும். உண்மைகள் புரியும். அதற்காக மூட நமபிக்கைகளில் மூழ்குமாறு கூறவில்லை. உண்மைகள் கண்டு, தெளிந்து, அதன் வழி நின்று ஒரு ஒழுங்கில் ஒழுகுதலே வாழ்வு. சமயம் எனும் போது அது ***"வழி"*** எனப் பொருள் படும். ***"இறைவனை அடையும் வழி"*** என்று கூறுவர். அறிஞர், இரண்டும் உன்னத வழிகள் என்பர். உண்மையைத் துலங்கச் செய்யும் பாதைகள் இரண்டும் இணைகின்ற போது உலகம் ஓங்கும்.

சமயம் என்கின்ற ரீதியில் பார்க்கின்ற போது உலகிலே எத்தனையோ வகைச் சமயங்கள் இருக்கின்றன. அவைகளுள் பல வேத ஆகமங்களைக் கொண்டவை ஆயினும் அவை ஒன்றைத்தான் கூறுகின்றன. அதாவது அச்சமயங்கள் இறைவனை அடையும் வழியைக் கூறுகின்றன. அதாவது அவற்றில் பல கிளையாறுகள் உள்ளன. அவை யெல்லாம் ஓடியோடி இறுதியிற் சங்கமிக்கும் இடம் கடலே ஆகும். அதே போன்றுதான் இந்தச்சமயங்களும் பலவுள்ளன. அடையுமிடம் இறைவனின் பாதங்களே. "வாழ்க்கை என்பது வாழ் வதற்கே". ஆம் வாழ்க்கையைச் சிலர்

சீரழிக்கின்றார்கள. அதாவது நாங்கள் வெளிச்சத்துக்குச் செல்கின்றோம் என விட்டிற் பூச்சிகளைப் போல விளக்கின் நெருப்பில் விழுந்து கருகுவது போல வாழ்கின்றனர். இது நிதர்சனம். விட்டிலைப் போன்றவர்களுக்கு உண்மையை உணர்த்தவும், துன்பமுற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லவும், அன்புப்போதையில் இருப்பவர்களுக்குப் போதையைத் தெளிவிக்கவும்இந்தச்சமயம் பயன்படுகிறது.

உண்மையிலே வாழ்வதற்கு உரமூட்டுவது சமயம் தான். "யானைக்குத் தும்பிக்கை போல மனிதனுக்கு நம்பிக்கை" என்று கூறுவது சமயம் தான், சோர்வுற்றிருப் பவனுக்குத் தட்டிக் கொடுப்பது சமயம் தான். இதனால் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்ற பயத்தில் வாழ்கின்றான். இதனைக் கண்டு பிறர் பாவம் செய்யாமல் வாளாதிருந்து விடுவர். "பிறப்புண்டேல் இறப்புண்டு" என்றும், அதாவது ஒளி உண்டெனில் இருளும் உண்டு என்று சமயம் கூறிய நிலையாமையை அறிவுறுத்தி மக்களை நிலையான காரியம் செய்யத் தூண்டுகின்றது. சமய நூல்கள் இதற்குப் பேருதவி செய்கின்றன. வேதங்கள், ஆகமங்கள், பைபிள், திருக்குறள், நாலடியார், திருக்குர்-ஆன் என்று அவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவை அறத்தை, தர்மத்தை, நியாயத்தை, வாழ்வை, அதற்குகந்த நல்லவற்றைக் கூறுகின்றன. இதனால் மனிதவாழ்வு வளம் பெற உதவுகின்றது.

ஆகவே இந்தச் சமயம் என்பது வாழ்விற்கு முக்கியமானது என்பது, முடிந்த முடிபு. இந்தச் சமயமும் வாழ்வும் பிரிக்க முடியாதவை. அதாவது இரத்தமும் நீரும்
போல, நகமும் சதையும் போல, என்று கூறலாம். எது எவ்வாறிருந்த போதிலும் மனிதன் இந்தச் சமயத்தின் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றான். உண்மை களை உணர்கின்றான். ஒரு ஒழுங்கிலே வாழ்கின்றான். நல்லுள்ளம் அவர் களுக்கு ஏற்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே வாழ்விற்குச் சமயம் முக்கியம். சமயமும் வாழ்வும் இன்றியமையாதது.

ச.யதுகுலன்

தரம் 11 A

## உலகின் பெரிய பாலைவனங்கள்

| | |
|---|---|
| சகாரா | - ஆபிரிக்கா |
| கோபிமங்கோலியா | - சீனா |
| படகோனியா | - தெற்குஆர்ஜென்ரீனா |
| விதலஹாரி | - தென்னாபிரிக்கா |
| கிரேட்சாண்ட் | - மேற்குஅவுஸ்திரேலியா |
| சிஹுவாஹுவா | - மெக்சிக்கோ |
| தக்லிமாகான் | - சீனா |
| தார் | - இந்தியா |

## உலகின் உயரமான சிகரங்கள்

| | |
|---|---|
| எவரெஸ்ற் | - நேபாளம் திபெத் |
| காட்வின் ஆஸ்டின் | - இந்தியா |
| கஞ்சன் ஜங்கா | - இந்தியா, நேபாளம் |
| மகாலு | - நேபாளம், திபெத் |
| தவளகிரி | - நேபாளம் |
| மெக்கன்லி | - அமெரிக்கா |
| அக்கோனாக்குவா | - ஆர்ஜென்டீனா |
| கிளிமஞ்சா ரோ | - தன்சானியா |
| மெயின்பிளாங் | - பிரான்ஸ், இத்தாலி |
| வின்சன் மாஸில் | - அந்தாட்டிக்கா |

சு.விஜிதா

தரம் - 8A

## சமூக சேவை மூலம் சாரணிய அபிவிருத்தி

சாரணியம் என்பது கல்வி சம்பந்தமான ஓர் இயக்கமாகும். இளம் சிறார்களைத் தன்னம்பிக்கை உடையவர்களாகவும், சமூகத்திற்குத் தொண்டாற்றக் கூடியவர்களாகவும், தேசப்பற்றுள்ளவர்களாகவும் பொறுப்பு ணர்ச்சி உள்ளவர்களாகவும் ஆக்குவது சாரணியம். இதனால் அபிவிருத்தியை மேற்கொள்ளலாம். ஒவ்வொரு சாரணியனும் விசுவாசமாக ஒரு நற்சேவையை நாளும் சமூகத்திற்குச் செய்பவனாகத் திகழவேண்டும். இத்தகைமை சாரணியனிடம் திகழும் என்பதில் எதுவிதஐயமுமில்லை.

சாரணியரின் செயற்பாடுகள் யாவும் செயற்றிறன் மிக்கதாகவும் அமைய வேண்டும். அதன் மூலம் அவன் சமூகத்தில் உயர்ந்தவனாக மாறுகின்றான். சமூக சேவை என்பது வெறுமனே வீடு வீடாகச் சென்று எதாவது பணி புரிந்து அதன் மூலம் பெறும் பணத்தைக் கொண்டு சாரணியத்தை அபிவிருத்தி செய்வது மட்டுமல்ல, சாரணியத்தின் ஊடாக இளம் சிறார்களின் மனங்களிலே சேவை மனப்பான்மை பற்றிய எண்ணக் கருத்துக்கள் சமூகத்தில் பதிக்க வேண்டும். இதனூடாகச் சாரணியம் அபிவிருத்தியடையும்.

சமூக சேவை என்பது உடல் உழைப்பால் பணிபுரிவது மட்டுமல்ல முதியோருக்கு உதவுதல் நோயாளர்களைக் கவனித்தல், அன்பாகப் பேசுதல், வீதி ஒழுங்கு முறையை எடுத்துக் கூறல், முதலுதவிச் சிகிச்சையை வழங்குதல் முதலான பல சமூக சேவை களினூடாக ஒரு சாரணியனானவன் சாரணியத்தை அபிவிருத்தி செய்யலாம்.

அது மட்டுமல்ல சாரணனானவன் வெட்டவெளி வாழ்க்கை வாழ்வதிலும், சுய தேவைகளைத் தானே பூர்த்தி செய்யக் கூடியவனாகவும், சகல கலைகளிலும் தேர்ச்சியுள்ளவனாகவும், உலக அனுபவம் மிக்கவனாகவும், அவதான சக்தி நிறைந்தவனாகவும் சமூகத்தில் கால் பதிக்கின்றான். தான் எடுத்துக் கொண்ட எந்தக்காரியத்தையும் மனத்துணிச்சலோடு செவ்வனே நிறைவேற்றிக் கொள்கின்றான். இதன் மூலமாகச் சமூகத்திலே சிறந்த ஆளுமையுள்ளவனாக அதாவது தலைமைத்துவப்பண்பு மிக்கவனாகவும் சேவைமனப்பாங்கு உள்ளவனாகவும் உருவாகின்றான். இவ் ஆளுமையும் துணிவும் அவனைச் சமூகத்துக்கு அழைத்துச் சென்று பல கைங்கரியச் சேவைகளில் ஈடுபடச் செய்கிறது. இதன் மூலம் சமூக நன்னிலை அடைவதோடு சாரணியம் அபிவிருத்தி காண்கின்றது. அத்துடன் சாரணியமானது சமூக மத்தியில் பலராலும் பேசப்படுகின்றது எனலாம்.

இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள், எனவே நாளைய சமுதாயத்தை இன்றே கட்டியெழுப்பி வைக்கின்ற பெரிய செயற்பாடு நம் கையில் தான் உள்ளது.

சாரணன், தான் அடைந்த பயிற்சியினாலும் அயராத உழைப்பினாலும் எந்த வேளையும்

சமூகத்திற்குச் சேவை செய்ய ஆயத்தமாக இருப்பான் என்பது கண்கூடு.

*"இயன்றவரை திறமையாய் செய்"*

*"எதற்கும் தயாராக இரு"*

*"பரந்த நோக்கு"*

என்ற மகுட வாக்கியங்களுக்கு இணங்க நாம் சமூக சேவையே நம் சேவை எனக் கொண்டு உழைத்தால் சாரணியத்தை அபிவிருத்தியடையச் செய்யலாம். ஆகவே சாரணர் ஆகிய நாம் சமூக சேவை செய்து சாரணியத்தை அபிவிருத்தி அடையச் செய்வதோடு பேடன்பவல் பிரபுவின் நோக்கத்தையும் இந்நாளில் நிறை வேற்றுவோமாக.

வாழ்க சாரணியம்!

வளர்க சாரணர் சேவை!



செல்வன்.க.இதயராஜ்

தரம் 13 கலைப்பிரிவு

## உள்ளம் கசிந்த உணர்வுகள்

கல்விப்புலத்திலும் புற பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைகள் பல புரிந்து, சரித்திரம் படைத்து, வெற்றிப்புன்னகை சிந்தி நிற்கும் மகாஜன மாதா அகவை நூறில் அடியெடுத்து வைக்கும் பொன்னாளை எமது கல்லூரிச் சமூகம் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் வேளை இது. சதம் அடித்துச் சாதனை புரியவுள்ள ஒரு துடுப்பாட்ட வீரனைப் போல இப்பொழுது மகாஜன மாதா கம்பீரமாகக் காட்சி யளிக்கின்றாள்.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது ஔவையின் முதுமொழி ஆகும். மாதா பிதா குரு மூவரையும் தெய்வங்களாகப் போற்றும் பண்பாட்டில் தோய்ந்தது தான் எமது சமூகம் என்பது யாவரும் அறிந்ததே. குருவெனும் தெய்வம் கொலுவீற்றிருக்கும் பாடசாலையை ஒரு ஆலயம் என்று கூறுவதே சாலவும் பொருந்தும். இதனாற்றான் பாடசாலையை வித்தியாலயம் என்றும் அழைக்கின்றனர் அறிவும் ஒழுக்கமும் கல்வி என்னும் நாணயக்குற்றியின் இருபக்கங்களாகும். எனினும் சீலமே எம் வாழ்விற்கு செழுமையூட்டி நிற்கின்றது.

'The crown and glory of life is character' என்ற ஆங்கிலப் பொன் மொழியும் வள்ளுவரின்

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்"

என்னும் திருக்குறளும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

கண்ணெனத்தகும் எண்ணொடு எழுத்தையும் ஏற்றந்தரும் ஒழுக்கத்தையும் கடமையுணர்வும், கருணை பொங்கும் உள்ளத்துடனும் எமக்கு ஊட்டுகின்ற துறை தோய்ந்த ஆசிரியர்களும்,

மாணவர்களின் வருங்காலத்திற்கு வளமூட்டுவதையே தனது இலட்சியமாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் கடமை புரியும் ஆற்றலும் அனுபவமும் மிக்க எமது அதிபரும் எங்கள் கல்லூரிக்கு இறைவன் கொடுத்த இனிய கொடைகள் எனலாம்."உனை நீ அறி" என்ற எமது கல்லூரியின் விருது வாக்கியம் உத்வேகம் அளிக்க, அனைத்துத்துறைகளிலும் புதுமை புரிந்து சாதனை படைத்து நிற்கும் மாணவ மணிகள் எங்கள் கல்லூரியின் பெறுமதிமிக்க சொத்துக்கள் என்றால் அது மிகையாகாது.

மகாஜன மாதாவால் பரந்த அறிவுடைய பண்பாளராக உருவாக்கம் செய்யப்பெற்று, இன்று உலகின் பல பாகங்களிலும் பரந்து செறிந்து செல்வச் செழிப்போடு வாழும் நன்றிமறவாத பழைய மாணவர்கள் நிதியுதவி புரிந்து கல்லூரியன்னையின் பொலிவு குன்றாது பேணிக்காத்து நிற்கின்றமையே அன்னையின் சீரிளமைத் திறனுக்குரிய காரணம் ஆகும்.

புகழ் பூத்த மகாஜனக் கல்லூரியில் நுழைந்து ஆறாம் வகுப்பு முதல் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததைப் பெரும் பேறாக நான் கருதுகின்றேன். இன்று இக்கல்லூரியின் சிரேஷ்ட மாணவ தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டு மாணவிகள் மத்தியில் ஒழுங்கு, கட்டுப்பாடு பேணும் பொருட்டு ஒரு வழிகாட்டியாக இலங்கும் வண்ணம் கல்லூரித்தாயால் நான் வடிவமைக்கப்பட்டமையை எண்ணி உவகையடைகின்றேன்.

வாய்மை, நேர்மை, நன்றி மறவாமை, காலந் தவறாமை போன்ற பல நன்னடத்தைகளும், தோல்விகளைத் தாங்கிக் கொள்ளும் மனோபலமும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும், உதவி புரியும் மனவிருப்பும் கல்லூரி அன்னையால் காலம்காலமாகப் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன. நெறி தவறுபவர்களையும், தவறிழைப்பவர்களையும் தண்டிக்காது கனிவோடு புத்திமதி உரைத்து நேரிய வழியிற் செலுத்தி மேன்மையுற வைக்கும் மனித நேயமிக்க புனிதப்பணிபுரியும் எமது ஆசிரியர்கள் சமுதாயத்தின் சிற்பிகள் என்ற புகழாரம் சூட்டப்பட வேண்டியவர்கள்.

மகாஜன மாதாவின் புதல்வர்கள் அனைவரும் புன்னகை சிந்தி இன்சொல் பேசி சகோதரத்துவ உணர்வு மேலிடும் உள்ளத்துடனும் தன்னம்பிக்கையுடனும் ஒன்று பட்டு ஓயாது உழைத்து வெற்றி மேல் வெற்றியீட்டிச் சாதனைகள் பல புரிந்து, அறிவும் ஒழுக்கமும் நிரம்பிய நற்பிரஜைகளாக வளர்ந்து உலகம் போற்றும் உத்தமர்களாக வாழ்வாங்கு வாழ சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமான் என்றென்றும் அருள் கூட்டி நிற்பாராக.

வாழ்க! மகாஜன மாதாவின் புதல்வர் புதல்வியர்

வளர்க! மகாஜன மாதாவின் புகழ்

செல்வி.லக்ஷியா. சிவகுமாரன்
சிரேஷ்ட மாணவ தலைவி

## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஒரு மகாஜனனின் விஜயம்

*(ஒரு கலாசாரத்திலிருந்து இன்னொரு கலாசாரத்திற்கு - வாழ்க்கைப்பாடம்)*

பாடசாலைக்குக் கைகாட்டி, படலை விட்டு வெளியேறி, பார்த்தீபன் வீட்டில் ஈருருளி தரிக்கவிட்டு ஆசிரியரின் உந்துருருளியில் ஏறியதும் பயணம் தொடங்கியது. சக்கரம் சுழலும் வேகத்தில் காலத்தின் நேரமும் கரைந்தது குறித்த சில நேரத்தில் சக்கரத்தின் வேகம் குறைந்தது யாழ்ப்பாணக் கல்லூரி வரவேற்று நிற்கின்றது.

தெரிந்த சில முகங்கள், தெரியாத பல முகங்கள் அனைவரும் கைகுலுக்கி இன்முகத்தால் புன்முறுவல் செய்தனர். எனினும் சில நிமிடம் காத்திருப்பு 1.30 மணிக்குத் தான் மதிய போசன விருந்து மண்டபத்திற்குச் சென்றோம். எங்களைப் பொறுத்தவரை தான் காத்திருப்பு. ஆனால் அது அவர்களின் மகிழ்ச்சிக்கான நேரம். நட்பு என்னும் குடையின் கீழ் நண்பர்களாய்ச் சிலர் சிரித்தும் கதைத்தும், பலர் புகைப்படங்களுக்கு முகபாவனை கொடுத்தும், இன்னும் சிலர் புது நண்பர்களுடன் புன்னகையாய்க் கதைத்தும் பூரிப்படைந்தனர். இந் நிகழ்வானது எனது வாழ்வில் வித்தியாசமானதும் மறக்கமுடியாததுமாக என் அடி மனதில் பதிந்திருக்கிறது. இனிய நட்புக்காற்று என்னையும் இழுத்துச் சென்றது சில நிமிடத்தில் பல நண்பர்கள் மகரந்தத்தை சுற்றிய பட்டாம் பூச்சிகளாய் என்னுடன்.

ஒன்றரைமணி ஒருவாறாக ஆகியது. ஓரிடத்தை நோக்கி அனைவரும் (1.30) சென்றோம். இரண்டுமாடிக் கட்டிடத்தில் மேல்மாடிக்குச் செல்லும் படிகளின் முகப்பில் ஓர் சுவரில் ஓர் பட்டியல் தொங்கிக் காணப்பட்டது. கிட்டத்தட்ட (1x1) சதுர மீற்றர் பரப்பில், கண்கள் கூர்ந்து நோக்கின. A,B,C........ எனப் போதுமானவரை ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுத் தலையங்கமாய் இருந்தன. ஒவ்வொரு எழுத்தின் கீழும் பல விடயங்கள். சில மாணவர்களின் பெயர்கள் இருந்தன. சில பாடசாலைகளின் பெயர்கள் இருந்தன. சில ஆசிரியர்களின் பெயர்கள் இருந்தன. எனினும் புதிராகவே இருந்தது. எனினும் ஒருவாறாய் எமது பெயரைத் தேடினோம் கிடைக்க வில்லை. எமது பாடசாலைப் பெயரைத் தேடினோம். W தலைப்பின் கீழ் மகாஜனா 1 எனவும் T தலைப்பின் கீழ் மகாஜனா 2 எனவும் இடப்பட்டிருந்தது. எமது ஆசிரியரும் ஏனைய ஆசிரியருடன் சேர்ந்து உள்வந்தார். நாம் இருவரும் ஒருவாறாய்ப் படிகளில் ஏறி மேல்மாடியடைந்தோம். எமது பாவலர் மண்டபம் போல் பாரிய மண்டபம் அது. மின்னிகளால் கோர்க்கப்பட்ட மாலை மின்சார விளக்கின் ஒளிபட்டு மின்னியது. கூட்டம் கூட்டமாகப் பல மேசைகளும் சுற்றிவரப் பல கதிரைகளுமாய்க் காணப்பட்டன.

மண்டப மேடையில் திரைமூடப் பட்டிருந்தது. மேடைக்கு முன்னால் கீழே ஒரு நீண்ட மேசையும் அதில் சில கதிரைகளும் காணப்பட்டன. அருகே ஒரு பேசுபவர் நின்று பேசும் தாங்கியும் அதன் முன்னால் இரு "மைக்" உம் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன.

எப்படியோ சுற்றிவட்டமடித்துக் கொண்டிருக்கும் போது மேசையின் நடுவில் மட்டைதாங்கியில் எழுதப்பட்ட W,T எழுத்துக்கள் வெவ்வேறு திசைகளில் உள்ள வெவ்வேறு மேசைகளிற் தென்பட்டன. நண்பன் W இல் அமர்ந்து கொள்ள, நான் சற்றுத் தூரம் சென்று W இடப்பட்ட மேசைக் குழாமை நெருங்கினேன். "மகாஜனாவா?" ஒருவரின் கேள்வி எனக்கு நிம்மதி யளித்தது ஏனெனில் அதுவரைக்கும் என்னுடைய ஆசனம் மட்டும் தான் காலியாக இருந்தது. என்னுடைய ஆசனத்தில் சாயும் பலகையில் 'Mahajana-02" என வெள்ளைத் தாளில் கணனிப் பிரதியின் கறுத்த எழுத்துக்கள் பதிந்திருக்க ஒட்டப் பட்டிருந்தது. அவ்வெள்ளைத்தாள் கிட்டத்தட்ட எமது தாவரவியல் அறையின் திறவுகோலின் பெயர்ச்சுட்டி அளவிற் காணப்பட்டது.

நான் கதிரையில் அமர்ந்து கொண்டேன். நட்புவட்டாரங்கள் மொய்த்துக்கொண்டன. ஒருவரை ஒருவர் பெயர் கேட்க நட்பு அறிமுகமாகியது. நண்பர்களுடன் மட்டு மல்ல ஆசிரியர்களுடனும் நன்றாகப் பேசினோம். நகைச்சுவை செய்தோம் நமக்குள் நாமே.

மேசையின் நடுவில் உள்ள யானை என்கண்ணில் பதிந்தது. நிஜமான யானையா? நம்பமுடிய வில்லை. அவ்யானை கத்தரிக்காயால் உடம்பும், வெங்காயத்தால் முகமும், மிளகாயால் தும்பிக்கையும், லீக்ஸ் ஆல் வாலும் பயிற்றங்காய் கால்களும் செய்யப்பட்டு, கவிழ்த்து வைக்கப்பட்ட பிளாஸ்டிக் கோப்பையின் கீழிலிருந்து துளைத்து வந்த கூரான கம்பியில் தாங்கி நின்றது. மேசையில் பெரிய "றே" இல் புரியாணி சோறு மஞ்சள் நிறத்திலும் ஆங்காங்கே முந்திரிகை வற்றலும், இன்னும் சில சிவப்பு, பச்சை, பொருட்களும் கலந்து மசாலா வாசனை மூக்கைத் துளைத்தது. இன்னொரு கிண்ணத்தில் பருப்பும் காணப்பட்டது. ஒவ்வொருவருக்கும் முன்னால் வெள்ளைத்தாள் இரண்டு முக் கோணமாக மடித்துக் காணப்பட்டது. சிறிய குவளைக்குள் செம்மஞ்சள் நீர் எட்டிப்பார்த்தது. விழா நிகழ்ச்சி நிரல் அட்டவணை மூன்றாக மடித்து முக்கோணமாக்கி நிமிர்ந்து நிற்க அதன் நடுவே உள்ள நிலைக்குத்து வெளியில் மென்பான உறிஞ்சிக் குழாய் நிமிர்ந்து நின்றது. மேசை முழுவதும் இடைவெளி தெரியாது பொருட்கள் பரவியிருக்க இருந்த சிறிய இடங்களிலும் கரண்டிகள் பரவி வைக்கப்பட்டன. ஒவ்வொரு வருக்கும் மூன்று கரண்டிகள் அதில் ஒன்று முள்ளுக்கரண்டி. எதுவும் புரியவில்லை. இவற்றையும் இடை யிடையே கவனித்துக் கொண்டு

அவர்களுடன் கதையில் மூழ்கினேன்.

"அனைவரையும் வரவேற்றோம்" என்ற பொருள்பட ஆங்கில வார்த்தைகள் அருகிலுள்ள ஒலிப்பெட்டியில் (Box)' இருந்து ஒலித்தது. திரும்பிப் பார்த்தேன். மேடைக்குக் கீழே ஒழுங்கு படுத்தப்பட்ட இடத்தில் நடு உச்சி பிரித்த தலை உடைய சுமாரான உருவம் நிற உடை அணிந்து அதன் மேல் கோட் அணிந்திருந்தார். அம்மாணவன் தான் தலைவர் என்பது விரைவிற் புரிந்தது. அதே இடத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட (மேடையின் கீழ்) இருவர் உட்காந்திருந்தனர். ஒருவர் பாடசாலை அதிபர், மற்றையவர் பாதிரியார்.

நான் செந்நிற மென்பானத்தை அருந்திக் கொண்டு செவிமடுத்துக் கொண்டேன். பாதி ஆங்கிலம் புரிந்தது. பாதி ஆங்கிலம் புரியவில்லை. ஆனால் சிறந்த ஆங்கிலத்தின் உச்சரிப்புடன் அம்மாணவன் தொடர்ந்து பேசினான் ஆங்கிலத்தின் அருமை இன்றுதான் புரிந்தது. அடுத்ததாக ஒரு மாணவி அதே உச்சரிப்புடன் தொடர்ந்தாள். "2008 பிரிவு" மாணவர்கள் விளையாட்டிலும், கல்வியிலும் வேறுபல நிகழ்வுகளிலும் வலயம், கோட்டமட்ட நட்சத்திர வெற்றிகளையும் குறித்த மாணவர் களின் பெயர்களையும் அடுக்கிக் கொண்டே சென்றார். அத்தனை பேருமா.........................

உரை முடியும் வேளையில் அதே ஒலிப்பெட்டியில் இருந்து ஆங்கில மெல்லிசை ஒலிக்கப் பல மாணவர்கள் கோப்பையுடன் சேவகராய் வந்தனர். அவர்கள் தரம் 11 படிக்கும் மாணவர்கள் எனக் கூறினார். அவர்கள் பாடசாலை உடையில் பாடசாலைக் கழுத்துப்பட்டி அணிந்திருந்தனர். மேசையைச்' சுற்றிப் பத்துக் கதிரைகள் அகலம் குறைந்த மேசைப்பகுதியின் எதிர் எதிராக இரு ஆசிரியருமாய் மூன்று பேர். எதிர் முனைகளில் ஒருபக்கம் 3 பெண்களும் மறுபக்கம் 4 ஆண்களுமாய் அமர்ந்திருந்தோம் அதில் நானும் ஒருவன்.

தூள் நிறத்துடன் வெள்ளை கலந்த இடையிடையே சிறிய கோவாத் துண்டுகள் இடப்பட்டு எண்ணைத் துளிகள் மிதக்கின்ற நீர் கோப்பையைக் கொண்டு வந்தார்கள். முன் இருந்த எனக்கு முதல் கோப்பையை நீட்டினார்கள். நான் வாங்கத் தயங்கினேன். கை கழுவுவதற்காக இருக்குமோ என நான் மனதிற்குள் எண்ணிக் கொண்டேன். மற்றவர்கள் வாங்க நானும் வாங்கிக் கொண்டேன். அடுத்ததாக கிறீம் கிறாக்கர் பிஸ்கட் ஒவ்வொன்றாக அனைவரும் எடுத்துக் கொண்டோம். என்ன செய்வது எனப் புரியவில்லை எனக்கு மட்டுமல்ல, அப் பாடசாலையில் படிப்பவர்களுக்குக்கும் கூட.

ஆசிரியர் "இதை ஒரு கரண்டியால் எடுத்து பிஸ்கற்றைக் கடித்து மாறிமாறி உண்ணவேண்டும் என்றார்". சாப்பிடத்தானே வந்தோம் எனத் தொடர்ந்தார் புன்னகையாக.

அவர் ஒரு பெண் ஆசிரியர். சும்மா இருப்பவனுக்கு "சுசுக்கி" வேறு கிடைத்து விட்டால் சொல்லவும் வேண்டுமோ? அதிபரின் வார்த்தைகளை நினைத்து வெட்டத் தொடங்கினேன். அத்திரவம் வேறு எதுவுமல்ல தாவர "சூப்" என இன்று தான் புரிந்தது. சில நேரத்தில் அக்கோப்பையும், கரண்டியும் அகற்றப்பட ஒரு வெள்ளைத் தாளால் வாயைத் துடைத்துக்கொண்டேன். இம்மட்டுமா? மீதமான இரண்டு கரண்டிகளைப் பார்த்ததும் விசயம் இருக்கு என விளங்கி எனக்குள்ளே சிரித்துக்கொண்டேன்.

சொல்லி வைத்தது போல் கோப்பையுடன் வந்தவர்கள் எல்லோருக்கும் பரிமாறினார்கள். கோப்பையின் விட்டத்திலும் 3cm குறைவான விட்டத்தில் மஞ்சள் சோறு மலர்ந்து இருந்தது. சுற்றி வரப் பல வகைகள் முழு முட்டை அவித்து வைக்கப்பட்டிருந்தது. இறைச்சிக்கறி, வெங்காயச் சம்பல் நீண்ட கத்தரிக்காய்த்துண்டும் உருளைக் கிழங்கு துண்டும் பொரிக்கப்பட்டு சிறிது இனிப்பு சுவை கலந்துகாணப்பட்டது. ஒரு கறி, ஓட்டை போடாத வடை காணப்பட்டது அதன் மேல் பரப்பு "ரோல்" போலக் காணப்பட்டது. எல்லாவற்றின் மீதும் முள்ளுக் கரண்டியும் உண்ணும் கரண்டியும் நடனமாட கோப்பை வெறுமை ஆகிக்கொண்டு போனது. உண்ணும் போது தான் தெரிந்தது ஓட்டை போடாத வடைக்குள் மீன் காணப்படுவது. பெண் ஆசிரியர்களே இரு தடவை போட்டு வெட்டும் போது நான் சும்மா இருப்பேனா? நான் மட்டுமல்ல எல்லோரும் தான். ஒருவாறாக எல்லாம் அகற்றப்பட மேசை வெளித்தது. மற்ற வெள்ளைத் தாளால் வாயைத் துடைத்துக் கொண்டேன்.

ஆங்கில மெல்லிசைப்பாடல் மெதுவாக நின்றது. பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், அதிபர் அனைவரும் உணவு முடித்துத் தயாராக (பேச்சிற்கு) இருந்தனர். சிறப்பு விருந்தினருக்கு ஆசிரியர் மாணவருடன் சேர்ந்த இடத்தில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆங்கிலத்தில் விடுத்த அறிவிப்பை அடுத்து அவர் ஆசனத்தை விட்டெழுந்து "மைக்"அருகே சென்று பேசத் தொடங்கினார். பாதி ஆங்கிலமும் புரியவில்லை. எனக்கு மட்டுமல்ல பலருக்குமே இனித் தமிழில் பேசுகின்றேன் என்றார்.அனைவருக்கும் முகத்தில் தெம்பு. அவருக்கு விசயம் புரிந்ததால் தான் இப்படித் தமிழில் பேச தொடங்குகிறாரோ...... தொடர்ந்து கூறினார். □நான் Dr.மணிவாசகன் நான் பாதிப்பட்டம் தான் பெற்றிருக்கிறேன். மீதிப்பட்டம் பெறவில்லை. விரைவில் பெற்று விடுவேன். இந்தக் கல்லூரிக்காலம் வசந்தமானது. நான் ஒருமுறை 'E" grade எடுத்து விட்டேன். நீ உன் அப்பாவுடன் வந்தால் தான் உன்னை அனுமதிப்பேன் என்று பாடசாலையை விட்டு அதிபர்

விரட்டிவிட்டார். அப்பாவும் வரமறுத்து விட்டார். நானோ பாடசாலைக்குச் சென்றேன். நின்று தான் படிக்கவேண்டும் என்று தண்டனை கிடைத்தது நூறு நாட்களாய் வகுப்பறையில் நின்று தான் படித்தேன். அந்த நிலையில் ஏற்பட்ட ஓர்மம் தான் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது. இந்தக் கல்லூரிக் காலத்தை வீணடிக்காதீர்கள் கல்விக் காய் ஒதுக்குங்கள். இன்னும் 5 மாதங்கள் உண்டு என்பதை உணர்ந்தால் உங்களால் முடியும். முடியாதது எதுவுமே இல்லை. பின்பு ஆங்கிலத்திலே தொடர்ந்தார் அவ்வளவும் புரிந்ததே போதும் அப்பாடா.......................

அருட்தந்தை பாதிரியார் பேசத் தொடங்கினார் கடின ஆங்கிலம், பாதி என்ன முழுவதுமே புரியவில்லை. அவர் st. patrict's college அதிபர், இன்றைய சிறப்பு விருந்தில் பிரதம விருந்தினரும் கூட

அதிபர் பேச்சு தொடங்கியுது அதுவும் ஆங்கிலம் சிறிய சொற்கள் புரிந்தன எனினும் இடையிடையே "புரியவில்லையா" எனக் கேட்டுத் தமிழில் கூறுவதும் தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசுவதுமாக இருந்தார்.

இடையிடையே தமிழில் கூறிய சில ரொம்பவும் நகைச்சுவைதான்

"நான் ஒரு கதை சொல்கிறேன்" என தொடங்கினார். "இன்று அதிகாலை பல மாணவர்கள் விருந்துக்குப் போவதாகத் தம் பெற்றோருடன் கூறிச் சந்தோசப்பட்டுக் கொண்டிருந்தனர். தகப்பன் கேட்டார் நான் உனக்கு இறைச்சி வாங்கித்தாறேன் நீ ஏன் அங்கு போகிறாய் என்று. இல்லை அப்பா என்று இழுத்துக் கொண்டு சொன்னானாம், பெண்களுடன் சேர்ந்திருந்து' உண்ணலாம் என்று தந்தை சொன்னாராம் ஆகட்டும் ஆகட்டுமென்று. ஆனால் lunch முடிந்து சோகமாகவே வீடு திரும்பினானாம் ஏன் என்று அம்மா கேட்க மகன் சொன்னானாம். இடையிடையே வாத்திமாரையும் இருத்தி விட்டுட்டாங்கள் என்ன செய்வது என்று தெரியவில்லை என்றானாம்". ஒரே சிரிப்பு. மண்டபம் எங்கும் சிரிப்பொலி. உண்மையிலே சந்தோசமான விருந்து தான் இவற்றை அனுபவிக்க மிகச் சிலரே கொடுத்து வைத்தவர்கள்.

"இன்னொரு கதை சொல்கிறேன்." எனத் தொடங்கினார். "ஒரு மாணவன் திடீரென எழும்பி சமய பாட ஆசிரியரைக் கேட்டானாம்,"கடவுள் எங்கேயிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்! ஆசிரியருக்குப் புரியவில்லை எங்கே என்றார்? அவன் சொன்னானாம் எமது பாடசாலை அதிபர் வீட்டில் தான் என்று. ஏனென வியப்போடு ஆசிரியர் கேட்க அவன் சொன்னானாம் நான் 7.30க்கு அவர் வீட்டு வழியாகத் தான் பாடசாலை வருகிறனான் இன்றும் அவ்வாறே வரும் போது அவருடைய மனைவியினுடைய குரல் கேட்டது நான் கூர்ந்து கேட்டேன் எழும்புங்கப்பா,

எழும்புங்கப்பா இவருக்குக் கடவுளே! கருணை காட்டமாட்டாயா என்று மனைவி கூறினாள். ஆகவே அங்கே தான் கடவுள் இருக்கிறார்.

மீண்டும் மண்டபம் முழுவதும் சிரிப்பொலி அறுசுவை விருந்து, நகைச்சுவை விருந்து, நட்புக்களின் விருந்து அவை எல்லாம் கலந்த ஒரு சந்தர்ப்பத்தை தவறவிடுபவர்கள் தான் பாவம் என நினைக்கிறேன்.

"மீண்டும் ஒரு கதை சொல்கிறேன்" என்றார்." ஒரு வழியாக ஒர் இடையன் சென்று கொண்ருக்கும் போது பாதிரியார் எதிர்ப்பட்டார் பாதிரியாரைப் பார்த்து இடையன் கேட்டான் அஞ்சல் அலுவலகம் எங்கே என்று. பாதிரியார் பதில் கூறாமலே என்னுடைய கூட்டத்திற்கு நீயும் வருகிறாயா? நான் மோட்சத்திற்குச் செல்லும் வழியைச் சொல்லித் தருகிறேன் எனக் கூறினார். அதற்கு இடையன் இல்லவே இல்லை என்றான். ஏன் எனப் பாதிரியார் கேட்க, அவன் கூறினான் அஞ்சல் அலுவலகம் போகவே உமக்கு வழி தெரியவில்லை மோட்சத்திற்கு போக எப்படி வழி தெரியும்?

மீண்டும் சிரிப்பொலி பல நகைச்சுவைகள் தொடர்கிறது. இறுதியாக மீண்டும் கூறினார்." ஒரு கதை சொல்கிறேன்" ஒரு தகப்பன் மகனைப் பார்த்துச் சொன்னாராம் "நாளைக்கு உன்னை விருந்திற்கு அழைத்துச் செல்கிறேன் அங்கு ஆட்டின் தலையை முழுமையாக உண்ணலாம்" என்று. ஆட்டுத்தலை றோஸ் பண்ணி வைக்கப்பட்டிருந்தது சாப்பிட்டுக் கொண்டே மகன் தகப்பனைத் தட்டி மெல்லிய குரலில் கேட்டானாம், ஆட்டுத்தலை எப்போ வரும்" எங்குமே சிரிப்பொலிகள்.

அவர் தொடர்ந்து கூறினார்" நாங்கள் பலர் புத்தகக் கல்வியிலே இருக்கிறோம் செய்முறையாக எதையும் கற்பதில்லை பாடசாலை வசந்தங்களை விட்டுத் தனியார் நிலையங்களைத் தேடிக்கொண்டே இருக்கிறோம். அதுமட்டுமல்ல ரியூசனுக்குப் போவது என்பது கூட ஒரு நாகரீகமாக மாறிக் கொண்டிருக்கிறது. எப்படியோ இருக்கட்டும் கல்லூரிக் காலத்தைக் கோட்டை விட்டு, புகைவண்டியின் பின் பெட்டியில் எழுதப்பட்ட எழுத்தைப் பார்த்து மூச்சு விடும் நிலைக்கு வராதீர்கள் போன புகையிரதம் திரும்பி வராது.

மேலும் தொடர்ந்து கூறினார் இவ்விருந்து உங்களுக்கு ஒரு அனுபவம். நாளைக்கே தொழில் என்ற குடையின் கீழே பல கலாசாரங்களைச் சந்திக்கப் போகிறீர்கள். இதில் கலந்து கொண்ட ஒவ்வொருவனும் தன்னை அப்போது சமாளித்துக் கொள்வான் இதுவே அவர் கூறியது ஆங்கிலத்தில் எனினும் சில வரிகள் விளங்கியதை வைத்து திணிவாக்கியுள்ளேன்.

திறமைகளை வெளிப்படுத்தும் பொட்டலப் பரிமாற்றம் இல்லாமல் ஒரு lunch உண்டா என நினைத்துக்

கொண்டிருந்த எனக்கு இறுதியில் தான் புரிந்தது ஒரு உண்மை. மனம்பூராக ஓரே சந்தோசம். அதிபர் உரை முடியும் வேளையில் "ஐஸ்சுக்கிறீம்" (சிறிங்க) உம் அருந்தி முடிந்தது. நன்றியுரை ஆரம்பித்து அதுவும் முடிந்தது. அடுத்து பாடசாலைக்கீதம் அதுவும் ஆங்கிலம் தான். ஏற்கனவே பிரதி செய்யப்பட்ட "கசற்" போடப்பட்டிருந்தது.அதில் இசைக் கருவிகள் ஒலித்தன. பிரதானமாக "ஓர்கன்" இசை கேட்டது அவ்விசையுடனே அப்பாடசாலை மாணவர்கள் கல்லூரிக் கீதம் இசைத்தனர். ரம்மியமாக இருந்தது. நான் நிகழ்ச்சி நிரலில் பொறிக்கப்பட்ட அவர்களது பாடசாலைக் கீதத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

அனைவரும் விடை பெற்றுச் செல்லுகிற நேரம். இவ்வளவு நேரமும் சந்தோசமாக இருந்த மனதிற்கு இப்போது மட்டும் ஏன் சஞ்சலம். "போட்டோ எடுக்க வேணும் கொஞ்ச நேரம் நிற்பீர்களா"? கேட்டான் ஒரு நண்பன்" ஆசிரியர் காத்திருப்பார்" என்றேன்." சுணக்கம் ஏற்படும் தான் அப்போ பரவாயில்லை டாட்டா" அந்த இரண்டரை மணி நேரமும் என் வாழ்க்கையில் போதித்த அர்த்தங்கள் பல.படலை விட்டு வெளியேறிய உந்துருருளியின் வேகத்தில். என் சிந்தனைக் குதிரைகளும் சிறகடித்துப் பறக்கலாயின.

கணேசலிங்கம் நிரோஜன்

Bio 2008

## ஹெலிகொப்படர் மேலே பறப்பது எவ்வாறு?

குறுக்குத்திசையில் காற்றை ஏற்படுத்தக் கூடிய பிரமாண்டமான இரண்டு சிறகுகளின் உதவியுடன் ஹெலிகொப்டர் மேல் நோக்கி எழுகின்றது. இவ்வாறு மேலேழும்பிப் பறக்கக்கூடிய விமானத்தையே நாம் ஹெலிகொப்டர் என்றழைக்கின்றோம்.

**முக்கிய விமானங்கள் இரண்டு வகை**

* பொருத்தப்பட்ட சிறகு கொண்ட விமானம் (Fixed wing Aircraft)

* சுழலக்கூடிய சிறகு கொண்ட விமானம் (Rotary wing Aircraft)

ஹெலிகொப்டர் இரண்டாவது வகை விமானத்தைச் சேர்ந்ததாகும்.

* ஹெலிகொப்டரில் ஆறு திசையில் பயணிக்க முடியும் என்பதோடு நகராமல் ஒரே இடத்தில் மிதந்து கொண்டே இருக்க முடிகின்றமையும் ஒரு சிறப்பம்சமாகும்.

* சாதாரண ஒரு விமானத்தினால் ஐந்து திசைகளுக்கு மாத்திரமே பறக்க முடியும்.

### விசிறி மட்டையின் பிரயோகம்

பிரதான விசிறி மட்டை மூலம், ஹெலிகொப்டர் மேல் எழவும், குறிப்பிட்ட உயரம் சென்றதும் கட்டுப்பாட்டில் பறக்கவும் முடிகின்றது. மிகவும் வேகமாகவும் ஹெலிகொப்டரைக் கட்டுப்பாட்டில் செலுத்தவும் பயன்படும். இந்த விசிறி மட்டையை விமான

ஹெலிகொப்படரின் உள்ளிருந்து அதற்கான கருவி இயக்க முடியும்.

ஹெலிகொப்பரில் விசிறி பொருத்தப்பட்டுள்ள தண்டு (கனு) சுழலும் போது விசிறி சுழலுகின்றது.

* இந்த விசிறி சுழலும் போது வளியுடன் அமுக்கத்தை ஏற்படுத்தி உந்து சக்தியாகச் செயற்படுவதனால் ஹெலிகொப்டர் காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்து செல்ல முடிகின்றது.

* இந்த விசிறியின் சுழற்சியின் துணை கொண்டு ஹெலிகொப்டருக்குத் திசையில் அங்கும் இங்குமாகப் பறந்து செல்ல முடிகின்றது.

* அத்தோடு அப்படியே பறப்பது போன்று ஆகாயத்தில் ஓரிடத்தில் நிலையாக நிற்கவும் முடியும்.

**கியர்** (Pitch)

போன்ற கைப்பிடி ஹெலிகொப்டரை முன்நோக்கியும், பின்னோக்கியும் செலுத்தப்பயன்படும். Rudder) ஹெலிகொப்டரைத் தேவையான திசையில் திருப்பவும் தாழ்த்தவும் பின்னால் உள்ள விசிறியைக் கட்டுப்படுத்தவும் இந்தக்கருவி பயன்படும்.

(Collective Pitch) மூலம் ஹெலிகொப்டர் மேலே எழுப்பப் படுகின்றது.

ஹெலிகொப்டர் ஒன்று மேல் நோக்கி எழும் போது அதற்கு மேல் நோக்கி வளியைக் குறைத்து குறைந்தளவிலான அழுத்தத்தை உண்டாக்கி அதன் வழியில் விமானத்தை மேலே உயர்த்துவதாகும். இதற்காகத்தான் ஹெலிகொப்டரில் பொருத்தப்பட்டுள்ள பிரதான விசிறிகள் இரண்டும் பயன்படுகின்றன. ஹெலி கொப்டர் ஒன்று மேலே எழு முன்னர் சிறிது நேரத்திற்கு இந்த விசிறிகள் அதிவேகமாகச் சுழல வேண்டும். பிரதான விசிறிக்கு மேலதிகமாக உப விசிறியும் உண்டு. இவை "பிச்" (pitch) என்றழைக்கப்படும்.

*விசிறியின் சுழற்சி வேகம் அதிகரித்ததும் Pitch கைப்பிடியானது கோண வடிவில் இழுக்கப்படும் போது ஹெலிக்கொப்டரானது மேலெழத் தொடங்குவதற்கான விசையாக அமையும்.

* Pitch கைப்பிடியானது சிறிதளவு கோண வடிவில் இழுக்கப்பட்டதும் ஹெலிகொப்டர் மேலெழத் தொடங்கும்.

**வரலாறு**

ஹெலிகொப்படர் பற்றிய வரைபடம் ஒன்றை முதன் முதலில் வரைந்தவர் லியானாடோ டாவின்சி ஆவார். இவர் 15ம் நூற்றாண்டு இத்தாலியில் வாழ்ந்த ஓவியராவார்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் பிரான்ஸ் நாட்டவரால் முதன் முதலில் ஹெலிகொப்படர் ஒன்று

தயாரிக்கப்பட்டு பறக்க விடப்பட்டது. இந்தக் ஹெலிகொப்டரை மூன்று பேர் இணைந்து தயாரித்தனர்.

எனினும் மிகவும் நுட்பமான முறையில் கட்டுப்பாட்டில் செலுத்தக் கூடியதான ஹெலிகொப்டர் 1936ம் ஆண்டு ஜெர்மன் நாட்டவரான ஹென்னா ரேஸ்ட்வே என்பவரால் தயாரித்துப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. FW61 என்று பெயரிடப்பட்ட அந்த ஹெலிகொப்படர் 90 மீற்றர் தூரம் 4.6 மீற்றர் பறக்கச் செய்யப்பட்டது.

ஜெயநாதன் ஜெயவர்மன்

தரம் - 8A

## பூகோள வெப்பமாதல்

பூகோள வெப்பமாதல் என்பது, சமகாலத்தில் முக்கியமானதொரு சூழற் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பூகோள வெப்பமாதல் என்பது" புவியின் வளிமண்டலம், சமுத்திரங்கள், நிலப் பகுதிகளில் அண்மைக் காலப்பகுதியில் அவற்றின் சராசரி வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பு" எனக் கூறமுடியும். இவை மனித செயற்பாடுகளினாலும், இயற்கை அனர்த்தங்களாலும், பச்சை வீட்டு வாயுக்களின் சதவீதம் வளி மண்டலத்தில் அதிகரித்து 'மாசாக்கல் முகடுகளை' ஏற்படுத்துகின்றன. சூரியக் கதிர்கள் மேற்பரப்பில் பட்டுத் தடுக்கப்படுவதுடன் பச்சை வீட்டு வாயுக்களால் உறிஞ்சப்படும் இவ்வாறு உறிஞ்சப்படும் வெப்பக் கதிர்கள் வளிமண்டலப் பரப்பில் உயர்வாக வெப்பத்தைக் கொண்டுள்ளதுடன், இது பூகோள ரீதியாக உணரப்படுகின்றமையால், பூகோள வெப்பமாதல் எனப்படும்.

பூகோள வெப்பமாதலைத் தூண்டும் காரணிகளாவன.

1. இயற்கைக்காரணியாக எரிமலை வெடிப்பினைக் குறிப்பிட முடியும். இதில் நெருப்பு வலயத்திலுள்ள எரி மலைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. 538 வரையான உயிர்ப்பு எரி மலைகளுமே இதனைத் தூண்டு கின்றன.

2. மானிடக்காரணிகளாகப் பலவற்றைக் குறிப்பிடலாம்

i) உயிர்ச்சுவட்டு எரி பொருட்களின் தகனமும் காடழிப்பும் - பெற்றோல், டீசல், மண்ணெய், நிலக்கரி, விறகு என்பன எரிக்கப்படுவதனால், வளிமண்டலத்தில் காபனீரொக்சைட்டு ($Co_2$) எனப்படும் கரியமில வாயு அதிகரிக்கின்றது. மேலும், குடித் தொகைப் பெருக்கம், அபிவிருத்தி நடவடிக்கை போன்றவற்றால் காடுகள் அழிக்கப்படும் வீதமானது அதிகரித்து வருகின்றது. இதனால், ஒட்சிசனை வெளிவிட்டு, காபனீரொக்சைட்டை உள்ளெடுப்பது குறைவடைவதனால், வளிமண்டலத்தில் $Co_2$ இன் அளவு அதிகரித்துச் செல்வதனால் புவி வெப்பமடைவதனால் அதிகரிக்கின்றது. இவ்வாயுவானது, அதிகரிப்பதற்கு அபிவிருத்தி அடைந்த, அடைந்து வரும் நாடுகளின் துரித கைத்தொழில் விருத்தி மிகச் செறிவாகப் பங்காற்றுகின்றது. $Co_2$ இன் செறிவானது.

* 1800 ஆம் ஆண்டு 280 மில்லியன் p.p.m ஆகவும்


* 1986 ஆம் ஆண்டு 346 மில்லியன் p.p.m ஆகவும்

* 2000 ஆம் ஆண்டு 370 மில்லியன் p.p.m ஆகவும்

காணப்பட்ட அதே வேளை 2070 காலப்பகுதியில்

* 600 மில்லியன் p.p.m

அதிகரிக்கலாம். என எதிர்வு கூறப்பட்டுள்ளது. $Co_2$ அதிகரிப்பினைப் பின்வரும் வரைபு காட்டுகின்றது.




ii) பூகோள வெப்பமாதலைத் தூண்டுகின்ற காரணிகளில் மீதேன் ($CH_4$) வாயுவும் பிரதான இடம் பெறும். இவ்வாயு "சேற்று வாயு" எனப்படும். விவசாய நாடுகளே இதன்வெளியேற்றத்தில் முதன்மை பெறுகின்றன. இவ்வாயு

* பரந்த நெல் வயல்கள்
* சதுப்பு நிலங்கள்
* குப்பைகள்
* கழிவு நீர்த் தொட்டிகள்
* இயற்கை, பெற்றோலிய வாயுக் கிணறுகள்
* உயிரங்கிகளின் உணவுக் கால்வாய்
* விவசாய, விலங்குக் கழிவுகள்
* நிலக்கரிச் சுரங்கங்கள்

போன்றவற்றிலிருந்து வெளிவிடப்படும்.

இவை தவிர $O_3$, Cfc போன்ற வாயுக்களாலும், பிற பல்வேறு காரணிகளினாலும் பூகோளம் வெப்பமடைந்து வருகின்றது. வருடா வருடம் 73 மில்லியன் தொன் மீதேன் வாயு வளிமண்டலத்தில் சேர்கின்றது. அல்லது வெளிவிடப்படுகின்றது. 20% மானவை குப்பைகளிலிருந்து வெளிவிடப்படுகின்றது.


$CH_4$ வாயுவானது,

1800 இல் - 0.8 மில்லியன் p.p.m ஆகவும்

1990 இல் - 1.72 மில்லியன் p.p.m ஆகவும்

2000 இல் - 1.8 மில்லியன் p.p.m ஆகவும் காணப்பட்டமை

அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை வரைபு காட்டுகின்றது.



அவ்வாறாக பூகோள வெப்பமடை தலை இயற்கை, மானிடக் காரணிகள் தூண்டிய போதும் மானிடக் காரணிகளின் வகிபங்கு முக்கியமானது ஆகும்.

## பூகோள வெப்பமடைதலால் ஏற்படும் பாதிப்புக்கள்

20ம் நூற்றாண்டில் சராசரி வெப்ப நிலையானது $0.6\pm0.2^{oC}$ அதிகரித் துள்ளதாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் $1.3^{oC}$ அதிகரிக்கும் எனக் கருதப்படு கின்றது. IPCC - காலநிலை தொடர்பான அரசாங்கங்களிற்கு இடையிலான ஆணைக்குழு, (inter - governmental pane; on climate change) 1990ற்கும் 2100 ஆம் ஆண்டிற்கு இடையில் உலக வெப்பநிலை $1.4^{oC}$-$5.8^{oC}$ இடையில் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறியுள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்புக்களாவன.

துருவப்பனிக்கட்டிகள் உருகும் இவற்றினால், பல நாடுகளின் பகுதிகள், தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடல்மட்டமானது 1m வரை உயரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதனால் மாலைதீவு, பங்களாதேஷின் தென்பகுதி என்பன கடலில் மூழ்கலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. அத்துடன் கனடா, நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளின் பனி வயல்கள் உருகுவதனால் அந்நாடுகள் விவசாயச் செய்கைக்கு சிறப்பிடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* நோய்கள் பல ஏற்படலாம் - பச்சை வீட்டு வாயுக்களால் ஓசோன் துவாரம் ஏற்படுவதனால் சூரியக்கதிர்கள் நேரடியாக உயிரினங்களைத் தாக்கு வதனால், பார்வைக்குறைபாடு, தோல் நோய்கள் ஏற்படலாம்.

* உணவுற்பத்தி பாதிக்கப்படும் - வெப்ப அதிகரிப்பினால் காலநிலையில் மாற்றம் ஏற்படுவதனால், நிலம் தரிசு நிலமாதல், உவராதல் போன்றனவால், நெல், சோள வயல்கள் கடலினுள் மூழ்குவதனாலும், உற்பத்திகள் பாதிக்கப்படும் இதனால் உயிர்ப்பல் வகைமை அழிவை எதிர் நோக்கும்.

* பாலைவனமாதல் அதிகரிக்கும், விமான, இரும்புப்பாதைப் போக்கு வரத்து, பாதிக்கப்படல், முக்கிய நகரங்கள், கலாசாரச்சின்னங்கள், கடலினுள்மூழ்குதல், வெள்ளப்பெருக்கு, நிலவழுக்கை ஏற்படும், மீன்பிடி, கைத்தொழில் பாதிப்படையும், பிளாங்டன் உற்பத்தி பாதிக்கப்படல் போன்ற பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படலாம்.

## பூகோள வெப்பமாதலைக் கட்டுப்படுத்தவதற்கான நடவடிக்கைகள்

பூகோள வெப்பமாதலைக் கட்டுப் படுத்துவதற்கு உலக நாடுகளின் ஒன்றிணைந்த செயற்பாடு அவசிய மானதாக உள்ளது. இவ்வகையில்,

* 1985 இல் உருவாக்கப்பட்ட வியன்னா உடன்படிக்கை (ஓசோன் படைப்பாதுகாப்பு)

*1987 இல் உருவாக்கப்பட்ட மொன்றியல் பிரகடனம் ($O_3$ படையைச் சீரழிக்கும் பதார்த்தங்களைத் தடை செய்தல்)

* 1992 புவி உச்சி மாநாடு
* ஐ.நா சூழல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP) -1972
* கியோட்டோப்பரகடனம் - 1997
* பாலிப்பிரகடனம் 2008ன் முன் அரைப்பகுதி.

மேலும், பூகோள வெப்பமாதலைக் குறைப்பதற்கு

* அயன மழைக்காடழிக்கப்படு வதைச் சட்டங்கள மூலம் தடுத்தல்

* கோள வெப்பமாதல் பாதிப்பை சூழற் கல்வி மூலம் மக்களிற்கு விளக்கல்

* மீள் வனமாக்கலை ஊக்கப் படுத்தல்.

* அதிக பச்சை வீட்டு வாயுவை வெளியேற்றும் பொருளாதார நடவடிக் கைகளான நிலக்கரி, மரத்தொழில் உற்பத்திகளைத் தடை செய்தல் or குறைத்தல்.

* சூழலிற்குப் பாதிப்பை ஏற்படுத்தாத மாற்று சக்திகளான சூரிய, காற்று, கடலலை சக்திகளிற்கு உருவாக்க நடவடிக்கைகளிற்கு ஊக்குவிப்பு வழங்கல்.

* காபன் வட்டச் செயன் முறையை பிரசாரப்படுத்தல் or பரப்பல்.

* குறைந்த எரிபொருள் சிக்கனம் உடையதும், குறைந்தளவு பச்சை வீட்டு வாயுவை வெளியேற்றும் இயந்திர சாதனப் பயன்பாட்டினை அறிமுகப்படுத் தலும், ஊக்குவித்தலும் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும், உலக வெப்பமாதலை தவிர்க்கும் பொருட்டு 1997 டிசெம்பரில் ஜப்பானில் கியோட்டோவில் மாநாடு ஒன்று இடம் பெற்றது. இம்மாநாட்டில் வளர்முக நாடுகளுக்கும், வளர்ந்த நாடுகளுக்கும்இடையில் பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றுதல், தடுத்தலில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன. இம்மாநாட்டின் பயனாக 1990 ஆம் ஆண்டு வெளிவிடப்பட்ட பச்சை வீட்டு வாயுக்களின் அளவில் 5% அளவு 2012 இல் குறைக்கப்பட வேண்டும் என எடுத்துக் கூறப்பட்டது. 2007 ஆம் ஆண்டு பாளிப்பிரகடனத்தில் இது மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத் தப்பட்டதுடன், பனிவயல் உருகுதலிற்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டது.

ஆகவே பூகோள வெப்பமாதலிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட or பூகோள வெப்பமாதலை கட்டுப்படுத்து வதற்கு ஒவ்வொருவரும் or ஒவ்வொரு நாடுகளும் இணைந்து செயற்படுவது காலத்தின் தேவையாக உள்ளது.

நா.சுவேந்திரன்
2008 A/L கலைப்பிரிவு

01) உலகின் கண்டங்கள்

1) ஆசியா 2) ஆபிரிக்கா
3) வடஅமெரிக்கா 4) தென்அமெரிக்கா
5) ஐரோப்பா 6) அவுஸ்திரேலியா
7) அந்தாட்டிக்கா

02) உலகின் சமுத்திரங்கள்

1) பசுபிக் சமுத்திரம்
2) இந்து சமுத்திரம்
3)ஆட்டிக் சமுத்திரம்
4) அத்திலாந்திக் சமுத்திரம்
5) தென் சமுத்திரம்

03) உலகின் கடல்கள் சில

1) அரபிக்கடல் 2) செங்கடல்
3) கரீபியன் கடல் 4) ஏரல் கடல்
5) சீனக் கடல்

04) உலகின் பிரதான மேட்டு நிலங்கள்

1) பமீர் மேட்டு நிலம்
2) தென் ஆபிரிக்க மேட்டு நிலம்
3) அரபு மேட்டு நிலம்
4) திபெத் மேட்டு நிலம்
5) எதியோப்பிய மேட்டு நிலம்
6) கென்யா மேட்டு நிலம்

05) உலகின் பாலை நிலங்கள்

1) கோபி பாலைவனம்
2) அரபுப் பாலை நிலம்
3) கலகாலிப்பாலை நிலம்
4) சூடான் பாலை நிலம்
5) சிரியா பாலை நிலம்
6) சகாரா பாலை வனம்
7) நமீப் பாலை நிலம்
8) லிபியப் பாலை நிலம்

06) உலகின் சமவெளிகள்

1) துருக்கிஸ்தான் சமவெளி
2) வட ஐரோப்பிய சமவெளி
3) சைபீரியச் சமவெளி

07) உலகின் பிரதான நதிகள்

1) கங்கை நதி 2) இந்து நதி
3) நைல் நதி 4) அமேசன் நதி
5) கொங்கோ நதி
6)வோல்கோ நதி
7) மரேடாலிங் நதி
8) மிசூரி மிசிசிப்பி

08) உலகின் பிரதான மலைத் தொடர்

1) இமய மலைத் தொடர்
2) றொக்கி மலைத் தொடர்
3) அந்தீசு மலைத் தொடர்
4) அல்ப்ஸ் மலைத் தொடர்
5) அபினைன்
6) காபேதியன்
7) பெரிய பிரிக்கும் மலைத் தொடர்

சு.சுகப்பிரதா

## நன்றிக்கடன்

தூரத்தே வீணையில் ஆஹிரி ராக ஆலாபனை கேட்டுக்கொண்டிருந்தது. "இந்த நேரத்தில் ஐயா ஏன் இப்படி வாசிக்கிறார்" என்று கண்ணன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். ஐயாவின் வீணை வாசிப்பில் மயங்காதோரே இல்லை எனலாம். கோயில் காரியங்கள் என்றாலென்ன, ஊர் விசயங்கள் என்றாலென்ன முன்னின்று சிறப்பாக செய்வதில் சிரத்தையோடு இருப்பார். ஐயா கிராமத்தின் நல்லது கெட்டது

எதிலும் பங்கேற்றே தீருவார். இப்போது கொஞ்ச காலமாக அவருக்கு நெஞ்சு வருத்தம். ஓய்வு தேவை என்ற வைத்தியரின் ஆலோசனை அவரைக் கட்டுப் படுத்தினாலும் வீணை வாசிக்கும் அவரது ஆத்மார்த்த ஈடுபாட்டை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அதிகாலை ஒரு மணிநேரம், இரவில் ஒரு மணிநேரம் என்று அவரது வித்தை வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். ஊரடங்குகள் கூட அவரை அவரது இசையைத் தடுத்து வைத்ததில்லை.

ஆனாலும் இப்போ கொஞ்சக் காலமாக சோகமான இசைப்பாடல்கள், தான் அவரது வீணை வாசிப்பில் கூடுதலாக ஒலிப்பதாகக் கண்ணன் உணர்ந்தான். அவரோடு ஒன்றி, அவருக்கு நெருக்கமானவன். என்ற அளவில் ஐயாவின் மனஓட்டங்கள் கண்ணனுக்குப் புரிந்தது. வாழ "வேண்டிய வயதில் இறந்து விட்ட மகளின் பிரிவு, நாடு இருக்கிற நிலையில் தம்முடன் வைத்துக் கொண்டு காப்பாற்ற முடியாத நிலையில் இந்தியாவிற்கு அனுப்பிவிட்ட மகளின் பிரிவு என்பன சோக ராகங்களின் சுருதிகளாக இருப்பதை அவன் உணர்வான். தோளுக்கு மேற்பட்டு விட்டதால் சொற்கேளாத மகளின் குணாதிசயங்களால் கொஞ்சம் ஐயா ஆடித்தான் போய்விட்டார். எல்லாம் சேர்த்த நெஞ்சு வருத்தமாகக் கேட்க வேண்டுமா?

"கண்ணன்..... கண்ணன்" கேற்றடியில் கேட்ட அவசரக் குரலின் அழைப்பு கண்ணனுக்கு விழிப்பை ஏற்படுத்தியது. "யாரது...." என்றபடி கதவைத் திறந்தவனின் முன், அழுத கண்களுடன் பதறும் கைகளுடன் பரபரத்து நின்ற குஞ்சாம்பாளைக் கண்டதும் "என்னவோ ஏதோ" என்ற பயம் தொற்றிக் கொண்டது.

"ஐயா..ஐயா...." நாக்குளற குஞ்சாம்பாள் சொன்ன செய்தி கண்ணனுக்கு உலகமே சுற்றுவதைப் போல இருந்தது. வாசலைப் பூட்டியபடி ஒரே தாவலாகச் சைக்கிளில் தொற்றியவன் ஐயாவின் வீட்டுக்கு விரைந்தான்.

வீட்டு விறாந்தையில் அழுது குழறிக் கொண்டிருந்த ஐயரம்மாவின் குரல் கண்ணனுக்கு மேலும் கலவரத்தை ஏற்படுத்தியது. கோயிலுக்குவருபவர்கள் பலர் திரண்டு வருவதைக் கண்டான். "அம்மா...அம்மா.." என்று பதறியவனிடம் "இராப்பூராகவும் என்னைத் தான் கேட்டுக் கொண்டிருந்தார். ஆஹிரி ராகத்தைச் சாதகம் பண்ணிக் கொண்டிருந்தார். கண்ணனுக்கு இந்த வீணையைக் குடு...." எண்டெல்லாம் சொன்னார். "எப்பவும் போல தானே எண்டு நான் பேசாமல் படுங்கோ" எண்டனான்.

ராத்திரி இருந்தாப் போல.. வீணையைப் பூனை தட்டி விழுத்திப் போட்டுது. அதோட என்ர வாழ்க்கையையும் கடவுள் கடவுள் தட்டிக்கொண்டு போட்டாரப்பா......"என்று சொல்லிச் சொல்லி கதறினார்

ஐயரம்மா. இரண்டாக உடைத்த வீணையைப் போல ஐயா கட்டிலில் கிடந்தார். நாதபிரவாகத்தை அள்ளி வீசி உலகையே ஆட்சி புரிந்த விரல்கள் விரிந்து கிடந்தன.

எண்பத்தி மூன்று கலவரத்தில் தந்தை தாயை இழந்த என்னைத் தந்தையாக அணைத்த கைகள் மீண்டும என்னை அநாதையாக்கிவிட்டன. யாருமற்ற எனக்கு இருக்க இடந்தந்து உணவும் தந்து பிள்ளை போலப் பாதுகாத்த ஐயா இல்லா விட்டால்.... நானும் உருவற்றுத் தானே போயிருப்பேன். ஐயா..ஐயா... அநாதையாக்கிப் போட்டீங்களே ஐயா..ஐயா.. படிக்க வழியற்றுப் போய்விடாமல் படிக்க வைத்தீர்களே பட்டம் பெற்றுப் பெரிய பதவி பெற்று வாழுவாயடா எண்டு தினமும் ஊக்கப்படுத்தினீர்களே. இதையெல்லாம் பார்க்காமலே போய்விட்டீர்களே.

கண்ணனின் கதறல் காண்பவர் மனதையே ஆட்டி அசைத்தது.. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை.." என்ற உதவிகள் செய்த உத்தமரை எண்ணிப் பதறியவனை அறிந்தவர்கள் ஆறுதல்படுத்தினார்கள்.

"சரி இனி நடக்கிறதைப் பார்ப்போம்.." காரியங்கள் இருக்குதே.. ஐயாவின்ரை மகன் இந்தியாவில. அவன் வாற சூழ்நிலையும் இல்லை.. என்ன செய்யுறது.

"........" மௌனம் தான் பதிலாக இருந்தது. அம்மாவின் கேவலும் கண்ணனின் அழுகையும் தான் மண்டபத்தை நிறைத்தது.

எங்கட விசயமெண்டால் வேற.. இது ஐயாவீட்டுக் காரியம்.. நாமெல்லாம் என்ன செய்யுறது..... நழுவலாகப் பலர்.....

உடைந்த வீணையைத் தொட்டு தடவிக்கொண்டிருந்தது, கண்ணனின் கைகள். வாழும்வரை கீதமே.. உடைந்த பின்பு...? உடைந்த வீணையை அணைத்துக் கொண்டு ஐயாவின் காலடியில் கிடந்தான் கண்ணன். "நாதமே.... அடங்கிப் போனாயா..." உங்களை ராகமேடையிலே அலங்கரித்துப் பார்த்தோமே..." உங்களுக்கு இறுதி மரியாதை செய்யவும் ஆளில்லையா.... தெய்வமே.. கதறினான் கண்ணன்.

"நான் செய்யிறன் ஐயாவின்ர காரியங்களை " கதறினான் கண்ணன். மண்டபத்தில் நின்றவர்கள் திகைத்தனர். ஐயரம்மா கண்ணீரால் சம்மதித்தாள்.

சௌ. ஸ்ரீகர்ஷன்

தரம் - 11A

**இலக்கண நூல்களின் ஆசிரியர்கள்**

| | |
|---|---|
| அகத்தியம் | – அகத்தியர் |
| தொல்காப்பியம் | – தொல்காப்பியர் |
| காக்கைபாடினியம் | – காக்கைபாடினியார் |
| யாப்பருங்கலம்,யாப்பெருங்கலக்காரிகை | – அமிர்தசாகரர் |
| வெண்பாப்பட்டியல் | – குணவீரபண்டிதர் |
| வீரசோழியம் | – புத்தமித்திரர் |
| நேமிநாதம் | – குணவீரபண்டிதர் |
| நன்னூல் | – பவணந்திமுனிவர் |

## காலதூதன்

பொங்கும் எழில் எல்லாம் தங்கும் தன்மையாலே பொழில்நாடு எனப்பேசலுற்ற எழில்நாடு எண்ணிக்கையில் ஈக்களைப் போல ஆட்களையும், எண்ணங்களில் பூக்களைப்போல ஆட்களையும் கொண்ட தென்தவளம் எனும் அத்திருநாட்டை எவ்வரசுக்கும் சிற்றரசாயல்லாது தனியரசு செய்து கொண்டிருந்தான் மன்னன் குலச்செழியன். அவனுக்கு ஒரே ஒரு மகள் தேன்மொழியாள். அவளழகு எழுத்திற் பொழிதற்பாலதன்று கல்லிற் பொழிதற்பாலது. இப்படி இன்னொரு பெண்ணைப் படைக்கத் தன்னால் முடியாதெனவெண்ணிப் போலும், இளவரசி விழிதிறந்த மறுகணமே விழிமூடினாள் பட்டத்தரசி. தன் இல்லத்தரசி போனதும், தாயாயுமிருந்து தன் உள்ளத்தரசியாய் வளர்த்து வருகிறான் இவளை அரசன். தோழர்களோடும் விளையாடும் வயது முடிந்து, தோழிகளோடு மட்டும் விளையாடும் வயதுவந்துவிட்டிருந்தது, தேன்மொழியாளுக்கு. அந்திப் பொழுதுகளில் அரண்மனையை அண்டியோடும் தேன்வழியாற்றுக்குத் தோழியரோடு சென்று நிலவு, நிலவுக்கு வரும்வரை ஆற்றங்கரையில் விளையாடி, சிலவேளை நீராடி மகிழ்வது அவர்களின் வழமை.

அமாவாசை - அமாவாசை இரவுக்கு முந்திய அந்தி.

தோழியரோடு ஆற்றங்கரையில் விளையாடிக்கொண்டிருந்தவளுக்கு ஒரு உறுத்தல்- யாரோ அந்நியன் தன்னைப் பார்ப்பது போன்ற உணர்வு. மீன்விழிகள் மின்செய்ய சட்டென்று திரும்பினாள். அவள் பார்த்த திசையில் பார்த்த மாத்திரத்தில் கவரக்கூடிய கட்டழகுடன் காளை ஒருவன் காலை அலம்பிக் கொண்டிருந்தான். மன்மதன் ஏற்பாடு போலும், அவனும் தற்செயலாய் இவளைப் பார்த்தான். நான்கு விழிகளும் சந்தித்துக்கொண்டபோது அவள் நெஞ்சம் சில்லுச்சில்லாய் உடைந்து போனது.

கூர்மையாலும் குறும்புத்தனத் தாலும் முறையே அறிஞர்களையும், பெண்களையும் கவரக்கூடிய விழிகள்-மொழியாலும் நகையாலும் முறையே புலவர்களையும், பெண்களையும் கவரக்கூடிய செவ்வாய் அகலத்தாலும் அழகாலும்முறையே எதிரிகளையும், பெண்களையும் கலங்கவைக்கக்கூடிய மார்பு. ஆண்களில் முப்பத்திரண்டு லட்சணம் தேடுவோர் இவனில் ஒன்றிரண்டு கூடுதலாய்க் காணலாம் போலிருந்தது. இப்படியொரு காளையைக் காணும் எந்த உள்ளமும் காதலில் விழுமா, விழாவா?

கண்கள் நான்கும் கைதாகிக் கிடக்க, அவன் அடியெடுத்து அடியெடுத்து அருகில் வந்தான். இவள் அடியெடுத்து அடியெடுத்துப் பின்னால் சென்றாள். ஆனாலும் நின்ற இடத்திலேயே நின்றாள். நாணம் பின்னால் தள்ளத் தள்ள காதல் அவளை முன்தள்ளியதால். அருகிய அவன் மருகிய அவளின் கரங் களைப்பற்றமுயல, நாணம் மேலிட அவள் அவ்விடத்தை விட்டகலமுயல, மீண்டும் மன்மதன் ஏற்பாட்டால் காலிடற, விழுந்துகொண்டிருந்த அவளை அவன் பிடிக்க - இருவருக்குமிடையே இம்மியின் குழந்தையளவே இடை வெளி, இதன்பின்னும் இவர் களிடையே காதல்த்தீ பற்றாவிட்டால் இவர்களின் வயதுக்கு மதிப்பில்லை.

பற்றிக்கொண்டது - இருவரும் விழுந்தார்கள் - காதலில்.

அமாவாசையில் தொலைந் திருந்த நிலவின் அரைவாசி மீண்டிருந்தது.

இப்போதெல்லாம் இளவரசி தன் உயிர்த்தோழி ஒருத்தியுடன் மட்டும்தான் நீராட ஆற்றங்கரை வருகிறாள் - ஆனால் நீராடுவதில்லை. ஆற்றங்கரை மரத்தடியில் பாறையொன்றில் அமர்ந்து பேசும் காதல் மொழிகளுடன் முடிந்துபோகின்றன, அந்திகளும் சந்திகளும் - அவளுக்கும், அவனுக்கும்.

அவள் கரங்களை அவன் கைகளிலெடுத்தான். "அனிச்சம்பூ பட்டாலே வாடிடுமோ நின்கரங்கள்..! இத்தனை மென்மையாயுள்ளனவே?"

"போதும் புகழ்மொழி! நீங்கள் யாரென்றறிகிலேன், கண்டதும் காதல்கொண்டேன். அவசரப்பட்டேனோ என உளம் உள்கிறது. நீங்கள் யாரென விரிவித்துத் தெரிவியுங்களேன்..."

"யான் தொலைவிலுள்ள மாசிகபுரம் என்னும் நாட்டு இளவரசன். பெயர்தான் அறிவாயே... பிரதீபவர்மன். பட்டம் சூடுமுன் உலக அறிவு பெறவேண்டி இவ்வாறு தேச சஞ்சாரத்துக்குப் புறப்பட்டேன். இங்கே வந்து ஒரு நறுமுகையின் குறுநகையில் சிறைபட்டுக் கிடக்கிறேன் நாடுமீள மனமில்லாமல். மீண்டதும் பெண்கேட்டு மீண்டும் தந்தையுடன் வருவேன். உன்னைக் கரம்பிடிப்பேன்."

காதல்மொழிகள் தொடர்ந்தன. நிலவு காத்துக்கொண்டிருந்ததுஇ காவலிருந்தது.

நிலவுடன் சேர்ந்து காதலும் வளர்ந்தது.

அன்று பௌர்ணமி முழுமையா யிருந்தது.

தன்னுள் விழுந்திருந்த நிலவை சலவை செய்துகொண்டிருந்தது தேன்வழியாறு.வழமைபோல் இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். வழக்கத்துக்கு மாறாய் அவன்முகம் வாடியிருந்தது. இடையேயிருந்த மௌனத்தை அவள்கலைத்தாள். "அன்பே, இப்படியே பௌர்ணமி நிலைக்கவேண்டும் நாமிருவரும் இப்படியே பேசிக்கொண்டிருக்க வேண்டும்..."

"என் ஆசையும் அஃதே. ஆ... ஆனால் அன்பே - ஒருவேளை நான் உன்னை பிரியநேர்ந்தால்.. அதுவும் இன்றே- என்ன செய்வாய்?" -ஏதோ ஒன்றை சொல்லப் பேச்சை தொடங்கினான். அவள் தடுத்தாள். "கற்பனைகூட வேண்டாம்! காதல் என்பது அன்பு மட்டுமல்ல நம்பிக்கையும்கூட! கடைசி மூச்சுவரை உங்களையே நினைந்திருப்பேன். நினைவது தடைப்படின் கடைசி மூச்சை விடுவேன்!" என்றாள் உறுதியாக.

ஏதோ ஒன்றைச் சொல்லப் பேச்சை தொடங்கியவன் முகத்தில் பிரமிப்பு கண்களில் சோகம்.

இருவரும் நெடுநேரம் மௌனமாயிருந்தார்கள். காலம் போனதும் தெரியவில்லைஇ தூக்கம் வந்ததும் தெரியவில்லை.

வைகறை.

தற்செயலாய் கண்விழித்தாள் தேன்மொழியாள். "ஐயகோ..

பார்த்துக் கொண்டிருந்ததில் நித்திரை வந்தது தெரியவில்லை நித்திரை வந்ததில் நிசி போனது தெரியவில்லை. அரண்மனையில் தேடுவார்களே! நான் போய்வருகிறேன் அன்பே!" என்றபடி திரும்பினாள்.

அவனைக் காணவில்லை...!

ஜீவன் ஆய்வு மையம் Jeevan Research Centre- யாழ்ப்பாணம்.

02 ஓகஸ்ட் 2190

"நம்பவே, முடியாது சாத்தியமே இல்லை..."

சதுரவடிவப் பறக்கும்தட்டு

மாதிரி ஒரு வாகனம். ஒரே ஒரு கதவு- ஒரே ஒரு இருக்கை- நிறைய இணைப்புகள், மின்குமிழ்கள், காட்டிகள் என்று ஒரு விமான cockpit மாதிரி இருந்தது உள்ளே.

"நசிந்துபோன car மாதிரியுள்ள இதில் ஏறி இறந்தகாலமெல்லாம் போவதா? நம்புகிற கதையா சொல்கிறாய்? இறந்தகாலத்துக்குப் போவதுபற்றி நான் கேள்விப்பட்டது ஒரு நீண்ட கதையில் மட்டும்தான். எனது பாடசாலையின் 180 வருடத்துக்கு முந்திய பழைய மகாஜனன் ஒன்றில்.. எழுதியதுகூட யாரோ.." நெற்றியை சொறிந்தான்.

"அதுசரி! மண்ணைக் கிளறி மண்டையோடு தேடும் உன் மண் மண்டையோடு இந்த விஷயங்கள் ஒத்துவராதுதான் உன்னிடம் சொன்னேன் பார் இதை.." என்றான் ஜீவன்- பிரதீப்பின் நண்பன்- விஞ்ஞானி.

"சரிசரிஇ நம்ப முயலுகிறேன் புரியும்படி சொல்லு... எப்படி இது சாத்தியம்?" என்றான் பிரதீப். - ஜீவனின் நண்பன்- தொல்பொருளியலாளன்.

"சுருக்கமாகச் சொல்கிறேன். எல்லா வாகனமும் நீள அகல உயரத்தில் இயங்கும். இந்த வாகனம் ஒளியைவிட வேகமாக இயங்கும், அப்போது இதற்கு ஏற்கெனவே உள்ள 3 பரிமாணங்களோடு நான்காவதாக ஒரு பரிமாணம் சேரும். அதுதான் நேரம். ஏற்கெனவே நீள அகல உயரத்தில் இயங்கக்கூடிய இது, நான்காவதாக ஒரு பரிமாணம் கிடைத்ததும் நேரத்திலும் இயங்கும்."

"அதாவது இறந்தகாலத்துக்கும் செல்லும்... அப்படித்தானே..?"

"ஆம், அதுவேதான். இந்தக் கால இயந்திரத்துக்கு நான்வைத்த பெயர் "காலதூதன்". பெயர் எப்படி? என் கண்டுபிடிப்பு எப்படி?"

"உச்சம்! உனக்கு Nobel Prize உறுதி.!"

"Nobel என்ன Nobel? வெளிவிட்டால் கிடைக்கும் காசில் நானே ஒரு Jeevan Prize தொடங்கலாம்!"

"பின்னே, எல்லாம் சரியென்றால் வெளியிட வேண்டியது தானே?"

"காலதூதனில் Robots ஐ வைத்து இறந்தகாலத்துக்கு அனுப்பிப் பார்த்தேன், வெற்றி. ஒருமுறை மனிதர்களையும் அனுப்பிப்பார்த்து விட்டால் துணிச்சலாக வெளியிடலாம்."

"அதற்கு ஒரு துணிச்சலான இளிச்சவாயன் தேவை. உனக்கு அகப்பட்டது நான். அப்படித்தானே?"

"பயப்படாதே! ஆபத்து ஒன்றுமில்லை. நானே போயிருப்பேன், ஆனால் இங்கிருந்து சில controllers ஐ இயக்கவேண்டும். அதுதான்... இதோபார் resume button! அங்கே ஏதாவது பிரச்சினை என்றால் இதை அழுத்தி இங்கிருந்தபடியே உன்னை நிகழ்காலத்துக்கு மீட்கமுடியும். நீ என் நண்பன், archiologist வேறு... எங்காவது பழைய காலத்துக்குப் போவதில் உனக்கு ஆர்வமிருக்கும், பயனும் இருக்கும். நீ இன்று ஆய்வு செய்துகொண்டிருக்கும் இடங்களை live ஆகவும் யடைளந ஆகவும் பார்க்கலாம். மேலும் காலதூதனில் முதன்முதல் பயணித்தவர் என்ற பெயரும் கிடைக்கும்."

"இப்போதே புறப்படலாமா?"

"அவசரப்படாதே! இதை இயக்குவதுபற்றி விளக்கமாக சொல்கிறேன் நாளை போகலாம்."

மறுநாள் - 03 ஓகஸ்ட் 2190

"சரி காலதூதனில் ஏறு! இது ஒளியைவிட வேகமாக இயங்குவதால் இது இயங்குவது உனக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. பயணத்தின்போது

வயது கூடாது, குறையாது. ஏதாவது ஒரு காலத்திற்கு போனதும் காலதூதன் தானாகவே மனிதநடமாட்டம் இல்லாத ஒரு இடத்தில் நிற்கும். அதை எங்காவது மறைத்து வைத்துவிட்டு அந்தக்காலத்துக் கேற்ப உன் தோற்றத்தை மாற்றுவது உன்பாடு."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன். வரட்டுமா?"

"இருஇ பொறு! போகுமிடத்திலே எந்த உயிரையும் அழிக்காதேஇ உருவாக்காதே. பிறகு இயற்கைச் சமநிலை குலையும் பூமியே ஆரம்பத்திலிருந்து மீண்டும் வாழ வேண்டியிருக்கும்! இன்னொரு விஷயம் 15 நாட்களுக்குமேல் தங்காதே. battery cells எல்லாம் charge இறங்கிவிடும். பிறகு நிகழ்காலத்துக்கு மீளவே முடியாது."

"O.K, good be with you... sorry, without you!"

"Bye"

ஜீவன் கூட்டிக்கழித்துப் பார்த்தான். பிரதீப் போய் 13 நாட்களாகிவிட்டன. இன்னும் வரவில்லை. "என்ன செய்கிறான் அப்படி?"

14 ஆம் நாள்...

இன்னும் வரவில்லை.

15 ஆம் நாள்...

வரவில்லை.

"லுல்லாப்பயல்! 15 நாட்களுக்குள் வரச்சொன்னதை மறந்துவிட்டானா? அல்லது ஏதும் பிரச்சினையா?" வேறுவழியில்லை. ஜீவன் resume button - ஐ அழுத்தினான். கண்ணை மட்டுமல்லஇ காது மூக்கெல்லாம் சேர்த்துப்பறிக்கும் ஒளியோடு காலதூதன் வந்தது தெரிந்தது.

கதவு திறந்தது் பிரதீப் இறங்கினான்.

முகத்தில் பெரிய சோகம் - எதையோ பறிகொடுத்தவன் போல வெளியே வந்தான்.

"15 நாட்களாக அப்படி என்ன செய்தாய்? யாரையெல்லாம் பார்த்தாய்? எதுவும் பிரச்சினையில்லையே? சொல்லு, சொல்லு!" என்றான் ஜீவன்- ஆர்வத்தால் வந்த அவசரத்தால்.

"................." பதில் இல்லை.

"ஏய்! என்ன பேயறைந்தமாதிரி இருக்கிறாய்? சூர்ப்பனகை யாராவது வந்து propose பண்ணினார்களா? எதையாவது வெட்டிவிட்டாயா?"

"................."ப.இ.!

வந்தவன் நேராகப் போய் காரில் ஏறி தன் வீட்டுக்குப்போய்விட்டான். மூன்று வாரங்களாகின்றன பிரதீப் மீண்டும் நிகழ்காலத்துக்கு வந்து. சரியாகச் சாப்பிடுவதில்லை யாருடனும் பேசுவதில்லை ஏதோ ஒரு விரக்தியில் இருந்தான். ஒரு ஆய்வுக்கென நாலந்தா பல்கலைக்கழகத்திலிருந்து அழைப்பு வந்தது. இவன் போகவில்லை. ஜீவன் குழம்பிப் போயிருந்தான். தனது கண்டுபிடிப்பை வெளியிட முடியாது தவித்தான். அப்போதுதான்...

பிரதீப்பிற்கு விதி மதுரைப் பல்கலைக்கழகத்திலிருந்து e mail இல் வந்துகொண்டிருந்தது.

ஜீவன் ஆய்வு மையம்.

ஜீவன் ஜீவனில்லாமல் கணனியில் ஏதொ கிளறிக் கொண்டிருந்தான்.

"ஜீவன்..."

திரும்பிப் பார்த்தான் - பிரதீப்! ஆச்சரியமாயிருந்தது. 3 வாரமாக வராதவன் வந்திருக்கிறான் ஏனோ? "வா..."

"மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. 13 ஆம் நூற்றாண்டிலிருந்த ஒரு சிறிய நாட்டின் தலைநகரத்தையும், அதன்

அரண்மனையையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அகழ்வாராய்ச்சி வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. வந்து ஆய்வில் இணையச்சொல்லி email அனுப்பியிருக்கிறார்கள். போகிறேன்."

"நல்லது நீ காலதூதனில் எங்கு போனாய்இ என்ன நடந்தது என்று சொல்லிவிட்டுப்..."

"போ" என்று சொல்வதற்குள் பிரதீப் இடைமறித்தான்.

"போய்வருகிறேன்"

போய்விட்டான்.

பிரதீப் மதுரைக்குப் போய் ஆய்வுகளில் தன்னை இணைத்துக் கொண்டான். பிரதீப்பிற்கு வயதைவிட பட்டங்களின் எண்ணிக்கை அதிகம். அடிக்கடி இவ்வாறு ஆய்வுகளுக்கு அழைப்புவரும். ஆனால் இது கொஞ்சம் விசேஷம். அரண்மனையை அப்போது தான் மண்ணுக்குள்ளிருந்து முழுதாய் வெளிப்படுத்தியிருந்தார்கள். இவன் போனதுமே அரண்மனைக்கு சற்றுத் தள்ளி ஒர் இடத்தைக்காட்டி அகழச் சொன்னான். சொல்லி வைத்ததுபோல அந்த இடத்தில் ஆறு ஒன்று இருந்ததற்கான சுவடுகள் தென்பட்டன. அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். "நேற்றுத்தான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவனுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?"

ஏதோ புதையல் தேடும் ஆவலுடன் ஆற்றுக்கருகில் தோண்டினான், ஒரு பாறையைத் தேடி. தன்னுடன் வேலைசெய்த ஒருவரையம் தூங்கவிடாது தோண்டியதில் அவர்கள் கண்டுபிடித்தது...

ஒரு கல்லறை!!

ஆற்றங்கரையில் 13 ஆம் நூற்றாண்டில் ஒரு கல்லறை அமைத்திருக்கிறார்கள். காலப்போக்கில் மண்ணுக்குள் போய்விட்டது அது. முழுமையாக வெளிப்படுத்தியபோது முழுக்கமுழுக்கக் கருங்கல்லாலான சற்றுப் பெரிய கல்லறையாயிருந்தது. உள்ளே காதல் சுவை வழியும் அழகிய சிற்பங்கள். கல்லறைக்கு நடுவில் கருவறைபோல ஒரு சிறு அறை. அழகிய வேலைப்பாடுகள் நிறைந்திருந்த அந்த அறைக்குள்ளே ஒரு சமாதி நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்தது. அருகில் ஒரு கல்லாசனம்-சிம்மாசனம் போல. அறையின் தெற்குப்புறச்சுவரில் ஒரு கல்வெட்டு.

அந்தக்காலத் தமிழில் இருந்ததை ஒருமணிநேரம் வினைகெட்டு 22ஆம் நூற்றாண்டுத் தமிழுக்கு மொழிபெயர்த்ததில், மொழி பெயர்த்ததை...

" தென்தவளபுரி அதாவது இந்நாட்டு-இளவரசி யாரென்றறியாத ஒரு இளைஞனைக் கண்டு காதலித்திருந்தாள். முன்னிரவில் நதியருகில் 15 நாட்கள் மட்டுமே காதல் நீடித்திருந்தது. திடீரென்று அந்த இளைஞன் காணாமல் போய்விட்டான். இளவரசி தவித்தாள். அவன் வருவானென நம்பிக் காத்திருந்தாள். இதனிடையே இவளின் தந்தை மன்னன் குலச்செழியன் அயல்நாட்டு இளவரசன் ஒருவனுக்கு அவளை மணமுடித்துவைக்க ஏற்பாடு செய்ய இதையறிந்த இளவரசி நடந்ததை மன்னனிடம் கூறி அவனைத் தேடவும் மணத்தை, தடுக்கவும் வேண்ட, வெகுண்ட மன்னன் அவளை கடிந்து திருமணத்தைத் துரிதப் படுத்தினான். இளவரசி வேறுவழியின்றி அவளும் அவ்விளைஞனும் சந்தித்துக் கொள்ளும் ஆற்றங்கரையின் அருகிலுள்ள பாறையில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள். இதையறிந்த மன்னன் அவள் இறப்புக்கண்டு நெஞ்சுருகிஇ உறுதிகண்டு பிரமித்து அவளின் காதலின் சின்னமாக

அவளுக்கு அவ்விடத்தில் ஒரு நினைவாலயம் எழுப்பினான். அவளது நம்பிக்கைப்படி அவ்விளைஞன் மீண்டும் வருவான் என்ற நம்பிக்கையில் அவர்கள் அமர்ந்து பேசிய பாறையிலேயே ஒரு சிம்மாசனம் செய்து இளவரசியின் சமாதியருகே வைத்தான். மேலும் ..." என்று அந்த ஆய்வுக்குழுவில் ஒருவர் படித்துக் கொண்டிருக்க...

சமாதிக்குமேல் விழுந்து உடல் குலுங்க உயிர்கரைய அழுது கொண்டிருந்தான் பிரதீப்.

ஜீவன் ஆய்வு மையம் - யாழ்ப்பாணம்.

17 - செப்டெம்பர் - 2190 முன்னிரவு வேளை.

தன் கண்டுபிடிப்பை வெளியிடலாமா, வேறு யாரையாவது மீண்டும் இறந்தகாலத்துக்கு அனுப்பிப் பார்க்கலாமா, ஏன் பிரதீப் இப்படியானான்... என்று எல்லாக் குழப்பங்களும் சேர்ந்து குழப்ப ஏதோ யோசனையுடன் ஏதேதோ செய்து கொண்டிந்தான் ஜீவன்.

யாரோ வருவது கேட்டது...

"ஜீவன்..."

திரும்பிப்பார்த்த ஜீவனுக்கு மேலும் ஒரு குழப்பம்.. மதுரைக்குப் போய் ஒரு வாரம்தான் ஆகிறது. ஏன் திடீரென்று வந்தான்?

பிரதீப் பேசத்தொடங்கினான். "இறந்தகாலத்தில் என்ன நடந்ததென்று நீ இத்தனை நாள் கேட்டு நான் சொல்லவில்லைஇ சொல்லும் நிலையில் நான் இருக்கவில்லை. இப்போது சொல்கிறேன் கேள்..."

ஜீவன் உற்சாகமானான்.

நான் போய் இறங்கியது பாண்டிநாட்டுக்கு அருகில் ஒரு சிறிய நாட்டின் தலைநகரில்.. 13ஆம் நூற்றாண்டு. காலதூதனைக் காட்டில் மறைத்து வைத்துவிட்டு நகரத்தில் ஒரு வீட்டில் சில உடைகளைத்திருடி எடுத்துக்கொண்டு போய் ஒரு சத்திரத்தில் தங்கினேன். மாலை வெளியே வந்து உலவிவிட்டு ஒரு ஆற்றங்கரைக்குப் போய் கால்கழுவிக்கொண்டிருந்தபோது சற்றுத் தொலைவில் ஒரு பேரழகி தன் தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்ததை கண்டேன். திடீரென்று அவள் என்னைப்பார்த்தாள். நானும் பார்த்தேன். அப்படி ஒரு பேரழகு! என் சிந்தனைகள் எல்லாம் கலைந்து விட்டன. எனது நிலையை மறந்து என் இதயத்தை அவளிடம் பறிகொடுத்து விட்டேன். அவளும் என்னைக் காதலிக்கத் தொடங்கிவிட்டாள்.

அதன் பிறகு பகல் முழுவதும் சத்திரத்திலும் இரவு முழுவதும் ஆற்றங்கரையில் ஒரு பாறையில் அமர்ந்து காதலுமாக 15 நாட்கள் போனதே தெரியவில்லை. அதன் பின்னர்தான் நீயாகவே இங்கிருந்தே என்னை நிகழ் காலத்துக்கு எடுத்துவிட்டாயே... அந்தப்பெண் என்ன ஆனாள் என்று தெரியாமலும்இ அவளை ஏமாற்றிவிட்டோம் என்ற குற்ற உணர்வாலும்இ அவளை இழந்த சோகத்தாலும் என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை.

அதன்பின்தான் நான்போனஇ காதலித்த அதேநாட்டைப்பற்றிய ஆய்விற்காக என்னை மதுரைக்குக் கூப்பிட்டார்கள். எனவேதான் மதுரைக்குப் போனேன். அங்கே..." அங்கே தனக்காய் காத்திருந்து காத்திருந்து அவள் சமாதியான கதையைச் சொன்னான். தான் மீண்டும்வருவேன் என்ற நம்பிக்கையில் முதலில் அவளும், பின் அரசனும், இதுவரை அந்த சிம்மாசனமும் காத்திருந்ததைச் சொன்னான் சொல்லும்போதே மனம் நொருங்கி அழுதுவிட்டான்.

"அநுசரி, ஏன் திடீரென்று வினைகெட்டு யாழ்ப்பாணம் வந்து இதையெல்லாம் சொல்கிறாய்?"

"அது........ கொஞ்சம் யோசித்துப்பார்... ஒரு நாட்டின் இளவரசி சாவுக்கு நான் காரணமாக இருந்துள்ளேன். அதற்கு நீ காரணமாக இருந்துள்ளாய் - உனது காலதூதன்! - இதை நீ வெளியிட்டு எல்லோரும் பயன்படுத்தத் தொடங்கினால் என்ன நடக்குமென்று எண்ணிப்பார். எத்தனை இளவரசிகள் இறக்கவேண்டிவரும்... எத்தனை நாடுகள் அழியும்... ஒரு காலத்தில் குற்றம் செய்துவிட்டு இன்னொருகாலத்தில் போய் ஒளிந்து கொள்ளலாம்..."

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

"எனக்காக, நம் நட்புக்காக மட்டுமல்ல, மனிதகுலத்தின், வரலாற்றின், இயற்கையின் சமநிலையின் நன்மைக்காக நீ ஒரு தியாகம் செய்யவேண்டும். உன்..."

"என்?"

"காலதூதனை..."

"காலதூதனை?"

"அழித்துவிடு!"

ஜீவன் முகத்தில் அதிர்ச்சி அலையலையாய் ஆடியது. "இது மட்டும் முடியாது!. என் ஒருவனின் ஒன்பது வருட உழைப்பு, 18வருடப்படிப்பு... இதனால் எனக்குக் கிடைக்கப்போகும் பெயரும், புகழும் எவனுக்கும், எதற்கும் கிடைத் திருக்காது, கிடைக்காது!"

"அதெல்லாம் சரிதான். ஆனால்"

"நீ என்ன சொன்னாலும் என்முடிவு மாறாது!"

தொடர்ந்த வாதம் கொஞ்சம் கொஞ்சமாகக் கடுமையானது. அவர்களது சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்த அந்த ஆய்வுகூடத்தில் வேறுசில சத்தங்களும் கேட்கத் தொடங்கின.

திடீரென்று ஆய்வுகூடத்தை விட்டுப் பதற்றத்துடன் ஓடிவந்தான் பிரதீப். முகத்தில் ஒரு வெறிஇ ஒரு அமைதி. அவசர அவசரமாக அந்த இடத்தைவிட்டு ஓடினான்.

சிலநொடிகளில்...

Jeevan Research Centre கொஞ்சம் கொஞ்சமாக எரியத் தொடங்கி, சற்றைக் கெல்லாம் விண்ணதிர வெடித்துச் சிதறியது. ஜீவனை அடித்துப்போட்டுவிட்டு ஒரு வெறியுடன் பிரதீப் தீவைத்தது காலதூதனுக்கு மட்டும்தான். ஆனால்...

யாழ் தினக்குரல் - யாழ்ப்பாணம்
18 செப்டெம்பர் - 2190

பிரபல விஞ்ஞானி ஷைலையா ஜீவன் நேற்றிரவு 9.00 மணியளவில் அவரது ஆய்வுகூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் காலமானார். அவ்விபத்துத் தற்செயலானதா என்பது குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன. விஞ்ஞானி பல வருடங்களாக இறந்தகாலத்துக்குப் பயணிக்கக்கூடிய இயந்திரத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் என்பது தெரிந்ததே. இதேவேளை இவரது நண்பரும், பிரபல தொல்பொருளியலாளருமான...

தினத்தந்தி மதுரைப்பதிப்பு
18 செப்டெம்பர் - 2190

பிரபல தொல்பொருளியலாளர் ஞான்ஷேகர் பிரதீப் நேற்றிரவு 11.00 மணியளவில் மா்மமான முறையில் மரணமானார். நேற்றிரவு யாழ்ப்பாணம் சென்றுவிட்டு மதுரைக்குத் திரும்பிய அவரைக் காணவில்லையென அவரது உதவியாளர்கள் தேடியபோது அவர் அண்மையில் கண்டறிந்த 13ஆம்

நூற்றாண்டுக்குரிய கல்லறையொன்றின் சமாதிக்கருகில் இருந்த கல்லாசனத்தில் அமர்ந்திருந்தபடியான நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அதீத சோகம் அல்லது உணர்ச்சி காரணமாக மாரடைப்பு ஏற்பட்டிருக் கலாம் என மருத்துவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இதேவேளை அவரது நண்பரும் பிரபல விஞ்ஞானியுமான ஷெலையா ஜீவன்...

- பாலசுப்பிரமணியம் நீதுஜன்
2009 கணிதம்.

### முடியும் பொழுதெல்லாம் விடியும்

வெற்றி பெற்றவனுக்கு எதுவும் சர்வசாதாரணமாகத் தெரிகிறது. தோல்வியுற்றவனுக்கு எதைக் கண்டாலும் பயம் வருகிறது. வென்றவனுக்கு மலையும் கடுகு. தோற்றவனுக்கு கடுகும் மலை. அவன் மலையோடு மோதிச்சாகிறான் தோல்வி அடக்கத்தைத் தந்து வெற்றியைக் கொண்டு வருகிறது. இது ஒரு சகடம் ஏற்றம். இறக்கம். முதுகிலே அடி விழும் போது தான் தனக்கு முதுகு இருப்பதும், அடிக்க ஒரு முதுகு இருப்பதும் புரிகிறது. தோற்றவர் களையும் நான் மரியாதையாகத்தான் பார்ப்பேன். காரணம் அவர்களுக்கும் ஒரு காலம் வரும் வென்றவர்களைப் பரிதாபமாகப் பார்ப்பேன். அவர்கள் எப்போது அடி வாங்கப்போகிறார்களோ என்று. வெற்றி மயக்கம் தோல்வி கலக்கம் இரண்டுமற்ற நிலையினை மேற்கொண்டவனுக்கு உணர்ச்சி ஒன்று தான். அது சந்தோஷமும் அல்ல. துக்கமும் அல்ல. அது நிரந்தர நிலை. அதற்கு அழிவு கிடையாது.

கோடையில் குளம் வற்றிவிட்டதே என்று கொக்கு கவலைப்படக்கூடாது. மீண்டும் மழைக்காலம் வருகிறது. மழைக்காலம் வந்து விட்டதென்று நதி குதிக்கக்கூடாது. அதோ வெயில் காலம் வந்து கொண்டிருக்கிறது. சூரியன் கொதிக்கும் போது தூக்கிப்பிடித்த குடையை மடக்காதவன் மடையன். இருட்டிய ரேபது ஏற்றி வைத்த விளக்கை, விடிந்து விட்ட பிறகும் அணைக்காதவன் மடையன், குடை ராட்டினத்தில் மேலே போகும் போது பல காட்சிகள் தெரியும். கீழே இறங்கும் போது சுற்றி நிற்கும். ஜனங்கள் தான் தெரியும். புது வெள்ளம் வரும் போது உற்சாகம் அதிகம் அதிலே குளித்தால் ஜலதோஷம் பிடிக்கும். புது வெற்றியில் தலைக்கனம் அதிகமாகும். அது அதிகமானால் அடுத்தாற்போல் காத்து நிற்பது அவமானம்.

தேரில் உட்கார்ந்திருப்பவன் கதிரையை மட்டும் கவனித்தால் போதாது. பாதையையும் கவனித்தாக வேண்டும் என் தேர் என் குதிரை என்று, காட்டிலும் மேட்டிலும் ஓட்டினால் கவிழ்ந்து போகும். நான் என்று நினைக்காதீர்கள் நினைத்தால் ஆண்டவன் தான் என்பதைக் காட்டிவிடுவான். காவிரிப்பூம் பட்டினத்தில் குடியேறிய போது அது கடலில் என்று எவனுக்காவது

தெரியுமா? தம்பதிகள் மாற்றிக் கொள்ளும் மாலையே எதிர்காலத்தில் தூக்குக்கயிறாகவும் மாறலாம். ஆகவே எந்தத்துறையில் உள்ளவர்களுக்கும் சொல்லுவென். தோல்வி அடைந்தவர் களைப் பழி வாங்காதீர்கள். அன்போடு வழி நடத்துங்கள். காலை வெயிலில் உங்கள் நிழல் முன் பக்கமாக விழுந்தால் மாலை வெயிலில் பின் பக்கமாகத்தான் விழும்.

சு.வசுதா

தரம் - 10

## பதிந்து விட்ட தடங்களின் எதிரொலி.....

'நீ யாருடைய மகன்?....
எங்கேயிருக்கிறாய்?....

எனும் அதட்டல்களின் மிகுதியோடு மேலும் பல வினாக்களும் கூட எழ தன்பால் தொடர்பில்லாதவன் போல் இறுமாப்புடன் நின்றான் டிரோன். இதைக்கண்டதும் சினம் மேலெழ தன்னிருக்கையை உதறிய கை தாமதமின்றி அவன் கன்னத்தின் திசை நோக்கத் தயாரானது.

"சேர்" அடிக்காதீங்க .. ப்ளீஸ்..."

என்ற குரல் அறைவாயினின்று ஒலித்தது மாணவ தலைவன் ஜசித் அதிபரின் அறைக்குள் நுழைந்தான்.

ஆம் என்ன நடந்தது?...............

அது "குருபரா"வித்தியாலயம்

அன்றும் தொழுகை மணி வழக்கம் போல் 8.00 மணிக்கு ஒலித்தது. மாணவர்கள் ஆலய முன்றலை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.ஆனால் டிரோன் மட்டும் தன் வகுப்பறை மேசையொன்றில் படுத்திருந்தான். மாணவர்களை அவதானிப்பதற்காக ஜசித் அவ்வகுப்பின் அருகில் வந்தான் அவன் படுத்திருப்பதைக் கண்ணுற்றான்.

"கோயிலுக்குப் போகேல்லையா?
உமக்குத் தனியாச் சொல்ல வேணுமோ?

கேட்டுக்கொண்டிருக்கிறேன்.........

என்று கண்டிப்பு வார்த்தைகளால் இடைவிடாத வினாக்களை எழுப்பிக் கொண்டிருந்தவன் கன்னத்தில் டிரோன் எதிர்பாராத வேளையில் "பளீர்" என்று அறைந்து விட்டான். திகைத்து நின்றான் ஜசித்.

கன்னத்தின் ஓசை அடங்குமுன் தீய வார்த்தைகள் எண்ணடக்கமில்லாது அவன் வாயினின்று முழங்கி எழுந்து ஜசித்தின் காதுகளைக் குடைந்து கொண்டது. தனக்குள் உருவெடுத்த ஆத்திரத்தை பெட்டிப்பாம்பென அடக்கிக்கொண்டு ஜசித் அவ்விடத்தை விட்டு நீங்கினான்.

இந்நிகழ்வை அவதானித்த அக்கல்லூரி ஊழியர் ஒருவர் அதிபரிடம் சென்று கூறிவிட்டார். இது பற்றி ஜசித் அறிந்திருக்கவில்லை.

டிரோனுக்கு ஏதோ உளரீதியான பிரச்சினை இருக்கிறது. என்பதைப் புரிந்து கொண்ட ஜசித் அவனைப்பற்றி அறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் மீண்டும் அவன் வகுப்பறையை நோக்கிச் சென்றான். அப்போது தான் அவன் அதிபரின் அறையில் இருப்பது தெரிய வந்தது.

கண்டிப்புக்குரல், கனிவான உள்ளம் இவை இரண்டும் அப்பாடசாலை அதிபரான ரவிச்சந்திரனின் இயல்புகள்

"ஜசித் என்ன நடந்தது.....?" ஒண்டுமில்லை சேர் ஒரு சின்னப் பிரச்சினை ஆரோ உங்களுக்குத் தெரியாமல்ச் சொல்லீட்டினம்...."

இவ்வாறு கூறிய ஜசித்தைப் பார்க்கக் கூடத் தகுதியற்றவனாய் அவ்வளவு நேரமும் நிமிர்ந்து நின்ற தலையைச் சரித்துக் கொண்டான் டிரோன்.

"ஜசித் என்ன சொல்லுகிறாய்....."

"சேர்" "ப்ளீஸ்" இந்த தடவை இவரை மன்னிச்சிடுங்கோ இனிமேல் அவர் இப்பிடி நடக்கமாட்டார்....."

என்ற கூற்றுக்கள் பாறையில் நீர்துளி போல் டிரோனைக் குடைந்திற்றோ? என்னவோ, ஜசித் மீது அவனுக்கு ஒரு மரியாதையை உண்டு பண்ணிற்று.

அதிபரும் ஜசித் மீது கொண்ட நம்பிக்கையால் அவன் வார்த்தைகளை ஏற்று அவனை வகுப்பிற்குப் போக அனுமதித்தார்.

அன்று முழுவதும் அவன் மனம் உறுத்திக் கொண்டிருந்தது.

ஆனால் ஜசித் அவ்விடத்தோடு அந்நிகழ்வை மறந்து விட்டுத் தன் செயல்களில் ஈடுபட்டான். எனினும் டிரோன் தனது மனத்தூண்டலைக் கௌரவம் எனுமபெயரில் அடக்கிக் கொள்ள விரும்பாது....... பாடசாலை முடிவு மணி எப்போது அடிக்கும் என்று காத்திருந்து ஜசித்திடம் சென்று அவனை நேரே நோக்காது தன்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டான். அவனின் முதுகில் தட்டி அவனைச் சென்று வா என்று கூறினான் ஜசித். "அவன் திருந்திவிட்டான் என்ற பெருமிதத்தை அவன் முன் வெளிக்காட்டாது அடக்கிக்கொண்டு"

மறுநாள் பாடசாலை வாயிலில் மாணவர்களைச் சக மாணவத் தலைவனோடு சேர்ந்து ஜசித் அவதானித்துக் கொண்டிருந்தான். டிரோனும் மற்றைய நாளை விட அன்று நேரத்தோடே பாடசாலைக்கு வந்தான். என்றுமில்லாதவாறு ஜசித்தைப்பார்த்துச் சிரித்துக் கொண்டே உள் நுழைந்தான் (வாயிலினுள்ளும், ஜசித்தின் மனதினுள்ளும்) இன்று அவன் முகத்தில் ஒரு புது நகை பூத்திருந்ததை ஜசித்தால் உணர முடிந்தது.

இருவருக்கும் ஒருவருடம் இடைவெளி. எனினும் நண்பர்களாயினர்.

அவனின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், என்ற எண்ணங்கொண்ட ஜசித் அவனிடம் தன் வீட்டினில் பெரும் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறி அவன் மனதில் நம்பிக்கையை விதைத்தான். ஜசித்தும் தன்னைப் போல் பிரச்சினை உள்ள ஒருவன் என நினைத்துத் தன் பிரச்சினையைக் கூறத்தொடங்கினான்

டிரோனுடன் சேர்த்து பிள்ளைகள் மூன்று பேர். மூத்த சகோதரர்கள் இருவரும் டிரோனுக்குப் பத்து வயதிருக்கும் போது உயர் கல்லூரியில் கற்பதற்காக வேறு ஊரில் உறவினர் வீடொன்றில் தங்கினர். ஆனால்

டிரோனோ பெற்றோருடன் தனியாக இருந்து வளர்ந்தமையால், அச்சிறு பிள்ளையின் ஆசைகள், விருப்பங்கள் சில நிராகரிக்கப்பட்டன. வேற்று ஜாதிப்பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடக்கூடாது. என்று அச்சிறு பிள்ளையின் மேல் தமது குல கௌரவத்தைத் திணித்தனர். இதனால் சிறுவனான அவனின் விளையாட்டுச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. விளையாட்டுப் பொருட்கள் விலையுயர்ந்தவை என்பதால் அவன் உடைத்து விடுவான் என்று எண்ணி அவற்றை விளையாடக் கொடுக்காது காட்சிப் பெட்டியினுள் வைத்து அழகுபார்த்தனர். இது போன்ற பிரச்சினைகள் அவன் மனதில் அவனை அறியாது நஞ்சு போல் படரத் தொடங்கியது. இதன் பின் பெற்றோர்கள் அவனிடம் சிறு வேலைகளைச் செய்யச் சொல்வதைக் கூட அவன் மாறாகவே சிந்திக்கத் தொடங்கினான். அவன் சிந்தனை....................

"தம் மூத்த பிள்ளைகளை எங்கேயோ அனுப்பி விட்டுத் தன்னை வேலை வாங்குவதற்காகத் தம்மோடு வைத்திருக்கிறார்கள் என்பதே! இவ்வாறு தனியாக வளர்ந்த அந்தச் சிறுபிள்ளையின் மனத்தடங்களில் தேங்கிவிட்ட விஷம் "பெற்றோர்கள் தன்னை வாங்கி வளர்க்கிறார்களோ?...... எனும் அளவில் அவனைச் சிந்திக்கத் தூண்டலாகிற்று.

ஆனால் அதுவல்ல உண்மை. பெற்றோர்கள் அவன் மீது கொண்ட அதீத அன்பின் காரணமாகவே அவனைத் தம்மோடு வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினார்கள்.

அவன் கெட்டுவிடுவானோ? என்று நினைத்துத் தேவையுற்ற கட்டுப் பாடுகளை அவனுக்கு விதித்தமையால் அது அந்தப் பிள்ளையினுள் விதைக்கப்பட்ட விஷமாகிற்று என்பதை ஜசித் உணர்ந்து கொண்டான்.

அவனுக்குத் தன்னளவில் அறிவுரையைக் கூறிவிட்டு அவனை அணுக வேண்டிய முறையை நோக்கி அவனுக்குத் தெரியாதபடி உளவள ஆசிரியரிடம் அவன் பிரச்சினையைக் கூறினான். அவரும் ஜசித்தைப்பாராட்டி விட்டு அவனைத்தன் அவதானத்திற்குட் படுத்தினார்.

பின்னர் ஜசித் அதிபருக்கும் இத்தகவலைக் கூறினான். அவர் அவனை வியப்புடன் நோக்கி! பெருமையுடன் அவனை நல்ல ஒரு மாணவர் தலைவன் என்ற பெயரால் வாழ்த்தினார்.

ஆனால் அவன், புகழ்ச்சி மகிழ்வில் திளைக்கவில்லை.

அகமகிழ்வுடன் நேர்வழியில் சென்றான். வகுப்பறையை நோக்கி.........

ந.விஜயரூபன், 2009 கலைப்பிரிவு

**மகரிஷி வசிட்டரின் புகழ் பெற்ற பசு**

**– நந்தினி**

**பாம்பாட்டி இசைக்கும் ராகம்**

**– புன்னகவராளி**

**இரட்டைக்காப்பியங்கள்**

**– சிலப்பதிகாரம், மணிமேகலை**

## Importance of games

Games are a kind of sports. They help to develop both body and mind. They make our bodies strong by giving them exercise strong and healthy. Another important point is that some games give practice in making our eyes, brain muscles work together. One such game is cricket. This practice is making our eyes brain and muscles work together provides a very valuable training for life. This is true for other games as well. Some such games are volley ball, net ball, foot ball and tennis

In talking about games we should not forget their role in character building. When we play game we play hard to win the game as a team. Playing the game for personal glary will brake up the unity and spirit of the team. Another truth we learn from sports and games is that we cannot always win. This teaches us to accept both victory and defeat in the same manner. To develop this spirit one should have other qualities such as patience, courage a sense of responsibility. All these qualities together prepare us to live as good citizens when we grow up in to adulthood. They help us to live with understanding with our fellow men.

Now a days we have international sport festivals like Olympics. When we take part in any games during such festivals we can promote understanding among participants from various countries. They provides a wonderful opportunity for bringing nations of the world together.

T.Mathuran

## My Favourite Game

1. My favourite game is cricket.
2. It is a very interesting game.
3. It is played all over the world.
4. It was introduced to the world by England.
5. Cricket is a bat and ball team game played by eleven player's per side.
6. The batsmen hit shots and score runs.
7. The players are judged two umpires.
8. The west Indies and the Sri Lankan cricket team are the best in the world.
9. My country Sri Lanka has fantastic cricket team.
10. They won the wills world cup in 1996.

11. Arjuna Ranatunga is an experienced captain and leads the Sri Lankan side.

12. Aravinda and Jaya suriya are world famous batsman.

T.Kobikan

5A

## News papers as the easy available Source of information

A news paper is printed daily or weekly. It brings us not only news but also comments on the news. It carries a lot of advertisements, public notices and pictures. It is perhaps the cheapest means to get all important local in character. Such papers have a few pages and a limited circulation. Some newspapers are national or international in form and feature and of a wider circulation.

Even less educated people can read the newspaper in any time in any position and untimely. It is the most cheapest and durable written source.

Now a days, when all are more or less educated people almost every body reads some daily papers or others. A man who never reads a newspaper cannot keep in touch with the times. we have to know something of what is going on in the world. Not only own satisfaction but also to be able to convert intelligently with our fellows. In every country plenty of newspapers of all kinds to satisfy the most omnivorous reader., The danger is that people spend more time in newspapers unwantedly.

As its name implies, the primary business of a newspaper is to give us news. That is what we look for first in our morning paper. What is the news of that day? What has been happening at home town? What has been happening in other countries? In the paper we find the latest news of political doings and movements; or, if we are interested in sport, the results or cricket, foot ball, hockey and tennis matches; and so on. Some have a taste for police news and read the accounts of crimes, the capture of criminals and in these days too. We turn eagerly to the news about foreign powers and the present international situation and debate on the urgent question of peace and war. Film fans read the news about their favourite. Film stars and the latest pictures to be produced. People with

different tastes look for different kinds of news in their newspapers.

K.Piraneepana

## The Internet as a source of information

World is becoming so small after the invention of computer. If we conglomerate our attention on world's technological growth we can't avoid the usage of the computer. What is computer. It is a device capable of solving problems or manipulating data by accepting data and displaying the results in the desired form.

Internet is a network connected with wireless microwaves from a country to another country. A particular hard ware instrument is used furthermore to make active a net connection. It is called modem', specially. Organized internet addresses are used to get the proper information. From the verities of information. The world wide web contains all the information species such as science and technology, education, banking and finance, recreation and etc.

As the educated people in the world we have a responsibility of find out the proper net addresses, and to search only absolutely assured in formations. On no conditionally there will be unreliable Instructions, bad Jokes and worse pictures which misguide the youth in an anti cultural way. So we have to scan the net very well and to be care of the issues. Only it will be used probably it should be success to the users.

We are living in the 21st century it is the modern world the man invents many machines to do his works. They are telephone, vehicles, computer, robot but it has advantages, and dis advantages.

Internet uses to information technology. We can write letters and important messages and send the messages immediately to any internet. We can do the best projects, they keep permanently and we publish our project very easy we can do the two activities at the same time. We have use two separate sources for that most of the time we use English language to use the internet.

It was first started as a research project of the development of defense of the US. the internet provides an

immense source of knowledge through search sites such as Googgle, yahoo etc. The internet has some disadvantages but we avoid the disadvantages. we get advantages by the internet and we develop our information technology.

Ms. K.Shakana

### The Girl Guide Movement

Guiding is a game we would like to play " guiding is a jolly game largely played in the out of doors, where guiders and guides can go adventuring to gather as older and younger sisters picking up health and happiness through camping and linking of the study of nature.

A guide is a girl between the age of eleven and sixteen years with the approval both the senior guide captain and the guide captain. I am happy to be associated with the girl guide movement of our school. Our movement promise is

" I Promise on may honour to do my best, to do my duty, to my religion and country to help other people at all times and to live by the guide law". In taking about guide law, we should not forget their role in character building to develop guide spirit, she needs qualities such as obedience, legality, helpfulness, friendliness, thrifty. purity, courage, patience, and a sense of responsibility. All these together prepare a girl guide to live as a good citizen, when she grows up in to adulthood.

Our Motto is "Be prepared". The founder of this movement wished. that the guides should be prepared for anything.

The founder of the girl guide and girl scout movement was Robert Baden Powell known as B.p Lord Baden Powell was born on 22nd February 1857. B.p founded the Boy scout movement in 1907.After girls appeared at a boy scout rally held in Crystal Palace U.K in 1909, wearing khaki uniforms and carrying staves like the scouts. B.p decided it would be best if they had their own movement and own name. The girl guide movement was started in 1910. and Lord Baden Powell asked his sister Agnes Baden Powell wrote the first guide Hand Book.

In 1912 Olave st. Clair Soamas

met Robert Baden Powell on the ship " Arcadian" and married him that Same year. In 1918 Olave Baden Powell was appointed as U.K chief guide. In 1919 Olave Baden Powell formed the international council which later developed WAGGS. WAGGS stands for world Association of girl guides and girl scouts. WAGGS mission is " To enable girls and young women to develop their fullest potential as responsible citizen of the world.

In 1930 Olave Baden Powell was appointed as the world chief guide and the world flag was adapted in the same year.

Lord B.p died on 8th January 1941, and was buried in Nyeri, kenya, Africa. The world chief guide died on 25th June 1977 and her ashes were buried along side her husband in Nyeri, kenya. The day 22nd of February was chosen as thinking day the joint birth day of the founder Robert. Baden Powell and world chief guide Olave Baden Powell. A french delegate Suggested that on thinking day girl guides and girl scouts around the world . Should think of each other and thoughts of good will to each other across the world.

The thinking Day is the most important occasion for girl guides in our school. We celebrate the day with full of joy.

N.Vinthuja

12 Arts

**Scrabble**

Scrabble is my favourite indoor game. It is an internationally recognized cross word game. It is entirely English based and a from of word building. This word game is for two to four players, consisting of a playing board with premium squares and letter tiles with various score values.

This game contributes in many ways for the development of English vocabulary. We are encouraged to learn more and more vocabulary when we play scrabble with keen interest. This impel us to refer our dictionary, off and on. Hence dictionary becomes an important tool in the hands of the scrabble players.

English is a world language. English is essential for us to make a link

with the world. Now we are in a computer era. This era is entirely different from the past. There are webs, inter nets, E- mails, etc, in this modern, world.

We should have sound knowledge of English to get in to this modern world. This enrichments of the language could be easily gained by the scrabble game. More over this is a valuable leisure time activity.

We have a scrabble club is our school, when ever. We are free we play scrabble. Our teacher Mrs.S. Pathmanathan joins with us, and encourage us. Day by day the scrabble game is be coming popular in our school.

Scrabble is a wonderful game and all of you can play it.

S.Jeyarajah

8A

**The words with Silent letters**

1. Knowledge
2. Knife
3. Knight
4. doubt
5. honest
6. honorable

**Short popular sayings with words of Advice. or Warning**

Every dark cloud has a silver lining.

Cut not the trees that gives you the shade.

Rates desert a ship that will sink or wreak.

The early bird catches the worm.

Frogs can be found even in a lotus pond.

God gives every bird its food but never drops in the nest.

A bird in the hand is worth two in the bush.

Birds of a feather, flock together.

A friend in need is a friend indeed.

S.Mohanaraji

8A

**PEACE**

Let us consider what is peace. Living in harmony and unity is the meaning derived from the word peace, likewise, the wretched qualities in man such as vanity - jealous - derision - Violence - transgression - dishonesty should be uprooted from his inner heart and infix good qualities like calmness - obedience - affection - kindness - charity - sympathy - love and so on.

Bad qualities in a man may lead to

destroy others or subjugate others. This may result to fighting. Man to man - village to village and country to country may start fighting endlessly. This sort of unpleasant state of affairs or atmosphere becomes a danger to peace and quietness and further more transgressors happily and rapidly make others slaves - keep them under subjugation and before long harass them and engage in harrowing action against their enemies.

In this circumstance, parents lose their children - husbands their wives - wives their husbands - children their parents. This is not a healthy situation.

So, we must definitely avoid this work hard for a normal life where peace and calm rule over man. Else this might become a barrier to the progress of in the sphere of education - economic development and social welfare and upliftment.

Unless we barricade or put on end to such unpleasant occurrance, peace and will never prevail in any country.

Therefore let man strive for peace and unity between man to man - village to village and country to country. Every man must sacrifice himself to make the world a haven of peace. To achieve this we must uproot the bad qualities within our minds.

If this is not done our resources will be destroyed. Peace will we in dark and

the happiness of mind will vanish away and no society could be happy.

Great saints like lord Krishna - Lord Buddha - Lord Jesus Christ and Lord Nabi stressed the need for peace divine love and healthy society.

Lord Krishna said:- ' What ever you have inherited, it has been taken by you from here this world. It becomes the property of another man tomorrow and passes on to the third man somedays later"

As you love your only son in your family love the sons of other families too. "Said Lord Buddha Love your neighbor as they self: said Lord Jesus Christ.

'If you have more than one dress. give the other dress to the poor" said Lord NabiWhen we analyse the above sayings we can conclude all those wording lead to a life of peace happiness and equality. Where there will never be fighting - turmoil -

deceitfulness and survival of the fittest.

Sri Lanka has lost its peace hearing. Before the 17th century Ceylon was enslaved by the foreign powers like the Portuguese - the Dutch - the British under their rule we underwent many

and untold hardships. We lost our happiness and normal trend of peace ful

life. There by we had to oppose them which made us worse.

This should' t be repeated. If so we must give up every bad qualify in us give room for goodness. So that peace tranquility and happiness flower ever day and the world will be void of disturbance and turmoil. Peace will ensure its rul every where.

Let peace take its upper hand let the handless go to pit. Let brother hood - unity and attachment be laid as the foundation on which the structure of peace could stand erectly for years and years.

A.Sangeetha

11A

## ஏணிப்படிகள் ஆசான்கள்

"அ" என்று வாய்திறக்க முடியாத - என்
ஆரம்ப வகுப்பு தன்னில்
அகர முதல் தொடக்கியவள் எம் அன்னை
ஆரம்பக்கல்விக்காய் என் தந்தை வழிகாட்ட
அன்னம்மா என்றஅன்ன நடை ஆசிரியை
என்னை அணைத்த விதமதுவோ
என்றுமே தித்திக்குமே தித்திக்கும்
அந்த நாள் மறப்பேனோ?
என் நினைவு அவ்வாசான்
என்றுமே மறககேனே.
அடிப்படையில் இடப்பட்ட
அந்தநல்ல அத்திவாரம்
அடுக்கடுக்காய் மொழி சொல்ல
அதுவன்றோஉறுதுணையாம்
அந்த நாள் மறப்பேனோ?
கையெழுத்தும் நன்றாகக்
கைபிடித்துப் பயிற்றியவர்
கைப்பணியும், ஆடலுடன், பாடலும் தான்
கைத்தாளம் போடலும் தான்
சின்னச் சின்னக் கரங்களினால் - நான்
சில தாளம் போட்ட நாள்கள்
சித்திரத்தில் வரை கோட்டு மூலம்
சில படங்கள் கீறிய நாட்கள்.....
அந்த நாள் மறப்பேனோ ?
ஆண்டு ஒன்றாகி, இரண்டாகி,
மூன்றாகும் போது
ஆண்டு ஒன்று கழிய
மூன்றாம் வகுப்பு எனச் சுட்டியது
அன்னம்மா ஆசிரியர்
கைப்பிடிப்பை விட்டுவிட்டு,
வாலாம்பிகை என்ற நல்லாசிரியை
வாரும் வாரும் என்றணைத்தார்.
வார்த்தைகளால் இனிமை பேசும்
விதம் என்னைக் கவர்ந்து விட"
ஆசிரியை பாடங்களும் தேன் போல
ஆலைச்சக்கரை போல இனித்தன

விரும்பி ஈந்த கல்வியினால்
வித்தை பல தெரிந்து கொண்டேன்
அந்த நாள் மறப்பேனோ?
ஆண்டொன்று கழிந்து வகுப்பு நான்
கென்றாகியது
அங்கு கண்டேன் புதுக்காட்சி
அழகுடனும் மிடுக்குடனும்
புன்முறுவல் பேச்சுடனும்
துரைரட்ணம் என்ற
துடுக்கான நல்லாசான்
வாய்ப்பாட்டு முறைகளும்
வாய்மொழி ஆங்கிலமும்
உறுப்பான எழுத்துக்களும்
முன்னின்று கவனிப்பார்.
நகைச்சுவைக்கதைகளுடன்
விளையாட்டும் முன் வைப்பார்
அந்த நாள் மறப்பேனோ?
ஆண்டொன்று கழிந்து செல்ல வகுப்பு
ஐந்தில்

ஆங்கிலத்தில் புலமையுள்ள
அமலதாஸ் ஆசிரியை
இலக்கண நெறி கண்டு இலகு படுத்தியவர்
அதனை விட மேலாக கணித நுட்பங்களும்
தாய் மொழியும், நுண்ணறிவும் பயிற்ற என
மாணிக்கம் போல நல்ல
மாணிக்கம் ஆசான்,
புலமை வகுப்புக்களில் புலமை பெறச்செய்த
அவர்புதுமை பல புகுத்தியவர்
வகுத்தல் இடங்களுக்கு - நல்ல இலகு
வழி காட்டி நிற்பார்.
ஒழுங்கு நிலை கருதி
ஒழுக்கம் போதிப்பார்.
ஓராயிரம் கதையால் - மனதை
ஒரு மிக்கச் செய்பவராம்
அந்த நாள் மறப்பேனோ?
எம்மை உயர்த்தி, உயரப்படி
ஏற்றி வைத்த ஆசான்கள்,
நாடகமும் பைந்தமிழும் சமயமுடன்
விஞ்ஞானம், கணிதம், சமூகவியல்
என்றெல்லாம் என் உள்ளம் புகுந்துள்ள
அத்தனை ஆசான்களும்
என் கண்கண்ட தெய்வங்களே.

திருமதி.ஜெயரஞ்சினி
மயில்வாகனம்
ஆசிரியர்
யா/மகாஜனக் கல்லூரி

## இனி எப்போ வரும்..............

குச்சொழுங்கையும் கொழுத்தும்வெய்யிலும்
குட்டைப் பூவரசமர நிழலில்
குந்தியிருந்த நாள் இனி எப்போ வரும்?...

செட்டி வளவும் கல்லணிஞ்சிற்பழமும்
பறித்துச் சுவைத்த நாள்
இனி எப்போ வரும்?
முடியில்லா வேந்தரும், கூடவே
ஔவையும், இனியாளும்
குழுமி மகிழ்ந்த நாள்
இனி எப்போ வரும்?

முழு நிலா வேளையில்
முழு இரவும் சுதந்திரமாய்
சுற்றித் திரிந்த நாள் இனி எப்போ வரும்
நடு இரவில் விழித்து துலாவும்
பட்டையுமாய்

நீர் பாய்ச்சும் காலம்
இனி எப்போ வரும்?
ஐயோ என்ற குரல் ஒலி ஓய்ந்து
அடங்கும் முன்
ஊரே திரண்டு வரும் நாள்
இனி எப்போ வரும்?
தனியாகச் சென்று சரித்திரப்படம் பார்த்து

கொறி கடலைப் பையுடன் நள்ளிரவில்
வீடு சேர்ந்த நாள் இனி எப்போ வரும்
தாயும் தந்தையும் என் கரங்கள் பற்றி
நின்று
ஏது குறையுமின்றி நீ சுதந்திரமாய்
வாழ்ந்திடுவாய்
என்ற உரை நான் இறக்கு முன்னே
வந்திடுமோ?
எம்பூமி, எம்வீடு, எம்உறவு,
இவை யெல்லாம் இனி எப்போ வரும்?

திரு.க.மயில்வாகனம்
ஆசிரியர்
யா/மகாஜனக் கல்லூரி

| வழு | | வழாநிலை |
|---|---|---|
| 1. ஒத்தணம் | - | ஒற்றடம் |
| 2. அறிஞ்ஞன் | - | அறிஞன் |
| 3. கைமாறு | - | கைம்மாறு |
| 4. காச்சல் | - | காய்ச்சல் |
| 5. சமூகமளித்தல் | - | சமுகமளித்தல் |
| 6. தேனீர் | - | தேநீர் |
| 7. கலாச்சாரம் | - | கலாசாரம் |
| 8. நாகரீகம் | - | நாகரிகம் |
| 9. வேர்வை | - | வியர்வை |
| 10. செய்நன்றி | - | செய்ந்நன்றி |
| 11. முயர்ச்சி | - | முயற்சி |
| 12. ஆராச்சி | - | ஆராய்ச்சி |

## பரிகாரக்கற்பித்தல் பற்றிய ஓர் நோக்கு.....

## Remedial Teaching

ஒரு வகுப்பில் கற்கும் மாணவர்கள் தனியாள் வேறுபாடுகள் காரணமாக, கிரகித்தல், வெளிப்படுத்தல், கூட்டாகச் செயற்படுதல் போன்றவற்றில் வெவ்வேறு மட்டங்களில் காணப் படுகின்றனர் என்பது அறிய முடிகின்றது. மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சமீப காலமாக அசாதாரண சூழ் நிலைகளால் ஏராளமான சிறார்கள் கல்வியில் இடர்ப்பாடுகள் எதிர் கொள்கிறார்கள். போரின் தாக்கங்கள் காரணமாக சிறார்கள் உள நிலை பாதிக்கப்பட்டமை, போர் சூழல்களால் அடிக்கடி கல்வி தடைப்பட்டமை. போசாக்கின்மை, அகதி வாழ்க கையினால் குடும்ப அமைதிபாதிக் கப்பட்டமை எனப் பல காரணங்களால் மாணவர்களின் கல்வி கற்றலில் இடர்படுகின்றனர். மாணவர்களிடத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகள் இனம் காணப்பட்டு அவற்றை நீக்குவதற்கான பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். இதற்கு மகிழ்ச்சி கரமான வகுப்பறை கற்றல் சூழல் உருவாக்கப்பட்டு பாடசாலைச்சிறார்கள் மகிழ்ந்து கற்கும் களமாக மாற்றப்பட வேண்டும். இவ்வாறு வகுப்பறை மகிழ்ந்து கற்கும் களமாக மாறும் போது மாணவர்களின் கற்றல் இடர்ப்பாடுகள் தாமாக மறைந்து விடும். சாதாரணமாக கற்றல் செயற்பாடுகளின் போது

மாணவர்கள் சில சந்தர்ப்பங் களில் கற்றலில் இடர்ப்படுகின்றனர். அவ் வேளையில் அவர்கள் இடர்படு வதற்கான காரணங்களை இனம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளில் ஒன்றாகப் பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

பரிகாரக் கற்பித்தல் என்பது எதிர்பார்த்த தேர்ச்சியை மாணவர்கள் அடையாத விடத்து அதற்குத்தடையாக இருக்கும் காரணங்களை அறிந்து மாணவரது இடர்ப்பாடுகளை நிவர்த்தி செய்து தேர்ச்சியை அடைந்து கொள்வதற்கு ஆசிரியர் திட்டமிட்டு மேற்கொள்ளும் ஒரு மாற்றீட்டுக் கற்பித்தல் அணுகுமுறையே ஆகும். இது வழமையான கற்பித்தல் முறையில் இருந்து வேறுபட்டது. இது ஓர் புதிய அணுகுமுறையே ஆகும். இதனைத் தீர்மானிப்பவர் கற்பிக்கும் ஆசிரியரே ஆவார். இங்கு மாணவர்களின் சூழலுக் கேற்பவும், அவர்களது தேவைகளுக் கேற்பவும் கற்பித்தல் இடம் பெறும். இக்கற்பித்தலானது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட ஒரு பொதியல்ல. ஆனாலும் இது பல்வேறு கற்பித்தல் முறைகளுடன் தொடர்பு பட்டது. தனிப்பட்ட மாணவர்களின் இடர்ப்பாடு களையும் தீர்க்கக்கூடியது. இடர்பாடு களை நிவர்த்திப்பதற்கான தெளிவான எதிர்காலச் செயற்பாடுகளை மையப் படுத்தியது. செயல் மூலம் கற்று விளக்கம் பெறுதலை நோக்கியது, குறுகிய காலத்தில் எதிர்பார்த்த இலக்கை அடைய வழிப்படுத்தக் கூடியது. மாணவர்களின் துலங்கல் உடனுக்குடன் வெளிக்காட்டப்படும். பாராட்டுக்களும் ஊக்குவிப்புக்களும் இடம் பெறுவதனால் கற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது. இம்முறையில் திட்டமிட்ட வரன்முறைகள் எதுவும் கிடையாது. மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக் கூடியது. இது மாற்றத்தினை ஏற்படுத்தும் ஒரு வழி முறை ஆகும். மகிழ்ச்சிகரமான கற்றல் கல்வி நிலை காணப்படும். குறிப்பிட்ட மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தனித்தனியாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தலாம்.

## கற்றலில் இடர்ப்பாடுகள் என்பது பற்றி நோக்கும் போது

மாணவர்கள் கற்கும் சந்தர்ப்பங்களில் சில தேர்ச்சிகளை அடைய இயலாமல் இடர்படுவதனை நாம் காண்கின்றோம். ஏன் இவர்கள் இடர்ப்படுகின்றனர் என்பதனை அறிந்து இடர்ப்பாடுகளைக் களைவது ஒவ்வொரு ஆசிரியருடைய கடமையாகும். முதலில் மாணவர் களுக்கு ஏற்படுகின்ற கற்றல் இடர்ப்பாடுகளின் அடிப்படைக் காரணங் களை இனம் காண்பது முக்கியமானது. காரணங்களைக் கண்டறியாவிட்டால் தேவைக்கு ஏற்ப பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் திட்டமிடுதல் இல்லாமல் போய்விடும். இடர்ப்பாட்டிற் கான காரணங்கள் மாணவனோடு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். அல்லது பாடசாலை, வீடு, சமூகம் என்பவற்றோடு தொடர்புபட்டதாக

இருக்கலாம், காரணங்கள் எவையாக விருப்பினும் அவற்றைக் கண்டறிந்து பொருத்தமான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தி அவனுடைய இடர்ப் பாட்டை நீக்கி அவனைத் தேர்ச்சி அடைய வைப்பதே அவசியமானதாகும். பிள்ளைகளின் கற்றல் இடர்ப்பாடு களுக்கான காரணங்களை அறிவதற்கான அணுகு முறைகளைப்பயன்படுத்திக் கற்றல் இடர்ப்பாடுகளை இனம் கண்டு கொள்ளலாம்.

**மாணவர்களின் இடர்ப்பாடுகளுக்கான காரணங்களை அறிவதற்கான அணுகுமுறைகள்**

- ✠ குறைகாண் பரீட்சை நடாத்தி அவதானித்தல்.
- ✠ மாணவர்களின் நடத்தையில் உன்னிப்பாக அவதானித்தல்
- ✠ மாணவர்களுடன் சினேக முறையில் உரையாடி அவர்களது துலங்கல் களை அறிதல்.
- ✠ மாணவன் செயற்பாடு ஒன்றில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது அவனுக்குத்தெரியாத விதத்தில் விசேடமாக அவதானித்தல்
- ✠ மாணவர் தொடர்பாக எழுதப்பட்டுள்ள அறிக்கைகள், குறிப்பேடுகள் போன்றவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தல்.
- ✠ மாணவரது அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் போன்ற வற்றைப் பார்வையிட்டு அறிந்து கொள்ளல்
- ✠ மாணவர்களின் நெருங்கிய நண்பர்களை அறிந்து அவர்களின் நடத்தை பற்றி அறிந்து கொள்ளல்.
- ✠ மாணவனோடு தொடர்புடைய ஏனைய ஆசிரியர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்
- ✠ தேவை ஏற்படின் மாணவர்களின் வீட்டிற்குச் சென்று தகவல்களை பெற்றுக்கொள்ளல்.
- ✠ மாணவர்களின் சித்திரங்கள், ஆக்கங்கள் என்பவற்றை ஆராய்ந்து அறிதல்.
- ✠ ஆசிரியர் மேற்கொண்ட கற்றல், கற்பித்தல் அணுகுமுறையின பொருத்தப்பாடு பற்றி ஆராய்தல்
- ✠ அவசியமாயின் வைத்தியர் ஒருவரிடம் காட்டி அவரது கருத்துக் களைப் பெற்றுக் கொள்ளல். அதே போன்று உளவளத்துணையாளரிடம் காட்டிக் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

என்பனவாகும்.

**அடுத்து நாங்கள் பரிகாரக் கற்பித்தலின் படிமுறைகளை நோக்குவோம் ஆயின்**

- ✠ கற்றல் இடர்ப்பாடுகளை இனம் காணல்.
- ✠ கற்றல் இடர்ப்பாடுகளுக்கான காரணங் களைப் பகுத்து ஆராய்தல்
- ✠ இடர்ப்பாடுகளை நீக்குவதற் கான பரிகாரக் கற்பித்தல் அணுகு முறைகளை அனுமானித்தல்
- ✠ மாற்றீட்டுக்கற்பித்தல் செயற்பாடு களைத் திட்டமிட்டு வடிவமைத்தல்

❋ வேண்டிய சாதனங்களைத் திட்டமிட்டுத் தயாரித்தல்

❋ செயற்பாடுகளை நடை முறைப் படுத்தல்

❋ கண்காணித்தல்

❋ கணிப்பீடு செய்தல்

❋ கணிப்பீட்டின் பின் உரிய தேர்ச்சியை அடையாதவர்களுக்கு மாற்றீட்டுக் கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்என்பனவாகும்.

கற்பித்தல் செயற்பாட்டின் போது பாடத்திட்டம், பாடக்குறிப்பு, கற்பித்தல் துணைச்சாதனங்கள் என்பவற்றை முறையாகப் பயன்படுத்து வோம் ஆயின் மாணவர்களின் கற்றல் இடர்ப்பாடுகளை நீக்கலாம் என்பது உண்மை. எனவே பரிகாரக்கற்பித்தல் செய்கைக்கும் பாடத்தைத் திட்டமிடுதல் என்பது மிக முக்கியமானதாகும். அதாவது முதலில் மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சியை இனம் காணல் வேண்டும். அடுத்து இத்தேர்ச்சியைப் பல தேர்ச்சிமட்டங் களாக்குதல் வேண்டும். தொடர்ந்து மாணவர்கள் இடர்ப்படும் தேர்ச்சி மட்டங்களை இனம் கண்டு அதற்குப் பொருத்தமான மாற்றீட்டுக் கற்பித்தல் அணுகுமுறைகளைக் கையாளுதல் வேண்டும்.

இவ்வாறாகக் கற்பித்தலை முறைப்படி ஆற்றுவோம் ஆயின் கற்றலில் இடர்ப்படும் மாணவர்களின் எண்ணிக் கையைக் குறைக்கலாம். என்பது நிஜம்.

திரு.கு.கந்தரூபன்
ஆசிரியர் (கணிதம்)
பா/மகாஜனக் கல்லூரி

## சிரித்திட்ட சிறுமலர்கள்

கணனித்திரையினை உற்றுப் பார்த்த பிரார்த்தனாவிற்கு உலகமே சுற்றுவது போன்றிருந்தது. நேற்றைய வகுப்பில் தான் உதிர்ந்த கனத்த வசனங்கள் மனத்திரையில் படமாகஓடத் தொடங்கின.

"இஞ்சை என்னத்துக்கு வாறியள்............வீட்டில கரைச்சலெண்டு கலைச்சு விடுகினம் போல...... மக்குகள்... எல்லாரிலும் குறைவாய் மாக்ஸ் எடுத்துப்போட்டு வகுப்பையும் குழப்பிக்கொண்டு இருக்குதுகள். .......... உங்களை மக்கோனாவுக்குத்தான் அனுப்ப வேணும்..........." பிரார்த்தனா ரீச்சரின் கனல் தெறிக்கும் வசனங்கள் இங்கிதனையும் இங்கிதாவையும் ஈட்டி கொண்டு தாக்கிய கனத்த வசனங்களாயிருந்தன.

நாவல் மரங்கள் அடர்ந்து வளர்ந்த நாவலடிக் கிராமம் நகர்ப்புறத்திலிருந்து ஓரளவு தூரத்தில் அமைந்திருந்தது. கிராமத்தின் வடக்குப்புறமாக பாக்கு நீரிணையின் ஆர்ப்பரித்தெழும் அலைகள் இராகமிசைத்துக் கொண்டிருந்தன. தெற்குப்புறமாக பரந்து விரிந்த வயல் வெளிகள் பார்வையை குளிர்மையாக்கிக் கொண்டிருந்தன. இந்தக்கிராமத்தின் மத்தியில் கிராம மக்களின் குல தெய்வமான நாச்சியம்மன் கோயில் ஒன்றும் அழகு படுத்திக்கொண்டிருந்தது.

நாவலடிக்கிராமத்தின் பெரிய செல்வந்தர்களில் முதன்மையானவர்

கதிர்வேல்பிள்ளை. அவரின் மூத்த மகன் ஈஸ்வரன் உதவாக்கரையாக ஊர் சுற்றிக்கொண்டிருந்தான். "கதிரவேலு உவன் ஈஸ்வரனுக்குக் கால் கட்டு ஒண்டு போட்டு விட்டால் சில வேளை திருந்தியிடுவான்,........" சுந்தரத்தின் ஆலோசனை காதிலே விழுந்தபோது அது சரியான யோசனையாகவே கதிரவேலுவுக்கும் தென்பட்டது. இதன் விளைவாக ஈஸ்வரனைச் சுதாமதிக்கு அம்மி மிதித்து அருந்ததி பார்த்துக் கரம் பிடித்து வைத்தார்கள்.

"நான் சொல்லிறதை நீ கேக்கப்போறியோ இல்லாட்டில் நீ சொல்லிறதை நான் கேக்கிறதோ........ நானோ ஆம்பிளை இல்லாட்டில் நீயோ ஆம்பிளை............... " சீறி விழுந்தான் ஈஸ்வரன். "இல்லையுங்கோ..... நீங்கள்..... இப்பிடி உழைக்கிற எல்லாத்தையும் குடிச்சிட்டு வந்தால்...... பிள்ளைகளை ஆர்..... பாக்கிறது........" தயங்கித் தயங்கி மெதுவாகக் கூறி முடித்தாள் சுதாமதி. "ஆரடி குடிச்சது..... போடி வெளியாலை..... உன்ர பிள்ளைப் பிசாசுகளையும் கூட்டிக் கொண்டு போடி..". போதையின் உச்சத்தில் உரத்துக் கத்தினான் ஈஸ்வரன். அன்று இங்கிதனுடனும் இங்கிதாவுடனும் வீட்டை விட்டு வெளியேறிய சுதாமதி பின்னர் அந்த வீட்டின் வாசல் படியைக் கூடத் திரும்பிப்பார்க்கவேயில்லை.

வயல் வெளி ஓரத்திலமைந்த சிறிய ஓலைக் குடிசை தான் சுதாமதியின் பிறந்த வீடு. சுதாமதிக்குக் கீழே இரண்டு தங்கைமார்களும் ஒரு தம்பியுமாக மூன்று சகோதரர்கள். தந்தை தம்பிமுத்துவோ சுதாமதிக்கு ஏழு வயதாயிருக்கும் போதே கண்ணை மூடிவிட்டார். அதன் பின்னர் தாய் இயேசம்மாவின் உழைப்பிலே தான் வாழ்க்கைச்சக்கரம் உருண்டு கொண்டிருந்தது. தினமும் பகலில் கூலி வேலை செய்து சம்பாதிக்கும் சிறு தொகைப்பணத்திலே தான் ஐந்து பேரின் வயிறும் கழுவப்பட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே மா இடிப்பதற்கும் இயேசம்மா சென்று வருவதுண்டு. இயேசம்மா கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த காரணத்தால் கிராமத்து மற்றைய மக்கள் அவர்கள் குடும்பத்தை எதற்குமே சேர்த்துக் கொள்வதில்லை. இதற்குக் கதிர்வேலுவின் குடும்பமும் விதிவிலக்கல்ல. ஆனாலும் கட்டுக் கடங்காத ஈஸ்வரனை கட்டி வைப்பதற்கு மட்டும் இயேசம்மாவின் மகள் தேவையாக இருந்ததினால் இயேசம்மா குடும்பத்தை அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள். இப்பொழுது இயேசம்மாவின் நிலையோ மிகவும் பரிதாபமாகிவிட்டது. தனியாக அனுப்பிய சுதாமதி இப்பொழுது மூன்றாக வந்து வாசலில் நிற்கிறாள். என்ன செய்வது....! பெற்ற வயிறல்லவா..... சேர்த்து வைத்துச் சோறு போடுவதைத்தவிர வேறு வழியெதுவும் அவளுக்குத் தெரியவில்லை.

நாவலடிக்கிராமத்தின்

அறிவுக்கண் திறக்கும் ஒரே ஒரு அறிவாலயம் யா/மாஞ்சோலை மகா வித்தியாலயம். ஐந்நூறு மாணவர் களையும் இருபது ஆசிரியர்களையும் கொண்ட இப் பாடசாலைக்குத் தகுதியான அதிபர் ஒருவர் பல வருடங்களாக இல்லை. தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரை வகுப்புக்களைக் கொண்டிருந்தாலும் ஒரு மாடிக் கட்டிடமுமின்றி சிறிய சிறிய வகுப்பறைகளாகவே இயங்கிக் கொண்டிருந்தது. அடிப்படை வசதிகள் கூட மிகவும் குறைவான நிலையிலும் மாணவர்களின் கல்வியில் அதிக பெறுபேறுகளைப் பெறுகின்ற பாடசாலையாக இருந்து வருகின்றமை மெச்சத்தக்கது. இப்பாடசாலையின் தரம் ஆறு வகுப்பாசிரியை தான் பிரார்த்தனா. கடந்த பத்து வருடங்களாக இப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரிகின்றார். ஆரம்ப நியமனம் நுவரெலியா அ.த.க. பாடசாலையாக இருந்த போதிலும் தனது உயர்மட்டச் செல்வாக்கினால் ஓரிரு மாதங் களிலேயே சொந்த ஊருக்கு மாற்றலாகி வந்து விட்டார்.

'பிள்ளை இங்கிதா இண்டைக்குப் பள்ளிக்கூடம் இல்லையோ....? சுதாமதியின் அன்பான கூப்பிடுகை காதில் விழுந்தபோதுதான் கண் விழித்த இங்கிதா அம்மாவின் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள். "அம்மா..... இண்டைக்கு நான் பள்ளிக்கூடம் போகயில்லை..." விம்மி விம்மி அழத்தொடங்கினாள். இங்கிதா."ஏன் பிள்ளை என்ன நடந்தது....." ."ரீச்சர்" என்னைப் பேசிப்போட்டா..... அதாலை..... நான் போக மாட்டன்........" "இல்லைப் பிள்ளை ரீச்சர் நல்லதுக்குத்தானே பேசியிருப்பா...... இல்லாட்டில் நீ ஏதும் குழப்படி செய்திருப்பாய்..." அம்மாவின் குரலும் மெதுவாகவே பேசியது. "இல்லையம்மா நாங்கள் பட்டினிப் பிசாசுகளாம்.... நீங்கள் நல்லாச் சேமிக்கிறியளாம்...... விம்மி விம்மி அழத்தொடங்கினாள் இங்கிதா.

"இண்டைக்குச் சப்பாத்துப் போட்டுக்கொண்டு வராதவை எல்லாம் எழும்புங்கோ....." பிரார்த்தனா ஆசிரியையின் உரத்த குரல் வகுப்பறையை அதிரச் செய்தது. இங்கிதாவும் இங்கிதனும் மட்டுமே எழும்பி நின்றார்கள். விசாரணைகள் எதுவுமின்றி தண்டனைகள் சரமாரியாக விழுந்தன. இரண்டு பேரும் கத்திய கத்தல் பாடசாலையையே ஒரு கணம் உலுக்கி விட்டது.

வகுப்பேற்றப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களின் நிலைகள் குறிக்கப்பட்டன. இறுதி இரண்டு நிலைகளையும் இங்கிதாவும், இங்கிதனும் பெற்றுக் கொண்டார்கள். ".......... உங்கள் இரண்டு பேரையும் மக்கோனாவுக்குத்தான் அனுப்ப வேணும்.......... இஞ்சை வச்சிருக்க ஏலாது......... பிரார்த்தனா ரீச்சரின்

வழமையான அனல் வரிகள் முன்னைய நாட்களை விட அதிகமாய்ச் சுட்டெரித்தன. அழுதழுது கண்ணீரே வற்றிவிட்ட இருவருக்கும் அன்றைய தினம் அழுகையே வரவில்லை. மாறாகக் கண்கள் சிவந்து ஒரு வித விறைத்த பார்வையுடன் அந்தப் பிஞ்சு உள்ளங்கள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாக வீட்டிற்குச் சென்றனர். அடுத்த நாள் காலையில் கணனிப் பாடத்திற்காக கணனி அறைக்குச் சென்ற இங்கிதன் கணனித்திரையில் முதல் எழுதிய வசனம் "அப்பா என்ற கொடியவனைக் கொல்லுவேன்"

இதனைப் பார்த்து விட்ட பிரார்த்தனா ஆசிரியருக்கு உலகமே சுற்றியது. ஏன் இந்த முடிவுக்கு இங்கிதன் வந்தான் என்பதை அவர் அதுவரை அறிந்திருக் கவில்லை.

மாஞ்சோலை மகாவித்தியாலயத்திற்குப் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். பாடசாலையில் விரைவாக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. ஆசிரியர்களின் இடமாற்றமும் அதிவேகமாக நடைபெற்றது. அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய ஆசிரியர்கள் வெளியே அனுப்பப் பட்டனர். தியாக சிந்தையுடன் பணியாற்றக்கூடிய புதிய ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். பாடசாலையின் பழைய மாணவர்களின் உதவியுடன் புதிய பல கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மாணவர்களின் அடைவு மட்டமும் முன் எப்போதும் இல்லாதவாறு அதிகரிக்க ஆரம்பித்தது. உளவளத்துணைக்கென தனியான ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

"இங்கிதன் இஞ்சை வாரும்....... நீர் ஒரு நல்ல பிள்ளை...... கெட்டிக்காரப்பிள்ளை.... நல்லாப்படிக் கவேணும்............" அன்புடன் அரவணைத்தார் உளவளத்துணை ஆசிரியர் அகிலா. "ரீச்சர்....ரீச்சர் நான் குழப்படி எண்டு பிரார்த்தனா ரீச்சர் எனக்கு நல்லா அடிக்கிறவ ரீச்சர்....." தனது உள்ளக் குமுறலைக் கொட்டி அழுதான் இங்கிதன். "இஞ்சை இங்கிதன் உம்மைப்பற்றி எல்லாம் எனக்கு வடிவாய்த் தெரியும்....... உம்மட அப்பா..... அம்மா எல்லாரையும் தெரியும்........"

"என்ன ரீச்சர் அப்பாவையும் உங்களுக்குத் தெரியுமோ......... அவனைக் கொல்ல வேணும்.............."

"இல்லை இங்கிதன் அவர் இப்ப முந்திப்போல குடிக்கிறதில்லை...... திருந்தியிட்டார்......... அவர் இன்னும் கொஞ்ச நாளில் உங்கட வீட்டுக்கு வருவார்................."

"அவர் வந்தால் கோடாரியால வெட்டுவன் ரீச்சர்........." சீ.... அப்படியெல்லாம் சொல்லக் கூடாது இங்கிதன் அவர் இப்ப முந்தி மாதிரி இல்லை அப்பன்........"

"..............................!

என்னை மன்னிச்சுக்கொள் சுதாமதி.. என்ர குடிப்பழக்கத்தாலையும், பணத்திமிராலையும் என்னையும் என்ரை

குஞ்சுகளையும் விட்டிட்டுப் போயிட்டன்.... இனித் திருந்தியிட்டன் சுதாமதி.... திருந்தியிட்டன்.... என்ர குடிப்பழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைச்சிட்டன் சுதாமதி..." ஓ.... வென்று பலத்த சத்தத்துடன் கதறினான் ஈஸ்வரன். திருந்திய கணவனின் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டாள் சுதாமதி.

"இனி இங்கிதாவும், இங்கிதனும் முன் வரிசையில தான் இருக்க வேணும்...." அகிலா ரீச்சரின் குரல் அன்பாக ஒலித்தது. ஓம்....ரீச்சர்.... இருவரினதும் குரல்கள் இணைந்து ஒலித்தன. "நான் பிள்ளையள் உங்கள் எல்லோருக்கும் பள்ளிக்கூடம் முடிய கிளாஸ் வைக்கப்போறன்............... ஆரார் வருவியள்............." சொல்லி வாய்மூடுவதற்குள் "நான் ரீச்சர்.... நான் ரீச்சர்..." இங்கிதனதும் இங்கிதாவினதும் குரல்கள் மற்றையவர்களின் குரல்களை முந்திக்கொண்டன.

"இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்ததாபனத்தின் செய்திகள்......... இம்முறை நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் யா/மாஞ்சோலை மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் அகில இலங்கை ரீதியில் முதலிரு இடங்களையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்கள். இவர்கள் இருவருக்கும் வெளிநாட்டில் கல்வி கற்கப் புலமைப்பரிசில் வழங்கப் படுகிறது....". செய்தியினைக் கேட்ட சுதாமதிக்கும் ஈஸ்வரனுக்கும் வானத்திலே பறப்பது போன்றிருந்தது.

"இன்றைய விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கங்கள். இன்று எம்மை அழைத்துப் பாராட்டுவதை யிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இந்த இடத்தில் எம்மிருவர் சார்பிலும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். முதற் கண் எம்மைப் பெற்றெடுத்த அம்மா, அப்பாவிற்கு நன்றி கூறுவதுடன் மேலும் எம்மை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததில் பெரும் பங்கு வகித்தவர் இப்பாடசாலையின் அகிலா ரீச்சர் என்று கூறுவதில் மட்டற்ற மகிழ்வடைகிறோம். மேலும் எதிர்காலத்தில் நாம் உயர்வான கல்விகளைக் கற்று முதலாவதாக எமது சமூகத்தில் விசேட தேவைகளுடன் கருகிக்கொண்டிருக்கும் எம் சகோதரர் களுக்கு எம்மாலான முழு உதவி களையும் வழங்குவோம் என இந்த இடத்தில் உறுதி கூறுகின்றோம்.

திரு.க.வாணிமுகுந்தன்
ஆசிரியர்
யா/மகாஜனக் கல்லூரி.

**சிறுகதையின் இலக்கணம்**

மனித வாழ்க்கையில் இடம் பெறுகின்ற ஏதாவதொரு சம்பவத்தை அடிப் படையாகக் கொண்டு ஓரிரு பாத்திரங் களைப் படைத்து அப்பாத்திரங்களின் மன உணர்வகளினூடாக, வாழ்வின் ஏதாவது ஒரு சிக்கல், பிரச்சனை, செய்தியை வெளிப்படுத்துவது சிறு கதையாகும்.

## College Magazines and Their Uses

Most college have their own magazines, edited by one of the students or a member of the staff and made up of articles written mainly by the students themselves. They may be good, bad or indifferent; but a good college magazine may serve several useful purposes.

First, a college magazine encourage the students to practice writing, by affording opportunities to budding author to see their compositions printed. A young man who will take little interest in doing a set of composition exercises in class, will put forth his best efforts when he knows that his composition will appear in print. It gives him a real thrill to seesomething that he has written appearing as an article in a printed magazine. The best efforts, prizes are sometimes offered for the best articles.

Next, a college magazine, well edited helps to foster college patriotism. It can be help the college students to realize that they are a united body, however diverse may be their individual tastes and occupations. It should , moreover, teach them to be proud of their college, loyal to its best interests, and anxious to uphold its best traditions.

The college magazine, further, may sever as a link between the present students and 'the old boys",and help to keep the touch. With their old college. As former students read the college news month by month, they will feel again something of the old pride in the place where they got their education and their interest in it will be maintained. Sometimes it has been the college magazine that has led to the starting of an "old boys' association"which gives monetary help to the college. If a college has no magazine, these "old boys", scattered about the country and absorbed in their own occupations, are unable to forget their college, and lose interest in its welfare.

To fulfil all these useful purposes well, a college magazine must be carefully edited, too. Often such magazines do more harm than good, or are at best very poor productions, simply because the editor does not take his work seriously. The editor should raise the standard of the magazine

by refusing all badly written contributions, and any that are silly, in bad taste, or objectionable on other grounds. Better no magazine at all than a worthless and silly production.

Ms.S.Praveena
Computer instructor
Computer unit
J/Mahajana College

## Responsibility and Responsible

We start to conglomerate our attention or take care on something or some one after we have the responsibility on it. Because it is the powerful trick to take care on something and do our duties carefully. The words 'Duties" and "authorities" are defined many ways by many persons. Accordingly we can define the word responsibility " Respect every thing with the ability in a fruitful way? The all mighty has given some special prize less gift for human beings laugh, cry, thinking and responsibility.

further more if we consider mother, she has the responsibility to rear up her child in a permissible way. Why not, father also has the same responsibility. Simultaneously, if the parents being aware and they blame their children frequently saying their children should behave with responsibility there will nothing be done. Because the parents have the responsible to the children's moral.

Like wise, the teacher are the heroes and representatives to response to the society. Because the students are backbone of the country. They are handed over to the teacher in their important stage of life. It is caused for making good citizens. In this golden moment I try to memorize as we are teachers. What have the responsibilities, Make a man lettered, self - confidence, self - respect and sensitive one. There fore to make the students like that. The teachers also have some special characteristics. courteous, have some policies and principles, self - respect, nobility, and distinguish.

Next we should think in the children's point of view. A lot of responsibilities are expected from them. To study the subjects, know the moral, behave accordingly , have a good life and die a good man. How many of them keep at least our free books neatly. Except one or two a lot of students do not take care in this slight matter. As a good citizen every individual has a lot of responsibilities, keeping resources, keeping common assets, respect elders, and preserve all the tiny think of the country.

Escapism is used as a good trick to deviate from the responsible and responsibility. If we lose something we put it on our bad time, If we fail to achieve something we put it on the others, If we lose our good life we believe it by the god. Do you think this mentality is correct? Definitely No. Because . Our mind and conscience does not allow to accept our weaknesses. But we should able to accept them and ready to face the problems curiously.

So, ladies and gentleman as a small girl, I wish to ask a sweet request from you, being responsible to all of your life time. because it may cause for possible to all.

Thank you.

V.Subashini.
Teacher

- **If you be Silent when ten wisers speaking, then you are the eleventh wiser.**
- **Adversity is the touchstone of virtue**
- **A Valiant man's look is more than a cowards sward**

## 'சுவடுகள்' செய்திமடல் வெளியீடு:

மகாஜனக் கல்லூரியின் 'சுவடுகள்" செய்திமடல் (Suvaduhal News letter) மாதாந்த வெளியீடாக 2007 தை மாதம் முதல் இற்றை வரை வெளிவந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்த ஒன்றே.

12பக்கங்களைக் கொண்ட இக்கையடக்க மடலானது, மாணவர்களின் சாதனைகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், மன்றங்கள் - கழகங்களின் தலைமைத்துவம், நற்சிந்தனை வழங்கியோர் விபரங்கள், ஆங்கில வாசகங்கள், மாணவர் ஆசிரியர்களது சிந்தனைகள், முன்னைய ஆண்டுகளில் நடைபெற்ற சில நினைவுகள், தரவுகள் முதலான பல விடயங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

"நன்றி மறப்பது நன்றன்று"என்ற வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க காலத்தின் தேவையை அறிந்து, தேவைகளுக்குக் கைகொடுக்கும் பல நல்லுள்ளங்களின் விபரங்களும் இம்மடலின் கண் வெளிவருவது கண்கூடு. இம் மடலானது கல்லூரியின் தனித்துவமான செயற்பாடு எனலாம்.

"சுவடுகள்" அதிபர் அவர்களது நாளாந்தத் தூண்டுதலினாலும் அவரது ஆலோசனையின் கீழும் வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் இம்முயற்சிக்காக நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட ஆவணங்களைப் புரட்டும் போது எமக்கு ஒரு ஆத்ம திருப்தி கிடைக்கின்றது என்றே கூறவேண்டும். இம்மடல் எதுவித தங்கு தடையுமின்றித் தொடர்ந்தும் வெளி வரவேண்டும்

வழமை போன்றே இச்சுவடுகள் வாசகர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. 2007ம் ஆண்டு தை மாதம் முதல் மார்கழி வரை வெளிவந்த சுவடுகள் ஒன்று 5ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டன. இவ்வருடம் சுவடுகள் ஒன்றுக்கான விலை 10 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை, யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு மாதமும் 500 சுவடுகள் அச்சிடப்படுகின்றன. அச்சடிப் பதற்கான மொத்தச் செலவு 2008 பங்குனி வரை 3500ரூபாவாகக் கணக்கிடப்பட்டன. 2008 ஏப்பிரல் முதல் இச்செலவானது 3800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

"சுவடுகள்" அச்சிடுவதற்கான செலவாக Dr.P.கேதீஸ்வரன் அவர்கள் [அவுஸ்திரேலியா, பழைய மாணவர் சங்க உறுப்பினர் - (சிட்னி)] ஒரு வருடத்திற்கான முற்பணமாக முப்பத்தாறாயிரம் (36,000/=) ரூபாவினை 2007 ஆடி மாதத்திலிருந்து தந்துதவியுள்ளார்.

மகாஜனக்கல்லூரி பற்றிய செய்தியை இக்கல்லூரியில் பற்றுள்ள உள்ளங்கள் உடனுக்குடன் அறிந்து கொள்ள இம்மடல் உறுதுணை புரிகின்றது எனலாம்.

ஆலோசனை:-


திருமதி சிவமலர் அனந்தசயனன்

மடலாசிரியர்:-

செல்வி இராஜேஸ்வரி செனகரத்தினம்

கணனிப்பதிப்பு:- சுன்னாகம் மகிந்தன்

கொம்பியூட்டர் கிறாபிக்ஸ்



## மகாஜனன் சஞ்சிகை தொடர்ந்து மலரப் பங்களிப்பு

## நல்கியோர் ~ 2007

| | | |
|---|---|---|
| 1. | பழைய மாணவர் சங்கம் கொழும்பு | 15,000 |
| 2. | திருமதி.Dr.சிவபாதநாயகி கனகசபை | 10,000 |
| 3. | Dr.நா.சக்திவேல் | 5,000 |
| 4. | திரு.து.குணநேசன் | 5,000 |
| 5. | திருமதி.Dr.K.முருகானந்தன் | 5,000 |
| 6. | செல்வி.சு.கௌரிதேவி | 5,000 |
| 7. | திரு.பெ.லம்போதரன் | 5,000 |
| 8. | திருமதி.சி.சொக்கலிங்கம் | 5,000 |
| 9. | திரு.து.கு.சுந்தரவடிவேல் | 5,000 |
| 10. | செல்வி.தி.வரதவாணி | 5,000 |
| 11. | திரு.மு.நடராஜா | 5,100 |
| 12. | திருமதி.இ.இராமச்சந்திரா | 5,000 |
| 13. | திருமதி.க.அப்பாத்துரை | 5,000 |
| 14. | திரு.ந.காளிதாசன் | 5,000 |
| 15. | திரு.S.ஜனார்த்தனன் | 5,000 |
| 16. | திரு.ந.வைகுந்தன் | 5,000 |
| 17. | திரு.த.கிரிதரன் | 5,000 |
| 18. | திருமதி.பு.சாந்தரூபி | 5,000 |
| 19. | திருமதி.பா.சிவானந்தம் | 5,000 |
| 20. | Dr.K.பேரானந்தராசா | 5,000 |
| 21. | Dr.K.இளங்கோஞானியார் | 5,000 |
| 22. | திரு.சபா.புஸ்பநாதன் | 5,000 |
| 23. | திரு.து.ராஜசிங்கம் | 5,010 |
| 24. | Dr.ராஜசேகர் | 5,010 |
| 25. | திரு.பொ.சுந்தரலிங்கம் | 5,000 |
| 26. | திரு.S.ரமேஸ் | 5,000 |
| 27. | திரு.செ.சுதர்ஷன் | 5,000 |
| 28. | ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் | 5,000 |
| 29. | திரு.நா.துஷ்யந்தன் | 5,000 |
| 30. | திரு.S.சரச்சந்திரன் | 5,000 |
| 31. | திரு.செ.சிவபாலன் | 5,000 |
| 32. | திரு.க.ஜெகிந்தன் | 5,000 |
| 33. | திரு.V.மகாலிங்கம் | 5,000 |
| 34. | Dr.சிறீபவானந்தராசா | 5,000 |
| 35. | திரு.ஸ்ரீ. கெங்காதரன் | 5,000 |
| 36. | திரு.தி.லொயித் சிந்துஜன் | 3,000 |
| 37. | திரு.K.மதிசூடி | 3,000 |
| 38. | திருமதி.செ.சுவந்தினி | 3,000 |
| 39. | திரு.சோ.பிரணவரூபன் | 3,000 |
| 40. | திரு.சு.சோதிவடிவேற்பிள்ளை | 2,000 |
| 41. | திரு.S.விமலநாதன் | 2,000 |


| | | |
|---|---|---|
| 42. | திரு.ம.பத்மநாதன் | 2,000 |
| 43. | திரு.ம.மணிசேகரன் | 2,000 |
| 44. | திரு.இ.துரைசிங்கம் | 2,000 |
| 45. | ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் | 2,000 |
| 46. | திரு.மா.சந்திரகாந்தன் | 2,000 |
| 47. | திரு.வே.பாலசுப்பிரமணியம் | 2,000 |
| 48. | திரு.A.கோபாலகிருஸ்ணன் | 2,000 |
| 49. | திரு.பி.நடராஜன் | 1,000 |
| 50. | திருமதி.பவானி குகதாசன் | 1,000 |
| 51. | திரு.T.தவராஜா | 1,000 |
| 52. | திருமதி.மகாதேவா பூமாதேவி | 1,000 |
| 53. | திரு.ச.பிரபாகரன் | 1,000 |
| 54. | திரு.V.சிவராஜா | 1,000 |
| 55. | திரு.S.ஆறுதிருமுருகன் | 1,000 |
| 56. | திரு.S.சிவராஜா | 1,000 |
| 57. | திரு.வா.அரவிந்தன் | 1,000 |
| 58. | திரு.S.தியாகராஜா | 1,000 |
| 59. | திருமதி.ஆ.சிவஞானசுந்தரம் | 1,000 |
| 60. | திருமதி.கலா பொன்னம்பலம் | 1,000 |
| 61. | திரு.S.தவராஜா | 1,000 |
| 62. | திரு.ச.சிவகுமார் | 1,000 |
| 63. | திரு.த.சண்முகநாதன் | 1,000 |
| 64. | திருமதி.சிவமலர் அனந்தசயனன் | 1,000 |
| 65. | திருமதி.வ.சிவானந்தன் | 1,000 |
| 66. | செல்வி.வே.பத்மலோஜினி | 1,000 |
| 67. | திருமதி.ப.லோகநாதன் | 1,000 |
| 68. | திருமதி.உ.புஸ்பராஜா | 1,000 |
| 69. | திரு.க.கந்தையா | 1,000 |
| 70. | திருமதி.ரே.கேசவன் | 1,000 |
| 71. | திரு.இ.ஈஸ்வரானந்தன் | 1,001 |
| 72. | திருமதி.பி.சாமினி | 1,000 |
| 73. | செல்வி.சி.கதுசியா | 1,000 |
| 74. | திருமதி.ச.கனகேஸ்வரன் | 1,000 |
| 75. | திரு.V.சிவரதன் | 1,000 |
| 76. | Dr.S.மோகன் | 1,000 |

"2007 மகாஜனன்" மலருக்கான புகைப்படங்களை அன்பளிப்பாக வழங்கிய "புவி போட்டோ" உரிமையாளர் திரு.பி.பிரபாகரன் அவர்களுக்குக் கல்லூரி சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"2008 மகாஜனன்" மலருக்கான புகைப்படச் செலவை அன்பளிப்பாக வழங்கிய "மதுரா ஸ்ரூடியோ" உரிமையாளர் திரு.பா.பாலேந்திரா அவர்களுக்கும் போட்டோ செலக்ற் உரிமையாளர் S. சிவமோகன் அவர்களுக்கும் கல்லூரிச் சமூகம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நன்றி

# SCHOOL ADMINISTRATION STRUCTURE - 2008





திருத்த வேலைகளுக்கு முன்னர்

திருத்த வேலைகளுக்குப் பின்னர்